
# சமகால சர்வதேச அரசியல்



கே.ரீ.கணேசலிங்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால சர்வதேச அரசியல்

கே.ரீ.கணேசலிங்கம்
*(B.A.Hons, Dip.in.Education M.Phil)*

கல்வியியல் வெளியீட்டு நிலையம்
யாழ்ப்பாணம்
2005.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எனது அரசறிவியல் கல்விக்குரிய வழிகாட்டியாகவும்,
ஆசிரியராகவும் விளங்கியவரும் அரசறிவியல் சார்ந்த
படைப்புக்கள் மற்றும் வெளியீடுகளுக்கும்
என்றுமே உறுதுணையாக இருந்து வருபவருமாகிய
கலாநிதி சண்முகநாதன் அவர்களுக்கும் அவரது
துணைவியார் திருமதி பக்தவச்சிலி சண்முகநாதன்
அவர்களுக்கும் இந்நூல் சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் :- சமகால சர்வதேச அரசியல்

ஆசிரியர் :- கே.ரீ.கணேசலிங்கம்

முதற் பதிப்பு :- ஏப்பிரல் 2005

பதிப்புரிமை :- திருமதி.க.சாந்தினி

வெளியீடு :- கல்வியியல் வெளியீட்டு நிலையம்,
யாழ்ப்பாணம்.

பதிப்பு :- சிமாட் பிறிண்டர்ஸ்
717 கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

விலை :- 200/=

*Name of Book :- Contemporary International Polities*

*Editors :- K.T.Ganeshalingam*

*First Edition :- 2005 April*

*Copy Rights :- Mrs.G.Shanthini*

*Publish :- Educational Publication Center,*
*Jaffna.*

*Printer :- Smart Prints*
*717 K.K.S. Road,*
*Jaffna.*

*Price :- 200/=*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சென்ற நூற்றாண்டின் நூலில் மூன்று பங்கு காலம் இரண்டு அரசியல் கொள்கைகளுக்கிடையிலான போட்டியால் அல்லது இரு துருவ அரசியலான போராட்டத்தால் நிரமிபியிருந்தது.

ஈற்றில் 80களின் நடுக்கூற்றில் தொடங்கி 90களின் ஆரம்பத்தில் முடிவுக்கு வந்த சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி ஒரு புதிய அத்தியா யத்தின் ஆரம்பமாக அமைந்தது. முக்கியமாக உலகம் ஒற்றைத்துருவ ஒழுங்குக்குள் வீழ்ந்தது.

ஏதோ ஒருவகையில் அல்லது ஓரளவுக்காவது சமநிலைஎனக் கூறக்கூடிய நிலையில் இருந்த உலக ஒழுங்கும் 3ம் உலக நாடுகள் அணிசேராக் கொள்கை எனச் சொல்லி வல்லரசுகளின் முற்று முழுதான ஆதிக்கத்தைத்த தவிர்க்கக்கூடியதாக இருந்த நிலைமை யும் குலைந்து போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியானது ஆதிக்கப்போட்டி அரசியலில் ஈடுபட்ட முகாம்களுள் ஒன்றின் வீழ்சியாக மட்டுமன்றி ஒரு அரசியல் கொள்கையினதும் அதுவரை வறிய நாடுகளினதும் குறிப்பாக ஒடுக்கப்பட்டவர்களினதும் விடிவிற்கான வழி என நம்பப்பட்டதுமான ஒரு கொள்கையின் தோல்வியாகவும் அமைந்தது, அல்லது நம்ப வைக்கப்பட்டது.

முதலாளித்துவத்தினதும் முதலாளித்துவ நாடுகளினதும் வெற்றியாக அமைந்த இந்நிகழ்வை அமெரிக்கா தனது ஏக தலைமைத் துவத்துக்கான அங்கீகாரமாக மாற்றிக்கொண்டது.

கடந்த ஒன்றரைத் தசாப்தமாக எதிர்ப்பேதுமின்றி உலகமயமாதல் என்ற பேரில் நவீனமயப்படுத்தப்பட்ட நன்கு வடிவமைக்கப்பட்ட நலகாலனித்துவப் போக்கு உலகை வேகமாக மாற்றிவருகின்றது. காலப்போக்கில் ஏகாதிபத்திய எதேச்சாதிகாரங்கள் அவற்றின் சுரண் டல்கள் குறித்தான எதிர்ப்புணர்வு மட்டுமன்றி புரிதல்கள்கூட ஏதுமில் லாது ஒரு புதிய உலகை தனது வெளியிடப்படாத இலக்காகக் கொண்டு உலகமாமாதல் வேகமாகவும் வலிமையாகவும் செயற் பட்டுக்கொண்டிருக்கின்றது.

முன்புபோல நாடுகளின் அரசாங்ககங்களை (அதாவது அரசியல் வாதிகள் மற்றும் அதிகாரிகள்) மட்டுமல்லாமல் ஒவ்வொரு தனிமனி தனையும் இலக்கு வைக்கிறது உலகமயமாதல். உலக மயமாதலின் பிடியில் சிக்கி ஏகாதிபத்தியங்களின் விருப்புவெறுப்புக் கேற்ப சிந்திப்பவர்களாக செயற்படுபவர்களாக வாழ்பவர்களாக மாற்றப்பட்டு வருகிறார்கள்.

இத்தகைய சூழலில் மூன்றாம்உலக நாடுகளைச் சேர்ந்த நாம் விழிப்புடன் இருக்கவேண்டியது அவசியமும் அவசரமும் கூட. விழிப் புணர்வு ஏற்பட்ட இன்றைய சூழலை அதன் அரசியல் பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் புரிந்துகொள்ள வேண்டும். பொருளாதாரமும் அரசியலும் தான் இந்த உலகை இயக்கி வருகின்றது. அதாவது ஒவ்வொரு மனிதனது வாழ்வையும் தீர்மானிப்பது உலக ஏகாதிபத்தியங்களின் அரசியல் பொருளாதார அபிலாசைகள்தான்.

தமிழில் அரசியல் பொருளாதார அறிவியலைத்தரும் நூல்கள் அதுவும் சாதாரண மனிதர்களுக்கு ஏற்றவகையிலானவை மிகவும் குறைவு. இந்த முயற்சியில் ஈடுபடவேண்டிய நம்நாட்டு புத்தி ஜீவிகளின் செயற்பாடுகள் இன்றும் போதாமலேயே இருக்கிறது.

அந்தவகையில் இந்த நூல் ஒரு நன்முயற்சி. ஆசிரியரின் அம்முயற்சியை பாராட்டி, வரவேற்கின்றேன். இவரின் செயற்பாடுகள் மேலும் மேலும் சிறப்படையட்டும்.

இவரிடமிருந்து மட்டுமல்ல ஏனைய எமது புத்திஜீவிகள், கல்வி மான்களிடமிருந்தும் இத்தகைய செயற்பாடுகளை, வெளியீடுகளை நாம் எதிர்பார்க்கின்றோம்.

நன்றி.

சி . குமரவேள்

126/2 அரசடி வீதி,
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


முன்னுரை — IV - VI

**அத்தியாயம் - 01** — **01 - 52**

அமெரிக்காவின் பொருளாதார வீழ்ச்சியும்
அரசியல் ரீதியான அதிகாரப் போரும்

**அத்தியாயம் - 02** — **53 - 100**

தென்னாசிய அரசியல் போக்கும்
இந்திய – பாகிஸ்தானிய முறுகலும்

**அத்தியாயம் - 03** — **101 - 126**

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில்
ஆதிக்க சக்திகளின் விஸ்தரிப்பு கொள்கை

**அத்தியாயம் - 04** — **127 - 146**

சீனாவின் விஸ்தரிப்பு கொள்கையும்
எதிர்ப்புவாத சிந்தனைகளும்

**அத்தியாயம் - 05** — **147 - 175**

ஈராக் மீதான அமெரிக்கப் போரும் அரசியல்
பொருளாதார இராணுவ விளைவுகளும்

**அத்தியாயம் - 06** — **176 - 190**

ரஷ்சிய அரசியல் பொருளாதார வீழ்ச்சியும்
அமெரிக்காவின் தடைகளும்

**அத்தியாயம் - 07** — **191 - 200**

பின்னிணைப்பு – I

பின்னிணைப்பு – II

முடிவுரை — **201 - 204**

**Biblilography** — **205 - 211**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 01

# அமெரிக்காவின் பொருளாதார வீழ்ச்சியும் அரசியல் ரீதியான அதிகாரப் போரும்

*1989 ஆம் ஆண்டு சோவியத் யூனியன் உடைந்து ரஷ்யாவாக சுருங்கிய பிற்பாடு அமெரிக்காவே சர்வதேச அளவில் வல்லரசாக ஆதிக்கம் செலுத்திவருகின்ற நிலை காணப்படுகின்றது. உலகத்தின் பிராந்தியங்கள் ஒவ்வொன்றையும் அமெரிக்கத் தேசியத்தின் எல்லை யாகக் கொண்ட இறைமையுடைய அரசாக அமெரிக்கா செயல்பட்டு வருகிறது. மறுவளமாக கூறுவதாயின் உலகின் ஏனைய அரசுகள் பல வற்றின் மீது படையெடுப்பதும், மிரட்டுவதுமாக தொழில்பட்டு அவற் றின் இறைமையை ஆக்கிரமித்து உலகப் பொருளாதாரத்தை சூறை யாடி வருகிறது. அமெரிக்காவின் அத்தகைய தொடர்ச்சியான விஸ்த ரிப்பில் ஒன்றாக இரண்டாவது ஈராக் மீதான போரும் அமைந்திருந் தது. அமெரிக்க நிர்வாகமும் பென்ரகனும் முற்றுகையின் வடிவத்தை எப்படி தொடங்குவது என்று குழம்பிக் கொண்டிருக்கும் போது பொருளாதார சுமையால் வில்லியம் புஷ்ஷிம் அமெரிக்க வங்கிகளின் அதிகாரிகளும் பொருளாதார நெருக்கடி பற்றி குழம்பிப்போய் அறிக் கை விடுவதில் அதிசயம் நிகழ்த்திக் கொண்டிருந்தனர். இந்த அதி சயத்தின் பின்னாலுள்ள உண்மையான பொருளாதார நிலையை பரிசீ லிப்பதே இப்பகுதியின் பிரதான நோக்கமாகும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக அமெரிக்கப் பொருளாதாரத்தின் வீழ்ச்சி என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணியாக மாறிவிட்டது. இத்தகைய பொருளாதார நெருக்கடி அமெரிக்கர்களுக்கு 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நிகழ்ந்ததென *Maryland* பல்கலைக்கழக பொருளாதார ஆய்வாளர் *John Williams* குறிப்பிட்டுள்ளார். அக்காலப்பகுதியின் சிவில் யுத்தமொன்று நிகழ்ந்து கொண்டிருந்தது. வடஅமெரிக்க மாநிலங்களுக்கும் தென்னமெரிக்க மாநிலங்களுக்குமிடையே நிகழ்ந்த போரினால் அமெரிக்கப் பொருளாதாரம் நெருக்கடியை அடைந்தது. மீண்டும் படிப்படியாக வலுவாகிய அமெரிக்கப் பொருளாதாரம் இரண்டாம் உலக யுத்தத்தின் பின் மிகப் பிரமாண்டமான வளர்ச்சியை எட்டியது. அதன் வளர்ச்சியின் போக்கு 1973, 1974களில் வர்த்தகத்திற்கு ஏற்பட்ட நெருக்கடி மெதுவான பின்னடைவைக் கொடுத்த போதும் 1989 களின் பின்பு மிக உச்சமான வளர்ச்சியை அடையத் தொடங்கியது. 1999கள் வரை நிலையான வளர்ச்சித் தன்மையைப் பேணியது. ஆனால் 1999 ஆம் ஆண்டுக்குப் பின்பு அமெரிக்கப் பொருளாதாரம் படிப்படியாக சரிவடையத் தொடங்கிவிட்டது. குறிப்பாக சோவியத் யூனியனின் வீழ்ச்சி சோஸலிசத்தின் வீழ்ச்சியாக கருத்துருவாக்கப்பட்டதனாலும் உலக நாடுகள் அனைத்தும் முதலாளித்துவம் "புதிய பொருளாதாரம்" எனக் கருதிய தாலும் அமெரிக்கப் பொருளாதாரம் சுபீட்சத்தை ஒரு தசாப்த காலத்தில் அடைந்து கொண்டது.

ஆனால் அத்தகைய போக்கு புதிய பொருளாதார அலகின் தோற்றத்தினாலும் ஏனைய நெருக்கடிகளாலும் முடிவுக்கு வந்து விட்டதாக கருதும் நிலை உருவாகியது. நெருக்கடியில் அமெரிக்கப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வீதம் 2002 ஏப்ரல் - யூன் வரை 0.5 சதவீதமாகவே காணப்பட்டது. யூலையில் மட்டும் சற்று மாறுபட்டு 1.4 சதவீதமாக ஏறுமுகத்தைக் காட்டியுள்ளது. இது 2004 வரை பாரியளவான மாறுதலின்றி பேணப்பட்டு வருகிறது. இது கூட பலவீனமான நம்பிக்கையாகவே எதிர்காலத்தில் அமையலாம் என்பது அநேகஅமெரிக்கப் பொருளியலாளர்களின் கருத்தாகும். இத்தகைய வீழ்ச்சிக்கான காரணங்களை அறிந்து கொள்ள முயற்சிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வர்த்தக ரீதியான காரணி

இன்றைய பொருளாதாரத்தில் வர்த்தகம் மிக முக்கியமான பங்கைச் செலுத்தும் காரணியாக விளங்குகின்றது. உற்பத்தியின் அளவும், தரமும் அதன் வர்த்தக அடைவில் மட்டுமே தங்கியுள்ளது. அபிவிருத்தி அடைந்து வரும் எல்லா நாடுகளிலுமே இப்பிரச்சினை தரத்தோடும் அளவோடும், தொடர்புபட்டதாக அமைய அபிவிருத்தி யடைந்த நாடுகளில் தரமும், அளவும் பிரச்சினைக்குரிய காரணியாக இல்லாது போய்விட்டது. இதனால் சந்தை என்பதற்கான போட்டி அவர்களிடம் முதன்மை பெற்றுவிட்டது. சந்தைக்கான போட்டியின் ஒரு படியான விபரணமே உலகமயவாக்கம் என்று பேசப்படுவதனை கருதிக் கொள்ளலாம். அத்தகைய போக்கில் சந்தைக்கான வாய்ப்பைத் தேடும் முயற்சியில் அமெரிக்கர்களின் வர்த்தகரீதியான அணுகுமுறை கள் ஆபத்துக் குள்ளாகியுள்ளன.

உலகில் சனத்தொகையில் அதிகமான மக்கள் ஆசியாவிலே யே உள்ளனர். குறிப்பாக சீனா, இந்தியா, நாடுகள் என்ற அடிப் படையில் அதிக மக்களை கொண்டுள்ளன. அதை விடவும் ஏனைய பிராந்தியங்களுடன் ஒப்பீடு செய்யும் போது ஆசிய நாட்டவர்களே உலகில் அதிக மக்கள் தொகையை கொண்டவர்கள். ஆனால் சீனர்க ளுடனும் ஏனைய இஸ்லாமிய ஆசிய நாட்டவர்களுடனும் அமெரிக் கர்களின் உறவு நெருக்கடியையும் கசப்புணர்வையும் கொண்டதாக அமைந்துள்ளது. இந்தியர்களுடனும் பொருளாதார உறவு பெரிதாக நெருக்கமுடையதென கூறிவிட முடியாது. இதனால் சந்தை வாய்ப்பு படிப்படியாக வீழ்ச்சியடைய வர்த்தகத்தை இழப்பதுடன் பொருளாதார பலத்தையும் அமெரிக்கர் இழக்கும் நிலைக்கு தள்ளபட்டுள்ளனர். இதில் குறிப்பாக மேற்கு ஆசியர் (இஸ்லாமியர்) பகிஷ்கரிப்பு பொரு ளாதாரத்தினை *(Boycott Economy)* கடைப்பிடித்து வருகின்றனர். எனவே வில்லியம் புஷ் நிகழ்த்திய ஈராக் மீதான போர் பகிஸ்கரிப்பு பொருளாதாரத்துக்கு எதிரான போராகவே கொள்ளலாம் அல்லது உலகமயவாக்கத்திற்கு எதிரான போர் மூன்று எனக் கொள்ளலாம்.

ஏனெனில் ஜோர்ச் புஷ்ஷின் ஈராக் மீதான முதலாவது போர் உலகமயவாக்கத்துக்கு எதிரான போர் ஒன்று எனவும் ஆப்கான் மீதான் வில்லியம் புஷ்ஷின் போர் உலகமயவாகத்துக்கு எதிரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் இரண்டு எனவும் கொள்ளலாம். அதாவது இப்போர்கள் அனைத்துமே பொருளாதார பலத்தை நிர்ணயிப்பதற்கான போர்களாகவே அமைகின்றன. ஏனெனில் அமெரிக்காவின் பலத்துக் முன்பு சவாலாக திகழ்ந்த சோவியத் யூனியனே சரிந்த பின்பு வேறு ஓர் அரசு அமெரிக்க ஆதிகத்திற்கு சவாலாக எழுச்சியடையக்கூடியதாக இருந்ததில்லை. சில சந்தர்ப்பங்களில் ஈராக்கை போர்க்காலத்தில் பலமுடையதாக வளர்ந்து விடுமென கருதினாலும் பஞ்சத்தினாலும், பட்டினியாலும் ஏப்பம்விடும் ஆப்கானிஸ்தானாலும், தலிபான்களாலும் என்ன சாதிக்க முடியுமென்ற கேள்வி இயல்பாகதே. எனவே ஆப்கான் போர் அதனின் அயலிலுள்ள சீன நாட்டின் பொருளாதார விஸ்தரிப்பையும் அதனோடு கூடிய அரசியல், இராணுவ விஸ்தரிப்பையும் தடுப்பதற்காக நிகழ்ந்த தாகவே கொள்ளமுடியும். இது பற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் விளங்கிக் கொள்ள முயற்சிப்போம்.

தற்போது உலகமயவாக்கத்திற்கு எதிரான போர் இஸ்லாமிய உலகம் முழுவதும் அமெரிக்காவுக்கு எதிரான தலைமைகளை அழிப்பதன் மூலம் முழு மேற்காசிய பிரதேசத்தையும் பொருளாதார நோக்கில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என்பதே அமெரிக்க நிபுணர்களின் நோக்கம். இதில் பலஸ்தீனத் தலைவரும் விதிவிலக் கானவரல்லர். ஆனால் அமெரிக்கர்கள் கனவு காண்பதற்கு பதிலாக எதிர்ப்புக்கள் இஸ்லாமிய உலகத்தில் அதிகரிக்கிறது. எனவே அமெரிக்கர்கள் புரியும் போர்கள் ஒவ்வொன்றும் பொருளாதார இலக்குடனே நகர்த்தப்படுகின்றது. ஆனால் எப்படி போர் பொருளாதாரத்தை மந்தமடையச் செய்யும் என்பது இலங்கைக்கு மட்டுமல்ல அமெரிக்கர்களுக்கும் அபாயகரமான செய்தி என்பது யதார்த்தமானதே. இரண்டாம் உலகயுத்தம் அமெரிக்க மண்ணில் நிகழாமையினாலும் தந்திரமாக அமெரிக்கர்கள் போரை நகர்த்தியமையாலும் அபாயம் அவர்களை நெருங்கவில்லை. ஆனால் ஐரோப்பியரை வாட்டி வதைத்தது என்பது இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் உணரமுடிந்தது. தற்போதைய போர்களை அமெரிக்கர்கள் தலைமை தாங்குவதாலும் அதன் நேரடி விளைவுகளை அவர்களே சந்திக்க வேண்டியுள்ளது. இதனை விளங்கிக் கொள்வதற்காக ஒரு சில அம்சங்களை நினைவுபடுத்துவது உகந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதிச் சந்தை

அமெரிக்காவின் இருப்புச்சந்தை வங்கி முறைமைக்குள் உட்படாதது. கம்பீரமான நிதிச் சந்தையை மட்டும் கொண்டது. இது நிரந்தர அல்லது உண்மையான பொருளாதாரத்திற்கு பலவீனமானது. வர்த்தகர்களின் முதலீடுகள் நிதிச்சந்தையினால் ஏற்கனவே இழப்பீடுகளைச் சந்தித்துவிடும். அதனால் செலவீனங்களைச் செய்ய வேண்டிய நிலை ஏற்படும். இது ஒவ்வொரு அமெரிக்க டொலருக்கும் நுகர்வோருக்கோ அல்லது கொள்வனவுக்காரருக்கோ மூன்று தொடக்கம் ஆறு சதவீதத்தை இழக்க வைக்கின்றது. இது சந்தையின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் மாறிமாறி காட்டும். இது 07 Trillion அமெரிக்க டொலர் செலவீனத்தை ஏற்படுத்துகின்றதென ஆய்வு ஒன்றின் மூலம் தெரிய வருகிறது.அவ்வாறே சந்தைக்கான வாய்ப்பும் பெரியளவில் வீழ்ச்சி கண்டுவருகிறது. குறிப்பாக 2002 யூலையில் கொக்கக் கோலாவின் சந்தை வாய்ப்பு 47 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது. மின்னியல் சாதனங்கள், தொலைத்தொடர்பு சாதனங்களின் Intel, Disney வகைகள் எனப்பலபொருட்களுக்கான சந்தை 50 - 75 சதவீதம் வரையான வீழ்ச்சியை அடைந்துள்ளது. வேலையில்லாதவர்கள் 5.9 சதவீதமாக உள்ளதென்பது அமெரிக்கப் பொருளாதாரத்தின் வீழ்ச்சியைக்காட்ட உதவும் இன்னொரு காரணியாகும்.

## அரசியல் ரீதியான காரணி

இவ்வாறு அமெரிக்காவின் பொருளாதாரம் நெருக்கடியை அடைந்துவருவதற்கு காரணம் வில்லியம் புஷ்ஷின் அரசியலுக்கான போர் என்றே பல அமெரிக்க மக்கள் கருதுகின்றனர். குறிப்பாக செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கும் அதன் பின்பும் எழுந்துள்ள நிலைமைகளுக்கும் அமெரிக்க நிர்வாகத்தின் தவறான போக்கே காரணமென அவர்கள் எண்ணுகின்றனர். ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்காவின் போர் அமெரிக்க கம்பனிகள் பலவற்றினதும் நட்டத்துக்கு காரணமாக அமைந்துள்ளதாக கூறப்படுகின்றது. ஏறக்குறைய 72 வீதமான அமெரிக்கர்கள் ஜனாதிபதி சிறந்த தலைவர் என்பதை ஏற்கும் அதே வேளை பொருளாதார வீழ்ச்சியை சரி செய்ய முடியாத தலைவர் என்றும் குறைப்பட்டுக் கொள்கின்றனர். 61 வீதமான சாதாரண அமெரிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்கள் வில்லியம் புஷ் தனித்து நிர்வாகத்தில் கவனம் செலுத்து கிறாரோ அன்றி பொருளாதாரத்திலோ வர்த்தகத்திலோ அவருக்கு அக்கறையில்லை எனக் குற்றஞ்சாட்டுகின்றனர். அரசியலுக்கான அமெரிக்க ஆட்சியாளாரின் போர்களால் பொருளாதார வளர்ச்சிக்கு பாதிப்பு ஏற்பட்டுவிட்டதாக கருதும் நிலை வளர்ந்துவிட்டது. இராணுவத் திற்காகவும் அதன் தளபாட உற்பத்திக்காகவும் அதிக செலவீனத்தைச் செய்வதுடன் அவற்றுடனேயே அமெரிக்க ஜனாதிபதியின் பணி சுருங்கி விட்டதாகவும் கூறப்படுகிறது. வில்லியம்கிளின்டன் காலத்தில் காணப் பட்ட பொருளாதாரஸ்திரம் கூட தற்போது இல்லாமல் போய்விட்ட தென ஒப்பீடு செய்கின்ற நிலையும் காணப்படுகின்றது. இவ்வாறு அமெரிக்காவுக்குள் அமெரிக்கர்களால் முன் வைக்கப்படும் குற்றச் சாட்டுக்களைப் போன்றே அமெரிக்காவுக்கு வெளியேயும் அதிகமான நெருக்கடிகளை அமெரிக்கா சந்தித்து வருகின்றது. அவற்றை இனி நோக்குவோம்.

யூரோ நாணயத்தின் வருகையும் அதனால் டொலருக்கு ஏற் பட்ட சந்தைப் பலவீனமும் அமெரிக்கப் பொருளாதாரத்தை நெருக்கடிக் குள்ளாக்கியுள்ளது. யூரோ நாணயம் ஐரோப்பாவுக்குள்ளான தேசியத் தை மட்டும் ஏற்படுத்தியிருப்பதுடன் ஐரோப்பாவுடன் தொடர்புடைய ஆசியாவுடனும் ஏனைய கண்டத்து நாடுகளுடனும் நெருக்கமான வர்த்தக உறவை பேணிவருகின்றது. இதனால் ஐரோப்பாவில் மட்டு மல்ல ஆசியா, ஆபிரிக்கா போன்ற கண்டங்களிலும் டொலருக்கான வர்த்தக வாய்ப்பை இழக்க வைத்துள்ளது. அமெரிக்காவின் உலகளா விய ஆதிக்க விஸ்தரிப்பு வாதமும் அதனால் எழுந்துள்ள பகையும் ஐரோப்பியருக்கு பொருளாதார வாய்ப்புக்களை விரிவாக்கி வருகிறது.

மேலும் அமெரிக்க கம்பனிகளது அயோக்கியத்தனமான வர்த்த கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளும், சில கம்பனிகளும் அமெரிக் காவின் வாய்ப்புக்களை அடியோடு தகர்த்து விடுகின்றன. சீனர்கள், ஜேர்மனியர்கள், பிரான்ஸ் நாட்டவர்கள் உத்தரவாதத்துடனான வர்த்த கத்தை மேற்கொள்ள முன்வரும் போது அமெரிக்கர்களின் ஆபத்தான வர்த்தகம் நிராகரிக்கப்படுகின்ற நிலை சாதரணமானதாகும். ஜேர் மனிய கம்பனிகளும் அரசும் இணைந்து கிழக்கு ஐரோப்பாவுடனும் ஆசியாவுடனும் கொண்டிருக்கும் நெருக்கமான வர்த்தக உறவு அமெரிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்களால் உடைக்கமுடியாதுள்ளது. ஏனெனில் தரைத்தொடர்பும் இலகுவான பரிமாற்றமும் உத்தரவாதப் படுத்தப்பட்ட அணுகுமுறையாகும். அவ்வாறே சீனர்களும் கிழக்காசியா மட்டுமன்றி இந்து சமுத்திர பிராந்திய நாடுகளுடன் வர்த்தக தொடர்புகளை உருவாக்கி வருகின்றனர். இவையாவும் ஒன்று சேர்த்தே அமெரிக்கப் பொருளாதாரத்தை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

போரும் பொருளாதாரமும் எதிர்எதிர் காரணிகளுக்கு ஒப்பானவை. போர் தீவிரமடையுமாயின் பொருளாதாரம் சிதைவடையும். போர் ஓய்வடையுமாயின் பொருளாதாரம் மீட்சிபெறும். அமெரிக்கர்கள் எப்போதும் போரின் பாதிப்புகள் எதனையும் தமது மண்ணில் ஏற்படாத வகையில் பேணியதால் பொருளாதாரத்தை செழிப்படைய வைத்துள்ளனர். ஆனால் இப்போது போரின் விளைவுகள் ஒவ்வொன்றும் வெள்ளைமாளிகையின் எல்லைவரை சென்றுவிட்டது. இதனை நிறுத்தும் வரை பொருளாதாரம் மீட்சியடைவது கடினமானதென்பது அமெரிக்கர்களிடம் ஏற்பட்டுள்ள உணர்வலையாகும். உலக வரலாற்றில் பல வல்லரசுகளும், சாம்ராச்சியங்களும் பொருளாதார பல்வீனத்தினாலே அதிகாரத்தை இழந்துள்ளன. அதனால் அமெரிக்கர்கள் வேகமாக அழிந்து விடுவார்கள் என கணக்குப் போட முடியாது. ஏனெனில் அமெரிக்கர்களுக்கு சமமாக உடனடியாக எழுச்சியடையும் பலமுடைய அரசுகள் எவையும் உலகத்தில் இல்லை. ஆனால் புதிதாக எழுச்சி பெற்றுவரும் ஐக்கிய ஐரோப்பா அமெரிக்க நலன்களுக்கு ஆபத்தாக அமையலாம்.

## ஐக்கிய ஐரோப்பாவின் அரசியல் பொருளாதாரம்

உலகின் அரசியல், பொருளாதாரம் மிக வேகமாக மாற்றமடைந்து கொண்டிருக்கின்றது. குறுகிய காலத்திற்குள் உலகம் ஒரு புதிய திசையை நோக்கி நகரத் தொடங்கி விட்டதாக இருபத்தியோராம் நூற்றாண்டு பிறந்த போது ஐரோப்பிய மற்றும் சீன நாட்டு அறிஞர்களால் கூறப்பட்டது. அத்தகைய மாறுதல் அரசியல் அதிகாரத்தையும் அதனைத்தக்கவைத்துள்ள ஐக்கிய அமெரிக்காவையும் மாற்றும் என்ற கருத்துக்கள் வெளிவந்தன. குறிப்பாக பொருளாதார அடித்தளத்தை ஏற்படுத்தும் மாற்றங்கள் அரசியல் தலைமைத்துவத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், அதிகாரத்தையும் தகர்த்துவிடும் என்பதே அவர்களது வாதம். சிலர் இந்த நூற்றாண்டு நடுப்பகுதி என்றும் பிற்பகுதி என்றும் மாற்றத்திற்கான காலத்தை வரையறுத்துக் கொண்டார்கள். ஆனால் ஜேர்மனியப் பொருளாதார வல்லுனரான மாட்டின்கப்னரின் தீர்க்க தரிசனம் சற்றுக் காலத்தாலும் பிரவேசத்தாலும் வேறுபட்டதாக அமைந்துள்ளது. எனவே மாட்டின்கப்னரின் எதிர்வுகூறலை நோக்கு வோம்.

1989களில் உருவான புதிய உலக ஒழுங்கு தனித்த அரசியல் சக்தியான அமெரிக்காவை அங்கீகரித்ததோடு பொருளாதார பல முடையசக்தியாகவும், ஐக்கியஅமெரிக்காவை தோற்றுவித்தது. ஐக்கிய அமெரிக்கா பொருளாதார அடிப்படையில் உயர்வதற்கு பல அரசு களது பொருளாதாரக் கொள்கைகள் மறுசீரமைக்கப்பட்டது முக்கிய காரணமாகும். குறிப்பாக கிழக்கு ஐரோப்பா திறந்து விடப்பட்டது. மூடிய பொருளாதாரம் இருந்த நாடுகள் முழுவதிலும் ஐக்கிய அமெரிக்கா முதலீடுகளையும், சந்தைவாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொண்டது. இந்தியா, சீனா என்பவற்றின் பொருளாதார மறுசீரமைப் புக்கள் ஐக்கிய அமெரிக்காவுக்கு வாய்ப்பை ஏற்படுத்தியது. இதனால் ஐக்கிய அமெரிக்காவே பொருளாதார வல்லரசுகளாகவும், சர்வதேச அரசியலில் அரசியல் வல்லரசாகவும் விளங்கியது. யப்பான் பல நெருக்கடிகளை எதிர்கொண்டதினால் 1960 களுக்கு பின்புள்ள நிலை யை இழந்திருந்த போது ஓரளவு பொருளாதார அரசு என்ற சக்தியை தாங்கி கொண்டிருந்தது. அவ்வாறே சீனாவும் உலகநாடுகள் மத்தி யில் கடந்த நூற்றாண்டில் பொருளாதார நிலையை சிறிதளவேனும் தக்கவைக்கும் அரசு என்ற கருத்து நிலவியது. இந்தத்தர நிலைகளில் பிரான்ஸ், ஜேர்மனி போன்ற ஐரோப்பிய அரசுகளும் பங்கெடுத்துக் கொண்டன. பிராந்திய அமைப்புக்கள் என்ற அடிப்படையில் ஐரோப்பா, கிழக்காசியா வடஅமெரிக்கா என்பனவும் சக்தி பெற்ற பிராந்தியங்க ளாக அமைந்தன.

இந்த நிலையில் ஐக்கியஅமெரிக்காவின் பொருளாதார முதன்மை 1997களிலிருந்து படிப்படியாக வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. ஆனால் அவ்வீழ்ச்சி நிலையில் அல்லது வெற்றிடத்தை நிரப்பீடு செய்யும் அரசு எது என்பதற்கு பல விளக்கங்கள் முன்வைக்கப்பட்டன. எல்லா வற்றையும் விட மாட்டின்கப்னரின் பிந்திய தகவல் புதிய கருத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்றை கோடிட்டுக்காட்ட முயலுகிறது. மாட்டின்கப்னரின் எதிர்வு கூறலின் படி அடுத்து பத்து ஆண்டுகளில் அதாவது 2012 இல் ஐக்கிய அமெரிக்காவுக்கு பதிலாக ஐக்கிய ஐரோப்பாவே எழுச்சியடையும் என கூறுகிறார். 1960களில் ஜேர்மனியின் பொருளாதார நெருக்கடியை சந்தித்தது போல் 1970 களில் ஓபெக் மங்கியது போல் 1990 களி லிருந்து ஐக்கிய அமெரிக்கா பொருளாதார வீழ்ச்சியை அடைய ஆரம்பித்துவிட்டது. மாறிவந்த அரசியல் கொள்கையினர் ஓரளவு பொருளாதார பலத்தைக்தக்கவைத்துக் கொண்டிருக்கின்றது அமெரிக்கா என்கிறார். ஐக்கியஐரோப்பா பொருளாதாரரீதியிலும் அரசியல் வலு விலும் சக்தி வாய்ந்த பிராந்தியமாக எழுச்சியடையும் என்பதற்கு அவரே கூறும் காரணங்களை அவதானிப்பது பொருத்தமாக அமை யும்.

முதலாவது ஐக்கியஐரோப்பாவின் தகவல் பொருளாதாரம் அற்புதமானதும், அதிசயமானதுமான உற்பத்திகளை உருவாக்கி வரு கின்றது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஐக்கியஅமெரிக்காவுடன் கூட்டாளி யாக தகவல் பொருளாதாரத்தில் பங்கெடுத்துக்கொண்ட ஐரோப்பா மிக மெதுவாகவே எழுச்சிகண்டு தற்போது உயர்ந்த நிலையை அடையும் திட்டமிடலுடன் செயற்பட்டு வருகிறது. தகவல் தொழில்நுட்பம் (IT) ஐரோப்பாவின் தேசிய உற்பத்தியில் சாதாரணமாக 2.8 சதவீதத் தினையே ஈடுசெய்கின்றது. இது 2005 ஆம் ஆண்டு 45 வீதத்தினை எட்டிவிடுமென கப்னர் கூறுகின்றார். கடந்த நான்கு ஆண்டுகளாக ஐக்கிய அமெரிக்கா பின்பற்றும் தகவல் பரிமாற்றத்தை ஐரோப்பா பின்பற்றுவதோடு நிறுத்திக் கொள்ள வில்லை. மாறாக அத்தகவல் தொழில்நுட்பத்தின் பலவீனங்களையும் கைவிடப்பட்ட அம்சங்களை யும் அனுபவமாக கற்றுக் கொண்டுள்ளது. இதனை முதன்மைப்படுத்தி அடுத்துவரும் மூன்று ஆண்டுகளில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை ஐரோப்பா இலகுவாக அடைய முடியுமென நம்புகிறார்.

இரண்டாவது ஐக்கிய ஐரோப்பாவுக்குள் பலவீனப்படுத்தப் பட்டுள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகள் கடந்த காலத்தில் பாரிய பொருளாதார மாற்றங்களினால் அபிவிருத்தியை நோக்கி வருகின் றனர். தற்போது மேற்கு ஐரோப்பா போன்ற புரட்சிகர புலிப் பொருளா தாரத்தை பின்பற்றும் கங்கேரி, செக்குடியரசு, போலந்து என்பன அடுத்து வரும் 10 ஆண்டுகளில் 4.5 சதவீதமான வளர்ச்சியை ஐரோப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவுக்குள் அல்லது முழு உலக நாடுகளுக்குள் அடைய முடியுமென கூறுகின்றார்.

மூன்றாவது ஐக்கியஐரோப்பா முழுமையான விரிவாக்கத்துக் குள் 15-20 உறுப்பு நாடுகளைக் கொண்டதாகக் காணப்படும் போது அதன் மக்கள் தொகை 550 மில்லியனாக அமையும். இது தற்போது 27 நாடுகளைக் கொண்ட அமைப்பாக மாறிவிட்டது. இதனை ஐக்கிய அமெரிக்கா 2050 களில் கூட அடையுமென கூறமுடியாது. தற்போது சீனா பெரும் மக்கள் தொகையைக் கொண்ட அரசாக விளங்கு கின்றது. அதனால் சீனா உலகின் பொருளாதார வல்லரசு எனக் கூறப் படுவதில்லை. ஆனால் சந்தை என்பது தற்போதைய பொருளாதாரத் தின் அடிப்படை என்பதை மறுக்கமுடியாது. சந்தை வாய்ப்புக்களை நோக்கியே நாடுகளும், நிறுவனங்களும் படையெடுத்து வருகின்றன.

நான்காவது யூரோ நாணயத்தின் அறிமுகம் பலமான வங்கி அமைப்பை ஐக்கிய ஐரோப்பாவுக்குள் ஏற்படுத்திவருகின்றது. தற்போ தைய நிலையில் ஓரளவு பலவீனத்தன்மை காணப்பட்டாலும் எதிர் காலத்தில் இறுக்கமான பரிமாற்றத்தை அது சாத்தியபடுத்தும். அப் போது ஐரோப்பிய சந்தைக்கான எல்லைகளை யூரோ சுருக்குவதுடன் இலகுவான நாணயமாற்றும் ஒவ்வொரு வருடமும் ஐரோப்பாவின் தேசிய வருமானத்தில் ஒரு வீதத்தை அதிகரிப்படையச் செய்யும். மேலும் ஐக்கிய ஐரோப்பாவுக்கு வெளியே உலகளாவிய பொருளா தாரத்தில் ஆச்சரியமான மாற்றங்களை சந்திக்கமுடியும் சீனாவின் வங்கி அமைப்பு முறையும் தொழிலாளர்களின் நகரும் தன்மையாலும் அதிக நெருக்கடியை சீனா எதிர்காலத்தில் சந்திக்கும் அப்போது சீனா வின் பொருளாதார பலம் தகர்ந்துபோய்விடும். அதனால் ஐரோப்பா சீனாவைக் கண்டு அச்சமடைய வேண்டியதில்லை என அவர் மேலும் கூறுகின்றார்.

ஐந்தாவது ஆங்கில மாதிரி (Anglo-Saxon) முறைமை கைவிடப் பட்டு புரட்சிகரமான மாற்றம் நிகழ்ந்து வருகின்றது. குறிப்பாக கன்சர் வேட்டிவ் (Conservative) யுகமும் முடிந்து (றேகன்-தட்சர் காலம்) நவத ராண்மை (Neo-liberal) யுகமும் (கிளின்டன்-பிளயர்) முடிவடைந்து விட்டது. தற்போது புரட்சிகரமான அல்லது அதிசயமான பொருளா தாரம் ஒன்று ஆரம்பித்துள்ளது. இது பிரான்ஸ், ஜேர்மனியின் கூட்டாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட அமையலாம். அதனால் ஏற்படப்போகும் மாற்றமே ஐக்கிய ஐரோப்பாவை பலமான சக்தியாக மாற்றும் என்று கூறுகின்றார் மாட்டின் கப்னர்.

அவரது எதிர்வுகூறல் யதார்த்தத்தில் இன்னும் ஒரு தசாப் சத்தில் சாத்தியப்படும் என அவரே கூறினாலும் அது அரசியல் ரீதி யான வலுவை ஐக்கிய ஐரோப்பாவுக்கு வழங்குமா என்பதே அடுத்த கேள்வியாகும். நிச்சயமாக பொருளாதார வல்லரசு பிராந்தியமாக ஐக்கிய ஐரோப்பா விளங்கலாம். ஆனால் ஐக்கிய அமெரிக்காவுக்கு மற்றான அரசியல் தலைமையை ஐக்கிய ஐரோப்பா கொடுக்குமா என்பது உறுதிப்படுத்த முடியாத விடயமாகவுள்ளது. ஏனெனில் ஐக்கிய ஐரோப்பா முழு உலகத்திலும் அரசியல் அதிகாரத்தைத் தக்க வைக்கக்கூடிய இராணுவக்கட்டமைப்பையோ, விண்வெளி தொழில் நுட்பத்தையோ, கடற்படை வலுவையோ, பெரிதாகக் கொண்டுள்ள தென கூறிவிட முடியாது. ஆனால் எதிர் காலத்தில் பெறமுடியாத தென்றுமில்லை.

இராணுவ ஒழுங்கமைப்பான நேட்டோ ஐக்கிய அமெரிக்கா தலைமையிலேயே தொடர்ந்தும் காணப்படுகிறது. நேட்டோவின் வலு ஐக்கிய ஐரோப்பாவுக்குள் மாற்றப்படுமளவிற்கு ஐரோப்பிய அரசுகள் தற்போது இல்லை. ஆனால் அதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று கூறமுடியாது. சிலவேளைகளில் சோவியத்தின் வோர்சோ மாதிரி நேட்டோ வீழ்ச்சியடைந்து ஒரு நிலையை உருவாக்கவேண்டுமாயின் மாற்று இராணுவத் தலைமை ஒன்று எழுச்சியடைய வேண்டும். அத்தகைய சூழல் கப்னரின் பத்து ஆண்டுகளில் சாத்தியப்படாது என்றும் கூறிவிட முடியாது போனாலும் நேட்டோவுக்கு நிகராக வேறு அமைப்பு உருவாவது கடினம். மேலும் விண்வெளித் தொழில்நுட்பத்தில் ஐரோப்பாவைவிட ரஷ்சியா, சீனா, இந்தியா வளர்ச்சியடைந்து வரு கின்ற அரசுகளாக உள்ளன. ஏனெனில் உலகினை ஆளும் பலம் அண்ட வெளி அதிகாரத்திலும் தங்கியுள்ளது. ஐக்கிய ஐரோப்பாவில் ரஷ்சியா உள்ளடங்குமா என்பது மட்டுமன்றி அதற்கான சாத்தியப்பாட்டை ரஷ்சியா ஏற்படுத்துமா என்பது பிரதான சந்தேகமாகும்.

அடுத்து மிகப் பிரதானமானது சர்வதேச மட்டத்தில் கடற்படை வளமாகும். இது ஐரோப்பாவை விட பிற அரசுகளில் குவிந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய ஐரோப்பாவில் பிரான்ஸிடம் கடலதிகாரம் காணப்பட்டாலும் ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பன வலுக்குன்றிய நிலையிலேயே காணப்படுகின்றன. இராணுவ-பெருளாதார நோக்கிலே கடலதிகாரப் பலம் அவசியமாகின்றது. ஐக்கிய ஐரோப்பாவுக்குள் பிரித்தானிய இணைந்து கொள்ளாதது மட்டுமன்றி ஐக்கிய அமெரிக்காவுடன் சேர்ந் திருப்பது 2012 க்குள் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றோ பலத்தை தக்க வைக்குமென்றோ கூறிவிட முடியாது. அவற்றுடன் ஐக்கிய ஐரோப் பாவுக்கான அரசியல் திட்டவரைபில் பிரான்ஸ், ஜேர்மனியின் கை ஓங்கியிருப்பதும் ஏனைய ஐரோப்பிய அரசுகளுக்கு சர்வதேசரீதியில் அரசியல் தலைமைத்துவத்திற்கு போட்டியிடுவது பற்றிய அச்சமும் ஏற்பட்டுள்ளது. அதனால் கப்னர் கூறுவது போல் பொருளாதாரவலு சாத்தியப்படாது போய்விடும் என்று கூறமுடியாது. நிச்சயமாக ஐக்கிய ஐரோப்பாவுக்குள் ஒரு பொருளாதார பலம் எழுச்சியடையும் அது அரசியல் மட்டத்தில் சர்வதேச வல்லரசுப் பிராந்தியமாக மாறுமா என்பது தான் கேள்விக்குரிய விடயம். ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய ஐரோப்பா வை அரசியல் ரீதியாக தோற்கடிப்பதை கைவிட்டு பொருளாதார அடிப்படையில் போராட தொடங்கியுள்ளது. இது ஐக்கிய ஐரோப்பா வின் விவசாய உற்பத்தியுடன் ஆரம்பமாகியுள்ளது. இது படிப்படியாக விஸ்தரிப்பு அடையுமாயின் பிரான்ஸ், ஜேர்மனி என்ற மோதலே சாத்தி யமாகவும் வாய்ப்பு உண்டு. அத்தகை நிலை ஏற்படாது ஐக்கிய ஐரோப்பா தவிர்த்துக்கொண்டு அரசியல் வரைபை மட்டும் சாத்தியபடுத்துமாயின் அமெரிக்க அரசியல் பொருளாதாரம் கேள்விக்குட்படும்.

## ஐரோப்பிய யூனியன் (*EU*)

ஐரோப்பிய யூனியன் தற்போது 27 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட பாரிய பொருளாதார ஒழுங்கமைப்பாக காணப்படுகின்றது. இவ்வமைப்பின் உண்மையான வடிவமாக ஐரோப்பிய பொருளாதார சபையாகவே (*Europa Economical Council*) ஆரம்பிக்கப்பட்டது. 1957 ஆம் ஆண்டு பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, லக்ஸ்சம் பேர்க் மற்றும் நெதர்லாந்து என்பன ஆரம்ப அங்கத்துவநாடுகளாக விளங்கின. பின்பு 1973 இல் அதன் உறுப்புரிமையில் டென்மார்க் அயர்லாந்து மற்றும் இங்கிலாந்து சேர்ந்துகொண்டு எண்ணிக்கையை அதிகரித்தது. எட்டு வருடங்களுக்க பின்னர் கிரேக்கம் இணைந்தது. அதனைப் பின்பற்றி போத்துக்கல், ஸ்பெயின் 1986 ஆம் ஆண்டு ஒன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணைந்தன. 1995 இல் ஒஸ்ரியா, பில்லாந்து, சுவீடன் சேர்ந்துகொண்டு 15 நாடுகள் அங்கம் வகித்தன. 2004 ஆம் ஆண்டும் மேலும் 12 நாடு கள் ஐரோப்பிய யூனியனில் இணைந்துள்ளன. சைப்பிரஸ், (இரண்டு அலகுகள்) ஹங்கேரி, எஸ்தோனியா, செக்குடியரசு, லித்துவேனியா, போலந்து, லத்வியா, மோல்டா, ஸ்லோவேக்கியா், ஸ்வவேனியா் மற்றும் ஸ்கொட்லாண் என்பன புதிதாக இணைந்துகொண்ட நாடுகளாகும்.

ஐரோப்பிய யூனியன் அமைச்சர்களைக் கொண்ட சபையாக அமைக்கப்பட்ட பிரிவு தீர்மானம் எடுக்கும் அமைப்பாக காணப்படும். அங்கத்துவ நாடுகளின் அமைச்சர்களைக் கொண்ட சபையாக அமைந்திருப்பதுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை விவாதிக்கும் அமைப்பாகவும் விளங்கும். ஒரு தீர்மானம் சாதாரண பெரும்பான்மை யினால் நிர்ணயிக்கப்படுவதில்லை. தகுதியான பெரும்பாண்மை (Qualified majority) என்பதொன்று நிர்ணயிக்கப்பட்டு (87 வாக்கு களுக்கு 62 பெறப்பட வேண்டும்) தீர்மானங்கள் எடுக்கப்படும். பல நாடுகளுக்கு அவற்றின் நிலப்பரப்பின் அளவையும், மக்கள் தொகை யையும் உள்ளடக்கி விசேட எண்ணிக்கையான வாக்குகள் வழங்கப் படும். ஜேர்மனி, பிரான்ஸ் என்பவற்றுக்கு 10 வாக்குகளும், பெல்ஜியத் திற்கு 05 வாக்குகளும், லக்ஸ்சம்பேக்குக்கு 02 வாக்குகளுமென ஒதுக்கப்பட்டுள்ளது. இவ் ஒழுங்கமைப்பு நான்கு வருடத்திற்கு ஒரு தடவை மாற்றப்படும்.

ஐரோப்பிய யூனியனின் பிரதான நடவடிக்கைகளை ஐரோப் பிய ஆலோசனை சபையே (European Council) மேற்கொள்ளும். இக் குழுவுக்கு ஒருவர் தலைவராக விளங்குவதுடன் அங்கத்துவ நாடு களின் தலைவர்களும், வெளிவிவகார அமைச்சர்களும் இதன் அங்கத் தவர்களாக காணப்படுவார்கள். வருடத்திற்கு இருதடவை ஐரோப்பிய யூனியனுக்கான உச்சி மகாநாடு நடைபெறும். இவ்வமைப்பு அத்தியா வசியமான விடயங்களுக்காக விசேட மகாநாடுகளை நடத்துவதுடன் அபிவிருத்தி, பொதுவான அரசியல் பற்றிய வழிகாட்டல் என்பவற்றை காலத்திற்கேற்ப வளர்ச்சியடையச் செய்வதுடன் தீர்மானங்களுக்கு பொறுப்புடையதெனவும் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும் முடியு மெனக் சரத்து நான்கு கூறுகின்றது.

ஐரோப்பிய ஆலோசனையின் அனுமதியோடு ஐரோப்பிய ஆணைக்குழு (European Commission) நிறுவப்பட்டதுடன் ஐரோப்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளுக்கான சந்தை ஒன்றும் (European Market) நிறுவப்பட்டது. இவற்றுடன் ஐரோப்பிய பொருளாதாரப் பிராந்தியம் ஒன்றையும் பிரகடனப்படுத்தியுள்ளது. சுதந்திரமான செயற்பாட்டைக் கொண்ட மக்களையும், பொருட்களையும், சேவையையும், முதலீட்டையும் உள்ளடக்கிய நான்கு அம்ச அடிப்படையில் ஐரோப்பிய சந்தை நிறுவப் பட்டுள்ளது.

ஐரோப்பிய யூனியனின் தலைமைத்துவம் ஒவ்வொரு ஆறு மாதங்களிலும் அங்கத்துவநாடுகளின் உறுப்பினர் ஒருவர் ஐரோப்பிய ஆலோசனைச் சபையால் தெரிவுசெய்யப்படுவார். ஐரோப்பிய பாராளு மன்றம் ஐரோப்பிய யூனியனின் பிரஜைகளால் தெரிவு செய்யப்படு வார்கள். ஐரோப்பிய பாராளுமன்றம் 626(இது காலத்துக்கு காலம் அதிகரிக்கும்) உறுப்பினர்களைக் கொண்டது. இதில் 190 உறுப்பி னர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். 2004 ஆம் ஆண்டு தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 732 ஆக அதிகரிக்கப்பட்டதுடன் ஐந்து வருடத்திற்கு ஒருதடவை தேர்தல் நடை பெறும்.

இறுதியாக ஐரோப்பிய யூனியன் தனக்கென ஒரு மத்திய வங்கியை 1999 ஜுனில் ஆரம்பித்தது. இதன் பிரதான இலக்கு நாணயத்தின் உறுதிப்பாட்டையும் இஸ்திரத்தன்மையையும் பாதுகாப்பதாகும். யூரோ வன்நாணயமாக வளர்ந்துவருகின்றது. இது அமெரிக்க டொலருக்கு எதிராக பெரும் புரட்சியை நிகழ்த்தி வருவதுடன் டொலரின் தனித்தன்மையை முற்றாக தகர்த்துவருகிறது. மேலதிகமாக ஐரோப்பிய யூனியன் ஓர் அரசியல் அமைப்பை (constitution) வரைந்து கொண்டிருக்கின்றது. முழு உலகத்தின் அரசியலமைப்புக்கும் முன்னோடியாகவும், தனித்துவமானதாகவும் அமைக்க ஐரோப்பிய வல்லுனர்கள் முயன்றுவருகின்றனர். சமஷ்டி (Federalists) அரசியல் அமைப்புக்கான வரைபை முன்மொழியும் ஐரோப்பிய யூனியன் அதிகாரத்தை செம்மையாக ஒழுங்கமைத்துக் கொள்ளுதல். ஜனநாயகபூர்வமான அரசியமைப்பை வகைப் படுத்துதல், ஐரோப்பிய வரலாற்றின் அடிப்படைகளை முற்றாக கைவிடாத அரசியல் கலாசாரத்தை பின்பற்றுதல் என்ற மூன்று பெரும் பிரிவுகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றது. இதன் வெற்றி முழு உலகத்துக்குமான முன்னுதாரணமான அரசியலமைப் பாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க – ஐரோப்பிய முறுகல்

அமெரிக்க-ஈராக் போர் பற்றிய அரசியல், புதிய அத்தியாயங்களை வரையத் தொடங்கிவிட்டது. அதன் மிகப்பிந்திய செய்தியை, இரண்டாம் உலகப் போரின் கதாநாயகர்களாக விளங்கிய இரு தலைவர்களை நினைவுபடுத்தும் நூல் ஒன்றின் பிரித்தானியப் புத்திஜீவி ஒருவர் வெளியிட்டிருந்தார். அதன் தலைப்பு *"Hitler and Churchill, seeres of Leadership"* என்பதாகும். அதனை *"Andrew Roberts"* என்பவர் எழுதியிருந்தார். பிரித்தானியர் ஏன் அப்படிச் சிந்தித்தார் என்பதே சர்ச்சையாகும். 2003 இல் அந்நூல் பிரித்தானியாவில் பரபரப்பாக விற்பனையாவதுடன், பேசப்படும் நூலாகவும் விளங்கியது.

2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் அமெரிக்கா ஆளும் வர்க்கத்தின் ஆலோசகரும், அமெரிக்க நலன் விரும்பியுமான பேராசிரியர் ஜோசப்நை, அமெரிக்காவைப் பற்றிக் குறிப்பிட்டதை நினைவு கூருவது பொருத்தப்பாடாக அமையும். புதிய உலக ஒழுங்கின் பின்பான அரசியல் மாற்றத்தில், குறிப்பாக செப்ரெம்பர் தாக்கதலுக்குப் பின்பான உலகில் மூன்று அதிகார வடிவங்களை அவர் குறிப்பிட்டிருந்தார். ஒன்று அதிசிறந்த இராணுவப் பலத்தைக் கொண்ட தனி வல்லரசாக *(Unipolar)* அமெரிக்கா என்ற அரசையும், இரண்டாவது பொருளாதாரப் பலத்தின் அடிப்படையில் பலமுனை அதிகார *(Mutipolar)* வடிவமாக அமெரிக்கா, ஐரோப்பா, யப்பான் என்பவற்றையும் இனங்காணுகின்றார். மூன்றாவதாக எல்லைகளைத் தமது அதிகாரத்திற்குள் கொண்டிருக்கும் கட்டமைப்புடைய அதிகார *(Structure of power)* அரசுகளை இனங்கண்டுள்ளார். ஆனால், அவை எந்த அரசுகளெனச் சுட்டிக்காட்டாது தவிர்த்திருந்தார். மொத்தத்தில் அமெரிக்கா, இராணுவ ரீதியில் ஒரு வல்லரசு என்ற முடிவாகவே அவர் வரைந்த *"The American National Interest and Global Public Goods"* என்ற கட்டுரை அமைந்திருந்தது. அவ்வாறான இராணுவ வல்லரசு ஈராக் விவகாரத்தில் எடுத்துக்கொண்ட கொள்கையினால் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளது. அமெரிக்காவில் மிக நீண்டகாலம் வெளிவிவகார ஆலோசகராகக் கடமைபுரிந்த ஹென்றி கீசிங்கர் பல தடவை அமெரிக்க ஆளும் தலைமைகள் பலவற்றுக்குப் பின்வருமாறு ஆலோசனை கூறிவந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐரோப்பா இல்லாத அமெரிக்காவும், அமெரிக்கா இல்லாத ஐரோப்பாவும் பாரிய நெருக்கடிகளை உலகத்தின் முன் சந்திக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகும். இதில் ஐரோப்பாவை விட அதிக பாதிப்பினையும், நெருக்கடியையும் சந்திக்கும் அரசாக அமெரிக்காவே விளங்கும்

இதேவேளை, பிரான்ஸின் ஜனாதிபதி ஷிராக் ஆட்சிக்கு வந்த போது, ஐரோப்பியர்கள் நெப்போலியனுக்கு நிகராக ஒப்பிட்டிருந்தார். அதேபோன்று தற்போதைய அமெரிக்க சனாதிபதி வில்லியம் புஷ்ம், நெப்போலியன் மீண்டும் ஆட்சிக்கு வந்துவிட்டார் என (ஆட்சிக்கு வந்த முறையையும் குறிப்பிடலாம்) விமர்சித்தனர். ஆனால், பிரான்ஸ் ஜனாதிபதியின் முதலாவது ஏழு ஆண்டுகால ஆட்சியைவிட, இரண்டா வது காலஆட்சி சற்று வித்தியாசமாகவே உள்ளது. நெப்போலியன்கள் ஆட்சிக்கு வந்தார்களோ இல்லையோ அதிகாரத்துக்கான போட்டி முதன்மையான மாற்றத்தினை உருவாக்கி வருகின்றதென்பதை நிரா கரித்துவிட முடியாது.

ஐரோப்பியர்கள் மட்டுமல்ல ரஷ்சியர்களும்-அமெரிக்காவை எதிர்ப்பதற்காக ஐரோப்பியருடன் இணைந்துள்ளனர். மேலும், சீனர் கள், ஐரோப்பியர்களின் பிந்திய தீர்மானங்களை வரவேற்பதாக அறிவித்துள்ளனர். எனவே ஒருவகையில் ஐரோப்பாவும், அதற்கு அப்பாலுள்ள அரசுகளும் அமெரிக்காவையும், அதன் அதிகார அடக்கு முறைக்கான அணுகுமுறையை நிராகரிப்பதாக மாறியுள்ளன. சீனா நடுநிலைமை வகித்தாலும், தீர்மானத்தை ஏற்கும் நிலையிலேயே விளங்குகின்றது. இதனால். *Unipolar* பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றது. அமெரிக்கர்கள் தயார் செய்து வரும் உலக மயப்படுத்தல் என்ற அமெரிக்க மயப்படுத்தல் அதனையே உலகத் திற்குப் போதித்துவந்தது. அத்தகைய போதனையின் விளைவுகளை உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்கவேண்டும் என்பது தற்போது அமெரிக்க ஆளும் வர்க்கத்தினருக்கும் உரித்துடையதென் பது உணர்த்தப்பட்டுள்ளது. உலகத்திற்குப் போதனை செய்யும் அமெரிக்க ஆளும் வர்க்கம் தனது பிரஜைகளுக்காகவும், தனது நாட்டுக்காகவும் ஏதேதோ தயார்ப்படுத்தலை செய்துவந்தது. ஆனால், அது அவர்களது மக்களையோ, நாட்டையோ இப்படிப் பாதிக்கும் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரவில்லை.ஒரு வகையில் சோஷலிஸத்தின் வீழ்ச்சிக்கு சோவியத் ஆட்சியாளர்கள் செயற்பட்டதுபோல் அமெரிக்கரின் ஆட்சியாளரையும் கூறலாம்.

உலகமயப்படுத்தலில் எந்த நாடும், எந்தப் பிரஜையும் விலகி யிருக்கமுடியாது என்பதை உணர்த்துவதுடன் எத்தகைய பொருளா தார, அரசியல், கலாசார காரணிகளும் தனித்து தவிர்த்திருக்க முடி யாது என்பதை இது உணர்த்தியுள்ளது. எதுவாக அமைந்தாலும் "தனி வல்லரசு" இராணுவ ரீதியில் வல்லரசு என ஜோசைப்நை குறிப் பிடுவது எந்தளவுக்குச் சரியானது என்பது அல்லது யதார்த்தமானது என்பது நோக்கப்பட வேண்டியது. ஒரு அரசு தனித்து இராணுவத்தில் பலமடைந்திருந்தால் போதுமானதா? என்பது அடுத்துள்ள வினா வாகும். அவ்வாறு இராணுவ வல்லமையை மட்டும் கொண்ட வல்லரசு நீண்டகாலம் நிலைக்க முடியாது என்பது சோவியத்தின் வீழ்ச்சி உணர்த்தும் விடயமாகும். அவ்வாறாயின் நையின் விளக்கம் எந்த ளவுக்கு எதிர்காலத்தில் சாத்தியப்பாடானது?

குறிப்பாக அமெரிக்காவின் இராணுவப் பலம் பிரமிக்கத் தக்கது என்பது ஏதோ உண்மைதான். ஆனால், அதற்கான ஆதரவு என்பது அடிப்படையான எடுகோள். நேட்டோவைக் கையில் வைத்துக் கொண்டு உலகம் முழுவதும் சுற்றிவந்த அமெரிக்கா, ஐ.நாவின் பாதுகாப்புச் சபையையும், சர்வதேச நாணய நிதியமும் மற்றும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, குழு 8 எனப் பல அமைப்புக்களை உருவாக்கி, அவற்றுடன் ஒன்றிணைத்தும், தலைமை தாங்கியும் உலகம் மெச்சும் வல்லரசாக விளங்கியது. முதலாவது ஈராக் போரின் போது அமெரிக்கப் பொருளாதாரம் பலமாக இருந்தது. தற்போது வீழ்ச்சியை நோக்கி அது அசைந்து கொண்டிருப்பதால், பொருளா தாரத்தினைக் காட்டி எதனையும் சாதிக்க முடியாதுள்ள நிலைக்கு அமெரிக்கா தள்ளப்பட்டுள்ளது. எனவே பிரித்தானியர் சேர்ச்சிலையும், ஹில்டரையும் பற்றி சிந்திக்கும் சூழல் புஷ்ஷின் தலைமைத்துவத்தால் உருவாகியுள்ளது என்பதையே. முடிவாகக் கருதவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆபத்துமிக்க போர் ஆபத்தான அரசியலை உரு வாக்கும் என்பதையே நினைவுபடுத்துகின்றது. சேர்ச்சில் தந்திரமாக தப்பிக்கொண்டு ஹில்டரை மாட்டிவிட்ட வரலாற்றை ஐரோப்பியர் சிந்திக்க தொடங்கிவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அத்தியாயம்

ஆயுதக் கண்காணிப்பாளர்களை மீண்டும் ஈராக்குக்குள் அனுப்புவது தொடர்பான ஐ.நாவின் தீர்மானத்தை ஈராக்கை ஆளும் சட்டசபை நிராகரித்தபோது, வில்லியம் புஷ் இரண்டாவது நிலையில் போர்த்திட்ட அணுகுமுறையை தயார்படுத்தினார். முதலாவது தயார்ப் படுத்தலை ரஷ்சியா, பிரான்ஸ், சீனா போன்றவற்றுக்கு எதிராகப் பயன்படுத்தி எச்சரிக்கை கலந்ததொனியில் வெளிப்படுத்தினார். அது தோற்றுப்போகவே அதாவது, ஈராக் மீதான நேரடிப் போருக்கான புஷ்ஷின் விருப்பம் தோற்றுப் போகவே ஈராக் மக்களையும், சதாம்ஹுசைனையும் தாக்கத் தொடங்கியுனார். இது ஒருவகையான ராஜதந்திரமாகவே தெரிந்தது. இரண்டாவது நிலையிலான போர்த் திட்டமானது கிழக்கா சியாவின் தளங்களையும், போர்க் கப்பல்களையும் ஈராக் மீதான போருக்குத் தயார்படுத்துவது போன்ற ஏற்பாடுகளையும் உருவாக் கியது. குறிப்பாக சதாம் ஹுசைனின் ஆளும் சட்டசபை ஐ.நா. தீர்மானத்தை நிராகரித்தபோது ஈராக்கை மிரட்டுவதற்கான ஏற்பாடாக புஷ் அதனை மேற்கொண்டார். சதாம் ஹுசைனும் அதனை ஒரு பரிசோதனையாகவே எதிர் கொண்டார். ஆளும் சட்டசபை நிராகரிக்கும் போது அமெரிக்காவினதும் அதன் கூட்டாளிகளதும் அணுகுமுறை எவ்வாறாக அமையுமெனப் பரிசோதித்து பார்த்தார். அப்பரிசோதனைக்கு பதில் கொடுத்த புஷ், போர் தவிர்க்க முடியாதது என்பதை வெளிப் படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் பயிற்சித் திட்டங்களையும் உடனுக் குடன் ஏற்படுத்தியதுடன், போர்வீரர்களை உற்சாகப்படுத்தும் நடவடிக் கையிலும் ஈடுபட்டார். அதற்கு மாற்று நடவடிக்கையாக சதாம் தீர்மா னத்தை ஏற்றுக்கொள்வதாக நேரடியாக அறிவிக்காதபோதும், ஆயுதக் கண்காணிப்பாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்ப தாக பதிலளித்திருந்தார்.

மூன்றாவது நிலை விதிக்கப்பட்ட 30 நாட்கள் இடைவெளியில், ஈராக் தனது ஆயுத விபரம் முழுவதனையும் ஒப்படைக்க வேண்டும் என்பதற்கான அறிவிப்பு வெளிவந்த போது, ஈராக்கில் ஏற்பட்ட உணர் வலைகளைக் கருத்திற்கொண்ட புஷ், நேட்டோவின் மாநாட்டிலும், செக்குடியரசு அதிபருடன் கலந்துரையாடும்போதும், ஈராக் மீதான போர்த்திட்டத்தைப் பற்றியே முதன்மைப்படுத்தி இருந்தார். என்பது புலனாகியது. அதுமட்டுமல்லாது ஏற்கனவே பிரித்தானிய இராணுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிகளைப் பெறுவதற்கான முறைப்படி அழைப்பினை புஷ் வழங்கி யிருந்ததுடன், துருக்கியை அப்போது அணுகிப்படையுதவியை கோர இருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இது மூன்றாவது நிலை எச்சரிக்கையும், மிரட்டலுமாகும். மேலும், ஈராக் மீது போர் தொடுக் கும் போது நேட்டோப் படைகளின் உதவியும் நாடப்படுமெனவும் அதற்கு நேட்டோ நாடுகள் தயாராக வேண்டுமெனவும் வில்லியம் புஷ் குறிப்பிட்டிருந்தார்.

நேட்டோ அமைப்பில் மேலும் ஏழு கிழக்கு ஐரோப்பிய நாடு களை இணைப்பது தொடர்பான ஆலோசனை நிகழ்வதாகவும் குறிப் பிட்ட புஷ், ரஷ்சியா அமெரிக்காவின் எதிரி அல்ல என்றும் பயங்கர வாதமே தமது எதிரி என்றும் குறிப்பிட்டதனூடாக, ரஷ்சியாவை மறை முகமாக புஷ் தனது வலைக்குள் போடத்திட்டமிட்டார். இதனாலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளை நேட்டோவில் இணைத்துக்கொள்ள முயன்று வருவதுடன், ஈராக்கை ஆதரித்த ரஷ்சியாவைத் தனிமைப் படுத்தும் போக்கையும் புஷ் இதன் மூலம் கையாளத் தொடங்கி யிருந்தார். அதாவது ஈராக்கிற்கு எதிராக உலகம் முழுவதுமுள்ள பல நாடுகளை தயார்படுத்துவதன் மூலம், ஈராக்கையும் அதன் ஆதரவாளர் களையும் சரணடைய வைக்கும் ராஜதந்திரத்தினை புஷ் கையாண் டிருந்தார். போரையும் அதற்கான நேரடி விளைவுகளையும் ஏற்படுத்த முயன்ற புஷ். அது தோற்றுப்போக அதனை ராஜதந்திரமாக மாற்றி ஈராக்கினையும் அதன் கூட்டாளிகளையும் அடிபணிய வைக்கத் திட்ட மிட்டார். இது ஆரம்பகாலப் போர்முறையாக அமைந்தபோது, பனிப் போர்க் காலப்பகுதியில் இரண்டு வல்லரசுகளுமே மாறி, மாறிப் பயன் படுத்தி வந்த ராஜதந்திர அணுகுமுறைதான். இதனை *Gunboat diplomacy* என அழைப்பதுண்டு. போருக்குரிய தயார்படுத்தல் அமோக மாக நடைபெறும். ஆனால், போர் நிகழாது அதேநேரம் தயார் படுத்தலைக் கண்டு எதிரிநாடு அடிபணியும் நிலைக்கு வந்துவிடும். ஆனால் சதாம் உஹுசைன் அடிபணிவதை விடுத்து வெற்றிகரமாகப் பின்வாங்க முயற்சித்தார். அத்தகைய பின்வாங்கல் புஷ்ஷின் அடுத்த கட்ட நகர்வுக்கு இடைஞ்சலாக அமைவதுடன் ஈரான், வடகொரியா, சூடான் மற்றும் அமெரிக்க எதிர்ப்பினைக் கொண்ட அரசுகளின் அரசி யலுக்கு சாதகமான சமிக்ஞையாகவும் அமைந்தது. சில சந்தர்ப்பங் களில் *Gunboat diplomacy* தோற்றுப்போகுமாயின் போர் தவிர்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாததாக மாறிவிடுமென Washington post அப்போது குறிப்பிட்டது. போருக்கு தயாரான போது இரண்டு நாடுகளதும் படைப்பலம்.

| | ஈராக் | அமெரிக்கா |
|---|---|---|
| இராணுவம் | 424,000 | 485,526 |
| பிரத்தியேக பாவனைக்கான இராணுவம் | 650,000 | 865,200 |
| கடற்பயிற்சி பெற்ற பட்டாளம் | - | 173,385 |
| கடற்படை | 2, 000 | 384,576 |
| விமானப்படை | 30, 000 | 369,721 |
| விமான எதிர்ப்புப்படை | 17,000 | - |
| பரா இராணுவம் | 44,000 | - |
| கரையோரப் பாதுகாப்புப்படை | | 37,166 |

படைப்பலத்தைப் போன்று ஆயுதப்பலத்தையும் ஒப்பீட்டிப் படையில் நோக்க முடியாதுள்ளது. ஏனெனில், அமெரிக்காவின் முழு ஆயுதபலத்தின் விபரமும் கிடைக்கவில்லை. அதனால் ஈராக்கின் ஆயுத பலத்தை மட்டுமே நோக்குவோம்.

| | |
|---|---|
| தாக்குதல் கவச வாகனங்கள் | 2,200 |
| சாதாரண கவச வாகனங்கள் | 3,700 |
| பிரதான ஏவுகணைகள் | 2,400 |
| போர் புரியும் விமானங்கள் | 300 |

இவை மேற்கு நாடுகளில் தகவல்களாக அமைந்திருப்பதனை குறிப்பிடுவதுடன் உயிரியல், இரசாயன, அணுவாயுத நிலையங்கள் பலவற்றை ஈராக் கொண்டிருப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டியது. ஈராக்குக்குள் 15 நிலையங்களில் அணுவாயுத உற்பத்திகள் உள்ளதாகவும், 04 நிலையங்களில் உயிரியல் மற்றும் 08 நிலையங்களில் இரசாயன ஆயுதங்களை தயாரிப்பதாகவும் மேற்கு ஊடகங்கள் அப்போது குற்றஞ்சாட்டியிருந்தன.

ஐ.நா.சபையின் பாதுகாப்புப் பிரிவு ஈராக் தொடர்பாக நிறைவேற்றியுள்ள 1441 ஆது தீர்வுத் திட்டம் ஐ.நா.சபைக்கு உந்து சக்தியை வழங்கியுள்ளது எனக் கூறலாம். பனிப்போர் முடிந்த பின்பு நிகழ்ந்த பல நடவடிக்கைகளில் ஐ.நா.சபை பொம்மையாகச் செயற்பட்டு வந்துள்ளதுடன் அமெரிக்காவின் விருப்பத்தினை நிறைவேற்றுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையாகவும் காணப்பட்டுள்ளது. ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள தீர் மானம் ஐ.நா.வின் பங்கினை உணர்த்தியிருப்பதுடன் பாதுகாப்புச் சபையில் உள்ள ஐந்து நாடுகளது தீர்மானமாக அமைந்துள்ளது. இதனால் முன்னோக்கிய நிலையை அடைந்துள்ள ஐ.நா.சபையின் அடுத்த கட்டச் செயற்பாட்டிலேயே அதன் பலமும், உறுதியும் தங்கி யிருந்தது. வெறுமனே போரைத் தவிர்த்திருக்கின்றோம் என்ற மார் ட்டலை விடுத்து தீர்க்கமானதும் நேர்த்தியானதுமான பரிசோதனை முடிவுகளை எடுக்கவேண்டிய பொறுப்பு கண்காணிப்பாளர்களிடம் இருந்தது. அவர்கள் தீர்மானத்தை சரிவர எடுப்பது என்பதைக் காட்டி லும், அமெரிக்க நலனுக்கு இசைபவர்களா? என்பதும் ஐ.நா.வின் பங்கினை உணர்த்தவல்லது. எனவே, ஈராக் விடயத்தில் ஆயுதக் கண் காணிப்பாளர்களை அடிப்படையாக கொண்டே அடுத்த கட்டப்பணி தங்கியிருந்தது. ஆனால் ஈராக்கின் தென்பகுதியில் போருக்கு முன்பு பல ஆண்டுகளாக ஈராக்கின் விமானங்கள் பறப்பதற்கு தடை என்பதும், அப்பகுதியில் அமெரிக்க-பிரிட்டன் விமானங்கள் தாக்குதலை நிகழ்த்து கின்றன என்பதும் ஐ.நா.வின் கவனத்திற்குரிய விடயம். ஐ.நா.சபை உலகிலுள்ள அரசுகளின் இறைமையையும், சுயநிர்ணயத்தையும் உறுதிப்படுத்தும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டதே அன்றி, அரசு களின் இறைமைகளை பறிப்பதற்கான நடவடிக்கைக்கு துணை போவதற்காக உருவாக்கப்படவில்லை. அதாவது, ஈராக்-குவைத்தின் இறைமையை மீறியது என்பது தவறான முன்னுதாரணம் தான். ஆனால், அதற்காக ஈராக்கின் இறைமையை மீறுவது பதில் நடவடிக்கை என்றால், உலகில் இறைமைக் கோட்பாட்டுக்கும், சுயாதிபத்தியத் திற்கும் அர்த்தமற்றதாகிப் போய்விடும். இவற்றைப் பேணுவதும், பாதுகாப்பதும், ஐ.நா.சபையின் கடமைக் கூறுகளில் ஒன்றாகவுள்ளது. அதனைச் சரிவரக் கையாளும் பொறுப்பு, செயலாளர் பதவிக்குரியது. அவரது ஆளுமையின் பலத்தினால் ஈராக் மட்டுமல்ல, அனைத்து உலக நாடுகளது இறைமைக்கும், சுயாதிபத்தியத்திற்கும் பாதுகாப்பு அளிக்கலாம். அத்தகைய கடமைப்பாட்டை ஐ.நா.வினூடாக அதன் தலைமை ஏற்படுத்துமாயின், வரலாற்றில் அவரது அணுகுமுறை ஐ.நா.சபைக்கு உந்துசக்தியாக அமையும்.

ஈராக் மீதான ஐ.நா.கண்காணிப்புக் குழுவின் பரிசோதனையின் படி உயிரியல், இரசாயன மற்றும் அணுவாயுதங்களை உற்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தது எனக் கண்டறியப்பட்டால் அதன் மீது போர் தொடுப்பதோ, சதாமை ஆட்சியிலிருந்து அகற்றுவதோ, அல்லது ஈராக்கை அழிப்ப தோ தீர்வாகாது. மாறாக, ஐ.நா.வின் பிரமாணங்களுக்கு அமைவான தீர்வினை வழங்குவதுடன், உலகத்திலிருந்து அத்தகைய கட்டளை யை எல்லா நாடுகள் மீதும் ஐ.நா.சபை மேற்கொள்ளுதல் வேண்டும். அதுவே எதிர்கால உலக அமைதிக்கும் பாதுகாப்புக்கும் உத்தரவாத மாக அமையும். அமெரிக்கா கூறுவதுபோல், தன்னிச்சையாக ஈராக்கிட மிருந்து ஆயுதங்களைக்களைவதென்பது ஏற்றுக் கொள்ள முடியாத தும், நியாயப்பாடற்றதுமான முடிவாகும். ஏனெனில், ஈராக்கினைவிட மோசமான அழிவுகளையும் உரிமை மீறல்களையும் கடந்த காலத்தில் மேற்கொண்ட அரசுதான் அமெரிக்கா ஏன், தற்போதும் அதனைத்தான் அமெரிக்கா செய்துவருகின்றது. வியட்னாமிற்கு இணையாகவே ஈராக் கிலும், ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கா தனது நலன் சார்ந்த அரசி யலை மேற்கொண்டு வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை உருவாகி அரை நூற்றாண்டைக் கடந்து விட்ட நிலையிலும் அதன் முதலாவது அரசியல் தீர்மானம் நிறைவுறாது உள்ளது. குறிப்பாக பலஸ்தீன-இஸ்ரேலிய பிரச்சினைக்கு ஐ.நா முன் வைத்த பாகப்பிரிவினைத் தீர்வுத் திட்டம் என்றும் நடைமுறை சாத்தி யத்தை எட்டாத நிலையிலுள்ளது. ஐ.நா அரசியல், பொருளாதார, கலாசார, பாதுகாப்பு, நிலைகளில் பல பிரிவுகளைக் கொண்டிருந்த போதும் இதன் சாதனைப் பட்டியல் என்றுமே சர்வதேச பாதுகாப்பு பொறுத்து பலவீனமாகவே உள்ளது. பனிப்போர் நிலவியபோது எதிரும் புதிருமான இருதுருவ அரசுகள் ஐ.நாவுக்கு பதிலாகத் தனித் தனியே முதன்மை அரசுகளாக விளங்கின. அதனால் ஐ.நா தனித்து நிலையான எந்தத் தீர்மானத்தையும், முடிவுகளையும் எடுக்கவோ, அடையவோ முடியவில்லை. மாறாக இருதுருவ அரசுகளுக்கும் இடை யில் கொள்கைகளை இழந்த நிலையில் தத்தளிக்கும் அமைப்பாகவே விளங்கியது. ஆனால் சில விசேடமான நன்மைகளும் ஐ.நாவால் ஏற்பட்டது. அத்தகைய காலப்பகுதியில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சலுகைகளும், வாய்ப்புக்களும் ஓரளவேனும் சாத்தியப்பட்டது. ஆனால் பனிப்போர் முடிவடைந்தும் ஒருதுருவ அரசியலில் அமெரிக்கா தான் விரும்பியதை நிறைவேற்றும் சபையாக ஐ.நாவை பாவிக்கத் தொடங் கியது மட்டுமன்றி பல வெற்றிகளையும் அடைந்தும் வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாதுகாப்புச் சபை**

ஐ.நாவின் பாதுகாப்புச் சபை நிரந்தர உறுப்பு நாடுகள் ஐந்தினையும், தற்காலிக நாடுகள் பத்தினையும் உள்ளடக்கிய சபையாக விளங்குகின்றது. இதில் நிரந்தர ஐந்து நாடுகளும் வீட்டோ எனும் அதிகாரத்தை பிரயோகிக்கும் அங்கீகாரத்தைக் கொண்டிருக்கின்றன. ஐ.நா சபையின் வரலாற்றில் அமெரிக்காவும், சோவியத் யூனியனுமே அதிக தடவை வீட்டோவை பயன்படுத்தியுள்ளன. சீனா பல தடைவை நடுநிலமை வகித்துள்ளது. ஏனைய பிரான்ஸ், பிரிட்டன என்பன அமெரிக்கா பக்கம் ஒத்துழைப்பு வழங்கினாலும் பிரான்ஸ் பலதடவை பல்வேறுபட்ட தீர்மானங்களுக்கு அதிருப்தியுடன் வாக்கை வலது சாரிகள் பக்கம் பயன்படுத்தியுள்ளது. ஆனால் ஒரு தீமானத்திற்கு ஏதாவது ஒரு நாடு எதிர்ப்புத் தெரிவிக்குமாயின் தீர்மானம் ரத்தாகும் என்பதே ஐ.நாவின் சட்டவிதியாகும். பனிப்போர்க் காலப்பகுதியிலேயே அமெரிக்காவும், சோவியத்யூனியனும் பரஸ்பரம் எதிர் எதிரான தீர்மானங்களுக்கு வீட்டோவைப் பிரயோகித்துள்ளன.

ஐ.நாவில் பாதுகாப்புச் சபை பலமானதாக அமைந்துள்ளதற்கு அடிப்படை நிரந்தர உறுப்பு நாடுகளின் பலமேயாகும். அவை சர்வ தேச விவகாரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சந்தர்ப்பத்தில் வீட்டோ மிக முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தவல்லது. இதனால் ஐ.நாவில் ஏனைய அமைப்புக்களைக் காட்டிலும் பாதுகாப்புச்சபை மிக உயர்ந்த அதிகாரத்தின் பீடமாக விளங்குகிறது. ஆரம்பத்தில் ஐ.நாவின் நிரந்தர உறுப்பு நாடுகள் ஐந்துமே அரசியல் கொள்கைகளையும் உறுதிப்பாட்டையும் கொண்டவையாகக் காணப்பட்டன. சோவியத்யூனியனும், சீனாவும் இடதுசாரிப் போக்கையும், ஏனைய நாடுகள் வலதுசாரிப் போக்கையும் கொண்டிருந்தமையால் அவர்களுக்கிடையே எழுந்த முரண்பாடும், மோதலும் ஐ.நாசபையில் பிரதிபலித்தது. அத்தகைய கொள்கையோ, பிரக்ஞையோ இடதுசாரிகளாலும், வலது சாரிகளாலும் கைவிடப்பட்ட நிலையில் முரண்பாடற்ற தன்மை கடந்த ஒரு தசாப்தத்திற்கு அதிகமான காலப்பகுதி இழுபறியற்ற ஐ.நாவைக் காணமுடிந்தது. ஆனால் அக்காலப்பகுதி முழுவதும் அமெரிக்காவின் தனியாதிக்கப் போட்டி எதிர்பாராத அளவு மிக ஆபத்தான விளைவுகளை உலகம் முழுவதும் ஏற்படுத்தியது. அது மட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றி இராணுவத்தினையும், பொருளாதாரத்தையும் தொழில்நுட்ப விஞ்ஞான வளர்ச்சிகளையும் காட்டி நாடுகளை அடிமைப்படுத்துவதும் வேலையில் அமெரிக்கா ஈடுபட்டுவருகிறது. ஆக்கிரப்பு, எல்லை மீறல், படையெடுப்பு எனப் பல விடயங்களை அமெரிக்கா தனது நலனுக்காக செய்வதுடன் அதனால் ஏற்படும் நெருக்கடியை உலக நாடுகள் எல்லாவற்றின் மேலும் சுமத்திவருகின்றது.

## உலக மக்களின் ஜனநாயகப் புரட்சி

ஈராக் விவகாரத்தில் அமெரிக்க - பிரித்தானிய அரசுகள் இரண்டும் முன்னெடுத்த போர் அணுகுமுறையை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் பல நாடுகளில் நடத்தப்பட்டன. ஏறக்குறைய உலகத்தின் முழுப் பகுதியிலிருந்தும் நூற்றுக்கு மேற்பட்ட நகரங்களில் அறுபது இலட்சத் துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். அமெரிக்காவின் ஜனாதிபதியானவரும் உலகத்தின் முதல் மனிதன் என்று கருதப்படு பவருமான வில்லியம் புஷ்ஷை "கசாப்புக் கடைக்காரன், உலகத்தின் புற்று நோயாளி" என்றும் கேவலப்படுத்தும் நிலைக்கு ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்ட மக்கள் தமது உணர்வுகளை வெளியிட்டனர். *"Don't Attack Iraq"* என்ற வாசகத்தைச் சிவப்பு எழுத்துக்களால் பொறித்து மக்கள் ஊர்வலத்தில் தாங்கிச்செல்லும் காட்சி மக்களின் வெறுப்புக் களைத் தெளிவாகக்காடடியது.முழு உலகத்திலிருந்தும் மக்கள் ஈராக் மீதான போரை எதிர்த்தனர். ஆனால் வில்லியம் புஷ்ஷும் அவரது ஆதரவாளரான ரொனிபிளயரும் மட்டுமே போரை நியாயப்படுத்தினர். ஜேர்மனியில் 81 சதவீதமான மக்கள் போரை எதிர்க்கும் பட்டியலில் தமது வாக்குகளைப் பதிவுசெய்தனர். இது இயல்பாகவே அமெரிக்க எதிர்ப்புவாதத்தால் தூண்டப்பட்ட கடந்தகால அரசியலின் விளைவு என யாரும் எடுத்த வீச்சில் கூறிவிடலாம். ஆனால் ஜேர்மனிய மக்கள் கூறும் காரணங்கள் வேறு விதமாக உள்ளன. முதல் இரண்டு உலக யுத்தங்களிலும் ஐரோப்பியர்கள் அடைந்த நெருக்கடியும் துன்பமும் மீளவும் உலகத்தின் வேறு ஓர் இனத்துக்கு உரியதாகவோ அல்லது வேறு கண்டத்து மக்களுக்கு உரியதாகவோ அமையும் நிகழ்வை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதுடன் உலகம் அடைந்துள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்குக் கடினப்படும்போது மேலும் துயரத்தை எதிர்கொள்ள முடியாது என்பதுமே அவர்களது வாதமாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் நாட்டு மக்களில் 82 சதவீதமானவர்கள் போரை நிராகரித்துத் தமது கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். துருக்கியில் 87 சதவீதமான மக்கள் போரை அடியோடு வெறுப்பதுடன் அமெரிக்கப் படைகள் துருக்கியப் பிரதேசத்தைப் போருக்காகப் பயன்படுத்து வதனையும் எதிர்க்கின்றனர். கிழக்கு ஐரோப்பிய நாடுகளான செக் குடியரசு மக்களில் 75 சதவீதமானவர்கள் போரை வெறுத்தனர். அமெரிக்க ஆதரவும் செல்வாக்கும் உடைய போலந்து நாட்டில் 94 சதவீதமான மக்கள் ஈராக் மீது போர் தொடுக்க வேண்டாமெனக் கூறினர்.

போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இத்தாலியின் தலைநகரான ரோமில் மட்டும் பத்து லட்சம் மக்கள் பங்கெடுத்துக் கொண்டனர். மற்றும் பர்சிலோனாவில் 13 லட்சம் மக்களும் மற்றிச்சில் 20 லட்சம் மக்களும் நியூயோர்க்கில் 2.5 லட்சம் மக்களும் லண்டனில் 5லட்சம் மக்களும் கலந்துகொண்டனர். மக்களின் அதிகமான பங்களிப்பினை இப்போராட்டங்கள் வெளிப்படுத்தியிருந்தன. மக்கள் தங்கள் அரசியற் பங்களிப்பினை வெளிப்படுத்தும் சாதனமாக ஆர்ப்பாட்டத்தை என்றுமே கருதுகின்றனர். ஏனெனில் 1789 ஆம் ஆண்டு பிரான்ஸ் மக்கள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோஷங்களை அல்லது பிரகடனங்களை வெளிப்படுத்திக் கொண்டு வீதியில் போராட்டம் நடத்தினர். அவர்கள் அன்று நடாத்திய போராட்டத்தின் விளைவாகவே புதிய அத்தியாயம் ஐரோப்பாவிலும் பிற கண்டங்களிலும் ஏற்படுத் தப்பட்டது. அதே போன்ற உணர்வைத்தான் சுதந்திரப் போராட்டங் களின் போதும் ஆசிய, ஆபிரிக்கக்கண்டத்து மக்கள் அமெரிக்கரைப் போன்று பின்பற்றினர். அமெரிக்க மக்களே ஆங்கிலேய ஆக்கிரமிப் புக்கு எதிராக முதன்முதல் தேசிய விடுதலைப் போராட்டத்தை மேற் கொண்டனர். அவர்களைப் பின்பற்றியே பிற கண்டத்து மக்கள் ஆங்கி லேயரின் ஆக்கிரமிப்பை எதிர்க்க ஆரம்பித்தனர். அல்லது கூட்டாகப் போராடி வெற்றிபெறலாம் என்ற முடிவுக்கு வந்தனர். அத்தகைய போராட்டங்களுடன் ஒப்பீடு செய்யும்போது மக்கள் தற்போது செய்யும் போராட்டம் வலுமிக்கதாக இருந்தபோதும் எத்தகைய விளைவை யோ, எதிரொலிப்புக்களையோ உடனடியாக ஏற்படுத்தவில்லை. அமெரிக்கப் புரட்சிக்கும், பிரான்ஸியப் புரட்சிக்கும் மக்களின் வலு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அமைந்ததுடன் அராஜகம் தோற்கடிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு மக்கள் புரட்சி வென்றது. அன்று காணப்பட்ட கருத்தியல் வளர்ச்சியின்மையும் தகவல்துறை முன்னேற்றமின்மையும் முழு உலகத்தையும் ஒன்றிணைக்க தவறியபோதும் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு நல்லவிளைவு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேனும் கிடைத்ததென கூறலாம்.

ஜனநாயகம் என்ற கோஷம் கிரேக்கத்தின் சிந்தனை வரிசையில் ஆரம்பிக்கப்பட்ட போதும் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரிகாம் லிங்கனின் யதார்த்த நோக்கினால் நவீனவடிவம் பெற்றது. அன்றிலிருந்து ஜனநாயகத்தின் நவீன தந்தையாக ஆபிரிகாம்லிங்கன் அமெரிக்க மக்களால் உச்சரிக்கப்பட்டவராக விளங்கினார். கறுப்பர்களுக்கு உரிமை வழங்கப்பட்டதற்காகப் பல அமெரிக்க ஜனாதிபதிகள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்பதையும் மறுத்துவிட முடியாது. ஆனால் ஆபிரகாம்லிங்கனும் கறுப்பினத்தவர்களுக்கு உரிமை கொடுத்து அமெரிக்காவை ஐக்கியமான தேசமாக உருவாக்கியதுடன் தென்மாநிலத்தின் உயர் வர்க்கத்தினரை கட்டுப்படுத்துவதில் வெற்றி கண்டார். அவ்வாறு ஆபிரகாம்லிங்கன் செய்யத்தவறியிருந்தால் அமெரிக்கா இரண்டு துண்டுகளாக 1860 களில் பிரிந்திருக்கும். அத்தகைய நெருக்கடியை சமாளிக்கப்பிறந்ததுவே நவீன ஜனநாயகம். அந்த ஜனநாயகத்தின் வாரீசுதான் தற்போதைய ஜனாதிபதி வில்லியம் புஷ் அவரது ஜனநாயகம் தேர்தல் காலத்தில் உலக மக்களால் எள்ளிநகையாடப்பட்டது. மக்களின் உரிமைகளையும், போராட்ட உணர்வையும், ஜனாதிபதி புஷ் தான் மதிப்பதாகவும் மக்களுக்கு போராடுவதற்கு சுகந்திரமுள்ளதென்றும் அதனை அமெரிக்க ஜனநாயகம் ஏற்றுக்கொள்ளுமென்று கூறியுள்ளதுடன் ஈராக்மீதான போர் தவிர்க்கமுடியாததென்றும் குறிப்பிட்டிருந்தார். போரிலிருந்து தப்பிக்கொள்ள முடியாதென்பதுடன் சதாம் ஆபத்து மிக்கவரென்பதை உலகம் உணரும் காலம் வெகு விரைவில் ஏற்படும் என்றார்.

ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்ளும் புஷ் - ஈராக்குக்கு எதிரான உணர்வினை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார். அவர் பேசும் ஜனநாயகம் வெளிப்பாடுகளுக்கு மட்டுமே உரியதாக உள்ளது. விளைவுகள் எதனையும் கொண்டதாக இல்லை. அமெரிக்க ஜனநாயகம் அதுவாகவே தென்படுகிறது. உலகத்தின் முதல்தர ஜனநாயக நாடு மிகப் பெரிய ஜனநாயக அரசு ஆட்சிமாற்றமும் ஆட்சிப்பரப்புகையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகம் மார்க்கமூடாகவே நிகழ்கின்ற உயரிய அரசியல் கலாசாரத்தை பேணுகின்ற நாடு அமெரிக்கா. அந்த நாட்டின் ஜனாதிபதி பேசும் ஜனநாயகமும் நடைமுறைப்படுத்தும் அராஜகமும் ஒன்றாகவே உள்ளது. ஏனெனில் மக்கள் விருப்புக்களை அல்லது அபிப்பிராயங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொறுப்புடைய அரசாங்கத்தை அமைப்பதுதான் ஜனநாயக விழுமியத்தின் காத்திரமான பங்களிப்பாகும்.

மக்களால் மக்களுக்காக மக்களே ஏற்படுத்திக்கொள்ளும் ஆட்சி முறை ஜனநாயகம் என அமெரிக்க எயமானர்கள் முன்கூட்டியே கூறிவிட்டார்கள். ஆனால் அத்தகைய கருத்தியல் உருவாக்கம் அவர்களுக்குரியதா என்பதே அவர்களை நோக்கிய கேள்வியாகும். அமெரிக்கர்களைப் பொறுத்தவரை இது ஆங்கிலேயர்களுக்கும் பொருத்தமானதாகும். ஏனெனில் ஆங்கில எயமானர்கள் பரப்பிய ஜனநாயக சிந்தனையே ஆசிய கண்டத்தில் அநேக நாடுகளில் காணப்படுகின்றது. ஆனால் அமெரிக்கரோ, ஆங்கிலேயரோ தமது நாடுகளிலோ அல்லது தமது ஆட்சி அதிகாரத்தைக் கடத்துகையிலோ அவற்றை பூரணமாகக் கடைப்பிடிப்பதில்லை. குறிப்பாக தமது நாட்டிற்கு ஒரு மாதிரியும் பிற நாடுகள் மீதான நடைமுறையில் இன்னோர் மாதிரியும் என்பதை அவர்களது அரசியல் கலாசாரத்தில் காணமுடிகிறது.

உலகத்தின் பாதுகாப்பையும் ஆளுகைப் பொறுப்பையும் கொண்டுள்ள அமெரிக்க எயமானர்கள் அமெரிக்காவில் பேசும் ஜனநாயகம் ஒன்று பிற நாடுகள் மீது பேசப்படும் ஜனநாயகம் இன்னொன்றாகும். சட்டம், இறைமை, அடிப்படை உரிமை என்றெல்லாம் அரசியல் யாப்பு மரபுக்குள் நின்றுரைக்கும் ஆட்சியாளர்களில் முன்னோடிகள் அமெரிக்க-ஆங்கில ஆட்சியாளர்கள் தான் ஆனால் அவர்கள் பின்பற்றும் ஈராக் மீதான கொள்கையில் எத்தகைய நியாயப்பாடு இல்லை.

அமெரிக்க மக்கள் இறைமையுடையவர்கள் என்பதைப் போன்று ஈராக்கிய மக்களும் இறைமையுடையவர்கள் என்பது நியாயமானது தான். ஏன் அதனை அமெரிக்க ஆட்சியாளர்கள் ஏற்க மறுக்கின்றனர் இறைமை அமெரிக்க மக்களுக்கோ அமெரிக்காவுக்கோ மட்டும் உரியதல்ல. அடிப்படை உரிமையை உச்சரிக்கும் அமெரிக்கா 1991ம் ஆண்டு பக்தாத் நகரின் மீது வீசப்பட்ட குண்டில் கொள்ளப்பட்ட 400 க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் மேற்பட்ட ஈராக்கிய மக்களுக்கு என்ன பதில் கூறியது. அந்த மக்களின் அடிப்படை காப்புரிமை எங்கே குழிதோண்டி புதைக்கப் பட்டது. இது மட்டுமல்ல சிறைக்கைதிகளாகப் பிடிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான ஈராக்கியப் படைகள் ஆப்கானிஸ்தானின் தலிபான்களின் அடிப்படை உரிமைகள் எல்லாம் அமெரிக்காவில் பாதுகாக்கப் பட்டதா? அங்கு பின்பற்றப்பட்டது. ஜனநாயகத்தின் முடிவுதானா? என்ற கேள்விக்கு அமெரிக்க ஆட்சியாளர்களால் பதிலளிக்க முடியாது. அமெரிக்க ஆட்சியாளர்கள் அல்லது மேற்குலகத்தவர்கள் கீழைத்தேச மக்களை ஏமாற்றுவதற்கு பயன்படுத்தும் சொற்பதங்களாக ஜன நாயகம், அடிப்படை உரிமையை கருதலாம். அவ்வாறு கருதி பயன் படுத்தலாமே அன்றி கருத்தியல் யதார்த்தத்தில் உணரமுடியாது.

பத்திரிகைச் சுதந்திரம் பற்றி அதிகம் பிரஸ்தாபிக்கும் அமெரிக்க மண்ணில் ஒரு காலப் பகுதியில் தலிபான்களைப் பற்றி எழுதினால் சிறைத்தண்டனை உயர்ந்தபட்சக் குற்றமாக விளங்குவது போன்று ஈராக் தொடர்பான அமெரிக்க எதிர்ப்பினைக்காட்டும் தகவல் கள் வெளியிடுவது, பிரசுரிப்பது தடை செய்யப்பட்டது. இதுவே அமெரிக்க ஊடக சுதந்திரத்தின் உச்சமான பயன்பாடாகும். இதன் கீழ் தான் அமெரிக்க ஜனநாயகத்தைப் பற்றிய மதிப்பீட்டினை மேற் கொள்ளலாம். அமெரிக்க ஜனநாயகத்திற்குப் பதிலாக அமெரிக்க அராஜகம் நிலவுகின்ற ஆட்சிமுறைமை எனச்சித்திரிப்பது பொருத்த மானதாக அமையும். அமெரிக்காவின் அராஜகத்தின் மிகப்பலமான காலப்பகுதி தற்போதைய ஆட்சிக்காலப் பகுதி என்பதனை மறுக்க முடியாது. மக்களின் விருப்புக்களை புறந்தள்ளி விட்டு ஆட்சியில் உரிமைகளை அனுபவிக்க முயல்வதென்பது அராஜகத்தைத் தவிர வேறு எதிலும் காணமுடியாது. முதலாம், இரண்டாம் உலக யுத்தத்தின் போது மிகக் கொடியவர்களாகக் காட்டப்பட்ட முசோலினி, ஹிட்லர் போன்றோருடன் ஒப்பீடு செய்யக்கூடியவராக விளங்குகிறார் வில்லியம் புஷ். மக்களின் விருப்புக்கு அப்பால் அரசியலில் செல்வாக்குப் பெறும் ஒருவராகவே அவரை காணமுடிகின்றது.

வளைகுடாப் பகுதியில் குவிந்துள்ள எண்ணெய் வளத்தினைச் சூறையாடுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு போரை மேற்கொண்ட வில்லியம் புஷ் அதற்குப் பல விளக்கங்களை, வியாக்கியானங்களையும் போலியாகக் கூறிக்கொள்வதும் அவற்றுக்கு நியாயம் கற்பிக்க முயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதும் வேடிக்கையானதாக அமைந்திருந்தது. முன்னாள் ஜனாதிபதி பாலியல் விடயங்களில் பெயரிழக்க, இந்நாள் ஜனாதிபதி போர்ப் பித்தராகத் திகழுகின்ற அயோக்கியத்தனமான அரசியல் கலாசாரம் அமெரிக்காவால் வளர்க்கப்படுகின்றது. இதற்க்கு இன்னோர் அரசியல் நகர்வையும் அவதானிப்பது பொருத்தமானது.

## வடகொரியாவின் அணுவாயுத அரசியல்

புஷ் நிர்வாகத்திற்கு உடனடியாகவும் அவசியமாகவும் தேவையாக அமைந்திருப்பது மேற்காசியாவில் ஏற்பட்ட நெருக்கடியை கையாளவேண்டும் என்பதாகும். உலக அரசுகளின் கவனத்தை திசை திருப்பி சர்வதேச வல்லரது அமெரிக்கா என்பதை நிறுவுவதற்கு முயன்றதன் வெளிப்பாடாக வடகொரியா விவகாரம் விளங்கியது. ஈராக் மீது உடனடியாக போர் தொடுக்க முடியாத தோல்வியை மறைக்கஇன்னோர் இலக்கை அமெரிக்கா அப்போது பயன்படுத்திக் கொண்டது.

ஈராக் மீதான அனுபவம் ஏனைய தனது எதிரிகளை கையாளும்போது சுமுகமாகவும், அமைதியாகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு இலக்கை இறுதியில் நிறைவு செய்கின்றதென்ற அணுகு முறையைப் பின்பற்றுவது. அதாவது புஷ் நிர்வாகத்தின் வெளி நாட்டுக் கொள்கையில் சமாதானம் என்ற கோஷம் பிராந்தியத் திற்கு பிராந்தியம் வேறுபட்டதாக அமையும். ஆனால் சமாதானமான உலகத் தை உருவாக்குவதென்பது இறுதியில் அவ்வரசை அல்லது பிராந்தி யத்தை அமெரிக்கமயமாக்குவதாகும். அந்த அடிப்படையில் ஏற்பட் டிருப்பவற்றுள் வட-தென்கொரிய விவகாரம் அமைந்துள்ளது. இது பொருளாதாரத் தேவையைக் கருத்தில் கொண்ட போக்காகும். உலக மயமாக்கத்தை கிழக்காசியாவுக்குள் முழுமையாகப் பரவலடையச் செய்வதென்பதில் அமெரிக்கா இதுவரை வெற்றி காணவில்லை. அதற்குச் சீனாவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள வடகொரியாவும் ஒரு காரண மாகும். சீனா உலகமயமாக்கத்தை உள்வாங்கியது என்னவோ உண்மைதான். ஆனால் தனது கொள்கைக்கு ஏற்பவே அச்சீர்திருத் தங்களை அமுல்படுத்தி வெற்றிகண்டு வருகிறது. இதே நிலையி லேயே வடகொரியாவை சீனா உருவாக்க முயலுகிறது. அதனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்கடிப்பதுடன் சீனாவின் கிழக்காசியப் பொருளாதார வாய்ப்புக்களுக்கு ஆபத்திழைப்பது என்பது அமெரிக்காவின் மிகப்பிரதான நோக்கமாகும்.

ராஜதந்திரப்போர் முறைமைக்கு ஊடாக வடகொரியாவை சின்னாபின்னப்படுத்துவது. குறிப்பாக அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான இருந்தபோது கொன்டோலோ ரய்ஸ், வடகொரிய விவகாரம் தொடர்பாக, சி.என்.என். இற்கு தெரிவிக்கும் போது, ராஜதந்திர ரீதியான அரசியல் அணுகுமுறையையே அமெரிக்கா மேற்கொண்டு வருகின்றது என்றார். இது அமெரிக்காவின் அணுகுமுறையை கோடிட்டுக் காட்டுவதற்குப் போதுமானது. வடகொரியாவுக்குள் நுழைந்து அதன் பலமான நிலைகளை பலவீனமாக்கி, வறுமைச் சுமையை அதிகரித்து இறுதியில் தென்கொரியாவுடன் இணைப்பதே அமெரிக்காவின் நோக்கமாகும். இதனை கிழக்கு-மேற்கு ஜேர்மனி இணைவின்போது அமெரிக்கா கையாண்டு வெற்றி பெற்றதென்பது கவனிக்கத்தக்கது.

முழு இஸ்லாமிய உலகத்தையும் எதிர்த்துப் போரிடும் போது ஏனைய பிராந்திய சக்திகளை இணக்கப்பாட்டுக்குள் வைத்திருப்பதும், சுமுகத்தன்மையை பேணுவதும் வல்லரசுகளின் இயல்பான அணுகுமுறையாகும். அதற்கு மிகப் பொருத்தமான பிராந்தியம் கிழக்காசியாவாகும். ஏனெனில், அங்குள்ள அனேகமான அரசுகளில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக உள்ளனர் என்பது மட்டுமன்றி பல நாடுகளில் இஸ்லாமியரே இல்லாத நிலைமையே உண்டு. மஞ்சள் (மொங்கோலியர்) இனத்தவரே ஆளும் இனமாக உள்ளனர். "பச்சைப் பயங்கரவாதிகள்" (இஸ்லாமியர்) தோற்கடிக்க "மஞ்சள் பயங்கரவாதிகளை" நண்பர்களாக்கும் அணுகுமுறையை அமெரிக்கர்கள் பின்பற்றி வருகின்றனர். இறுதியில் அமெரிக்கர்களின் அமெரிக்க மயவாக்கத்திற்கு எதிரான எல்லோருமே பயங்கரவாதி களாக தென்படுவார்கள். அப்போது மஞ்சள் இனத்தவரும் பயங்கரவாதிகள் ஆகிவிடுவார்கள் என்பதே தற்போதைய உலக ஒழுங்கின் பிரதிபலிப்பாகும்.

எனவே தான் அமெரிக்க நிர்வாகத்தின் அப்போதைய அசைவு, ராஜதந்திர ரீதியான அணுகுமுறையைக் கொண்டிருந்தது. இத்தந்திரத்தைப் பயன்படுத்தி வடகொரியாவை கட்டுப்பாட்டுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்தால் சீனாவுக்கு நெருக்கடி அதிகமாகும் என்பதே அமெரிக்கர்களின் கணிப்பீடாகும். ஏற்கனவே சீனாவுக்கான மேற்கு வாசல் அடைபட்டுவிட்ட நிலையில் அதிக பொருளாதார வாய்ப்புக் களை இழந்துவருகிற சீனா கிழக்கு வாசலும் அடைக்கப்பட்டால் அதன் எதிர்காலம் மங்கிவிடும் என அமெரிக்கா எதிர்பார்க்கின்றது. இங்கு கருதப்படும் மேற்கு வாசல் என்பது ஆப்கானிஸ்தான் ஊடாக சாத்தியமடைந்து கொண்டிருந்த மேற்கு ஆசியாவுடனான உறவே ஆகும். அமெரிக்கப் படையெடுப்பினால் அது ஸ்தம்பித்துப்போனது. அது சீனாவின் பொருளாதார, இராணுவ, வாய்ப்புக்களை மேற் காசியாவிலிருந்து அன்னியப்படுத்தியதுடன் மேற்காசியாவினூடாகக் கிடைத்த பொருளாதார இராணுவ வருமானத்தையும் கட்டுப்படுத்தி விட்டது. இதனால் சீனர்கள் பாரிய கப்பல்களை உருவாக்கும் திட்டத் தை கொண்டிருப்பதற்கு காரணமாகும். ஆனால் சீனா எந்தளவுக்கு தனது இழப்பீட்டை பாரிய கப்பல் போக்குவரத்தினாலும், கடற்படையி னாலும் சாத்தியப்படுத்திக் கொள்ளும் என்பது சந்தேகத்திற்குரியது. சீனர்கள் ஆப்கானிஸ்தானை கோட்டை விட்டதுபோல் வடகொரியா வையும் கைவிடுவார்களாயின் ஆபத்தான விளைவை அவர்களே அனுபவிக்க நேரிடும்.

சீனாவிடம் இவை தொடர்பாக சற்று வேறுபட்ட பார்வை ஒன்று காணப்படுகிறது. அதாவது இவையாவற்றையும் சீனா இழந்தாலும் பொருளாதார பலத்தை தக்கவைத்துக் கொள்ளுமாயின், எதிர்கால சர்வதேச அரசியல் சீனாவுக்கு பிரகாசமானதாக அமைந்திருக்கும் என்பதாகும். அதற்காகவே WTO வில் சீனா இணைந்துகொண்டதும் பொருளாதார பலத்தை தக்கவைக்க முயன்றதன் விளைவாகவே அமைகின்றது. அது ஏறக்குறைய சரியான விவரணமாகவே அமைந் துள்ளது. ஏனெனில் பொருளாதாரப் பலத்தை தேடிக் கொள்வதும் மூலதனதிரட்சி சாத்தியப்படுவதும் சீனாவின் வளர்ச்சிக்கு அவசிய மானதாக அமையும். ஆனால் அரசியல் பலம் முற்றாக அகன்று போகாமலும் தனது அயல் பிரதேசங்களின் இருப்புக்கள் தகர்ந்து போகாமலும் பாதுகாக்கப்படுவது தற்காப்பானது. சிலவேளைகளில் எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறான போக்கு, அமெரிக்காவுக்கோ மேற் குலகுக்கோ சாத்தியமாகுமாயின் பொருளாதார நெருக்கடிகள் மட்டு மன்றி அரசியல் பலவீனமும் முற்றாக சீனாவை தகர்த்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார மறுசீரமைப்புக்காகவே சோவியத்யூனியன் திறந்து விடப்பட்டது. சோவியத்தின் பொருளாதார மீட்சிக்காக கொர்பச்சேவ் கிழக்கு ஐரோப்பிய நாடுகளை முதலில் தளர்வடையச் செய்தார். ஆனால் அது திடீரென சூறாவளி வேகங்கொண்டு ரஷ்சியாவின் குடியரசுகளையே அடித்துச்சென்றது. அவ்வாறான நிலை ஏற்படாது பார்த்துக்கொள்வதே சீனர்களுக்கு பொருத்தப்பாடானது. எனவே, வட கொரிய விவகாரம் உலகத்தின் கவனத்தை திசைதிருப்பும் நாடகம் மட்டுமல்ல, அது நீண்டகால இலக்கைக் கொண்ட ராஜதந்திர நகர்வும் கூட, அமெரிக்கர்களின் நகர்வை கண்டறிந்து அதனை முறியடிப்பது சீனர்களுக்கு மட்டுமல்ல ஆசியர்களுக்கே இலாபகரமானதாகும்.

## மேற்குலகின் தந்திரோபாயம்

கடந்த கால வரலாற்றில் பல சம்பவங்கள் நிகழ்ந்து முடிந் தாலும், மிக அண்மையில் மேலெழுந்த இரண்டு சம்பவங்களை மையப்படுத்தி, அக்கருப்பொருளை விளங்கிக்கொள்ளலாம். குறிப் பாக, வடகொரிய விவகாரம் - கிழக்காசிய அரசியலில் பெரும் பர பரப்பை கிளப்பியிருந்தது. வடகொரியாவின் அணுவாயுதப் பரிசோ தனை தென்கொரியாவை மட்டுமல்ல, யப்பானையும் எதிர்காலத்தில் அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் என்ற பிரசாரமும் அதற்குச் சார்பான நடவடிக்கைகளும் இந்தவகையில் முக்கியமானதாகும். அதனை முடுக்கிவிட்டதில் முன்னோடி அரசு அமெரிக்காவாகும். அமெரிக்கா விற்கும்-வடகொரியாவுக்குமான விரிசலை, தென்கொரியா யப்பான் சார்ந்த விரிசலாக மாற்றுவதில் அமெரிக்கர்கள் வெற்றிகாண முயன்றனர். அதன் பிரதிபலிப்பாக யப்பானிய, தென் கொரிய விசேட தூதுவர்கள் சீனாவிற்கு மாறிமாறி விஜயம் மேற்கொண்டதுடன், மேலும், ரஷ்சியா விற்குப் பயணம் செய்த தென்கொரியர்கள், வடகொரியாவின் அணு வாயுதப் பரிசோதனையைத் தடுக்கப் பல பேரம்பேசல்களை ரஷ்சியா வுடன் நடாத்தியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. வடகொரி யர்களின் அணுவாயுதப் பரிசோதனை நேரடியாக அந்நாட்டின் திறமை யையும் தன்னாதிக்கத்தையும் பாதுகாக்குமாயினும், மறைமுகமாக ஈராக் மீதான போருக்கான தயார்படுத்தலைக் குழப்பத்திற்கு உள்ளாக்கிய துடன், கால தாமதப்படுத்துவதிலும், நெருக்கடியை ஏற்படுத்துவதிலும் கணிசமான வெற்றியை அடைந்திருந்தது. இதுவே ஆசியாவின் ஆட்சித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைகளுக்கிடையில் ஏற்படவேண்டிய அம்சமாகும். இவ்வாறான ஒத்திசை வான அரசியல் தந்திரத்தைக் கையாள ஆசியா தயாராகு மாயின், மேற்கு நாடுகளுக்கும் அவர்களின் படைகளுக்கும் கீழைத் தேச நாடுகளில் வேலையில்லாது போய்விடும். வடகொரிய அணுவா யுத விவகாரம் தொடர்பாகச் சீனாவுக்குச் சென்றிருந்த தென்கொரியத் தூதுவர், அணுகுண்டுப் பரிசோதனையை நிறுத்துமாறு வடகொரியா வைக் கேட்கும்படி சீனர்களிடம் கோரியிருந்தார். இதற்கு சீன ஆட்சி யாளர்கள் கொடுத்த பதில் "வடகொரிய அணுவாயுத விவகாரம் அவர் களது நாட்டின் இறைமையுடன் தொடர்புபட்ட அம்சம். வட கொரியா வின் இறைமையில் தலையிடும் உரிமை எமக்கு இல்லை" எனச் சீனா பகிரங்கமாகக் கூறிவிட்டது. இதில் பல விடயங்கள் குவிந்துள்ளன. சீனா, ஏனைய நாடுகளின் இறைமையில் தலையிடாத நாடு எனக் கூறிக்கொள்வதன் மூலம் அமெரிக்காவின் நடவடிக்கைகளைக் கண் டித்ததுடன், வடகொரியாவின் அணுவாயுதப் பரிசோதனை யை மறை முகமாக ஆதரிப்பது போன்றும் காட்டிக்கொண்டது. இது ஒரு வகை யில் யதார்த்தமான இராணுவ அரசியல் என்றே கருதமுடியும். அணு வாயுதத்தினை முதலில் தயாரித்து, ஆசியா மீது பரிசோதித்துப்பார்த்த நாடே அமெரிக்காதான். அத்தகைய அமெரிக்கா, பல மில்லியன் கணக் கான செலவுகளைச் செய்து, பல ஆயிரக்கணக்கான மெற்றிக் தொன் எடையைக் கொண்ட குண்டுகளையும் பரிசோதித்து வைத்துக் கொள் வதுடன் நிலத்திற் கடியிலும், நீர்ப்பரப்புக்களிலும் தற்போதும் அத் தகைய பரிசோதனைகளை நிகழ்த்திக் கொண்டும் வடகொரியா வையும், உலகத்தினையும் கட்டுப்படுத்த எத்தனிப்பது நியாயமற்ற நடவடிக்கையாகவே உள்ளது.

அமெரிக்காவின் எல்லைமீறும் அரசியல் நடவடிக்கைகளை கண்டிப்பதற்கோ, கட்டுப்படுத்துவதற்கோ சீனா, வடகொரியா, போன்ற அரசுகளின் வளர்ச்சியும் அவசியமானதாக உள்ளது. அவ்வாறான எச்சரிக்கை நிகழாது போகுமாயின், எதிர்காலத்தில் எந்த அரசும் எல்லைகளையோ, தன்னாதிக்கத்தையோ, சுயநிர்ணயத்தையோ தக்க வைக்க முடியாது. ஈராக்கினைத் தோற்கடிக்க உதவிய மேற்காசிய அரசுகள், எதிர்காலத்தில் தோற்கடிக்கப்படுவார்கள் என்ற கசப்பான உண்மையை ஏற்கமறுக்கின்றனர். அத்தகைய நிலையை முன் கூட்டி யே உணர்ந்த அரசாக வடகொரியா விளங்குகின்றமை குறிப்பிடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கது. தென்கொரியர்களும், யப்பானியர்களும் குறுகிய அரசியல் இலாபத்தைப் பற்றிச் சிந்திக்கிறார்களேயன்றி, அமெரிக்கர்களினதோ அல்லது மேற்கு நாட்டவரினதோ அபாயத்தைப் பற்றிச் சிந்திக்கத் தவறுகின்றனர். தென்கொரியர்களும் யப்பானியர்களும் அச்சம் கொள் வது போல், வடகொரியர்கள் செயற்படுவார்களாயின் இந்தியாவும், பாகிஸ்தானும் அயல்நாடுகள் போல உலக வரைபடத்தில் காண்பதும் கடினமானது. ஆனால், மேற்கு, இப் பிராந்தியத்தினைப் பதற்றமடையச் செய்வதுடன், வடகொரியாவை அப்பிராந்திய அரசுகளால் தோற்கடிக்க வைக்கவே அதிகம் விரும்புகின்றது. அதனை நடைமுறைப்படுத்தும் வேலைகளிலேயே அதிகம் ஈடுபட்டும் வருகிறது. அதற்கு மேற்கு பயன்படுத்தும் சொற்பதமே ராஜீக முயற்சிகளுக்கூடாக வடகொரிய விவகாரம் தணிக்கப்படும் என்பதாகும்.

இரண்டாவது சம்பவம் ஆசியாவுக்குள்ளேயே இருக்கும் இந்தியா - சீனாவுக்கிடையிலான முரண்பாட்டைக் கிளப்புவதாகும். குறிப்பாக, இந்திய லோக்சபாவின் சபாநாயகர் குழு ஒன்று சீனாவுக்கு விஜயம் செய்திருந்தது. அப்போது பயங்கரவாதம் பற்றிய சீன - இந்திய கூட்டுப் பிரகடனம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அதில் பாகிஸ்தானைச் சாடமுயன்ற இந்தியா, அமெரிக்காவின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தியிருந்தது மட்டுமல்லாது அதனைச் சீனத் தலைவர் களும் ஏற்றுக்கொண்டிருந்தனர். அதாவது, பாகிஸ்தானின் தற்போதைய நிலைக்கும், வலுவுக்கும் அமெரிக்காவின் இரட்டை வேடமே காரண மென்ற குற்றச்சாட்டு அவர்களால் வெளிப்படுத்தப்பட்டது. அதன் மறு தினமே அமெரிக்காவின் புனலாய்வுத்துறை *(CIA)* பாகிஸ்தானின் அணுவாயுதப் பரிசோதனைக்கான பூர்வாங்க வேலைகளையும், தொழில்நுட்ப அறிவினையும் சீனாவே வழங்கியுள்ளதாகத் தமது விசாரணை மூலமாகத் தெரியவந்துள்ளது என்றும், அவ்வாறே தற்போது நிகழ்ந்து வரும் சம்பவங்களுக்கச் சீனா காரணமாக உள்ளது என்றும் அறிக்கை விட்டிருந்தது.

இத்தகைய அறிக்கையின் முடிவு அம்பலமாகிக் கொண்டிருக்கும் போதே முன்னாள், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ், பாகிஸ்தான் உலக வரைபடத்திலிருந்து அகற்றப்படுமென எச்சரித் திருந்தார். பதிலுக்குப் பாகிஸ்தானும் எச்சரிக்கை செய்ய ஒரு தகவற் போரே நிகழ்ந்து முடிந்தது. அணுவாயுதப் போரை அல்லது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரை மேற்கு நாட்டவர்கள் ஆசியாவில் ஏற்படவேண்டுமென விரும்புகின்றனர். சீனா-இந்தியாவுடனோ அல்லது இந்தியா - பாகிஸ்தானுடனோ ஒரு போரை நிகழ்த்தினால், எதிரிகளை அல்லது மேற்கு நாட்டை எதிர்க்கும் வலுவான அரசுகளைத் தமக்குள்ளேயே அழித்து விடலாம் என மேற்கு விரும்புகின்றது. அதற்கான தந்திரத்தினையே மேற்கு நாடுகள் மீண்டும் தொடங்கியுள்ளன. இதில் அவர்கள் இலக்கு வைத்துள்ள முதல்நாடு சீனாவாகும். வெளிப்படையாகச் சுமுகமான உறவுகளையும், நெருக்கங்களையும் காட்டிக்கொண்டாலும், உள்ளூர சீனாவின் பலமும், உறுதியான போக்கும் மேற்கு நாடுகளினால் ஜீரணிக்க முடியாதுள்ளது. அதனை இலக்காகக் கொண்டே, இந்திய - பாகிஸ்தான் பகையை, இந்திய - சீனப் பகையாக மாற்றுவதற்கு அமெரிக்கா விரும்புகின்றது. ஆனால், சீன - இந்திய நெருக்கம் தகவல் தொழில்நுட்பத்தினாலும், பொருளாதாரக் காரணிகளுக் கூடாகவும் விரிவடைந்து வருகின்றது. இது நீண்டகாலத்திற்குத் தொடருமாயின் பலமான அரசுகளாக இரண்டுமே வளர்ந்துவிடும். எனவே, அத்தகைய நெருக்கத்தினையும் உறவினையும் முறியடிப்பது அமெரிக்க நலனுக்கு உடனடித் தேவையாக அமைந்துள்ளது.

இதில் பாகிஸ்தானியரைக் காட்டிலும் இந்தியர்களே பலவீனமானவர்களாக உள்ளனர். அதாவது, ஆப்கானிஸ்தான் யுத்தம் நிகழ்ந்தபோது, பாகிஸ்தானியரை அமெரிக்கர்களுக்குக் காட்டிக் கொடுப்பதில் அவர்கள் குறியாக இருந்தனர். பாகிஸ்தானின் ஆயுத நிலைகளையும், அணுவாயுத மையங்களையும், களஞ்சியங்களையும், படைப்பிரிவின் தலைமையகங்களையும் பட்டியல் போட்டு அமெரிக்கர்களுக்குக் கொடுத்தார்கள். ஏனெனில், ஆஸாத் காஷ்மீரை தாம் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக, ஆனால், இறுதியில் ஜம்மு காஷ்மீரில் தேர்தலை மட்டும்தான் இந்திய அரசியல் தலைமையால் நடாத்த முடிந்தது. அதேபோன்று காட்டிக்கொடுப்பைச் செய்யும் இரண்டாவது கட்டம் தற்போது ஏற்பட்டள்ளது. உலகம் முழுவதும் பயங்கரவாதம் பற்றி இந்திய ஆளும்வர்க்கத்தினரே அதிகம் குரல் கொடுத்துவருகின்றனர்.

எனவே மேற்கு நாடுகள் தமக்குள் ஏற்படுத்திக் கொண்டுள்ள இசைவான கொள்கைப் போக்கினால், ஆசிய நாடுகளைக் கையாள முயல்கின்றனர். அவர்கள் மிக ஆரம்பத்திலும் இக்கொள்கையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றினாலும், தற்போதே அத்தகைய கொள்கைப் போக்கே பொருத்தப்பாடுடையதாக அவர்களுக்குள்ளது. இதிலிருந்து தப்பிக் கொள்வதற்கு, ஆசிய நாடுகளின் தலைமைகள் தமக்கிடையே ஒருங்கிணைப்பை உருவாக்கிக்கொள்வதுடன் அமுல்படுத்தியும் காட்ட வேண்டிய நிலையில் உள்ளதாகவே இராஜதந்திரிகள் கருது கின்றனர். ஆனால், இது நடைமுறைச் சாத்தியமானதா என்பது வேறு விடயம். அத்தகைய நடவடிக்கையையே வடகொரிய விவகாரம் சுட்டிக் காட்டுகின்றது. கூட்டிணைவாக மேற்கு திட்டமிடல்களை மேற் கொள்ளும் போது, அதனை எவ்வாறு ஆசிய நாடுகள் எதிர்கொள்ளப் போகின்றன என்பதிலேயே, கீழைத்தேச அரசுகளின் அரசியல் எதிர் காலம் தங்கியுள்ளது.

ராஜதந்திரம் என்பது அரசியல் ரீதியான ஒரு கலையாகும். அது அதிகாரத்தினால் சர்வதேச நலனை அடைவதற்கான உந்து தலை வழங்கும் ஓர் உபாயமாகும். பொதுவாகவே ராஜதந்திரத்தின் வெற்றியானது அதிகாரத்தால் உருவாகும் அபாயத்தை அல்லது அதிகாரத்தை பேரம் பேசும் திறமையினை எதிர்கொண்டு இலக்கை அடைவதே ராஜதந்திரமாகும். இதனை வளைகுடாப் போர் ஒன்றில் எப்படி ஜோர்ச் புஷ் பிரயோகித்தார் என்பதை நோக்குவோம்.

### வளைகுடா நாடுகள்

ஈராக் மீதான அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப் படை களின் முதலாவது போர் பிரகடனம் புதிய உலக அரசியல் ஒழுங்குக் கான பிரகடனமாக அமைந்தது. உலகம் பரபரப்பாக மாற்றத்தை உள்வாங்கிக் கொண்டிருந்த காலத்தில் அது நிகழ்ந்தது. ஆனால் ஜோர்ச் புஷ் வளைகுடா நாடுகளோடு ஏற்படுத்திக் கொண்ட ராஜ தந்திர நடவடிக்கைகளே அவற்றின் ஒத்துழைப்பிற்கு வழிவகுத்தது. குறிப்பாக ஈராக் குவைத்தை ஆக்கிரமித்த விடயத்தை சர்வதேச மயப் படுத்தியதுடன் ஈராக் முழு வளைகுடா நாடுகளையும் படிப்படியாக ஆக்கிரமிக்கப் போகிறது என்ற அபாயத்தை அமெரிக்கா ஏற்படுத் தியது. மேலும் அவர் அதனை எதிர்கொள்ள வளைகுடா ஒத்துழைப்புச் சபை (GCC) ஒன்றை உருவாக்கினார். ஏறக்குறைய அனேகமான வளைகுடா நாடுகள் இச்சபையில் இணைக்கப்பட்டன. சவூதி அரேபி யாவுடன் மிக நெருக்கமான உறவை ஜோர்ச் புஷ் ஏற்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தடைவை சவூதி அரேபியாவுக்கு விஜயம் செய்த புஷ் வளைகுடா நாடுகளின் ஒத்துழைப்புச் சபையை பல தடைவை கூட்டியதுடன் அவற்றை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க பாரியளவிலான பொருளாதார, இராணுவ உதவிகளை வழங்கினார்.

அரேபிய தலைவர்களுடன் பல விருந்துகளில் கலந்து கொண்ட ஜோர்ச் புஷ் அவர்களுடனான நெருக்கத்தைக் காட்டிக் கொள்ள விருந்துபசாரத்தை ஒரு ராஜதந்திரமாக பயன்படுத்தினார். மேலும் அரேபியர்களின் படைகளையும் இப்போரில் ஈடுபடுத்தப்பட வேண்டிய உறவுகளை பாகிஸ்தான், எகிப்து, சிரியா போன்ற நாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்டார். ஜனநாயகம், உலக அமைதி, உலகப் பாதுகாப்பு என்பவற்றை எல்லாம் முதன்மைப்படுத்தி சர்வதேசப் பிரசாரத்தை மேற்கொண்டார். வளைகுடா ஒத்துழைப்புச் சபைக்குரிய உதவிகள் அனைத்தையும் வழங்குவதாக அனைத்து உத்தரவாதங்களையும் அளித்தார்.

ஈரான் முதலாவது போர்க் காலப்பகுதி நடுநிலைமை வகிப்பதாகக் கூறிக்கொண்டு ஈராக்கிற்கு மறைமுகமாக உதவிகளை வழங்கியது. ஆனால் இரண்டாவது போர்காலத்தில் பகிரங்கமாக அமெரிக்காவை எச்சரிப்பதுடன் அமெரிக்காவின் நடவடிக்கையை இஸ்லாத்திற்கு எதிரான நடவடிக்கை என பிரச்சாரம் செய்வதில் ஈராக்குடன் இணைந்து செயற்பட்டது. இவை யாவற்றுக்கும் மாற்றீடாக வில்லியம் புஷ் எடுத்த எந்த ராஜதந்திர நகர்வும் வெற்றியளிக்கவில்லை. மேலும் வில்லியம் புஷ் நெருக்கடியையும் எதிர்ப்புக்களையும் அதிகம் எதிர் கொண்டிருந்தார். வளைகுடா நாடுகளை ஈராக்கிற்கு எதிராக ஒன்றிணைக்க முடியாதுள்ளதுடன் அமெரிக்காவின் விருப்புக்கு வளைகுடா நாடுகளை மட்டுமல்ல மேற்காசிய நாடுகள் முழுவதையுமே கையாள முடியாதுள்ளமை வில்லியம் புஷ்ஷின் ஈராக் மீதான போருக்குரிய ராஜதந்திரத்தின் தோல்வியாகவே அமைந்திருந்தது.

### வீட்டோ நாடுகள்(P5)

ஐக்கிய நாடுகள் சபையின் பலம் வாய்ந்த அமைப்பாக பாதுகாப்புச்சபை (P5) நிரந்தர ஐந்து உறுப்பு நாடுகளையும் அவர்களுக்கான வீட்டோ அதிகாரத்தையும் கொண்டுள்ளன. இதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவும் அதன் தோழமை நாடான இங்கிலாந்தும் ஈராக் மீதான போரின் ஒரு பக்கமாகவும் ஏனைய சீனா, பிரான்ஸ், ரஷ்சியா மறுபக்க மாக செயற்பட்டன. ஏற்கனவே ஈராக் மீதான இரண்டாவது போர் நடவடிக்கைக்கு சீனா, ரஷ்சியா, பிரான்ஸ் வெளிப்படையாகவே தமது எதிர்ப்பைக் காட்டியதுடன் ஐ.நாவின் ஊடாகவே ஈராக் மீது நடவடிக் கை எடுக்கவேண்டுமென்ற நெருக்குதலையும் அமெரிக்க இங்கிலாந்து கூட்டுக்கு ஏற்படுத்தியிருந்தன. இது மட்டுமன்றி சீனா, ரஷ்சியா இரண்டுமே ஈராக்குடன் நெருக்கமான உறவையும் பொருளாதார, இராணுவ மருத்துவ உதவிகளையும் வழங்கி வருகின்ற நாடுகளாகக் காணப்பட்டன. அமெரிக்காவின் தடைகளை மீறி ரஷ்சியா பல தடவை ஈராக்குடன் உறவை ஏற்படுத்தியுள்ளது. பாதுகாப்புச் சபையின் இம் மூன்று நாடுகளுடனான அமெரிக்காவின் அணுகுமுறை எதிர்பார்க்கப் பட்ட சுமூகத்தன்மையை கொண்டிருக்கவில்லை. பிரான்ஸ் ஐரோப்பிய நாடாக இருந்து கொண்டும் புஷ்ஷின் கடந்த கால அணுகுமுறைக ளால் அமெரிக்க எதிர்ப்புவாதமே பிரான்ஸிடம் மேலோங்கி உள்ளது. சர்வதேச விவகாரங்களில் அமெரிக்கத் தலையீட்டை ஐரோப்பாவுக்குள் எதிர்க்கும் மிகப் பிரதான நாடுகளில் பிரான்சும் ஒன்றாகும். ஆனால் முதலாவது வளைகுடா யுத்தத்தின் போது ஜோர்ச் புஷ்ஷின் ராஜ தந்திரத்தால் பிரான்ஸ் 28 நாடுகளைக் கொண்ட கூட்டுப்படைகளின் ஒரு நாடாக விளங்கியதுடன் போரில் கணிசமான பங்களிப்பை ஆற்றி யிருந்தது குறிப்பிடத்தக்கது.

அப்போது ரஷ்சியா சோவியத் யூனியனில் இருந்து உடைந்து கொண்டிருந்ததுடன் மேற்குலக விசுவாசியான யெல்சின் தலை மையில் பலவீனமான ரஷ்சியாவாகவே விளங்கியது. பொருளாதார உதவிக்கும் உணவுக்காகவும் மேற்கிடம் கையேந்திய ரஷ்சியாவால் வெட்டுவாக்கை தீர்மானத்திற்கு எதிராக பிரயோகிக்க முடியவில்லை. சீனாவும் தனது பொருளாதார இலக்குகளினாலும் எதிர்கால அரசியல் இலாபத்தினாலும் வெட்டுவாக்கை பயன்படுத்தாமல் வெளியேறியது. ஜோர்ச் புஷ் சீனாவுடன் தனது ராஜதந்திரிகளை அனுப்பி மணித் தியாலக்கணக்காக சீனாவின் பொருளாதார எதிர்காலம் பற்றி கலந் துரையாட வைத்ததுடன் சில எச்சரிக்கைகளையும் வழங்கினார். அதனால் சீனா, ஈராக் விடயத்தில் ஒதுங்கிக் கொண்டதாக காட்டிக்கொண்டது. இந்த நிலை இரண்டாவது போரின்போது இல்லை. ஆனால் சீனாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளும் வர்க்கம் எப்படிக் கணக்குப் போடுகிறதோ இல்லையோ சீனாவில் புத்திஜீவிகள் ஆலோசகர்கள் ஈராக் மீதான அமெரிக்கப் போரை சீனா விரும்புவதே சிறப்பானதென வாதிடுகின்றனர்.

அதற்கு அவர்கள் கூறும் காரணம் அமெரிக்கா ஏற்கனவே பொருளாதார வீழ்ச்சியில் சிக்கித் தவிக்கிறது.மீண்டும் ஒரு போரினால் பாரிய நெருக்கடியை அமெரிக்கா அடையும். அப்போது சீனர்களுக்கு அமெரிக்கரை வெல்லுவதோ, தோற்கடிப்பதோ இலகுவானதாகப் போய்விடும் என பீக்கிங் பல்கலைக்கழக அரசியல் ஆய்வாளர் கூறுகின்றார். ஆனால் சீன ஆளும் வர்க்கம் கருதுவதும் சீனாவுக்கு இலாபகரமானதாகவே அமைகிறது. அதாவது சதாம் உசைன் வீழ்த் தப்பட்டால் பகிஷ்கரிப்புப் பொருளாதாரம் படிப்படியாக குறைந்து இறுதியில் மேற்காசியாவே அமெரிக்காவின் பெரும் சந்தையாக எதிர்காலத்தில் அமைந்துவிடும். அது மட்டுமன்றி போரில் இழப் பீட்டைக் காட்டிலும் பகிஷ்கரிப்புப் பொருளாதாரத்தில் நாளாந்தம் அமெரிக்கா அடையும் பொருளாதார நெருக்கடி அதிகம். எனவே போர் தவிர்ப்பது சீனாவுக்கு இலாபம் என்ற கருத்தை பொருளாதார நோக்கிலும் அது அமெரிக்காவின் அரசியல் அதிகாரத்தை எதிர்ப் பதற்கான சக்தியை மேற்காசியாவில் அழிப்பதன் மூலம் அமெரிக்கா வின் முழுக் கவனமும் கிழக்காசியாவை நோக்கியதாக மாறிவிடும் என்றும் வாதிடுகின்றனர். இதனால் ஈராக் மீதான அமெரிக்கப் போரை சீனா அதிக விமர்சனங்களுடன் ஏற்றுக் கொண்டது.

ஆரம்பத்தில் ஈராக் மீதான அமெரிக்கப் போரை இந்தியா நிரா கரித்தே வந்தது முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அமெரிக்காவுக்கு விஜயத்தை மேற்கொள்ள இருந்தபோது இந்தியா போரை எதிர்ப் பதாக பகிரங்கமாக அறிவித்தார். அவர் இதனை அமெரிக்காவுக்கு எதிரான ராஜதந்திரமாகக் கூட பயன்படுத்த முயன்றார். ஏனெனில் அமெரிக்க பாகிஸ்தானிய நெருக்கத்தை உடைக்க அவருக்கு ஏதோ வொரு மிரட்டலை வெளிப்படுத்த வேண்டியிருந்தது. ஆனால் புஷ்சை சந்தித்த பின்பும் ஈராக் நடவடிக்கை பற்றி மூச்சும் விடவில்லை வாஜ் பாய். ஏனைய அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பெரிதாக கருத்துக் கூறாமல் மௌனம் சாதித்து வந்தன. எல்லா நாடுகளுக்கும் பொருளாதார நெருக்கடியும் வறுமையும் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகைப் பெருக்கமும் பெருந் தலையிடியாக உள்ளதால் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் அதிகம் அக்கறை செலுத்த வில்லை. இஸ்ரேல் எப்போதும் போலவே காணப்பட்டது. முதலாவது ஈராக் மீதான போரிலும் தனித்திருந்த இஸ்ரேல் இரண்டாவது போர்க்காலத்திலும் அதையே கடைப்பிடித்தது. இஸ்ரேல் போரில் இழுக்கப்பட்டால் அரபுக்கள் அணிதிரள்வது இலகுவாகிவிடும் என அமெரிக்கா கருதியதே காரணமாகும். ஆனால் புஷ் பலஸ்தீனத்திற் கும் அரபாத்திற்கும் எதிராக அதிகம் செயற்படுவதனால் அரபு உலகம் அமெரிக்காவுடன் ஒத்துழைக்க மறுத்தது.

## அமெரிக்கர்களின் நவீன ஜனநாயகக் கோட்பாடு

ஈராக் மக்கள் ஜனநாயகத் தேர்தலை நிராகரித்து போராட்டங் களை மேற்கொண்டு வருகின்றனர். போலியான, ஏமாற்றுத்தனமான அணுகுமுறை என தேர்தலை விமர்சித்ததுடன், பிரித்தானிய, அமெரிக்க அரசுகளின் நலன்களை மட்டும் இலக்காகக் கொண்ட தேர்தல் நிராகரிக்கப்பட வேண்டுமென ஈராக்கிய ஷியா முஸ்லிம் தலைவரின் ஒருவரான மெக்ரடா சதார் எச்சரித்துள்ளார். ஆனால், அமெரிக்க, பிரித்தானிய அரசியல் தலைமைகளே ஈராக்கில் ஜனநாய கத்தை மலரவைக்கப் போவதாகவும், சுதந்திரத்தை அந்த மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்போவதாகவும் கூறிவருகின்றனர்.

கிரேக்க அரசியல் சிந்தனையிலும், கிரேக்க ஆட்சிமுறை யிலும் நேரடி ஜனநாயகம் பற்றிய கருத்துப் பரிமாறல் இருந்தபோதும், மேற்கு நாடுகளின் முதலாளித்துவ சக்திகளின் காப்பரணாக ஜன நாயகம் என்பது உருவாக்கப்பட்டு வந்தது. ஜனநாயகத்தின் ஆரம்பம் கிரேக்கம் என்பதுபோல் ஐரோப்பா அதன் மத்தியகாலம் எனவும், நவீன ஜனநாயகத்தின் தோற்றம் அமெரிக்கா என்றும் பொதுவாகவே கூறப்படுகின்றது. அத்தகைய அமெரிக்கர்கள் ஜனநாயகத்தை தாராள ஜனநாயகமெனவும், நவதாராள ஜனநாயகமெனவும் வகைப்படுத்திக் கொண்டனர். முதலாளித்துவ உலகம் போன்று சோஷலிஸவாதிகளும் ஜனநாயகத்தை வகைப்படுத்த தவறவில்லை. அவற்றில் மிகப் பிரபல மான ஜனநாயகக் கோட்பாட்டை மாவோசேதுங் முன்வைத்தார். அதுவே புதிய ஜனநாயகம் எனப் பேசப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க ஜனாதிபதியும் அவரது சகாக்களும் உருவாக்கிக் கொண்ட புதிய ஜனநாயகம் இரண்டு பிரதான கோட்பாடுகளைக் கொண்டிருக்கிறது. முதலாவது துப்பாக்கி ரவைகள் கொண்ட ஜன நாயகக் கோட்பாடு *(Theory of silver bullet democracy)*. இதனூடாகச் சொல்லப்படும் செய்தி உலகிலுள்ள எல்லா நாடுகளும் ஜனநாயகத் திற்கு தயாராகுதல் வேண்டும். முடி, மன்னன் போன்ற ஆட்சிகளை முடிவுக்குக் கொண்டுவருவதுடன், தேர்தல் ஜனநாயகத்தின் இன்னொரு வடிவமாகவும், மக்களின் வாழ்வுக்கும் மகிழ்வுக்கும் பின்னால் ஜன நாயகம் அவசியம் எனவும், கூறுகிறது. இந்தக் கோட்பாடு நவதாராண்மை வாதத்தை வசீகரிக்க திட்டமிடுவதுடன், அதனை முழு உலகத்திலும் அமுல்படுத்துவதிலும் இராணுவத்தையும் படைப்பலத்தையும் பிரயோகிக்க திட்டமிட்டிருப்பதைக் குறிப்பிடுவதாக உள்ளது.

இரண்டாவது மூர்க்கத்தனமான தாக்குதல் ஜனநாயகம் *(Theory of long hard slog democracy)* கோட்பாடாகும். இதுவும் முதலாவது அம்சத்தின் தொடர்ச்சியாகவே உள்ளது. ஆனால், இது பலமான ஜனநாயக அரசியல் நிறுவனங்களைக் கட்டி வளர்ப்பதுடன், சந்தைப் பொருளாதாரத்தையும் அதற்கான சிவில் சமூகத்தையும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது. இந்த ஜனநாயகத்தில் ஒழுக்க கோவைதேவையான பொருளாதார சீர்திருத்தத்தை ஏற்படுத் துவதுடன், வர்த்தகம், நாணயப் பரிமாற்றம் கல்வி மற்றும் சட்ட ரீதியான முன்னேற்றங்கள் நிகழ்வதாகவுள்ளது. அவை ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்கான பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதுடன், முரட்டுத்தனமான தாக்குதலை ஜனநாயகம் எதிர்பார்க்கிறது.

இதன் பிரதிபலிப்பாகவே ஈராக்கின் பொருளாதார உதவி களை அமெரிக்கா கூறியபோது, ஐரோப்பிய யூனியன் மற்றும் ஐக்கிய நாடுகள் அமையங்கள் முன்வந்துள்ளமையும், அரபுலகத்தின் அபிவிருத்தி அறிக்கையில் அமெரிக்க ஜனாதிபதி அவற்றைப் முதன்மைப்படுத்தி யிருந்தமையும் ஆதாரமாகக் கொள்ள முடியும்.

முதலில் அமெரிக்கர்கள் கோரும் துப்பாக்கி ரவை ஜன நாயகத்திற்கும், சீனர்கள் குறிப்பிட்ட துப்பாக்கி முனையிலிருந்து ஜன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகம் பிறக்கிறது என்பதற்கும் எந்த வேறுபாடும் கிடையாது. சீனர்கள் சீனாவிற்குள் செய்ததை, அமெரிக்கர்கள் முழு உலகத்தலும் மேற்கொள்கின்றனர். அமெரிக்கர்கள் ஜனநாயகத்தில் மட்டுமல்ல உண்ணும் கோதுமையிலும் அவ்வாறுதான் தமது மக்களுக்காகவும், நாட்டுக்காகவும் ஒருவகை கோதுமையை உற்பத்தி செய்வதும், ஏற்றுமதிக்கு இன்னோர் மாதிரியான கோதுமையை உருவாக்குவதும் அவர்களது இயல்பாகும். அமெரிக்காவின் பிரதான இலக்கு மேற்கு ஆசியா என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. மிக நீண்ட காலமாகவே மேற்காசியாவில் ஜனநாயகத்தை ஏற்படுத்த அமெரிக்கர்கள் முயன்றார்கள். அதனை சுதந்திரம் என்றும், ஆட்சியாளர்களின் அடக்குமுறையில் இருந்து மக்களை மீட்டெடுப்பது என்றுமே அமெரிக்கர்கள் கூறுகின்றனர். இது அமெரிக்காவின் ஒரு வகையான புதிய கொள்கையாகக்கூட அளவீடு செய்து கொள்ளலாம். அதாவது, மேற்காசிய மக்களின் சுதந்திரம் என்பது அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையில் ஒரு புதிய அம்சம் சி.ஐ.ஏ.என்ற அமெரிக்க உளவு நிறுவனத்தின் 2003 ஆம் ஆண்டறிக்கையிலும், மேற்காசிய மீதான கொள்கை பற்றிய பல தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இஸ்லாம் அல்லது அரபுக் கலாசாரத்திற்குப் பதிலாக சுதந்திரம் அல்லது ஜனநாயக கலாசாரத்தை வளர்ப்பதே பிரதான கொள்கையாகவுள்ளது. அதனை அமுலாக்குவதன் வாயிலாக மேற்காசியாவின் பொருளாதார வாய்ப்புக்களை அமெரிக்கா பயன்படுத்துவதுடன், ஏமாற்றுத்தனமான பொம்மையான மேற்குக்குச் சார்பான ஆட்சி அமைப்புக்களை உறுதிப்படுத்திக் கொள்வதே நோக்கமாகவுள்ளது.

ஜனநாயகத்தை அறிமுகப்படுத்துவதன் வாயிலாக நவீனத்துவத்தை மேற்காசியாவிற்குள் பரப்பலாம். நவீனத்துவம் என்பது மேற்காசிய கலாசாரத்திற்கு மாற்றாக மேற்கத்தேய கலாசாரத்தை அமுலாக்குவதாகும். மேற்குலகம் கூறுவதுபோல் பின்தங்கிய கலாசாரத்தை அகற்றி விட்டு, நவீனத்துவத்தை ஏற்படுத்தி மக்களை சுதந்திரமான தேசத்துக்கு கொண்டுவருவது அல்ல. மேற்குலத்தில் கலாசாரத்தை பரப்புவது இலகுவில் சாத்தியப்படக்கூடியதல்ல. உடைத்துவிட்டு புதியவற்றை மத அடிப்படையில் புகுத்தமுடியாது. ஏனைய முஸ்லிம் அல்லாத இனங்கள் வாழ்ந்த நாடுகளில் மதத்தை மாற்றுவது இலகுவான விடயம். மக்களை மதம் மாற்றச்செய்வது கடினமானதல்ல. அதனால், மேற்குல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தின் ஒட்டுமொத்தமான ஆட்சிமுறைகளையும், பழக்க வழக்கங் களையும் பின்பற்றி வாழ்வதுடன், இஸ்லாமியர்கள் அல்லாதவர்களில் அநேகமானவர்கள் மேற்குலகத்தவர்கள் மாதிரியே காணப்படுகின்றனர். இந்த மேற்குலகத்துக்குள் அகப்படாத அரபுக்கள் தமது மதத்தினால் பாதுகாக்கப்பட்டு வந்தனர். தற்போது அதனையும் மதத்துக்குப் புறம் பாக சுதந்திரம், ஜனநாயகம், பொருளாதாரம் என்ற நவீன சொற் பிரயோகங்களால் ஆழமான மாற்றத்தை ஏற்படுத்தவதையே நோக்க மாகக் கொண்டு அமெரிக்கர் கள் செயற்படுகின்றனர்.

அமெரிக்கா உலகநாடுகளின் ஜனநாயகத்தை விருத்தி செய் வதற்காகப் பல மில்லியன் டொலர்களைச் செலவு செய்து வருகின்றது. மேற்காசியாவின் ஜனநாயக விருத்திக்காக மட்டுமே வரவு செலவுத் திட்டத்தில் ஆறு (06) சதவீதத்தை ஒதுக்கியுள்ளது. இது ஏறக்குறைய 700 மில்லியன் அமெரிக்க டொலராகும். இதனை அமெரிக்கா ஒரு முதலீடாகவே மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய முதலீட்டின் இலாபத்தையும் அமெரிக்காவே அடைந்துகொள்ளும்.

முரட்டுத்தனமான தாக்குதல் ஜனநாயகத்துக்கு பின்னுள்ள பொருளாதாரத் தளர்வுகளை அவதானித்தால், அமெரிக்க ஜனநாய கத்தின் சுரண்டல் வடிவம் நன்கு தெளிவாகும். கூட்டாக சுரண்டு வதைத் தவிர்த்து, தனித்து அமெரிக்கா சுரண்டுவதற்கு எடுக்கும் நடவடிக்கைகளே அண்மைக்காலத்தில் அதிகரித்து வருகின்றது. ஈராக் கைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் அமெரிக்கா, படிப்படியாக ஏனைய அயல்நாடுகளையும் அச்சுறுத்தி வருவதன் உள்நோக்கமும் அதுவாகவே உள்ளது. குறிப்பாக ஜோர்தான், சிரியா, ஈரான் என்பன மீது அமெரிக்காவின் எச்சரிக்கையும் அரசியல் பாய்ச்சலும் அதிக நலனை அடையும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுபவையாகும். அமெரிக்காவின் அணுகுமுறைக்கும், தேவைக்கும் இசைந்து தமது நாட்டுக் கொள்கைகளை மாற்றிக்கொண்டால், அவை அமெரிக்காவின் தாக்குதலிருந்து தப்பித்துவிடும். அவ்வாறு சீர்திருத்தங்களையும், அமெரிக்க சிபார்சுகளையும் ஏற்கத்தவறும் பட்சத்தில் ஆப்கானிஸ்தான், ஈராக் மாதிரியில் அமெரிக்காவின் தாக்குதல் காத்திருக்கின்றது. இரண்டுமே மேற்காசியாவுக்கு ஆபத்தானதுதான். அதாவது, எதிர்ப் பின்றி அமெரிக்க மயமாக்கத்தை ஆதரித்தாலும், அமெரிக்க செல் வாக்கும், ஊடுருவலம், சுரண்டலும் தவிர்க்க முடியாதபடி அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறான சந்தர்ப்பத்தில் போர் தவிர்க்கப்படும் வாய்ப்பு மட்டுமே காணப்படும். ஆனால், போர் ஏற்பட்டால் ஈராக் மாதிரியான நிலை ஆட்சியாளனுக்கும், மக்களும் ஏற்படும். அதன் பின்னர் அமெரிக்கா நேரடியான ஊடுருவலைச் சாத்தியப்படுத்தி, தனது நடவடிக்கைகளை இலகுபடுத்தும். எனவே, முழுமையான அரபுலகமும் மாற்றுக் கொள் கைக்கான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளன. அத்தகைய கொள் கைக்கான அடிப்படை நவதாராளவாதம் என்றோ அல்லது ஜனநாய கம் என்றோ பேசப்பட்டுவருகின்றது. அதற்குப் பின்னால் உலகமய வாக்கமல்ல, அமெரிக்கமயாக்கமே மறைந்துள்ளது. அமெரிக்க மயாக்கத்தின் பாதையே ஜனநாயகமாகும். ஜனநாயகம் என்பதற்குப் பின்னால் மறைந்திருக்கும் அபாயம் எச்சரிக்கையுடன் நுகரப்பட வேண்டியது. இயல்பில் ஜனநாயகம் சிறப்பானதாக இருந்தபோதும், அவற்றைக் கையாளும் சக்திகள் மேற்கொள்ளும் அணுகுமுறைகளே அதனை பலவீனப்படுத்துகின்றது. கோட்பாடுகளை நடைமுறைக்கு மாற்றுவதென்பது சில சக்திகளின் நலனுக்காகக் கையாளுவதற்குச் சாதனமாக மாறிவிட்டது.

எனவே, மேற்காசியாவின் மீது ஏற்படும் திணிப்பு சாத்தியப் படுமாயின், அதன் திசை ஏனைய பிராந்தியங்களை நோக்கி அசையும். ஏனைய பிராந்தியங்கள் ஏற்கனவே அமெரிக்கா உட்பட, மேற்கின் தளுவல், ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கும் சக்திகளாகக் காணப் பட்டாலும், முழுமையாக அன்றி பகுதியாகவும், அரைகுறை யாகவும் பல நாடுகள் பின்பற்றிவருகின்றன. அதனையும் அமெரிக்கா முறியடிக் கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். அப்போது முழு அரசுகள் மீதும் அமெரிக்காவின் ஆதிக்கம் சாத்தியப்படும். அதாவது, ஜனநாயகக் கோட்பாட்டின் மூலமாக அதனைச் சாத்தியப்படுத்த அமெரிக்கா முயலும் என்பதே அதன் அர்த்தமாகும்.

செவ்வாய்க்கு மனிதனை அனுப்பும் முயற்சியும், சந்திரனுக்கு மீண்டும் மனிதனை அனுப்பும் புஷ்ஷின் திட்டமிடலும் தேர்தல் யுத்தி யாக அமைந்தாலும், மீண்டுமொரு குடியேற்றவாதத்துக்கான திட்ட மிடலாகவே அமையவுள்ளது. அத்தகைய பாய்ச்சலுக்குள் மேற்காசி யர்கள் தமது தனித்துவத்தை தக்கவைக்க புதிய உபாயங்களை வகுக்கவேண்டும். சதாம் உசைன் மாதிரியான உபாயமும் அபாய மானது. அப்துல்லா மாதிரியான அணுகுமுறையும் ஆபத்தானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, அமெரிக்கர்கள் உருவாக்கியுள்ள புதிய கொள்கையை சாதுரியமாகவும், தந்திரமான அணுகுமுறையாலுமே முறியடிக்கமுடியும். அரபுக்கள் மத்தியிலும் இஸ்லாமிய மதத்துக்குள்ளும் மறைந்திருக்கும் சிறப்புக்களை, ஆட்சியாளர்கள் வெளிக்கொண்டுவருவதுடன், அவற்றை முழு மேற்காசியாவுக்குள்ளும் பொதுமைப்படுத்தி, அமெரிக்கா முன்வைப்பவற்றை உள்வாங்கி பதிலளிப்பது போல் நகர்வுகளை மேற்கொள்வதே அவசியமானது.

எனவே, நவதாராண்மைவாதியான றொபேட் கேகன் குறிப்பிடுவது போல் சுதந்திரமும், தேர்தலும் ஜனநாயகமல்ல. சுதந்திரமான அரசியல் நிறுவனங்கள், சந்தைப் பொருளாதாரம், சுதந்திரமான ஊடகங்கள், மத்தியதரவர்க்கம் என்பவற்றின் உருவாக்கமெல்லாம் நலன்களை இலக்காகக்கொண்ட சக்திகள் அடைவதற்காக உருவாக்கும் விடயங்களேயாகும்.

**அமெரிக்கப் பயங்கரவாதம்**

உலக அரசியலே ஹமாஸ் இயக்கத்தின் ஆன்மீகத் தலைவர் சேர்க் அகமட்யசீன் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. அது ஒரு இஸ்ரேலிய - பலஸ்தீன பிணக்காக மட்டும் அமையாது, முழு உலக அரசியலும் மேலும் ஒரு அரசியல் பழிவாங்கலையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. காஸாப்பகுதியில் இஸ்ரேலிய ஹெலிகொப்ரர் நடத்திய தாக்கதலில் சேர்க் அகமட் யசீன் கொல்லப்பட்டார். யசீனுடன் ஏழு பலஸ்தீனர்களும் கொல்லப்பட்டதுடன், பள்ளிவாசல் ஒன்றில் தொழுகையில் ஈடுபட்டபோது நிகழ்ந்ததாக தெரியவந்துள்ளது. யசீன் மீதான படுகொலை ஏற்படுத்தியுள்ள அரசியல் அவலத்தையும் இது தொடர்பான உலக நாடுகளின் நிலைகளையும் அளவீடு செய்வது ஜனநாயகத்தின் காவலர்களை அளவிடுவதற்கு ஒப்பானதாகும்.

பயங்கரவாதமெது, தீவிரவாதமெது என்ற வகைப்பாட்டை உலகம் செவ்வனே ஒழுங்கபடுத்திவிட்டதாக தகவல் எதுவும் வெளியாகவில்லை. ஆயுதம் தாங்கிய எல்லா அமைப்புக்களும் பயங்கரவாதங்களுமில்லை. அதற்காக பயங்கரவாதம் ஆயுதம் தாங்காமல் செயற்படுவதுமில்லை. ஆனால், உலகப் புலமையாளர்களின் கருத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் பயங்கரவாதம் என்பதை இனங்காண அந்த அமைப்பின் அல்லது குழுவின் கொள்கையையும் அதனை அமுலாக்கும் தன்மை யையும் பொறுத்ததாகவே அமைந்துள்ளது என்ற முடிவுக்கு வந்துள்ள னர். அதனடிப்படையில், ஹமாஸ் என்பதை இஸ்ரேலியரும், அமெரிக்கர் களும் பயங்கரவாத அமைப்பாக பார்ப்பதுபோல புலமைசார் அறிஞர் கள் அவ்வாறு மதிப்பிடவில்லை. ஏனெனில், யசீன் கொல்லப்பட்டதைக் கண்டிக்காத அரசுகள் உலகில் இரண்டு மட்டுமே அமெரிக்காவும், இஸ்ரேலும். பிரிட்டன் கண்டித்து விட்டாலும் அதிகமான விமர்சனங் களை முன்வைத்துவிட்டது. அதனால், அது ஹமாஸை ஏற்றுக்கொள் ளப் போகின்றதோ அல்லது பயங்கரவாதம் என்ற நிலையை சரியாக அளவீடு செய்யப்போகின்றதோ என்பதல்ல. மறுவளமாக பிரிட்டன் உட்பட்ட மேற்குலகம் சில அரசியல் இலாபங்களை அடைந்துள்ளன என்று கூறலாம்.

அவ்வாறான சூழலில் அமெரிக்கா இந்த விடயத்தை ஆதரிப் பதுடன் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் இஸ்ரேலுக்கு ஆதரவாக தனது "வீட்டோவை" பயன்படுத்தியுள்ளது என்பது கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும். இது இஸ்ரேலின் பயங்கரவா தத்தை அனுமதிப்பதுடன் இஸ்ரேல் பலஸ்தீனத்தின் பயங்கரவாத நடவடிக்கையை ஊக்குவிப்பதாகவே அமையும். புதிய உலக ஒழுங்கு உருவான பின்பு அமெரிக்கா தனது "வீட்டோவை" இஸ்ரேலுக்காக மீளவும் ஒரு தடவை பிரயோகித்துள்ளது. இது முழு உலகத்தையும் அமெரிக்கா நிராகரிப்பதுடன் அமெரிக்காவின் பயங்கரவாதத்தை மீண்டும் ஒரு தடவை அம்பலப்படுத்தியுள்ளது என்றே கூறலாம். அமெரிக்காவின் இந்த நடவடிக்கை உலகில் அமெரிக்கா எதனை ஊக்குவிக்க விரும்புகின்றதென்பதைக் காட்டுகின்றது. இந்தியாவுடன் நட்புக்கரம் நீட்டிக்கொண்டு பாகிஸ்தானின் நடவடிக்கைகளை அமெரிக்கா ஆதரிப்பது போன்றது. உலகம் முழுவதும் பயங்கரவாதம் என்ற சுலோகத்தை முன்னிறுத்தி அதற்கு எதிராகப் போராட முயலும் அரசு களை ஒன்றிணைத்துக் கொண்டு, போரிடும் அமெரிக்கா இஸ்ரேலின் நடவடிக்கையை கண்டிக்காது ஆதரித்தமை அதன் இரட்டை வேடத் தைக் காட்டுகின்றது.

ஐ.நா.வின் பாதுகாப்புச் சபை, இஸ்ரேல் மீது அத்தகைய கண்டனத் தீர்மானத்தையே அமெரிக்கா ஏற்றுக்கொள்ள தயாரில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால், எப்படி இரண்டு சக்திகளையும் ஒன்றிணைப்பது. ஹமாஸ் அமைப்பு யசீனின் படுகொலையைத் தொடர்ந்து, பாரிய அழிவுகளை ஏற்படுத்துமளவுக்கு ஒரு தாக்குதலை ஆரம்பிக்கத் திட்டமிட்டு வரு கிறது. புதிய ஆத்மீகத் தலைவரை தெரிவு செய்யும் மாநாட்டிலும் அதன் பின்பும் ஹமாஸ் பாரிய தாக்குதலை செய்யத் தயாராகின்றது என்பதை வெளிப்படுத்துவதாக அதன் நடவடிக்கைகள் மூலமாக தெரியப்படுத்தியது. எனவே, அமெரிக்கா, லிபியாவை, வடகொரியாவை, ஈராக்கை, ஈரானை விரட்டுவதுபோல் இஸ்ரேலினைத் தாக்க தயாராக வில்லை. யசீன் படுகொலை ஹமாஸின் தீவிர நடவடிக்கையை தூண்டுவதுடன் ஏற்கனவே, வளர்ந்துவந்த ஆதரவை மேலும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பலஸ்தீன விடுதலை இயக்கமும் *(P.L.O)* யசீர் அரபாத்தும் பலஸ்தீன விடுதலைப் போராட்டத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டதுடன், கடந்த காலத்தில் இருந்து மேற்காசிய நாடுகள் ஹமாஸை முழுமையாக ஆதரிக்காத நிலையில் இது நிகழ்ந் துள்ளது. ஏறக்குறைய *P.L.O* அப்புறப்படுத்தப்பட்டு ஹமாஸ் அந்த இடத்தை நிரப்புவதுடன், அதன் உத்திகளும் அணுகுமுறைகளும் இஸ்லாமிய மற்றும் ஏனைய மேற்காசிய சக்திகளால் அங்கீகரிக் கப்படும் நிலை ஏற்பட வாய்ப்பு அதிகரித்துள்ளது. இதனை பலஸ்தீன மக்களும் ஏற்றுவருவதுடன், ஹமாஸுக்கு ஆதரவாக அணிதிரண்டு வருகின்றபோக்கும் நிலவுகின்றது. அடிப்படை முரண்பாடுகளைக் கொண்ட மிதவாத சக்தியாக *P.L.O* வும் அரபாத்தின் வாரிசுகளும் மாறிக்கொண்டு செல்லும்போதும், இஸ்ரேலின் அணுகுமுறைக்கு நவீன பாணியில் பதிலளிக்கும் பலத்தை ஹமாஸ் பெற்றுள்ளது. இதனால், இனிவரும் இஸ்ரேலிய - பலஸ்தீன அரசியல் போராட்டத் தில் ஹமாஸ் கணிசமான இடத்தைப் பெறும் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. அப்படியாயின், இந்த மாதிரியான நடவடிக் கையை ஏன் அமெரிக்கா ஆதரிக்கிறது என்பதே அடுத்த கேள்வி யாகும். நிச்சயமாக அமெரிக்கா ஹமாஸ் பிரிவு தொடங்கும்போது, வெளிப்படையாக அன்றி உள்ளூர ஆதரித்தே வந்துள்ளது. ஏனெனில், பலஸ்தீன விடுதலை அமைப்பு துண்டாடப்படுவது அமெரிக்காவின் நலனுக்கும், இஸ்ரேலின் நட்புக்கும் பாதுகாப்பானதாகும். ஆனால், இது இப்படிவளர்ந்து பாரிய அமைப்பாக மாறும் என யாரும் அப்போது எதிர்பார்க்கவில்லை. ஹமாஸின் ஆரம்பத்திற்கு பின்னணி யாக சிரியா மற்றும் ஈரான் என்பன இருந்தன என்பது உலகத்திற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்ததுபோல் அமெரிக்க உளவுத்துறைக்கு முன்கூட்டியே தெரிந்து கொண்டது. அதனாலேயே, அந்த நாடுகள் மீது அமெரிக்கா மீண்டும், மீண்டும் நெருக்கடியைக் கொடுத்துவருவதற்கு காரணமாகின்றது. இதனால், ஹமாஸ் அமைப்பின் மீதான நடவடிக்கையை மேற் கொள்வது அமெரிக்காவிற்கு தவிர்க்க முடியாததாக மாறிவிட்டது. ஏனெனில், ஹமாஸ் அந்தளவுக்கு வளர்ந்து விட்டது. அத்தோடு, இஸ்லாமிய அடிப்படை வாதத்தை பின்னணியாக கொண்டிருப்பதுடன் ஏனைய இஸ்லாமிய அமைப்புக்களுடன் உறவுகளை பலப்படுத்திவருகின்றது. எனவே, ஹமாஸ் அழிக்கப்படுவதில் அமெரிக்கா கவனம் கொள் கின்றது. இஸ்ரேலின் தனித்துவத்தை பாதுகாப்பதுடன் மேற்காசி யாவில் அமெரிக்காவின் நலன்களை ஏற்படுத்திக்கொள்ளலாமென கணக்குப் போடுகின்றது.

அதைவிட இஸ்ரேல் - பலஸ்தீன பிரச்சினை தீர்க்கப்படக் கூடாது என்பதில் அமெரிக்கா கரிசனையாக உள்ளது. இதுவரை எத்தனையோ உடன்பாடுகள் அமெரிக்காவின் தலைமையில் இரு அரசுகளும் ஒப்பமிட்டுவிட்டன. ஆனால், எவையும் அமுல்படுத்தப்பட வில்லை. அவ்வாறு அமுல்படுத்தப்படாத நிலை இஸ்ரேலின் விட்டுக் கொடுப்பின்மையாலே ஏற்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி தேர்தலை வைத்துக்கொண்டு இஸ்ரேலை அமெரிக்கா பாதுகாக்க நினைத்தாலும் மறுவளமான பிரச்சினைகள் வெள்ளைமாளிகை வெளிப்படுத்தி யிருக்கலாம். ஆனால், இவ்வாறு எதனையும் மேற்கொள்ளாது இஸ் ரேலுக்கு எதிரான தீர்மானத்தை ரத்துச் செய்தமை ஹமாஸ் போன்ற அமைப்பின் தாக்குதலை எதிர் பார்த்திருப்பதுடன், அதிகரிப்பதன் வாயிலான பயங்கரவாதத்தை சுலோகமாகப் பயன்படுத்தி உலக ஆதிக்கத்தை சாத்தியப்படுத்தலாம் என்பதாகும்.

பயங்கரவாதம் என்பது அமெரிக்க மேலாதிக்க கொள்கையை விஸ்தரிப்பதற்கு அமெரிக்காவுக்குகிடைத்த புதிய ஆயுதமாகும். அதனால், பயங்கரவாதத்தை பயன்படுத்தி முழு உலகத்தையும் கட்டுப்படுத்தும், அரசியலை அமெரிக்கா மேலும் தொடர விரும்புகிறது. அதுமட்டு மன்றி, மேற்காசிய அரசியலில் அமெரிக்கா வுக்கு மிக நீண்டகால நெருக்கமும், உறவும் உண்டு. அதனால், அமெரிக்காவின் அணுகு முறை அவ்வாறு அமையுமாயின் உலக அரசியலை இலகுவாகவும், சாத்தியமான வழிகளிலும் பின்பற்ற முடியும். பயங்கரவாதத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்கும் அரசாக அமெரிக்கா இல்லாது மீண்டும் பயங்கரவாதத்தை தீவிரமாக பரப்பவும் பயங்கரவாதத்தின் பலத்தை அதிகரிக்கவும் விரும்புகின்ற நாடாக அமெரிக்கா விளங்குகிறது. இது அமெரிக்க அரசியல் கலாசாரத்தின் ஓரம்சமாக மாறிவிட்டது. அமெரிக்கத் தலைமைத்துவம் பின்பற்றும் அரசியல் கலாசாரத்தை நோக்குவோம்.

**அமெரிக்கப் போலி யதார்த்தவாதம்**

மேற்குலகம் என்று பேசப்படும் சொற்பதத்திற்குப் பின்னால் கௌரவமும், பண்பாடும், நாகரிகமான அரசியல் நடத்தை முதன்மை யானவையாக நோக்கப்படுவதுண்டு. அத்தகைய அம்சம் பிற அரசியல் கலாசாரங்களை அவமதிக்கின்ற போக்குகளும் வளர்ச்சி யடைந்து வரும் அல்லது பின்தங்கிய தேசத்து புத்திஜிவி களாலும், சாதாரண மக்களாலும் அளவிடப்படுகின்றது. கீழைத்தேசம் பலவீன மான கட்டமைப்பையும், ஏமாற்றுத்தனத்தையும், கொடுமை யான ஆட்சியையும் கொண்டிருப்பதாக மதிக்கப்படுவதுண்டு. இது கீழைத் தேசம் மீதான திட்டமிட்ட அடக்குமுறை நடவடிக்கையின் பிரதிபலிப் பாகவே உள்ளது. கீழைத்தேசத்தை தாழ்த்துவதும் மேற்குலகத்தை உயர்வாகக் கணிக்க வைப்பதும், மேற்குலக ஆதிக்க சக்திகளின் உபாயமாகும். அத்தகைய நிலையில் மேற்குலகத்தை பாதுகாப்பதும், பராமரிப்பதும் இலகுவானதொன்றாக விளங்கும். அதன் மூலம் சுரண்டல், ஆதிக்கம், செல்வாக்கு என்பவற்றை இலகுபடுத்தலாம் என்பதே அவர்களின் எண்ணமாகும்.

கீழைத்தேசத்தின் அடிப்படைகளை கேள்விக்கு உட்படுத்தி அதிலிருந்து கீழைத்தேசத்தின் பலம்களை பலவீனமாக்கி தமது தேசத்தின் அம்சங்களை நிலைநாட்ட முயல்வதையே இது காட்டு கின்றது. இதற்கேற்பவே குடியேற்றவாதமும், நவகுடியேற்றவாதமும் அவர்களுக்கு ஆரம்பத்தில் உதவியது. தற்போது உலக மயப்படுத் தல் என்பவற்றுக்குப் பின்னால் பொருளாதாரம், வறுமை, தொழில் நுட்பம், சமாதானம், ஜனநாயகம் என்ற புதிய புதிய சொற்பதங்களை உருவாக்கிக் கொண்டு குடியேற்றவாத காலத்தில் போடப்பட்ட தளத் திலிருந்து செயற்படுவது உணரக்கூடியதொன்றே.

இந்த சூழலில் நாம் அவதானிக்கும் மிக அண்மைய விடய மாக அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் உள்ளது. கீழைத்தேசதின் சுயங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை உடைத்துவிட்டு தமது வடிவங்களை புகுத்திய அமெரிக்கா போன்ற மேற்குலக சக்திகள் கீழைத்தேச ஆட்சியை விமர்சிக்கும் கொச்சைத்தன அரசியலை ஆற்றுகின்றன. கீழைத்தேசத்தை விமர்சித் தவர்கள் தற்போது அதே வேலையைத் தாம் ஆற்றுகின்றனர். அமெரிக்க ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு புஷ் முன்வைத்த் தேர்தல் வாக் குறுதிகள் அளவிட முடியாதவையாக உள்ளன. கீழைத்தேசத் தலைவர் களுக்கு நிகராகவே அப்பணியை அமெரிக்கர்கள் ஆற்றிவருவதை காணமுடிகிறது. ஈராக் போரை நியாயப்படுத்த உரைத்த பொய்களை மீளவும் புஷ் உறுதிப்படுத்தியுள்ளார். ஈராக்போரினால்அமெரிக்காவை பாதுகாத்ததுடன், ஈராக்மக்களையும் பாதுகாத்துள்ளதாக புஷ் கூறு கின்ற பொய் மேற்குலகத்தையும், அவர்களது அரசியல் கலாசாரங் களையும் வெட்கப்பட வைத்துள்ளது.

அதுமட்டுமல்ல கடந்த தேர்தல் காலத்தில் அமெரிக்காவின் பொருளாதாரத்தையும், உள்நாட்டு பலத்தையும் உறுதிப்படுத்த தாம் உழைப்பதாக கூறிய புஷ் ஆட்சிக்கு வந்தவுடன் அதனை வறிய நாட்டுத் தலைவர்கள் போல் காற்றில் பறக்கவிட்டுவிட்டார். ஏமாற்றுத் தனத்தை அரசியலாக அமெரிக்கர்கள் மாற்றிவருவது அவர்களது வடிவங்கள் அம்பலத்துக்குவர ஆரம்பித்து விட்டதென்பதையே காட்டு கின்றது. வாரிசு அரசியலை அங்கீகரித்துள்ள அமெரிக்கர்கள் அவமானச் சின்னங்களாக எண்ணியவற்றை தமது முடிகளில் சுமக்கத் தொடங்கி யுள்ளனர். தற்போது உள்நாட்டு பொருளாதாரத்தை மட்டுமல்லாது சந்திரன், செவ்வாய் என்றெல்லாம் அண்டவெளி தொழில்நுட்பத்தில் மூழ்கியுள்ள ஆட்சியாளர்களும், விஞ்ஞானிகளும் ஆக்கத்துக்குப் பதிலாக அழிவுக்கு அதனை பிரயோகிக்கின்றார்கள். ஆனால் மக்களை ஏதோவகையில் ஏமாற்றிக்கொண்டு தமது அதிகாரத்தை முடிந்தவரை பிரயோகித்துவிட பார்க்கிறார்கள். புஷ் கூறுவது போல் பார்த்தால் சந்திரனில் நவீன குடியேற்றவாதத்துக்கு அமெரிக்காவை தயாராக்குகின்ற வேலையில் ஈடுபட்டுள்ளதனைக் காட்டுகின்றது. இத்தகைய தேர்தல் வாக்குறுதிகள் வறிய, பின்தங்கிய அரசுகளின் ஆட்சியாளர்களின் வாக்குறுதிகளைப் போன்றதாகவே உள்ளது. இது கீழைத்தேச, மேலைத்தேச அரசியல் கலாசார வேறுபாடுகளை முதன் மைப்படுத்தும் தலைமைகளுக்கும், அறிஞர்களுக்குமே சமர்ப்பணம். ஏமாற்றுத்தனத்தையும், போலியையும் உலகத்துக்குப் பரப்பிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு யதார்த்தவாதிகளாகத் தம்மைக் காட்டிக்கொள்ள முயல்வது தான் வேடிக்கையானது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் அதிகமான வாக்குறுதிகள் கடந்த காலத்தைப்போல மீண்டும் கைவிடப்படப்போகின்ற அம்சங் களாகவே உள்ளன. இது அமெரிக்க ஆட்சியாளர்களின் நவீன அரசி யல் கலாசாரமாக மாறிவருகின்றது. உலகத்தை ஏமாற்றுவது, ஆதிக் கம் செய்வது என்பதெல்லாம் இனி அமெரிக்க மக்கள் மீதும் பிரயோகிக்கப்படவுள்ளதென்பதையே புஷ்ஷின் நடவடிக்கை காட்டு கிறது. ஏற்கனவே புஷ் அமெரிக்க ஜனநாயகத்தை ஏப்பம் விட்டுவிட்டு ஆட்சியைப் பிடித்தவர். ஆனால் இரண்டாவது தடைவை வாக்கு மேசடியால் ஜனநாயக எல்லையை தாண்டியுள்ளார்.எனவே, அமெரிக்க ஆட்சியாளர்கள் ஏற்படுத்திவரும் பேரரசுவாதம் அரசியல், பொருளா தார அடிப்படையில் நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக வில்லியம் புஷ் பதவி ஏற்ற பின்பே நெருக்கடிகள் அதிகரித்தது போல் அதற்கான மாற்று வழிமுறைகளும் அதிகரித்தன. *Michal cox* மற்றும் *Immanual Wallerstein* போன்ற வர்கள் மிகத் தெளிவாக அமெரிக்கப் பொருளாதார வீழ்ச்சியை அளவிட்டுள்ளனர். இமானுவல் வலஸ்ரின் வியாக்கியானத்தின்படி அமெரிக்காவின் பெரும் வர்த்தக கூட்டாளிகளாக இருந்த சீனாவும், யப்பானும் நம்பிக்கைக்குரிய நண்பர்களாக நோக்கமுடியாது. அவர் களுடனான பொருளாதார உறவு எப்போதும் தலைகீழாகலாம். ஆனால் பின்தங்கிய நாடுகள் மட்டுமே அமெரிக்காவுடன் பேரம்பேசலின்றி சுமூகமான பொருளாதார உறவை பின்பற்றுகின்றவையாக உள்ளன. அதாவது அமெரிக்கப் பொருளாதாரம் மூன்றாம் உலகப் பொருளா தாரத்திலே தங்கியுள்ளது. ஐரோப்பிய அரசுகள் பின்பற்றும் பொருளா தாரக் கொள்கையே மிகப் பெரும் ஆபத்தான நிலையை அமெரிக்கா வுக்கு ஏற்படுத்தியதென இமானுவேல் மேலும் விளக்குகின்றார். இதனால் நெருக்கடியடைந்த அமெரிக்கா மாற்றுக் கொள்கைக்காக அசாதாரணமான பொருளாதார கொள்கையை பின்பற்றிவருகிறது. அவ்வாறேதான் அமெரிக்காவின் அரசியல் கொள்கைகளும் அமைந் துள்ளன. தனது அரசியல் இலக்குகள் அடையமுடியாத நிலை ஏற்பட்ட போது இராணுவத்தை பயன்படுத்தி இலக்கை எட்ட அமெரிக்கா முயலு கின்றது. அநியாயமான அரசியல் கொள்கைகளை பிரகடனப் படுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதும் அதனை அமுலாக்கப் போவதாக கங்கணங் கட்டுவதும் அமெரிக்க அரசியலின் நடைமுறையாகிவிட்டது. இதனால் ஜனநாயகம் அராஜமாகிறது. மனிதஉரிமைகளும், அடிப்படை உரிமைகளும் நிராகரிக் கப்படுகின்றது. அரசியல் உரிமை, இறைமை, சுயநிர்ணயம், கேள்விக்குரிய தாகின்றன. மொத்தத்தில் கொள்கைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் அர்த்தமற்றதாகவும், அநாகரிகமானதாகவும் மாறிக்கொண்டு வருகிறது. அனைத்து கோட்பாடுகளும் அமெரிக்காவுக்குரியதாக கருதும் அமெரிக்க ஆட்சியளர்கள் சாமுவேல் ஹன்ரிங்ரன் குறிப்பிடுவது போல் நாகரிகங்கள் மீதான யுத்தமாக உலக முரண்பாடுகளை அவர் கள் மாற்றிவருகின்றனர். பயங்கரவாதத்திற்கு எதிரான போர் இஸ்லாத்துக்கு எதிரான போராக அமெரிக்காவினால் வடிவமைக்கப் பட்டு வருகிறது. புதிய சித்தாந்தமாக உருவெடுத்துள்ள பயங்கர வாதம் உலகளாவிய ஆட்சியாளர் வர்க்கத்தை ஒன்றிணைக்க வலுவு டைய அம்சமாக பயங்கரவாதம் அமைந்திருக்கின்றது. ஈராக் விவகாரத்தில் எதிர்புணர்வையும் முரண்பாட்டையும் ஏற்படுத்த முயன்ற ஐரோப்பியத் தலைவர்கள் இறுதியில் அமெரிக்க அணுகுமுறையைக் கண்டு ஆச்சரியமடைந்திருப்பது மட்டுமன்றி போருக்கு பிந்திய பொருளாதார நடவடிக்கையிலும் அரசியல் விவகாரத்திலும் அமெரிக்காவுடன் ஒத்துழைத்து வருகின்றனர். இத்தகைய போக்கு ஒருபோதும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாதது என்பதல்ல. இந்நிலை அமெரிக்க பேரரசுவாதத்தை வேக மாக தகர்ப்பதுடன் ஆதிக்கரீதியான அமெரிக்க விஸ்தரிப்புக் கொள் கையையும் அதன் உள்கட்டமைப்பையும் படிப்படியாக தகர்த்து விடும். அரசியலையும், பொருளாதாரத்தையும் அடித்துச் சென்று விடும். அமெரிக்காவின் இராணுவத்தை எச்சமாக கொண்டமை சிந்தனை யாளன் மாக்கியவல்லியின் கோட்பாடுகளுக்குள் மட்டுமே கட்டுண்ண வேண்டிய நிலை ஏற்படும். இன்றைய காலத்தில்கூட பயங்கரவாதம் என்பதே அமெரிக்காவின் ஆதிக்கத்தை உலகத்தின் முன்நிறுத்தி வருகிறது. இறுதியாக இமானுவல்வலஸ்ரின் குறிப்பிடுவதுபோல் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினை களில் மூழ்கியுள்ள அமெரிக்கா உலகளாவிய பிரச்சினைகளுக்கு எப்படி தீர்வுகாண அதன் கொள்கை வகுப்பாளர்களால் முடியும் என்ற எடுகோளுடன் ஏனைய பிராந்திய நாடுகளின் அரசியல் நிலைகளை ஆராய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 2

# தென்னாசிய அரசியல் போக்கும் இந்திய - பாகிஸ்தானிய முறுகலும்

தென்னாசியப் பிராந்தியம் மனித வளத்தாலும், இயற்கை அமைப்பினாலும் பரந்த பிராந்தியமாக விளங்குகிறது. அங்கீகார முடைய இறைமையைக் கொண்ட ஏழு அரசுகளையும் நூற்றுக்கணக் கான ஆயுதப் போராட்ட அமைப்புக்களையும் உள்ளடக்கியது மட்டு மன்றி பல இன, மத, மொழி, கலாசார அலகுகளையும் கொண்ட பிராந்தியமாக விளங்குகிறது. ஒப்பீட்டு நோக்கில் தென்னாசிய அரசு களில் இந்தியா அரசியல் உறுதிப்பாட்டையும், பொருளாதார, ஜன நாயக, வளர்ச்சியையும் கொண்டிருப்பதுடன் உலகளாவிய நோக்கில் பலமான சந்தை சக்திகளை அல்லது நுகர்வு பெறுமானத்தை தக்க வைத்துள்ள நாடு என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும் இப்பிராந்திய நாடுகள் எல்லாவற்றுடனும் ஏறக்குறைய இன, மத, மொழி, கலாசார அடிப்படையில் அல்லது ஏதோ ஒரு அலகினூடாக வேனும் தொடர்பினை கொண்ட அரசியல், பொருளாதார, இராணுவ, செல்வாக்கை செலுத்தும் அரசாக இந்தியா விளங்குகிறது. இப் பிராந்தியத்தில் பாரிய இராணுவ பலத்தையும், அண்டவெளி தொழில் நுட்பத்தையும், நீண்டதூர ஏவுகணை தொழில்நுட்பத்தையும், அணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயுத வல்லமையையும் கொண்டிருக்கும் அரசாக இந்தியா விளங்கிய போதும், சமமான பலத்தை விஞ்ஞான தொழில்நுட்பரீதியில் அடைய முயலும் பாகிஸ்தானை அயல்நாடாக கொண்டுள்ள துரதிஷ்டம் இந்தியாவுக்கு சவாலாக சக்தியாக பாகிஸ்தான் காணப்படுகிறது. அடுத்த நிலையில் வலுவான முரண்பாடுகளையும், இனமோதல்களையும் வெளிப்படுத்தும் அரசாக இலங்கை காணப்பட்டநிலை மாறி உடன்பாட்டுடனான அமைதி சூழல் காணப்படுகிறது. ஆனால் தீவாக விளங்கிய இலங்கை இந்தியாவுடன் பல உடன்பாட்டு உறவு நிலையை பல தடவை அபிவிருத்தி செய்துள்ள அரசாகும். ஏனைய அரசுகளில் நேபாளம் கொதிநிலை அரசியலை கொண்டிருக்காத போதும் படிப்படியாக அத்தகைய சர்வதேச அரசியல் பரிமாணத்தை பெறுகின்ற நாடாக விளங்குகின்ற நிலையில் மேற்போக்கான சூழலில் மாலைதீவு, பூட்டான், வங்களாதேஷ் என்பன அரசியல் முரண்பாடுகளில் தாழ்நிலையிலுள்ளனவென கருதலாம். உலக சனத்தொகையில் 20 சதவீத பங்கைப் பெறும் தென்னாசியா 40 சதவீதமான வறுமையை கொண்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**மேற்கு மாதிரி ஜனநாயகம்**

எமது அண்டை நாட்டு அரசியலில் சௌகரியமும் அசௌகரியமும் கலந்து குத்து வெட்டுக்கள் மலிந்த சம்பவங்கள் பல நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன அதிலும் தமிழ் நாட்டு அரசியல் மிகமிக சுவாரசியமாகவும் குறுகிய நோக்கங்கொண்ட அரசியல் கலாச்சாரத்தையும் காணமுடிகின்றது. ஆனால் நாம் இங்கு பகிர முயற்சிப்பது இந்தியப் பாராளுமன்ற வரலாற்றில் இதுவரை நிகழாத சில சம்பவம் தொடர்பாகவே. அதாவது பாராளுமன்ற அரசியல் பற்றிய சாதக நிலைகளையும் அதன் விளைவுகளையும் இந்திய அரசியலோடு ஒப்பிட்டு நோக்குவதாகும்.

இச்சந்தப்பத்தில் மேற்குறிப்பிட்ட நிகழ்வை முதன்மைப் படுத்துவதற்கு பிரதான காரணம் இலங்கையிலும் அவ்வாறானதொரு மாற்றம் நிகழத்தொடங்கி விட்டது மட்டுமல்ல புதிய அரசியல் சீர்திருத்தம் அல்லது முழுமையாக அரசியலமைப்பை மாற்றுவது பற்றிய பேச்சு ஆளும், எதிர்க்கட்சிகளால் பேசப்படுவதனாலும் ஏற்பட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா உலகத்திலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடுகளில் ஒன்று. அது பாராளுமன்ற சார்புடைய ஜனநாயக நாடு என்ற பெருமையைக் கொண்டது. அப்பெருமைக்குரிய பாராளுமன்றத்தில் முன்னாள் பிரதமர்களும், அமைச்சர்களும், நீதிபதிகளும், குற்றவாளிகளும், ஊழல்பெருச்சாளிகளும், வன்முறைவாதிகளும் நிறைந்த ஒன்றாக காணப்படுகின்றது. அவர்களில் அனேகமானவர்கள் முதியவர்கள், அநுபவம் வாய்ந்தவர்கள், திடீர் என இருக்கைகளை விட்டு எழும்பி ஓட முடியாதவர்கள் என்பதும் இந்நோர் சுவையான செய்தியாகும். அப்படியிருந்தும் கூட்டத்தொடரிலும் ஆளுங்கட்சிக்கு எதிராக ஒவ்வொரு எதிர்கட்சியினரும் பலநாட்களாக கோஷங்களையும், கூக்குரலையும் எழுப்புகின்ற அரசியல் நாகரிகத்தை பின்பற்றி வருகின்றனர்.

அமைச்சரை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கூறியவர்கள் ஒரு கட்டத்தில் பிரதமரையே பதவி விலகக் கோருவார்கள். நல்ல ஜனநாயகச் சாதனம் பகிஸ்கரிப்பு அல்லது பகிரங்கமாக நிகழ்வை நடத்த முடியாது தடுப்பது. ஆனால் யாரை யார் தடுப்பதென்பது தான் முக்கிய விடயம். ஜனநாயக அம்சமே ஜனநாயகத்தைக் கேலிக்குரியதாக்குகின்றது. பெரும்பான்மையினரின் ஜனநாயகம் என்பதும் பெரும்பான்மைக் கட்சியின் ஜனநாயகம் என்பதாலுமே அந்த நிலை ஏற்பட்டிருப்பதை யாரும் நிராகரித்துவிட முடியாது இதனை சற்று விரிவாக அவதானிப்போம்

**இந்தியப் பாராளுமன்றத்தின் தோற்றம்**

1947 இல் இந்தியாவிற்கு சுதந்திரம் சாத்தியப்பட்டாலும் 1950 களிலேயே இந்தியா குடியரசாகியது. அப்போது வரைந்து கொண்ட அரசியல் யாப்பினை பின்பற்றிய பாராளுமன்ற அமைப்பே தற்போதும் காணப்படுகின்றது. ஆனால் அதுகூட பிரித்தானியரிடம் கடன் வாங்கப்பட்ட அல்லது கொப்பி பண்ணப்பட்ட அம்சமாகவே காணப்படுகிறது. இந்தியாவின் சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை அனைத்துமே பிரித்தானிய மாதிரியைக் கொண்டது. அதுவே இலங்கையின் அரசியலிலும் 1978 ஆம் ஆண்டுவரை காணப்பட்டது. ஆனால் இந்தியர்களும், இலங்கையர்களும் பிரித்தானிய மாதிரிகளை பெயர்மாற்றத்துடன் அமுல்படுத்தினார்களே தவிர சுதேசவளங்களையும், மரபுசார்-கலாசார வடிவங்களையும் பெரிதாக உள்ளடக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் பிதா மகன் காலஞ்சென்ற ஜே.ஆர். ஜயவர்த்தனாவும் அப்படியான தொன் றையே வரைந்திருந்தார். ஆனால் அவர் அமெரிக்க மாதிரியிலான அரசியலமைப்பு மட்டுமன்றி அதனையும் தாண்டிய அதிகார அமைப் பைக் கொண்ட ஜனாதிபதி முறையை உருவாக்கியுள்ளார்.

இந்தியர்கள் பிரித்தானிய மாதிரியை கைவிடவில்லை. இலங் கையர்கள் பிரித்தானியாவைக் கைவிட்டு அமெரிக்க மாதிரியைக் கைப்பிடித்துகொண்டது மட்டுமல்ல. மீண்டும் பிரித்தானிய மாதிரியைப் பற்றி சிந்திக்கிறார்கள். எது சரி எது பிழை என்பதெல்லாம் கீழைத் தேச அரசியல் அதிகாரத்தைப் பிடிப்பவர்களுக்குள் குழப்பமாகவே உள்ளது. உண்மையில் அவ்வாறு வேறுநாட்டு மாதிரிகளை பின்பற்றும் வரை கீழைத்தேசத்தின் அரசியல் குழப்பமாகவே அமையும். சுதேச மாதிரிகளே முதன்மையான பாதுகாப்பையும், உறுதிப்பாட்டையும் தருவிக்கக் கூடியது. இந்திய அரசியல் வரைபுக்குழுவின் தலைவர் அம்பேத்கரின் கருத்து மேற்குறிப்பிட்ட அதிகார வர்க்கத்தையும் அதன் குழப்பம் தவிர்க்கமுடியாதது அல்லது முடிவிலி என்பதையும் விளங்கிக் கொள்ள போதுமானது.

அரசியல் யாப்பிலுள்ள அரசியல் உரிமையானது ஒரு மனித னுக்கு ஒரு வாக்கு என்பதுபோல் ஒவ்வொரு மனிதனதும் பொருளா தார உரிமைகளை பாதுகாக்கவும் பேணவும் பொருளாதார சமத்துவத் தை அப்பேத்கர் வலியுறுத்தியிருந்தார். இப்பொருளாதார சமத்துவம் என்ற சரத்தே வரைபுக்குழுவின் கண்காணிப்பாளர் ஜவர்லால்நேரு, பட்டேல் போன்ற தலைவர்களால் வெட்டிப்பிரிக்கப்பட்டு அரசியல் யாப்பிலிருந்து முற்றாக அகற்றப்பட்டது, ஏன் என்பது முதல் பிரதமருக் கும் இரும்பு மனிதனுக்குமே வெளிச்சம். இதேபோன்று பல சரத்துக் கள் கண்காணிப்பாளர்களின் முயற்சியால் காணாமற்போயின.

இது பற்றி அரசியல் அங்கீகரிக்கும் இரு சபைகளது கூட்டத் தில் உரையாற்றும் போது அம்பேத்கரே கண்டித்ததுடன் இந்தியாவின் ஐக்கியத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் ஆபத்தானது என்பதுடன் எதிர்காலத்தில் பாராளுமன்ற ஜனநாயகமே வெடிவைத்து தகர்க்கப்படும் என்றார். அவரது தீர்க்கதரிசனம் சரியாகவே அமைந்து விட்டது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச்செய்ய ஆளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியினர் தீர்மானங்களை நிறைவேற்றும் ஜனநாயகமே பாராளுமன்ற அரசியலுக்குப் பொருத்தப்பாடுடையது போல் தற்போது அமைகின்றது.

**காங்கிரஸின் ஆட்சிக்காலம்**

காங்கிரஸ் கட்சி இந்திய சுதந்திரத்தைத் தொடர்ந்து மிக நீண்டகாலம் அறுதிப் பெரும்பான்மையை வைத்துக்கொண்டு ஆட்சியை மேற்கொண்டது. அதனால் பாராளுமன்ற ஜனநாயகம் பேணப் பட்டதாக அமைந்தது. ஆளும் கட்சியின் பெரும்பான்மை பலம் தவிர்க்கமுடியாத பலத்தையும், தற்காலிக அமைதியையும் பாராளு மன்றத்தில் ஏற்படுத்தியது.

நேரு பரம்பரை இந்திராகாந்தியின் ஆரம்பகால தலைமைத் துவம் வரை பாராளுமன்ற அரசியல் சுமூகமாக இயங்கியதற்கு காரணம் அறுதி பெரும்பான்மை மட்டுமே அன்றி வேறு எதுவுமில்லை. ஜனநாயகம் என்பது வலுச்சேர்க்கக்கூடிய ஒரு காரணியாகக் கூட இந்தியத் தேசியத் தலைவர்களால் வளர்க்க முடியாமல் போனது துயரமான சம்பவமே. அத்தகைய நிலை தலைவர்களில் திட்டமிட லால் ஏற்பட்டதேயன்றி ஜனநாயகக் கோட்பாட்டின் பலவீனத்தால் ஏற்பட்டதல்ல. ஜனநாயகத்தின் உண்மை வடிவத்தை பெரும்பான்மை இனத்தின், பெரும்பான்மை கட்சியின் பலத்தின் நிர்ணயத்தால் ஏற்பட்ட தாகவே இந்திய ஜனநாயக வாதிகள் மட்டுமல்ல எல்லா ஜனநாயக விரும்பிகளும் கருதிக்கொண்டனர். ஆனால் ஜனநாயகத்தின் பெரும் பான்மை என்பது மக்களின் பெரும்பான்மை விருப்புக்கள் என்பது பிழையாகவும், தவறாகவும் கையாளுவதற்கான நெளிவு சுழிவுகளை கண்டறிந்து அதற்கேற்ப வழிகாட்டல்களை செய்தார்களே அன்றி ஜன நாயக அரசியல் கலாசாரத்தை இதய சுத்தியோடு விருத்தி செய்ய வில்லை.

குறிப்பாக இந்தியாவின் ராஜ்யசபாவுக்கான உறுப்பினர் தெரிவும் இலங்கையில் தேசியப் பட்டியலில் உறுப்பினர்களை தெரிவு செய்யப் படுவதையும் கூறலாம். இரண்டுமே ஏறக்குறைய ஒன்றாகவே இருக் கின்றன. மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் அரசியலில் உழைத்து களைத்தவர்கள். குடும்பவாரிசுகள் என்பவர்களை பாராளுமன்ற ஜன நாயகத்திற்கு அனுப்பும் வழியாக மட்டுமன்றி பெரும்பான்மை பலத்தை ஓரளவாவது ஈடுசெய்வதற்கான வாய்ப்பை உருவாக்குவதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாகவும் அதனை கருதுகின்றனர். இவ்வாறே பெரும்பான்மைகளை கட்சிகள் ஏற்படுத்தி ஆட்சியைப் பிடிக்கின்றன.

கூட்டு முன்னணிகளின் ஆட்சிக்காலத்தில் பல பிராந்தியக் கட்சிகளையும் தேசியக் கட்சிகளையும் ஒன்றிணைத்து செயற்பட்ட ஆட்சிகள் பெருமளவுக்கு நிலையான ஸ்திரமான ஆட்சியை இந்தியா விலும் சரி வேறு நாடுகளிலும் சரி வழங்கவில்லை. பாரதீய ஜனதாக் கட்சி மட்டுமே ஓரளவு நிலைத்து நிற்கும் கூட்டணி ஆட்சியை மேற் கொண்டது. ஆனால் இவர்களது ஆட்சிக்காலம் முழுவதும் பாராளு மன்றத்தில் கூச்சலையும் குழப்பத்தையுமே ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் காணமுடிந்தது. தெகல்கா ஊழல் விவகாரம் காங்கிரஸ் கட்சிக்கு ஆட்சியை வழங்கிவிடும் என்ற நிலையையே ஏற்படுத்தியது.

உண்மையில் பாராளுமன்றம் என்பது மக்களின் உரிமை களை தாங்கிய அல்லது உள்ளடக்கிய சபை என்பதை உறுப்பினர் கள் மறந்துவிடுகின்றார்கள், அல்லது விளங்கிக்கொள்ள முடியாதவர் களாக உள்ளனர். வாக்குகளைப் பெறும்வரையுமே உத்தரவாதங் களையும் மக்களது பிரச்சினைகளையும் சிந்திக்கிறார் களேயன்றி உறுப்பினராக தெரிவாகிய பிற்பாடு அவற்றை மறந்து சொந்த நலனை யும் இலாபத்தையும் இலக்காகக் கொண்டு பெரும்பாலான உறுப்பி னர்கள் செயற்படுவதனால் பெரும்பான்மை ஜனநாயகம் வலுவிழந்து போகின்றது. பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சியில் பல தடவை ஊழல் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதும் முன்னாள் காங்கிரஸ் பிரதமர் நரசிம்மராவ் ஊழல் குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப் பட்டமை எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களின் மனோநிலையை விளங்கிக் கொள்ளப் போதுமானதாகும்.

**சுதேச மாதிரி**

இவ்வாறு எல்லாக் குழப்பங்களும் ஊழல்களும் மலிந்து போன ஓர் ஆட்சி முறையைப் பற்றி உரையாடுகின்ற போது கவனம் செலுத்தவேண்டிய மிகப் பிரதான அம்சம் சுதேச மாதிரி ஆகும். சுதேச மாதிரி ஒவ்வொரு நாட்டிற்கும் உரிய மாதிரிகளே. பிரித்தானியர் வடிவமைத்த யாப்பும் அதன் அமைப்பும் இந்தியாவுக்கோ இலங்கைக் கோ அல்லது கீழைத்தேச நாடுகள் எதற்குமோ பொருத்தமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையாது. அவ்வாறு பொருத்தமாக அமையும் எனக்கருதி கடந்த 50 ஆண்டுகால வரலாற்றில் சாதனையையோ மீட்சியையோ எந்தநாடும் அடையவில்லை. அப்படியாயின் இனிமேல் அடைந்துவிடும் என நினைப்பதுவும் முட்டாள்தனமானது.

இந்தியப் பாராளுமன்றத்தில் கூக்குரல், இலங்கை ஆட்சி முறையின் இழுபறி, பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி என எல்லா தென்னாசிய நாடுகளிலும் பாராளுமன்ற ஜனநாயகம் ஆட்டம்கண்டு வருகின்றது. இது இன்று நேற்று ஆரம்பமான விடயமல்ல. மிக நீண்ட காலத்திற்கு முன்பே நெருக்கடிகள் ஆரம்பித்துவிட்டன. விடைகாண வேண்டியவர்கள் தீர்வை முன்வைக்காது மாதிரிகளை மட்டும் முன்பின் கையாளுவதும் அமுலாக்குவதுமாக அமைகின்றது. எனவே, இதிலிருந்து விடுபட வேண்டுமாயின் தெளிவான சுதேச மாதிரியை உருவாக்குதல் வேண்டும். அப்போதுதான் இந்தியாவில் மட்டுமல்ல கீழைத்தேசம் முழுவதும் உறுதியான ஸ்திரமான ஆட்சியையும் பலவீனமில்லாத பாராளுமன்றமும் தேசியபற்றுடைய உறுப்பினர்களும் ஆட்சிக்கு அருகதையுடையவர்களாக விளங்குவார்கள்.

## ஜம்மு காஷ்மீர் மக்களும் ஜனநாயகமும்

இந்தியாவின் தலைவிதியைத் தீர்மானிக்கும் மாநிலங்களில் ஒன்றான காஷ்மீரில் தேர்தலும் வன்முறையும் அடிக்கடி நிகழ்ந்துவருகிறது. ஏறக்குறைய பாகிஸ்தானின் எதிர்ப்பையும், சவாலையும் எதிர் கொண்டு இந்தியாவின் ஆட்சியிலுள்ள தலைமை காஷ்மீரித் தேர்தலை நடாத்தி வருகிறது. வன்முறைகள், கொலைகள் எறிகணைத் தாக்குதல்கள் எனப்பலவற்றை இந்தியாவின் ஆளும் வர்க்கத்திற்கு எதிராக தீவிர வாத அமைப்புக்கள் காஷ்மீர் மக்கள் மீது மேற்கொண்ட போதும் தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஜனநாயக விரும்பிகள் எல்லோரும் தங்கள் நோக்கங்களை நிறைவு செய்வதற்காகவே தேர்தலை எதிர்கொண்டார்களே அன்றி காஷ்மீரிய மக்களின் சுயநிர்ணயத்தையும், சுதந்திரத்தையும் அடைவதற்காக அல்ல என்பதே தேர்தல் அவதானிப்பின் பிரதிபலிப்பு ஆகும்.

காஷ்மீர் எல்லையூடாக பாகிஸ்தானின் ஊடுருவல் ஒரு புறம், சர்வதேச படைகளின் வருகையை விரும்பும் பாகிஸ்தானும், அமெரிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவும் மறுபுறமாக ஜம்மு காஷ்மீர் பெரும் சர்ச்சையைக் கிளப்பி விட்டிருந்தது. மேற்குலகத்திற்கு இந்தியா கொடுத்த சாட்டை அடியாக தேர்தலைகளை கருதலாம். ஏனெனில் மக்கள் ஆட்சியைப் போதிக்கும் மேற்குலக ஜனநாயக விரும்பிகளுக்கு காஷ்மீரில் பயங்கரவாதமும், தீவிர வாதமுமே பலமாக உள்ளது என்ற எண்ணம் ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதலுக்குப் பின்னர் ஏற்பட்டிருந்தது. அதனை சாட்டாகக் கொண்டு காஷ்மீருக்குள் புகுவதே அமெரிக்க பிரிட்டன் கூட்டுப் படைகள் சர்வதேசப் படையாக நுழைவதற்கு திட்டமிட்டிருந்தன. அதனை விளங்கிக்கொண்ட இந்தியர் அமெரிக்கா பிரிட்டன் இணைந்து உலகத்திற்குப் போதிக்கும் ஜனநாயகம் என்ற அஸ்திரத்தைப் பாவித்து தேர்தலை நடத்துவதில் வெற்றி கண்டு விட்டது. இத்தேர்தல் மூலம் அங்கு மக்கள் ஆட்சி நிலவுகின்ற தென்பதையும் ஜம்முகாஷ்மீர் பயங்கரவாதத்திடமில்லை. இந்தியர்களின் கட்டுப்பாட்டில் உண்டு என்பதையுமே இந்தியர் அழுத்தம் திருத்தமாக தேர்தல் மூலம் வெளிப்படுத்தியுள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சியைப் பொறுத்தவரை அகண்ட பாரதம் என்ற எதிர்கால நோக்கத்திற்கு ஒருபடியாக அத்தேர்தலை கருதியது. மேலும் இத்தேர்தல் வாயிலாக பி.ஜே.பி எதிர்காலத்தில் காஷ்மீரின் முழுப்பகுதியையும் இந்தியாவின் ஆளுகைக்குட்படுத்தலாம் என்ற எண்ணத்துடனும் செயல்பட்டது. அதற்கேற்பவே பிரச்சாரத்தை காஷ்மீ நோக்கி மேற்கொண்டது. காஷ்மீர் பண்டிட் பிராமணர்களை கணிசமாக்க கொண்ட மாநிலம் என்பதும், காங்கிரஸ் கடந்த காலத்தில் ஏற்படுத்திக்கொண்ட முரண்பாடான அரசியல் நடைமுறையினால் அதன் வாக்குப்பலம் பலவீனப்பட்டிருப்பதாகவும் கருதி செயல்பட்டது.

## அப்துல்லா குடும்பம்

காஷ்மீரியரின் அரசியலில் 1950 களிலிருந்து பிரிக்கமுடியாத ஆதிக்கத்தை தக்கவைத்துவரும் குடும்பமே அப்துல்லா பரம்பரையாகும். தற்போது நடைபெற்ற தேர்தலில் மூன்றாவது பரம்பரை நேரடி அரசியலில் ஈடுபடுவதைக் காணமுடிகிறது. சுதந்திர காஷ்மீரின் ஆட்சியாளனான ஹரிசிங் அரசியல் அஸ்தமனத்தை தொடர்ந்து தீவிர இடது சாரிப் போக்குடையவரும், காஷ்மீரிய சுயாட்சிக்கான போராட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரனாகவும் விளங்கிய ஷேக் அப்துல்லா பரம்பரையே காஷ்மீரை ஆளுகின்றது. 1953 ஆம் ஆண்டு ஷேக் அப்துல்லா அரசாங்கம் கலைக்கப்பட்ட போதும் 1975 இல் ஷேக்-இந்திரா உடன்பாடு காஷ் மீரில் காங்கிரஸின் பலத்தை மட்டுமன்றி ஷேக் அப்துல்லாவை நிரந்தர அரசியல் தலைவராக மாற்றியது.

பின்னர் 1980 களின் ஆரம்பத்தில் முதலமைச்சரான பாரூக் அப்துல்லா 2002 வரை நிலையான அரசியல் தலைவராக விளங் கினார். தற்போது மீண்டும் பாரூக்கின் வாரிசான ஓமர் அப்துல்லா தேசிய அரசியலை துறந்து பிராந்திய அரசியலில் குதித்துள்ளார். எதிர் பார்த்தளவு வெற்றியை அடையும் கட்சியாக தேசிய மாநாட்டுக் கட்சி அமைவதுடன் ஓமர் 1998, 1999 களில் நிகழ்ந்த லோக்சபா தேர்தல் களில் முறையே 30 சதவீத வாக்குகளையும், 11.9 சதவீத வாக்கு களையும் பெற்று சிறிநகர்த் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட வர் என்பது குறிப்பிடத்தக்கது.

காங்கிரஸ் உடன் கூட்டு வைத்திருந்த அப்துல்லா பரம்பரை பின்னர் இந்து மதவாதக் கட்சியான பாரதீய ஜனதாவுடன் உறவைப் பேணியதென்பதே அதன் அரசியல் நோக்கத்தை புரிந்துகொள்ளப் போதுமானது. ஊழல், மோசடி மட்டுமன்றி அப்துல்லாக் குடும்பச் செல்வாக்கை நிர்வாக அமைப்புக்குள்ளும் (Nepotism) மற்றும் அதி கார பீடங்களின் தலைமைப் பதவிகளுக்குள்ளும் அமர்த்துவது போன்ற சூழலை பாரூக் அப்துல்லா ஏற்படுத்திவருகின்றார். காஷ் மீரிய மக்களின் சுயாட்சித் திட்டம் பற்றி பாரூக் அப்துல்லா ஏற்படுத்திய குழப்பம் பாரதீய ஜனதாவாலும் அதன் தலைமையிலான அரசாங் கத்தாலும் நிராகரிக்கப்பட்டது மட்டுமல்லாது அவரே முன் வைத்த திட்டம் போலியானதாகவே அமைந்திருந்தது கவனிக்கத் தக்கது. ஏனெனில் பண்டிட் பிராமணர்களோ, காஷ்மீரிய மக்களோ சுயாட்சித் திட்டத்தை பெருமளவுக்கு வரவேற்காத போக்கும், பழைய ஹரிசிங் காலத்தில் நிகழ்ந்த அதே அமைப்பிலான சுயாட்சித் திட்டத்தைக்கூட பாரூக் முன்வைத்த திட்டத்தில் அமைந்திருக்காததும் அதன் மீதான சந்தேகத்தை தீவிரப்படுத்துகின்றது. பாரூக்கின் சுயாட்சித் திட்டம் ஏறக் குறைய தேர்தல் பிரச்சாரம் போன்றும், இழந்துபோன அரசியல் அங்க காரத்தை கட்சிக்கு மத்திய அரசிடம் பெற்றுக்கொடுப்பது போன்றே அமைந்திருந்தது. மேலும் பாரூக் குடும்ப பரம்பரையின் வாரிசுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலை மத்தியிலும், மாநிலத்திலும் உறுதிசெய்கின்ற வேலைத் திட்டத்தையே சுயாட்சித் திட்டத்தினூடாக பாரூக் அப்துல்லா நகர்த் தினார். ஆனால் இந்திய மத்திய அரசு தன் பலத்தையும், அதிகாரப் பிரமையையும் காட்டுவதற்கான நடவடிக்கையாகவே சுயாட்சித் திட்டத்தை நிராகரித்தது. இது எதிர்கால இந்தியாவின் நலனுக்கு ஆபத்தானதாகவே அமையப்போகிறது. உலகில் பாதிசமஷ்டி நீண்ட காலம் நிலைபெறுவதில்லை என்பது பல உதாரணங்கள் கடந்த நூற்றாண்டில் நிகழ்ந்துள்ளன. அதே நிலை இந்தியாவுக்குள் பலவீன மான சூழல் எழும்போது ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம். இந்திய ஆளும் வர்க்கம் அதிகார அலகை பகிர்வது பற்றியே சிந்திக்காத தன்மையை காஷ்மீர் சுயாட்சித் திட்டத்தை நிராகரித்ததன் மூலம் விளங்கிக்கொள்ள முடிகிறது.

**பாகிஸ்தான்**

பாகிஸ்தானைப் பொறுத்தவரை காஷ்மீரில் ஜனநாயக தேர்தல்கள் வெற்றிகரமாக நடந்து முடிவது தோல்வியேயாகும். இது பாகிஸ்தான் ஆட்சியாளர்களுக்கும், அவர்களது அரசாங்கத்திற்கும் நெருக்கடியை ஏற்படுத்தக்கூடியதே. பாகிஸ்தானினால் எந்த தேர் தலையும் முழுமையாக குழப்ப முடியவில்லை. வன்முறைகள் நிகழ்ந்த போதும் படிப்படியாக பாதுகாப்பு படைகளை நகர்த்தி தேர்தலின் போது உரிய தொகுதிகளில் குவித்து தேர்தலைகளை இந்திய ஆளும் வர்க்கம் பூரணமாக்கிவிடுகிறது. இதனால் காஷ்மீருக்குள் ஊடுரு வலை நிகழ்த்துவது கடினமானதுடன் சர்வதேச நிலையிலும் பாகிஸ் தானை விட இந்தியாவுக்கான ஆதரவை அல்லது அனுதாபத்தை அதிகப்படுத்தியுள்ளது. வேண்டுமாயின் அமெரிக்க பிரித்தானியக் கூட்டு, பாகிஸ்தானுடன் நெருக்கமான உறவைப் பேணலாமே அன்றி ஏனைய நாடுகள் இந்தியா பக்கமே அதிக நெருக்கத்தை காட்ட தேர்தல்கள் வழிவகுத்துள்ளது. பாகிஸ்தானிலிருந்து இயங்கும் தீவிர வாத அமைப்புக்கள் காஷ்மீரிய மக்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பவர்களாக கருதிவிட முடியாது. காரணம் நிர்வாகக் கட்ட மைப்பை குழப்ப மக்களை கொல்வதற்குக் கூட அவர்கள் தயங்க வில்லை என்பதிலிருந்து அது புலனாகிறது. மேலும் மக்கள் விரும்பு கின்ற அம்சங்களை அவர்கள் பல சந்தர்ப்பத்தில் நிராகரித்து வந்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளனர். இதனால் ஜம்முகாஷ்மீரிய மக்களின் எதிர்ப்பையும், வெறுப்பையும் சம்பாதித்தது மட்டுமல்லாது பாகிஸ்தானின் இலக்கான ஜம்முகாஷ்மீரை கைப்பற்றுவதென்பதையும் முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டது.

## காஷ்மீர் மக்களின் நிலைப்பாடு

காஷ்மீர் விடுதலைக்கான போராட்டம் ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கு மேற்பட்டதாக நிகழ்ந்துவருகிறது. மத அடிப்படையில் எழுந்த முரண்பாடு வன்முறைக் கலாசாரமாக விரிவடைந்து இரு நாடுகளையும் கடந்து சர்வதேச பரிமாணத்தை எடுத்துள்ளதுள்ளது. மக்கள் நீண்டகால போராட்ட வழிமுறையால் வெறுப்படைந்திருப்பதுடன் தமது தேவைக்கும், விடுதலைக்கும் உட்படாத போராட்ட அணுகுமுறையை வெறுக்கத் தொடங்கிவிட்டதை காணமுடிகிறது. குறிப்பாக பொருளாதார அபிவிருத்தி, வன்முறையற்ற வாழ்வு, ஜனநாயக தேர்தல் போன்ற சுமூகமான, சுதந்திரமான வாழ்க்கை முறைமையையே அவர்கள் விரும்புகின்றனர். அதனை அடிப்படையாகக் கொண்டு *MORI* என்ற நிறுவனம் *(Market Research Company International)* ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் சில பிரதேசங்களில் நிகழ்த்திய கருத்துக் கணிப்பின் அடிப்படையில் அதனை விளங்கிக் கொள்ள முடியும். நகரங்களைக் காட்டிலும், கிராமங்களை அதிகமாக முதன்மைப்படுத்தி நடத்தப்பட்ட மதிப்பீட்டின்படி சமாதானமான சுமூக வாழ்க்கை முறைமையை அவர்கள் விரும்புவது புலனாகிறது. 52 வீதமான மக்கள் இந்தியாவும் பாகிஸ்தானும் போர் புரிவதை நிராகரிப்பதுடன் காஷ்மீருக்கு நிரந்தரமான தீர்வு அவசியமானதென கூறுகின்றனர். வன்முறை தொடரும்போது ஜனநாயக தேர்தல்கள் எவையும் நியாயமான முடிவை தரவல்லவயையாக அமையாது என 65 வீதமான மக்கள் கருதுகின்றனர். அதைவிட 65 வீதமான மக்கள் ஜம்முகாஷ்மீர் பகுதிக்குள் அல்லது எல்லையில் வெளிநாட்டுப் படைகளின் தலையீட்டினால் எந்தப் பயனும் ஏற்பட வாய்ப்பில்லை எனக்கூறுகின்றனர். இது அமெரிக்க - பிரிட்டன் தலையீட்டுக்கு எதிரான உணர்வைக் காட்டுவதற்கு நடத்தப்பட்ட மதிப்பீடு போன்றும் காணப்பட வாய்ப்புக்கள் உண்டு. குறிப்பாக ஸ்ரீநகர் பகுதி மக்களின் 2/3 பங்கினர் கடந்த 10 ஆண்டுகளாக பாகிஸ்தான் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிடவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதுடன் பாகிஸ்தானின் தலையீடு ஆபத்தானது என்ற முடிவுக்கு வந்துள்ளனர். அதேவேளை 15 வீதமான மக்கள் பாகிஸ்தானை ஆதரிப்பவர்களாகவும் காணப்படுகின்றனர் என்பதை கவனத்தில் கொள்ளுதல் அவசியம். 50 வீதமான மக்கள் புதிய அரசியல் கட்சியொன்றின் வருகையை விரும்புவதுடன் அக்கட்சியினால் தான் நிரந்தர தீர்வை ஏற்படுத்தமுடியும் எனவும் நம்புகின்றனர். பெரும்பாலான மக்கள் வழங்கிய பேட்டிகளில் காஷ்மீர் மாநிலத்திற்காக முன்வைக்கப்படவுள்ள எந்தத் தீர்வும் காஷ்மீரின் தேசிய அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டே அமைதல் வேண்டும் என கூறியுள்ளனர்.

முடிவாக பொருளாதார அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு என்பவற்றை ஏற்படுத்துவதுடன் சுதந்திரமான ஜனநாயக தேர்தலூடாக மக்களாட்சியை ஏற்படுத்த வேண்டுமென காஷ்மீர் மக்கள் கேட்டுள்ளனர். மேலும் நேரடியாக இந்தியாவுக்கும் - காஷ் மீரிய மக்களுக்குமான அரசியல் யாப்பு ஒன்றை வரையப்படுவதுடன், இராணுவ வன்முறைக் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டுவருதல் வேண்டும் எனவும் கணிப்பீட்டின் போது மக்கள் கேட்டுக்கொண்டனர். 88 வீதமான மக்கள்பாகிஸ்தான் - இந்திய எல்லைக்கோடுகளில் போடப்பட்டுள்ள தடைகளை வர்த்தகத்திற்காகவும், போக்குவரத்திற்காகவும், கலாசார பரிவர்த்தனைக்காகவும் திறந்துவிடப்பட வேண்டுமெனக் கோருகின்றனர். 55 வீதமான மக்கள் கூடுதல் சுயாட்சிப் பிரதேச மாக காஷ்மீரை இந்திய, பாகிஸ்தான் அரசாங்கங்கள் உருவாக்க வேண்டுமென விருப்பத்தினை வெளிப்படுத்தியுள்ளனர்.

கடந்த பல காஷ்மீர் தேர்தலிலும் சராசரியாக 40 வீதமான வாக்குகள் பதிவாகியுள்ளதாக அறிக்கைகள் மூலம் அறியமுடிகிறது. அதிகமான வாக்குகள் பதிவாகிய தேர்தல் தொகுதிகளில் ஒன்றாக "கார்கில்" அமைந்துள்ளது. இத்தேர்தல் எந்த அரசியல் கட்சியை ஆட்சியில் அமர்த்தினாலும் மக்களின் நலன்களை விட அரசியல் தலைமைகளினதும், கட்சிகளினதும் நலன்களே முதன்மையானதாக நோக்கப்பட வாய்ப்புண்டு. காஷ்மீர் போன்ற போராட்டங்களை நடாத்தும் நாடுகளில் மக்களும் போராட்ட அமைப்புக்களோ அல்லது ஆதரவான மிதவாதக் கட்சிகளோ அன்னியப்படுவதற்கும் கட்சிகளதும் தலைமைகளதும் நலன்களே காரணமாக உள்ளன. மக்களுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக தொடங்கும் இம்போராட்டங்கள் மக்களை சுரண்டுவதும், நெருக்கடிக் குள்ளாக்குவதும் மட்டுமன்றி மக்களின் பிரச்சினைகளையும், சுதந்திரத் தையும் மதிக்கத் தவறுவதனால் அப்படியான போராட்டங்களையும், போராட்ட அமைப்புக்களையும் ஆளும் வர்க்கங்கள் இலகுவாக தோற் கடித்து விடுகின்றன.

## இந்திய – பாகிஸ்தான் ராஜதந்திர உரையாடல்

தென்னாசிய சமாதான அரசியற் களம்-சுவையாகவும், அதே நேரம் பிரமிப்பினை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது. அரசறிவி யலைக் கற்கும் எல்லோருக்கும், அரசியலை நகர்த்த முடியாமல் திண்டாடும் கீழைத்தேச அரசியல்வாதிகளுக்கும் நல்ல அனுபவத்தினையும், பாடத்தையும் ராஜதந்திர ரீதியில் கற்கக்கூடிய அரசியல் இங்கு நிகழ்ந்து வருகின்றது. முன்னாள் இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் தந்திரத்திற்கு சளைத்தவரல்ல பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாராப் என்று உணர்த்தப்படும் பாடம் புதியது அல்ல. ஆக்ராவில் முஷராப் காட்டியதன் இன்னோர் பக்கமே. சமாதான இராஜாதந்திர அரசியல். இதில் அமெரிக்கர்களும் தமது பங்குக்கு மூக்கை நுழைத்துள்ளனர். ஆனால், அவர்கள் தற்போது கையாளும் புதியநகர்வு எதுவென்பதே கவனிக்கப்படவேண்டிய அம்சமாகும் அதனை விளங்கிக்கொள்வதற்கு 2003 இல் நிகழ்ந்த இந்திய பாகிஸ்தான் சமாதான இராஜதந்திர அரசியலை முதலில் நோக்குவோம்.

இந்திய - பாகிஸ்தான் சமாதானம் பற்றிய உரையாடல், இரண்டு நாட்டுப் பிரதமர்களினாலும் மேற்கொள்ளப்படுகிறது. இந்தச் சூழலில் பாகிஸ்தான் தலைவர் இந்தியத் தலைவரின் நேசக்கரத்தை யடுத்துப் பல நல்லிணக்கச் சமிக்ஞைகளை இந்தியாவுக்கு வெளிப் படுத்தினார். இந்தியப் பிரதமருக்குப் பாகிஸ்தானுக்கு வருமாறு அழைப்புவிடுத்தார். அதற்கு இந்தியத்தரப்பு அவ்வளவு திருப்தியாகப் பதில் அனுப்பவில்லை. அத்தகைய அழைப்பை நிராகரித்த இந்தியப் பிரதமர், திடீரென இந்தியா-பாகிஸ்தானுக்கிடையில் தடைப்பட்டுப் போன போக்குவரத்தை மீளவும் ஆரம்பிக்கப்போவதாக உறுதியளித் தார். பாகிஸ்தானிய முன்னாள் பிரதமர் ஜபாருல்லாகான்ஜமாலியும் பதிலுக்குக் கிரிக்கெட் விளையாட்டை முதன்மைப்படுத்தி, மீளவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு நாட்டு கிரிக்கெட் அணிகளும் விளையாடுமெனவும், அதற்குப் பாகிஸ்தான் தயாராகவுள்ளது எனவும் பதிலளிக்கும் பாணியில் தகவலை வெளியிட்டார்.இவை எல்லாம் வழமையான விடயங்களா கவே உள்ளன. நேரு முதல் மன்மோகன்சிங் வரை பொதுவான அரசி யலாகவே உள்ளது.

இச்சம்பாஷனை இதனுடன் முடிவுக்கு வரவில்லை. மீண்டும் இந்தியப் பிரதமர் தாம் விலக்கிக்கொண்ட தூதுவரைப் பாகிஸ் தானுக்கு நியமிக்கப் போவதாக அறிவித்தார். பாகிஸ்தான் பக்கத்தி லிருந்து அதற்கான பதில் சாதகமானதாக அமைந்தது. இக்காலத்தில் இதனை அவதானித்த உலகம், மகிழ்ச்சியடைந்ததாகவும், இந்திய-பாகிஸ்தான் உறவு பலப்படுவது சிறப்பான அரசியலையும், சமாதா னத்தையும் தெற்காசியாவில் ஏற்படுத்துமெனவும் கூறியது. குறிப்பாக பிரித்தானியா, ரஷ்சியா, பிரான்ஸ், சீனா என்பன வரவேற்றாலும் அமெரிக்கர்களே முதலில் வரவேற்று இரு தலைவர்களையும் பாராட் டினர். அத்தகைய சுவையான சம்பாஷனைக்குப் பின்பு, பாகிஸ்தான் பிரதமர் புதிய அறைகூவல் ஒன்றை இந்தியா நோக்கி வீசினார். அது இந்தியர்கள் எதிர்பார்க்காத, சிலவேளைகளில் பாகிஸ்தானியர் கூட ஊகித்து உணராத அணுவாயுத அழிப்பு அறைகூவலாகும்.

வாஜ்பாய் வியர்த்து விறுவிறுத்துப் போயிருப்பார். ஏன் பாரதீய ஜனதாக்கட்சியே அதிர்ச்சியடைந்திருக்கும். இது நிச்சயமாகப் பாகிஸ் தானியர் நினைத்து வெளியிட்ட கருத்தல்ல. மூக்கு நுழைப்பவர்களின் வேலையாகவே அமைந்திருக்கலாம். அவர்களுக்கு உயிரியல், இரசாயன மற்றும் அணுவாயுதங்கள் தான் உலகில் பிரச்சினையாகவுள்ளது. சதாம் உஹுசைனை அவசரப்பட்டு வீழ்த்தியதற்கு அணுவாயுதப் பயமும் ஒரு காரணமாகும். இஸ்லாமாபாத்தில் உரையாடிக்கொண்டிருக்கும் அமெரிக்கப் பிரதி ராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிரேஜும், அவரது குழுவும் இந்திய-பாகிஸ்தான் சமாதான அரசியலில் புதிய பல திசைகளைத் திறந்துவிட்டுள்ளன. ஆர்மிரேஜின் வருகை முதலில் இஸ்லாமாபாத் திலும், பின்னர் காபூலிலும், இறுதியாகப் புதுடெல்கி யிலும் எனத் தீர்மானிக்கப்பட்டதே ஒரு இராஜதந்திர நகர்வாகும். இது இந்தியாவை எப்படி அமெரிக்கர்கள் மதிப்பிட்டுள்ளர்கள் என்பதும், பிரச்சினையின் பக்கத்தில் அவர்களது போக்கு எப்படி அமையும் என்பதனையும் விளங்கிக்கொள்ளப் போதுமானது. இஸ்லாமாபாத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்த சந்திப்பின் பின் ஆர்மிரேஜ் குறிப்பிடும் போது இரு நாடுகளும் சமாதான வழிமுறைகளில் பேசித்தீர்க்க வேண்டும் என்றும், மிக நீண்ட காலமாகத் தீர்க்கப்படாத காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார். பாகிஸ்தான் ஜனாதிபதியோடு தாம் கலந்துரையாடிய போது அவர் தற்போது இந்தியாவுக்குள் நுழையும் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்தி வருவதாகவும், ஆரம்பத்தில் இருந்ததைவிட மிகக்குறுகிய அளவிலேயே அது நிகழ்வதாகவும் தமக்குத் தெரிவித்ததாக ஆர்மிரேஜ் கூறினார். இதிலிருந்து, ஆர்மிரேஜ் இரண்டு பிரச்சினைகளை இந்தியாவுக்குக் சுட்டிகாட்டியுள்ளார்.

- பாகிஸ்தான் மீதும், அதன் ஆட்சியாளர் மீதும் பூரண நம்பிக்கை தமக்கு உண்டு என்பதைப் மறைமுகமாக வெளிப்படுத்திவிட்டார்.
- தீர்க்கப்படாத காஷ்மீர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

இதில் காஷ்மீர்ப் பிரச்சினையை முன்வைத்த போதே, ஆக்ரா உச்சிமாநாடு தோல்வியில் முடிந்ததென்பது ஆர்மிரேஜுக்குத் தெரியாத தொன்றல்ல. அதை நன்கு விளங்கிக்கொண்டே இக்கருத்தை அவர் முன்வைத்துள்ளார். காஷ்மீர் விடயம் சமாதான அரசியலை ஊக்குவிப்பது என்பதைவிட ஒழித்துக் கட்டுவதற்கான நடவடிக்கையாகவே அமையும். இதில், அமெரிக்கர்களின் இன்னோர் அரசியல் வியூகமும் மறைந்துள்ளது. அதாவது, பாகிஸ்தான் ஜனாதிபதிக்குப் பதிலாக உருவெடுத்துள்ள பாகிஸ்தான் பிரதமரும், அவரது கூட்டுக் கட்சிகளும் முஷாராப்பின் ஆட்சி கவிழ்க்கப்பட்டோ அல்லது முடிவுக்கு வந்தபின்போ அமெரிக்கர்களுக்கும், அவர்களது நலன்களுக்கும் அவசியமானவர்களாக விளங்கலாம். இதனால் நெருக்கடி ஏற்படும் போது சமநிலையாக அமெரிக்கர்கள் நடந்துகொள்வது வழக்கமாகி வருகிறது. தனித்து ஒரு ஆட்சியாளரை நம்பி அமெரிக்கர்கள் இப்போது எந்தநாட்டிலும் ஆட்சியையோ ஆட்சியாளரையோ அணுகுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏவுகணைப் போட்டி

தென்னாசிய அரசியலில் ஆயுதப் போட்டி தனித்துவமான அரசியல் நடைமுறையாக விளங்குகிறது.இந்தியாவும் - பாகிஸ்தானும் மதத்தின் பெயரால் தொடங்கிய பிரிவினை முரண்பாடு அணுஆயுதப் பரிசோதனை வரை விருத்திபெற்றிருந்தது. தற்போது இரு நாடுகளும் தாம் பரிசோதித்த அணுவாயுதத்தை பரஸ்பரம் தாக்கி அழிவை ஏற் படுத்தும் நோக்கில் குறுந்தூர, மத்தியதூர எல்லைகளைத் தாக்கும் இலக்கோடு ஏவுகணைத் திட்டங்களை ஏட்டிக்குப் போட்டியாக மேற் கொண்டுவருகின்றனர். இவ் ஏவுகணைப் போட்டியின் பின்னால் ஏற்பட வுள்ள அரசியல் விளைவுகளை மதிப்பீடு செய்யவேண்டிய நிலை இன் றைய தென்னாசிய அரசியலில் காணப்படுவது முக்கிய அம்சமாகும்.

பாகிஸ்தான் தயாரித்த 750 கி.மீ தூரத்தை தாக்கக்கூடிய ஏவு கணைப் பரிசோதனை முஷாராப்பின் தேர்தல் இலக்கை நிறைவேற்று வதற்கானது என்று கூறப்பட்டது. இக் கருத்தினை பாகிஸ்தானின் முன் னாள் பிரதமர்களும் இந்திய வெளிவிவகாரச் செயலகமும் முதன்மைப் படுத்தியிருந்தது. அதனைப் பற்றி இந்தியா பெரிதாக எதனையும் அலட்டிக்கொள்ளாது என்றும் வெளிவிவகாரத் துறை தனது அறிக்கை யில் தெரிவித்திருந்தது. எது எவ்வாறாக விளங்கினாலும் பாகிஸ்தான் தயாரித்த மிகப் பிந்திய ஏவுகணைகள் இந்தியாவின் நகரங்கள் எல்லா வற்றையும் தாக்கக்கூடியது மட்டுமன்றி அது அணுவாயுதங்களையும் காவிச்சென்று தாக்கக்கூடியது என்பதே கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

ஆரம்பத்திலிருந்து பாகிஸ்தான் மத்தியதூர ஏவுகணைகளை பரிசீலித்தபோதும் தற்போது குறுந்தூர ஏவுகணைகளைத் தயாரிக்க ஆரம்பித்துவிட்டது. இது தரைத்தாக்குதலில் பயன்படுத்துவதற்கான இலக்கைக் கொண்டிருப்பதுடன் இந்தியா மீதான போரை இலகுவாக சாத்தியப்படுத்த முயன்றுவருவதனையே காட்டுகின்றது. பனிப்போர்க் காலத்தில் நீண்டதூர ஏவுகணைகளுக்கு இருந்த முக்கியத்துவம் தற் போது குறைந்துவிட்டது. குறுந்தூர ஏவுகணைகளினால் அதிகமான விளைவுகளை ஏற்படுத்த வாய்ப்பு இருப்பதாகவும் அமெரிக்கா கூட அண்மைக்காலத்தில் குறுந்தூர ஏவுகணைகளை அடிப்படையாகக் கொண்ட பரிசோதனைகளை பரிசீலித்து வருவதையும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தான் தேர்தலில் 80 களுக்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் போட்டியிடும் போது வெற்றி இலக்கில் முஷாராவ்வும் அவரது அரசியல் கட்சியுமே வெற்றிபெற்றது. முஷாராப்பைப் போன்றே ஷியா-உல்-ஹக் இராணுவ ஆட்சியாளராக இருந்தபோது நடாத்திய தேர்தலில் பல கட்சிகள் போட்டியிட்ட போதும் ஷியாவே 80 சதவீத வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாகிஸ்தான் மக்களின் அரசியல் கலாசாரத்தில் இராணுவ பிணைப்பு தேசக்கட்டுமானத்தோடு ஒன்றித்த ஒன்றாகவே அமைந்துள்ளது. ஜனநாயக சக்திகளின் ஆட்சியும் கூட இராணுவ மாதிரிகளையும் சாயல்களையும் கொண்டிருந்தமையே அதற்குக் காரணமாகும்.

ஜின்னாவின் ஆட்சியைத் தொடர்ந்து வந்த ஜனநாயகத் தலைமைகள் எல்லாமே தமது மக்கள் மீதும் எல்லை நாடான இந்தியா மீதும் பலதடவை படையெடுப்புக்களை நிகழ்த்தியுள்ளன. இந்தியாவும், அதன் இராணுவ வலுவும் முஷாராப்பின் தேர்தல் வெற்றிக்கு ஓரளவேனும் வாய்ப்பை அளித்தது என்பதில் சந்தேகமில்லை. பெரும்பாலானவர்கள் இந்தியாவை எதிர்க்கும் ஆட்சியாளரையே ஆளும் அதிகாரமுடையவர்களாக ஏற்றுக் கொள்வார்கள். ஆயூப்கான், யகியாக்கான், ஷியா-உல்-ஹக் போன்ற இராணுவத் தளபதிகளை ஆட்சியாளராக ஏற்றுக்கொண்டார்கள். அந்த வரிசையில் முஷாராப்பையும் ஒருவராக அம்மக்கள் கருதுகின்றனர். இந்தியர்களும், இந்தியர்களுக்கு சாதகமானவர்களும் கூறுவது போல் முஷாராப் பாகிஸ்தான் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்டவரோ, கொடூரமான ஆட்சியாளரோ இல்லை

இந்தியா 1983 களில் சோவியத் யூனியனின் சாம் வகை ஏவுகணைத் தொழில்நுட்பத்தைப் பின்பற்றி எஸ்.எஸ்.எம் ஏவுகணையைத் தயாரித்தது. அதனைத் தொடர்ந்து பாகிஸ்தானும் பதிலுக்கு சீனாவின் உதவியுடன் ஏவுகணைப் பரிசோதனையை தொடங்கியது. தற்போது வடகொரியாவின் உதவியுடன் பாகிஸ்தான் நீண்டதூர, குறுந்தூர, மத்தியதூர வகை ஏவுகணைகளைப் பரிசோதிக்க ஆரம்பித்துள்ளது. கோரி, ஷான் போன்றவற்றை வெற்றிகரமாக அது பரிசோதித்துள்ளது. அதில் *I, II, III, IV* என அவற்றின் தூரத்தினையும், இலக்கினையும், காவுதிறனையும் பாகிஸ்தான் அதிகரித்து வருகின்றது.இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிசூல், ஆகாஷ், நாக், பிருதிவி, அக்னி வகைகளில் *I, II, III, IV* என பாகிஸ்தான் போன்று படிப்படியாக வலுவால் அதிகரித்து வந்ததுடன் செயற்கைக் கோள்களை பலவற்றையும் ஆளில்லா விமானங்களையும் இராணுவ தொழில்நுட்பத்திற்கான ஆயுதத் தளபாடங்களையும் விருத்திசெய்து வருகின்றது.

1998களில் அடுத்தடுத்து நிகழ்ந்த அணுவெடிப் பரிசோதனைகளைத் தொடர்ந்து முஷராப்-வாஜ்பாய் காலத்தில் இந்தியாவும்-பாகிஸ்தானும் வேகமான வளர்ச்சியை இராணுவ ரீதியில் உருவாக்கியுள்ளன. இதில் பாகிஸ்தானின் வளர்ச்சி இராணுவ நோக்குடன் மட்டும் காணப்படும்போது இந்தியா இராணுவ தொழில் நுட்பத்தை பொருளாதார மேம்பாட்டுக்கான ஊக்குவிப்போடும் பயன்படுத்தி வருகின்றதென பொருளாதார விமர்சகர்கள் கூறுகின்றனர். அதுமட்டுமன்றி இந்தியா தனது பொருளாதாரத்தின் வளர்ச்சியில் சுதேச உற்பத்தியிலேயே கணிசமாக தங்கியுள்ளது. ஆனால் பாகிஸ்தானின் வளப்பற்றாக்குறை மட்டுமன்றி தங்கியிருக்கும் பொருளாதாரத்தையே அதிகம் நம்பியிருக்கின்ற நிலையானது அதன் எதிர்காலத்திற்கு ஆபத்தானதாகவே அமையும். பாகிஸ்தானின் ஏவுகணைத் தொழில் நுட்பம் கூட சீனா, வடகொரியாவிலேயே முழுமையாகத் தங்கியுள்ளது. கடந்த மே மாதத்தின் 25, 26, 28 ஆம் திகதி களில் பாகிஸ்தான் தயாரித்த கோரி, காஸ்நாலி, அப்தாலி போன்ற ஏவுகணைகளின் தொழில்நுட்பம், வடகொரியாவினது என்றும் அதற்கான ஏனைய வளங்களும் வடகொரியாவினது என்றும் அமெரிக்காவும், இந்தியாவும் கருத்துத் தெரிவித்துள்ளன. இதன் வீச்சும் ஏறக்குறைய 1500 கி.மீ - 2000 கி.மீ வரையானதாகவே அமைந்துள்ளது. ஆனால் இரண்டு நாடுகளுமே பலஸ்ரிக் வகை ஏவுகணைகளைக் கொண்டிருந்தாலும் இந்தியா தரையிலிருந்தும், கப்பல்களிலிருந்தும் விமானத்திலிருந்தும் தாக்குதலை நிகழ்த்தக்கூடிய ஏவுகணைகளை தனது சொந்தத் தொழில்நுட்பத்தைக் கொண்டு தயாரித்துவருகின்றது. மேலும் இந்தியா இஸ்ரேலுடன் ஏற்படுத்திவரும் உறவுகளினால் நவீன தொழில்நுட்பத்தை அடைந்துவிடுமெனவும் கூறப்படுகின்றது. எனவே, ஏவுகணைத் தொழில்நுட்பப் போட்டி அணுவாயுத வகைகளைக் காவிச் செல்லும் அளவுக்கு சென்றிருப்பதனால் ஏவுகணை யுத்தம் கூட தவிர்க்கப்பட வேண்டியதாக வளர்ந்துள்ளது போல் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு நாடுகளும் அணுவாயுதத்தைக் கொண்டிருந்தமை யாலேயே கடந்த சில மாதங்களுக்கு முன் காணப்பட்ட நெருக்கடி சூழகமான நிலைமைக்கும், கட்டுப்பாட்டுக்கும் வந்ததுடன் சர்வதேச நாடுகள் அதனை அதிக அக்கறையுடன் கூர்ந்து கவனித்து போரைத் தவிர்த்துக்கொண்டன. ஆனால் இந்தநிலை மேலும் மேலும்அதிகரித்து வரும்போது இந்தியாவுக்கு நிகராக பாகிஸ்தான் நின்று பிடிக்குமா? ஏன்பதே பிரதான கேள்வியாகும்.

பொருளாதார வளர்ச்சியைக் காட்டிலும் இரண்டு நாடுகளுமே யுத்தத்திற்கு அதிகம் செலவு செய்கின்றன. ஆனால் இந்தியா தனது தேசிய உற்பத்தியில் 4.5 சதவிகிதத்தை செலவு செய்யும் போது பாகிஸ்தான் 6.8 சதவீதத்தை செலவு செய்யவேண்டிய நிலையி லுள்ளது. பாகிஸ்தானியருடன் ஓப்பிடும்போது இந்தியா நிலையான பொருளாதார வளர்ச்சிகளை உருவாக்க முயல்வதுடன் அதிக சாத னைகளை அடைந்துவருகின்றது.

### இந்தியர்களின் தந்திரம்

உலக அரசியலில் தென்னாசியாவின் எழுச்சியும் வீழ்ச்சியும், இந்திய-பாகிஸ்தான் என்ற இரண்டு நாடுகளையும், அதன் ஆட்சி யாளர்களையும் மையமாகக் கொண்டதாக இருப்பதை கடந்த ஐம்பது ஆண்டு அரசியலின் ஊடாக அவதானிக்கமுடிகிறது. தென்னாசியா விற்குள் எழும் போட்டிகள் இரண்டு வகைப்பட்டது. ஒன்று இந்தியா வினதும், அதற்கு சமவலுவைப் பெற முயலும் பாகிஸ்தானுடனான போட்டி, இரண்டாவது தென்னாசியாவிற்கு வெளியிலிருந்து எழும் போட்டி. இது பெருமளவிற்கு அமெரிக்க சார்பு, எதிர்ப்பு என்ற நிலை யிலான சதுரங்கமாக அமைந்திருந்தது. இருதுருவ அரசியல் நிகழ்ந்த காலப்பகுதியில் அமெரிக்கா எதிர் சோவியத் யூனியன் என்ற நிலை காணப்பட்டது. ஒருதுருவ அரசியல் ஆரம்பிக்கப்பட்ட பின்பு தென்னாசி யாவிற்குள் அமெரிக்கா எதிர் இந்தியா என்ற நிலை படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டு வளர்ந்து வருகின்றது. இதனை இந்திய பாகிஸ்தான் பிரச்சினைக்கு மட்டும் அல்லாது, முழு தென்னாசிய நாடுகளிடையே யும் உள்ள பிரச்சினைக்கான தீர்வுகளிலும், முடிவுகளிலும் ஏற்பட்டு வரும் இழுபறிக்கு காரணமாக உள்ளது என்பதை விளங்கிக் கொள் ளுதல் அவசியம். அந்த நிலையில் இருந்துகொண்டே பாகிஸ்தானின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்நிறுத்த முன்னறிவிப்பையும் அதை எச்சரிக்கையுடன் இந்தியா பின்பற்றுவதையும் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஒன்று உள்நாட்டில் ஏற்பட்டுவரும் பொருளாதார நெருக்கடி உள்நாட்டு உற்பத்தியில் அதிக பாதிப்பை எதிர்நோக்கும் பாகிஸ்தான் வர்த்தகத்தில் மட்டுமே ஓரளவு வளர்ச்சிநிலையை 2000 ற்கு பின்னர் அடைந்துள்ளது. அதனால் இராணுவச் செலவீனம் ஒரு பக்கம் பாதிப்பை ஏற்படுத்த மறுபக்கம் உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சியடைய இரண்டுமே பாகிஸ்தானுக்கு உடனடித்தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த நிலையில் ஒரு பாரிய போரை பாகிஸ்தான் எதிர்நோக்குவது பொருளாதாரரீதியில் அபாயமானதாகும். இரண்டாவது மிகப்பிரதான நெருக்கடியாக எழுந்திருப்பது அமெரிக்கப் பாகிஸ்தானிய உறவை பாதித்துவிடக்கூடாது என்பதாகும். அதாவது பாகிஸ்தான் தனது அணுவாயுதங்களை வடகொரியாவுக்கும் சவுதிஅரேபியாவுக்கும் வழங்கியுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. குறிப்பாக வடகொரியாவுக்கு பாகிஸ்தான் அணு ஆயுதத்தை அல்லது அதற்கான தொழில் நுட்பத்தை வழங்கியுள்ளதற்கான ஆதாரம் மிகத் தெளிவாக அம்பலமாகியுள்ளது. சவுதி அரேபியாவுக்கு அணுவாயுதங்களை வழங்குவதற்கான இன்னோர் பேச்சுவார்த்தை நிகழ்ந்துள்ளதாக தெரியவந்துள்ளது. அத்துடன் சவுதிஅரேபியாவின் அரசமட்டத்திலான குழு திடீரென பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கதாகும். அதற்கு ஆதாரமாக நெருக்கம் விரிவடைகிறது என்பதை விளங்க சவுதிஅரேபியாவின் அமெரிக்கத் தூதுவரை அமெரிக்கா உடனடியாக மாற்றியதுடன் முன்னாள் இந்தியப் பிரதமர் மத்திய கிழக்கிற்கு விஜயம் செய்தமையையும் நினைவுகூற முடியும். இரண்டுமே அரசியல் நோக்கங்களைக் கொண்ட நகர்வாகவே உள்ளன. ஈராக்கில் நிலை கொண்டுள்ள அமெரிக்காவின் நலன்களை மட்டுமல்ல மேற்காசியா முழுவதுமான அமெரிக்க நலன்கள் பாதிப்புக்குள் உள்ளாக்கும். சவுதிஅரேபியாவின் அணுவாயுத ஆற்றல் என்பதை புரிந்து கொண்ட அமெரிக்கா அதனை தடுக்கப் பெரும் பிரயத்தனத்தில் இறங்கியுள்ளது. அதுமட்டுமல்ல ஈரானிடம் எது வளர்க்கக் கூடாது என அமெரிக்கா நினைக்கின்றதோ ஈராக்கிடம் எது வளர்ந்து விடும் எனக் கருதி போர் புரிந்ததோ அது இப்போது சவுதி அரேபியாவுக்கு கிடைத்துவிட்டால் அமெரிக்க நலன்கள் பெரியளவில் பாதிக்கும் என்பது சந்தேகமில்லை. இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்திவரும் அமெரிக்கா அதன் அணு ஆற்றலைப் பெருக்கிக் கொண்ட போது மௌனம் கடைப்பிடித்த அமெரிக்கா இப்போது அதிர்ச்சியடைந்திருக்கின்றது. அதனால் அமெரிக்கா-பாகிஸ்தான் உறவை அமெரிக்கா முறித்துக்கொள்ளும் என தவறான தப்புக்கணக்குப் போடமுடியாது.

அவ்வாறே வாஜ்பாயும் ஜோடானுக்குச் சென்றமை சவுதி அரேபியா பாகிஸ்தானின் உறவை சகித்துக்கொள்ள முடியாமல் ஏற்பட்ட அதிர்ச்சியின் விளைவே ஆகும். அத்தோடு இஸ்லாமிய நாடுகளை அணைத்துக்கொள்வதும் அதன் வாயிலாக பாகிஸ்தானுடனான முறுகலுக்கு நியாயம் கற்பிப்பதுடன் தனது நாட்டிலுள்ள இஸ்லாமியர்களது ஆதரவையும் செல்வாக்கையும் தக்கவைத்துக் கொள்ள முயல்வதாகும். மேலும் அத்வானி இஸ்ரேலுக்குப் பயணம் செய்ய வாஜ்பாய் ஜோடானுக்கு விஜயம் செய்வதுதான் அரசியல் என்ற நியாயப்பாட்டுடன் அவ்விஜயத்தை புரிந்துகொள்ளலாம். எனவே இந்த இருபிரச்சினைகளையும் தீர்க்கவேண்டிய நிலையில் பாகிஸ்தானின் அரசியல் தலைமை உள்ளது. பாகிஸ்தான் வடகொரியாவுடனும் சவுதி அரேபியாவுடனும் ஏற்படுத்திக் கொண்ட அணுவாயுதப்பகிர்வு இரகசியமாக மேற்கொள்ளப்பட்டபோதும் அது அமெரிக்க சக்திகளுக்கு தெரியவந்துவிட்டது.அதனால் அடுத்த நிலையில் அமெரிக்கா எடுக்கப் போகும் அனைத்து நடவடிக்கையும் எதிர்கொள்ள பாகிஸ்தான் தயாராகிவருவதை காட்டுவதே போர்நிறுத்த உடன்பாட்டின் பிரதான நோக்கங்களில் ஒன்றாக உள்ளது. இதனை விளங்கிக்கொள்ள இன்னோர் சம்பவத்தையும் நினைவுகூறுவது பொருத்தமாக அமையும்.

பாகிஸ்தான் போர்நிறுத்த அறிவிப்பை வெளியிட்டதும் உலகில் பல நாடுகள் வரவேற்று அறிக்கை விடுத்தன. அவற்றில் அமெரிக்கா, சீனா, ரஷ்சியா, ஐரோப்பிய ஒன்றியம் என்பன முக்கியமானவையாகும். அதில் அமெரிக்கா வரவேற்று அறிக்கை விடுத்தபோது பின்வருமாறு குறிப்பிட்டது. போர்நிறுத்த அறிவிப்பை வரவேற்கும் அதே நேரம் அமெரிக்காவைத் திருப்திப்படுத்துவதற்கும் சார்க் மகாநாட்டை நடத்துவதற்குமே பாகிஸ்தான் இவ் அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அமெரிக்கா இந்த அறிவிப்புக்காக பரிந்து பேசவோ மத்தியஸ்தம் வழங்கவோ இந்தியப் பாகிஸ்தான் எல்லையில் சமாதானம் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோ முன்வராது எனவும் அமெரிக்க வெளிவிவகார செயலாளர் கொலின்பவல் தெரிவித்தார். இதற்கு முன்னர் அமெரிக்கா வெளியிடும் அறிக்கையில் பாகிஸ்தான் பக்கம் நியாயம் இருப்பது போலவும் அதற்குப் பரிந்துபேசுவது போலவும் நடந்துகொள்வதுண்டு. இவ் அறிவிப்பு மட்டுமே சற்று மாறுபட்ட தொனியில் வெளிவந்துள்ளதைக் காணலாம்.

பாகிஸ்தான் அறிவிப்பு தென்னாசியப் பிராந்தியத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியதாகவும் உள்ளது. ஏனெனில் சார்க் மகாநாட்டுக்கான ஒத்துழைப்பை பெறவேண்டிய நிலையில் பாகிஸ் தான் காணப்பட்டது. அதில் பாகிஸ்தான் இந்தியத் தலைவர்களே கதாநாயகர்களாக விளங்கினர். முன்னாள் பிரதமர் வாஜ்பாய்-முஷாராப்பைத் தவிர்த்து முன்னாள் பிரதமர் ஜமாலியை சந்திக்கவும் உரையாடவும் விரும்புவதாகத் தெரிவித்திருந்தார் இந்தியர்களுக்கு முஷாராப் வேண்டப்படாத ஜனாதிபதியாக இருப்பதால் முஷாராப்பும் ஜமாலியை இந்தியா விடயத்தில் பயன்படுத்த விரும்பினார். இதனால் இந்தியர்களது இராஜதந்திரமா? பாகிஸ்தானியரது இராஜதந்திரமா? என்ற போட்டி அப்போது நிகழ்ந்தது. முஷாராப் இந்தியாவில் பிறந்த வன் என்ற வகையிலும் ஓர் இராணுவ வீரன் என்ற வகையிலுமே அவரது அணுகுமுறைகள் இதுவரை நிகழ்ந்துள்ளன. அவை எவற்றுக் கும் மசிந்துகொடுக்காத இந்தியத் தலைமை ஜமாலியின் அறிவிப்பை யும் எச்சரிக்கையுடன் அணுகியது. போர்நிறுத்த அறிவிப்பை ஏற்றுக் கொண்ட இந்தியா காஷ்மீரிய எல்லையில் பல இராணுவத் தாக்குதல் களை நடத்தியது. அது மட்டுமன்றி ஜமாலியின் அறிவிப்பினால் பாகிஸ்தானை விட இந்தியா அதிகளவு நன்மைகளை அடைய முயலு கின்றதும் அதனூடாக எழும் அரசியல் இலாபங்களை கட்சி தனக்கு சாதகமாக மாற்ற முயலும் என்பதும் சந்தேகமற்ற நிருபணமான செய்திகளாகும்.

## இந்திய – பாகிஸ்தான் கிரிக்கெட் அரசியல்

கிரிக்கெட் விளையாட்டின் ஆரம்பம் பிரித்தானியாவாக அமைந்த போதும் அதனை ஆரம்பத்தில் *Sun Barthing* என்றே அழைத்தனர். அதாவது குளிர்வலய நாடுகளின் மக்கள் வெயிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்வதில் ஆர்வமும் தேவையும் உடையவர்களாக இருந்தனர். அதனை வெறுமையாக நின்று காய்வதைவிட விளையாடிக்கொண்டு காய்வது நல்லதெனக் கருதினர். அதன் நிமித்தமே இத்தகைய விளை யாட்டு ஒன்று ஆரம்பமானது. இது இன்று வரட்சியுடைய பன்னிரண்டு மணித்தியாலமும் சூரியனைத் தரிசிக்கின்ற நாடுகளிலுள்ள மக்கள் விளையாடுகின்ற விளையாட்டாகவும், ரசிக்கும் விளையாட்டாகவும் மாறிவிட்டது. இது பாரிய வருமானத்தையும் பிரபலத்தினூடாக அரசி யலை நாடும் தனிமனிதர்களின் முதலீடாகவும் மாறிவிட்டது. இத் தகைய விளையாட்டுக்களுக்கு இந்தியர்களும் பாகிஸ்தானியர்களும் அரசியல் சாயம் பூசுவதில் வல்லவர்களாக உள்ளனர். தற்போதைய சூழலில் இரண்டு நாட்டுக்காரருக்கும் சுமுகமான உறவும் நட்பும் நிலவுகிறதாகவே கருதப்படுகிறது. இரண்டு நாடுகளும் மிக அண்மை யில் காணப்பட்ட முரண்பாட்டு நிலைகளைக் கைவிட்டு எதிரும் புதிருமாக இருந்த நிலையை மாற்றியுள்ளன. இத்தகைய திடீர்மாற்றத் திற்கும், கிரிக்கெட் விளையாட்டுக்கும் இடையில் மிக நெருக்கம் உண்டு.

இந்தியாவின் பிரதான நோக்கமாக பாகிஸ்தானுடனான சுமுக உறவுக்கு கிரிக்கெட் விளையாட்டு உந்துதலையும், பாதுகாப்பையும் ஏற்படுத்தக்கூடியதென்பதாகும். அதனாலேயே பாகிஸ்தான் சுற்றுப் பயணத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இந்தியத்தரப்பு இவ்வாறு திட்டமிடும் போது பாகிஸ்தான் தரப்பு எப்படி அதனை எதிர்கொள்கிறது என்பதையும் விளங்குதல் அவசியம். பாகிஸ்தானில் பின்லேடன் அரசியலால் ஒரு பிரபலமானதாகவும், சர்ச்சைமிக்கதாகவும் உள்ளது. பயங்கரவாத நெருக்கடியை பாகிஸ் தான் முறியடிப்பது பாரிய சிக்கலாகவும். பிரச்சினையாகவும் உள்ளது. அமெரிக்காவுடனும், ஏனைய மேற்கு நாடுகளுடனும் முரண்பட வேண்டியநிலை ஏற்பட்டுவருகின்றது. இத்தகைய நெருக்கடி நிலை யை சுமுகமாக தீர்த்துக்கொள்வதற்கு பிரச்சினைக்குரிய இந்திய எல்லை சற்று அமைதியாக இருப்பது இலாபமாக பாகிஸ்தான் கருதுகிறது. முஷாராப்பின் ஆட்சியைப் பற்றிய கருத்துக்கள் மற்றும் எதிர்க்கட்சிகளது விமர்சனங்கள் அமெரிக்காவினுடைய நெருக்கு தலால் ஏற்பட்டுள்ள அபாய நிலைகள் இவற்றை கணக்குப்போட்டே முஷாராப்பும் செயற்பட்டு வருகினற்ார். அது மட்டுமன்றி முஷாராப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் அல்லது இஸ்லாமிய தீவிரவாதத்தின் ஊடுருவல் இந்தியாவின் இராணுவ பாதுகாப்பு அணுகுமுறையால் பாதிக்கப்பட்டுள்ளது. அத் தகைய இறுக்கத்தன்மையை பலவீனப்படுத்தவும் இதனை பயன் படுத்தி ஊடுருவலை சாத்தியப்படுத்தவும் பாகிஸ்தான் தரப்பு எண்ணி யிருக்கலாம். அதனால் இத்தகைய சமாதானமான அணுகுமுறையும், சூழலும் தேவைப்பாடுடையதாக மாறியிருந்தது. இரண்டு தரப்புமே நலன்களை சாத்தியப்படுத்தும் விதத்தில் ஓர் அணுகுமுறையை தனித் தனியே திட்டமிட்டபோதும் இரண்டும் ஒரே இடத்தில் சந்திப்பதாக மாறிவிட்டது. அதனால் போர் எல்லைகளில் இல்லாது விளையாட்டு மைதானங்களில் நிகழ்த்துவதாக மாறியுள்ளது. கிரிக்கெட் வீரர்கள் போர் வீரர்கள் போல் மைதானத்தில் யுத்தம் புரிந்தனர்.

### சார்க் உச்சிமாநாடு

பன்னிரண்டாவது சார்க் உச்சிமாநாடு இஸ்லாமாபாத்தில் நடைபெற்றது. பாகிஸ்தானின் தலைநகரம் மட்டுமல்ல, பாகிஸ்தானே கோலாகலமாக மாறியிருந்தது. பாகிஸ்தானின் ஜனாதிபதி முஷாராப் ஆட்சிக்கு வந்த பின்னர் அதிகமாக மகிழ்ச்சியடைந்த நாள் சார்க் மாநாட்டுக்கான தினமே என்பதை முஷாராப்போ, பாகிஸ்தானோ மறுக்கமுடியாது. இது முஷாராப்பின் இராஜதந்திரத்திற்குக்கிடைத்த வெற்றியாகவே உள்ளது. அத்தகைய, வெற்றிக்குப் பின்னால் உள்ள இரகசியங்களையும், சார்க் மாநாட்டுக்குப் பின்னாலுள்ள இந்திய அரசியலையும் பரிசீலிப்போம்.

1985 ஆம் ஆண்டு தென்னாசிய பிராந்திய கூட்டமைப்பான சார்க் என்ற அமைப்பு பொருளாதார, சமூக, கலாசார அடிப்படை களை விருத்தி செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. தென்னாசி யாவிலுள்ள ஏழு பிரதான நாடுகளும் தமக்கிடையே ஏற்படுத்திக் கொண்ட ஒத்துழைப்பு அமையமானது, அரசியல் ரீதியில் இரண்டு நாடுகளது அரசியல் பிரச்சினைகளைப் பற்றிய கலந்துரையாடல் இல்லாத ஒன்றாக உருவாக்கப்பட்டது. ஆனாலும், பல கூட்டத்தொடர் கள் அரசியல் காரணங்களுக்காவே ஒத்திவைக்கப்பட்டன. இந்தியா என்ற பெரிய வலுவான, அரசை எதிர்கொள்ளவும் இறையாண்மையின் சமத்துவத்தை வெளிப்படுத்தவும், சிறிய நாடுகளால் உருவாக்கப் பட்ட அமைப்பாகக் கூட சார்க் அமைப்பு பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு தசாப்தத்தை நெருங்கிக்கொண்டிருக்கும் சார்க் அமைப்பு ஆசியான், ஐரோப்பிய யூனியன், நப்ரா போன்ற எந்த அமைப்புடன் ஒப்பிடக்கூடியளவுக்கு எதுவித சாதனைகளையும் நிகழ்த்தியிராத அமைப்பாக உள்ளது. அதிக முரண்பாடுகளைக் கொண்டிருக்கும் சார்க் அமைப்பு வறுமை, சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கள் மீதானவன்முறை, பொருளாதார ரீதியிலான நெருக்கடிகள் என்பனவற்றுடன் இனமுரண்பாடுகள், மதமுரண்பாடுகள் என்பனவற்றால் அதிக அபாயத்தை எதிர்நோக்கியுள்ள அமைப்பாகவுள்ளது.

இஸ்லாமாபாத்தில் நடந்தசார்க்மாநாடு முஷாராப்பின் அரசியல் எதிர்காலத்துக்குக்கிடைத்த வெற்றியாகும். முஷாராப்பின் அரசியல் பிரகாசமாகவே அமையவுள்ளது என்பதும் இதிலிருந்து தெளிவாகின்றது. முஷாராப்பை இராணுவத் தளபதியாகப் பார்க்கும் நிலைமை உலகத்தாலும், இந்தியாவாலும் மறக்கப்பட வேண்டிய நிலைக்கு சார்க் மகாநாடு மாற்றியுள்ளது. குறிப்பாக முஷாராப் இரண்டு தடவை, தான் ஒரு ஜனநாயகவாதியாக காட்ட முயன்றுள்ளார்.

ஒரு தடவை ஆக்ரா மாநாட்டுக்காக (July 15.16 - 2001) இந்தியா வந்தபோது தன்னை பாகிஸ்தானிய அரசியலமைப்புக்கு உட்பட்ட ஜனாதிபதி போன்று பதவிப்பிரமாணம் செய்து கொண்ட நிகழ்வாகும். அதில் இந்தியாவுடன் அதிக உடன்பாடு எதனையும் முஷாராப் எட்டாதுவிட்டாலும், தனது அரசியல் வாழ்வை ஸ்திரப் படுத்திக்கொண்டார். அதற்கு அப்போது அமெரிக்க ஆட்சியாளர்களும் ஒத்துழைப்பு அளித்தனர். இன்றும் கூட அமெரிக்கர்களின் அரவணைப்பு கிடைத்துவருகின்றதை அண்மைய சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இரண்டாவது நிகழ்வு முஷாராப்பின் ஆட்சிக்காலம் மேலும் ஐந்துவருடங்கள் நீடிக்கும் நடவடிக்கை பூர்த்தியான போதாகும். முஷாராப்-பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் அரசியல் கட்சிகளால் ஆட்சி நீடிப்புக்கு ஆதரவு பெற்றார். இதில் பல கட்சிகள் ஆதரவு தெரிவிக்காது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலிருந்தும் வெளியேறிய போதும், ஆளும் கட்சியால் முஷாராப் தெரிவாகியுள்ளார். பிரதமரை, இராணுவ நடவடிக்கைகளை கையாளும் அதிகாரம் உட்பட அதிக அதிகாரமுடைய தலைவராக முஷாராப் விளங்கக்கூடியதான நட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிக்கை சட்டரீதியானதாக மாறியுள்ளது. எனவே, மீண்டும் ஒரு தடவை முஷாராப் ஜனநாயக வாதியாக உருவெடுத்துள்ளார். அவரது உரையாடலும், அரசியல் கட்சிகளுடனான பேச்சுவார்த்தையும் சார்க் மாநாட்டுக்கான ஏற்பாடாகவே முன்வைக்கப்பட்டபோதும், எதிர்பாராத விதத்தில் தனது ஆட்சியை நீடிப்பது பற்றிய விடயத்தை வெளிப் படுத்தி, அரசியல் கட்சிகளுக்கு நெருக்கடியைக் கொடுத்தார். எதுவா யினும் முஷாராப் இந்தியாவிற்கு நீண்டகால எதிரியாக இருப்பதற்குத் தயாராகிவிட்டார் என்பதுடன், இந்தியாவை எதிர்க்க அமெரிக்காவுக்கு ஒரு துரும்பச் சீட்டாக முஷாராப் கிடைத்துள்ளார் என்பதே மறை முகமான செய்தியாகும்.அமெரிக்க ஜனாதிபதி புஷ்-முஷாராப்புடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு சார்க் மாநாட்டுக்கான தயார்ப் படுத்தலை பாராட்டியதுடன், இந்தியாவுடனான சுமூக உறவுக்குப் பாகிஸ்தான் தயாராக வேண்டுமெனக் கோரியிருந்தமையும் அமெரிக்காவின் கவனத்தையும், முஷாராப்புடனான உறவையும் கோடிட்டுக் காட்டப் போவதுமானது.

அந்தவகையில் முஷாராப்பின் பலம் தற்காலிகமாக அதிகரித் ததென்றே கூறலாம். அதாவது, தற்காலிக விட்டுக் கொடுப்பினால் உள்நாட்டிலும், உலகமட்டத்திலும் முஷாராப் பலமான அரசியல் தலைவராக மாறியுள்ளார். பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலின் முன் னால் இந்திய தலைமையை அழைத்து ஓர் உச்சிமாநாட்டை நடத்துவ தென்பது முஷாரப்பின் தனிப்பட்ட பலத்தைக் காட்டுவதாகவே நோக் கப்படுகின்றது. இவ்வாறு முஷாராப் சவால்களை எதிர்கொண்டது போல், இந்தியர்களும் சார்க் உச்சிமாநாட்டின் மூலம் அடைந்த அரசியல் நலன்களையும் நோக்குவோம்.

சார்க் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்வதென்பதைச் சாத்தியப்படுத்துவதில் இந்திய ஆட்சியாளர்கள் தென்னாசிய நாடு களை ஒன்றிணைப் பதில் கணிசமானவிருப்புக்களையுடையவராக காணப்பட்டனர். அத்தகைய ஒன்றிணைப்பு என்பது தென்னாசியாவின் சமாதானமும், சகவாழ்வுமாகும் ஏனெனில், இந்தியர்களைப் பொறுத்த வரை 2020 ஆம் ஆண்டில் இந்தியாவை வல்லரசாக மாற்றுவதை நோக்கமாகக்கொண்டவர்கள். அடிப்படைபொருளாதார சுபீட்சத்திலும் இராணுவ, அரசியல் பலத்திலும் இந்தியாவின் எழுச்சி தங்கியுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்பது தெளிவான உண்மையாகும். எனவே, பொருளாதார சுபீட்சத்தை இந்தியா அடைவதற்குப் பயங்கரவாதம் -அதிலும் குறிப்பாக எல்லை தாண்டிய பயங்கரவாதம் பிரதான தடையாகவுள்ளது.அதனை ஊக்குவிக்கும் வரிசையில் முதல் நாடாக தெற்காசியாவுக்குள் பாகிஸ்தான் இருப்பதால், பாகிஸ்தானுடன் சுமூக உறவை அரச மட்டத்தில் பேணுதல் சிறப்பானதென இந்தியா கருதுகிறது. அவ்வாறான முயற்சி தவறினால் போரைத் தவிர்க்க முடியாத அஸ்திரமாகப் பயன்படுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது. அதிலும் பாகிஸ்தானுக்கு பின்னால் அமெரிக்கா மறைந்திருப்பது பற்றியும் இந்தியா கவனம் கொள்கிறது. இதனால் போரைத் தவிர்த்து ஒரு சமாதான உரையாடல் தந்திரத்தைப் பிரயோகித்து பாகிஸ்தானுடன் சுமூகநிலையை உருவாக்க இந்தியா விரும்புகிறது.

இந்தியா எப்படி சார்க் அமைப்பை கையாள விரும்புகின்றதென்பதை விளங்கிக்கொள்ள 12வது உச்சிமாநாட்டிற்கான வெளிவிவகார செயலர்கள் சந்திப்பு போதுமானது. சார்க் உச்சிமாநாட்டில் எடுக்கவுள்ள பிரதான நடவடிக்கைகளாக பயங்கரவாதத்தை பரவவிடாது தடுப்பது, தடையற்ற வர்த்தக உடன்பாட்டை அமுல்படுத்துவது, வறுமை ஒழிப்பது ஆகிய மூன்று விடயங்களையும் முன்னிறுத்தியுள்ளது. முதலிரண்டும் முழுக்கமுழுக்க இந்தியாவுக்கு இலாபகரமானது. இந்தியாவின் குறிப்பாக எல்லைதாண்டிய பயங்கரவாதத்தை பரப்பும் பாகிஸ்தானின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்த அவசியமானது. தடையற்ற வர்த்தகத்தால் அதிக இலாபத்தினை அடையவுள்ள நாடு இந்தியாவாகும். அதிக உற்பத்தியையும், அதற்கான சந்தை வாய்ப்பையும் தேடிவரும் இந்தியா தெற்காசிய வட்டத்தைப் பாரிய சந்தையாக மாற்றுகின்ற நிலையை சாதகமாக்கும். வெளிநாடுகளது தலையீடு, சந்தைக்கான ஊடுருவல் என்பன நிறுத்தப்படுவதுடன், சிறிய நாடுகளது உள்நாட்டு உற்பத்தியும், அதற்கான வாய்ப்புகளும் தடைப்படும். மாறாக தொழில்நுட்ப விருத்தியும், உற்பத்திப் பெருக்கமும், ஏனைய தெற்காசிய நாடுகளது உற்பத்திகளுடன் போட்டிபோடும் நிலையும் இந்தியாவுக்குக் கிடைக்கும்.

சார்க் மாநாட்டுக்கான அடிப்படையில் இந்தியாவின் இலக்குகள் தனித்துவமானவையாக வளர்ந்துள்ளன. சார்க் அமைப்பின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானின் ஆட்சியாளர் தனது தனிப்பட்ட விருத்தியை உருவாக்க முயலும்போது, இந்திய ஆட்சியாளர்கள் அதனை இந்தியாவின் விருத்தியாக மாற்ற முயலுகின்றார்.

சார்க் அமைப்பின் 12வது உச்சிமாநாட்டின் தற்போதைய வெற்றி தீர்வையற்ற வர்த்தக உடன்பாடாகவே கொள்ளப்படுகின்றது. அது முழுமையான பொருளாதார சுபீட்சத்தை நோக்கியதாகும். முழு உலகத்திலும் இத்தகைய நடைமுறை முன்னெடுக்கப்படுவதுடன், உலக பொருளாதார ஒழுங்கமைப்புக்களின் வெற்றிக்கு அதுவே காரணமாகவுள்ளது. இதனால், தென்னாசிய வட்டகை உடனடியாக நிகழாதுவிட்டாலும், எதிர்காலத்தில் பொருளாதார வளர்ச்சியை நோக்கமுனையலாம். உடனடியாக இந்தியாவே அதிக இலாபத் தையும், நன்மையையும் அடையும். இந்தியாவுடன் போட்டி போடும் தொழில்நுட்ப விஞ்ஞான வலுவற்ற அரசுகளாகவே ஏனைய அரசுகள் காணப்படுகின்றன. சார்க் அமைப்புஅரசியல் போட்டியற்ற, பகையற்ற அமைப்பாக எப்போது மாறுகின்றதோ அப்போதே முழுமையான வளர்ச்சியையும், விருத்தியையும் தெற்காசியா அடையும். இந்தியா வும், பாகிஸ்தானுமே சார்க் அமைப்பு என்ற கருத்து உள்ளவரை சார்க் அமைப்பு எதனையும் சாதிக்காது.

## இந்திய -சீனப் போட்டி

உள்நாட்டு அரசியல் நெருக்கடிகளுக்கு முழுக்குப் போட்டு விட்டு இந்தியாவும் பாகிஸ்தானும் வழமைபோல் ஒரு பனிப்போரை நடாத்துகின்றதுபோல் இந்தியா சீனாவுடன், புதிய ஆனால், தந்திரோ பாயமான நகர்வுகளுக்குத் தயாராகும் நிலை காணப்படுகின்றது. இந்தியாவின் பிரதமர் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு விஜயம் செய்த ஒரு சம்பவத்தை இக்காலப்பகுதியில் அவதானிக்க முடிந்தது. பிரதமரின் விஜயத்திற்கு முதல் அந்தமான் பிராந்தியத்தின் உல்லாசப் பயணத்துறையின் முக்கியம் பற்றியும் அதன் அவசியம் பற்றியும் பரபரப்பாக புதுடெல்கி அரசால் பேசப்பட்டது. திடீரென பிரதமர் அந்தமானுக்குச் சென்றதும் அங்குள்ள பிரதேசங்களைப் பார்வை யிட்டதும் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். ஏன் இந்தியா அவசரமாகவும் திடீரெனவும் அந்தமான் தீவுகளை நோக்கித் திசை திரும்பியுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது முக்கியமான கேள்வியாகும். அந்தமான் இந்தியாவின் செல்வாக்குப் பிரதேசம் என்பது கேள்விக்கிடமின்றி கடந்த காலத்தில் நிரூபணமாகியுள்ளது. ஆனால், அது தற்போது இந்தியாவின் செல்வாக்கை இழந்துள்ளதுடன், சீனர்களின் அதிக கவனத்தைப் பெற்றுள்ளது என்பதே அப்பிரதேசம் பொறுத்த தற்போதைய இந்திய ஆட்சியாளரின் அக்கறைக்கு காரணமாகும்.

சீனா, அந்தமான் நிக்கோபார் பிரதேசத்தை நோக்கி 2000 ஆம் ஆண்டுக்கும் பின்னர் மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்த ஆரம்பித்துவிட்டது. குறிப்பாக *Zadatkyi, Sittwe* ஆகிய தீவுகளில், சீனா கடற்படைத் தளங்களை நிறுவியுள்ளதுடன், பாரிய நீர்மூழ்கிக் கப்பல்களையும் விமானந்தாங்கிக் கப்பல்களையும் எதிர்காலத்தில் இப்பிரதேசத்தைமையப்படுத்தி இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நிறுவத்திட்டமிட்டுள்ளது. மியான்மாரின் கரையோரப் பிரதேசங்களில் சீனா கூட்டாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதுடன், மியான்மாரின் கரையோர இறங்குதுறையாக விளங்கும் *Mergui* பகுதியை மையப்படுத்தி இராணுவ கடற்படை விஸ்தரிப்பினை மேற்கொண்டு வருகின்றது. இந்து சமுத்திரப் பிரதேசத்தையும் சீனாவின் தென்சீனக் கடற்பகுதியையும் தொடுக்கும் *Straits of Malacca* நீரோடை சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் உட்பட்ட பகுதியாக உள்ளது. இதனால் சீனாவின் கடற்படைக் கட்டமைப்பு வளர்வது மட்டுமன்றி, அதன் வர்த்தக நோக்கிலான கப்பல் துறையின் வளர்ச்சியும் வாணிபத்தின் புதிய போக்குவரத்து விருத்தியும் அதிக முக்கியத்துவத்தை வகிக்கும் நிலையை அடைந்துள்ளன. அந்தமான் கடற்பகுதியை அண்டிய சீனாவின் வளர்ச்சி அதன் ஆழ்கடல் நோக்கிய *(Blue water)* நகர்வை வெற்றிகரமானதாக மாற்றுமென இந்தியப் பாதுகாப்பு ஆய்வாளரான கலாநிதி *Harvir sharma* இந்திய ஆட்சியாளர்களை 2001 இறுதிக் காலப் பகுதியில் எச்சரித்திருந்தார். அவர் மேலும் குறிப்பிடும்போது, சீனா 2020 களில் திட்டமிட்டிருக்கும் கடலாதிக்க அணுகுமுறையானது அதனை உலகத்தில் மூன்றாவது கடற்படை திறனுடைய அரசாக மாற்றுமெனக் குறிப்பிட்டிருந்தார். அதாவது அமெரிக்கா, ரஷ்சியாவுக்கு அடுத்தநிலையை சீனா அடையுமென அவர் கூறுகின்றார்.

சீனாவின் நகர்வை ஓராண்டுக்கு முன்பே எச்சரித்த நிலையில் இந்தியர்கள் 2002 இல் விழித்தெழுந்துள்ளார்கள் போல் விளங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. ஆனால், சீனா இந்தியாவின் கொல்லைப்புறம்வரை நகரத் தொடங்கிவிட்டது. இந்தியாவின் இன்னோர் செல்வாக்குமிக்க தீவான மாலைதீவுப் பிரதேசத்திலும் சீனாவின் கடற்படைத்தளம் பாரிய முயற்சியுடன் விருத்தி பெற்றுவருகின்றதென்பது இங்கு நினைவு கூரத்தக்கது. மாலைதீவின் தென்பகுதியில் அமைந்துள்ள *Marao* தீவில் ராடர் நிலையமொன்றைக் கட்டிவரும் சீனா தனது கடற்படையை அங்கு நிறுவிவருகின்றது. அத்தீவு ஏறக்குறைய இந்து சமுத்திரத்தின் மையப்பகுதி என்பது கவனத்திற்குரியது. இந்தியர்களின் கொல்லைப் புறத்திலும் சீனாவின் செல்வாக்கு ஏற்பட்டுவிட்டது. இந்தியா பாரிய பாதுகாப்புப் பிரச்சினையை உணரவேண்டிய நிலைக்குள் அகப்பட்டுள்ளது. இதனை விளங்கிக்கொண்ட நிலையில் தான், இந்தியாவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் ரஷ்சியாவுக்கு அதே காலப்பகுதியில் விஜயம் செய்த போது, ரஷ்யாவுடன் அட்மிரல் கோக்ஸ் கொவ என்ற பாரிய கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்யும் உடன்பாட்டில் கையெழுத்திட்டதும், நிர்மூழ்கிக்கப்பல்கள் பலவற்றை ரஷ்சியாவிடம் கொள்வனவு செய்ய முடிவெடுத்துள்ளமைக்குமான காரணமாகுமெனக் கூறலாம்.

சீனாவின் பொருளாதாரப் போட்டி ஆழ்கடல் அதிகாரத்தை *(Blue water sea power)* தக்கவைப்பதன் ஊடாக சாத்தியப்படும் என்பதுடன், அது அதிகார விஸ்தரிப்புக்கும் வழிவகுக்கும் காரணியாக அமையவும் வாய்ப்பு அதிகமுண்டு. ஆனால், அது இந்தியாவையோ அல்லது வேறு நாடுகளையோ இலக்குவைத்து முழு உலகத்திலும் அதன் அதிகாரத்தைத் தக்கவைக்கும் நிலையை ஏற்படுத்தலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதனைப் பிரிதொருசந்தர்ப்பத்தில் நோக்குவோம்.

இந்தியப்பிரதமர் அக்காலப்பகுதியில் அந்தமான் தீவுக்கு விஜயத்தின் உண்மை இதுவேயாகும். அவ்வாறு எடுக்கப்படும் நடவடிக்கை மட்டுமல்லாது குறுந்தூர ஏவுகணைகள் இரண்டினை இந்தியா ஒரே வாரத்தில் பரிசோதித்து வெற்றி கண்டது. அவை எல்லாம் எச்சரிக்கை கலந்த தோரணையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளாகவே அமைந்துள்ளது. ஆனால் இந்தியாவுக்கு எப்போதும் உள்ள பிரச்சினையாக சீனா இல்லாதுபோதும், சீனாவின் மாற்றமும் வளர்ச்சியும் இந்தியாவுக்கு ஆபத்தானதாகவே அமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் உண்டு. இதனை விளங்கிக்கொள்ள பின்வரும் விடயத்தை நோக்குவோம்.

1962 இல் இரு நாடுகளுக்கும் இடையில் போர் வெடித்த போது, சீனர்கள் இலங்கையின் நிலப்பரப்புக்கு ஒப்பான நிலப்பரப்பை இந்தியர்களின் பிரதேசத்தில் கைப்பற்றினர். ஆனால் பாகிஸ்தானியரை இந்தியா பல தடவை தோற்கடித்ததுடன், பாகிஸ்தான் பலமான அரசாக ஆகுவதில், அந்நாடு எடுத்துக்கொண்ட முயற்சிகள் எல்லாவற்றையும் தோற்கடித்துவிட்டது. எனவே, ஒப்பீட்டில் இந்தியா, பாகிஸ்தானை மிஞ்சிய அரசு மட்டுமே அன்றி சீனாவுக்கு சவாலான, வெற்றி பெறும் அரசு என்று கூறிவிடமுடியாது. இது இந்திய-சீனா முறுகல் தணிவுக்கும் அமைதியான அணுகுமுறைக்கும் காரணமான நிலைமையே சாட்சியாக அமையும்.

அதாவது, சீனாவின் பலத்தினால் இந்தியா அமைதியை விரும்புகின்ற அரசாக விளங்குகிறது எனக்கூறலாம். இந்தியர் என்னதான் தலைகீழான முயற்சிகளை எடுத்தாலும் சீனாவை இந்து சமுத்திரப் பிரதேசத்திலிருந்து அகற்றுவது கடினம். அதுவும் வங்காளவிரிகுடாப் பகுதி மற்றும் அந்தமான் தீவுகளை அண்டிய பகுதியிலிருந்து அப்புறப்படுத்துவது சாத்தியப்பாடான நடவடிக்கையாக அமைவது கடினம். மியான்மார் சீனாவின் மிகப்பலமான நட்பு நாடு. ஒருவகையில் சீனாவின் பொம்மையாகக்கூட மியான்மார் இராணுவ ஆட்சி அமைந்துள்ளதெனக் கூறுவதும் பொருத்தப்பாடாக அமையும். இந்தியர்கள் குழப்பமடையும் இச்சந்தர்ப்பத்தில், இந்தியாவுக்கு மியான்மாரின் அமைச்சர் ஒருவர் விஜயம் மேற்கொண்டுள்ளார். அதன் பின்னணி எதுவாக அமைந்திருக்கும் என்பதை இலகுவாக விளங்கிக்கொள்ள முடியும். மியான்மாரின் இராணுவ ஆட்சியை அகற்ற முடியாத நிலையும், சீனாவின் செல்வாக்கும் ஒரு நோக்கிலான அரசியல் பரிமாணங்களின் இசைவு என்றே கூறமுடியும்.

சீனா மியான்மாருடன் மட்டுமல்ல பாகிஸ்தானுடனும் நெருக்கமுடைய அரசு என்பதனை விளங்கிக்கொள்ளுதல் அவசியம். இந்தியாவின் கடந்த ஐம்பதாண்டு அரசியல் சர்ச்சைகளிலும் பாகிஸ்தான் பிரதான அரசு என்பது கவனத்திற்குரியது. பாகிஸ்தானுடன் பல யுத்தத்தினை கடந்த காலத்தில் மேற்கொண்டது மட்டுமல்ல, மதத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுகளால் ஏற்பட்ட மோதல் தொடர்ந்த வண்ணமுள்ளது. அத்தகைய குழப்பத்துக்குள்ளும் நெருக்கடிகளுக்குள்ளும் இந்தியா சிக்கித் தவித்தபோது சீனா மிக மெதுவாக ஆனால் உறுதியாக பொருளாதார விஞ்ஞான தொழில்நுட்பத்தில் வளர்ந்துகொண்டே செல்கின்ற நாடாக விளங்கியது. இந்தியர்கள் அரசியல் முரண்பாடுகளாலும் ஆபத்து மிக்க ஜனநாயகத்தாலும் தமக்குள்ளே போராடும்போது சீனர்கள் ஒரே கட்சி ஆதிக்கத்தின் ஊடாக வெற்றிகரமான அரசியல் மாற்றங்களைச் சாதித்து வந்தார்கள். உள்நாட்டு உறுதிப்பாடும் பலமும் சர்வதேச மட்டத்தில் முன்னோக்கிய நகர்விற்கு காரணமாக மாறியது. சீனர் களின் அனுபவம் வித்தியாசமானது. அதனை இந்தியர்கள் கடைப் பிடிப்பது கடினம். சிறந்த எடுத்துக்காட்டு இரு நாடுகளதும் ஐந் தாண்டுத் திட்டங்களின் வெற்றி தோல்விகளின் அளவீடுகளைக் கொண்டு மதிப்பீடு செய்யமுடியும். இந்தியர்கள் பல தடவை ஐந் தாண்டுத் திட்டமிடலைக் கைவிட்டதுடன் தோல்விகளுக்கு முகங் கொடுக்க வேண்டியவர்களாக விளங்கியபோது சீனர்கள் வெற்றி கரமான திட்டமிடலை உருவாக்கிவந்தனர்.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்கும் சூழல் அதிகரிக்க அதிகரிக்க இந்தியா ஆட்சியாளர்களின் பாகிஸ்தான் மீதான நடவடிக்கை அதிகரித்தது. தூதரக ஊழியர்களையும் அதிகாரிகளை யும் அகற்றும் நடவடிக்கையைத் தொடங்கிய இந்தியா அதன் தயார் படுத்தலிலும் நடவடிக்கையிலும் தீவிரம் காட்டும் அரசாக விளங்கு கியது. இதே அணுகுமுறையை இந்தியா ஆப்கானிஸ்தான் மீதான போர்க்காலப் பகுதியிலும் கடைப்பிடித்தது. ஆனால் அதில் இவ்வாறே தோற்றுப்போனது இந்தியா எத்தகைய நிலையை அடையலாம் என்ப தனை தீர்மானிக்கும் அரசாக அமெரிக்காவும் சீனாவும் விளங்கும் என்ற அடிப்படையில் அதனைப் புரிந்து கொள்ளலாம்.

### அமெரிக்க – இந்திய உறவு

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் பாரதீய ஜனதா அரசாங்கம் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. இந்திராகாந்தியின் மறைவுக்குப் பின்பு ஆட்சிக்கு வந்த ரஜீவ்காந்தியின் பின்பற்றிய வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படைகளைப் பாரதீய ஜனதாக் கட்சியும் பின்பற்றி வருகிறது. அதனடிப்படையில் அமெரிக்காவுடனான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கம் இந்தியாவுக்கு முதன்மையானதாக திகழ்ந்தது. ஏனெனில் அமெரிக்காவை அரவணைத்து, இப்பிராந்தியத்தில் சீனாவும் தனது வழமையான விரோதியாகத் திகழ்ந்த பாகிஸ்தானும் இந்தியாவைவிட முன்னணியிலும், இந்தியாவுக்கு நிகராகவும் எழுச்சிபெற்றுள்ளன. எனவே, இந்திய-அமெரிக்க நெருக்கம் மிக முக்கியம் வகிப்பதாகப் பாரதீய ஜனதா கருதுவதும், அதற்கேற்ற வகையில் புதிய உலக அரசியல் ஒழுங்கு காணப்படுவதும், அந்நெருக்கத்தை மேலும் அதிகப்படுத்தியுள்ளது. இதனால், வளர்ச்சியடைந்து வந்த இந்திய அமெரிக்க உறவு ஈராக் விவகாரத்தால் பாதிக்கப்பட்டுவிடும் எனப் பாரதீய ஜனதா கருதியது.

ஈராக் போருக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு எதிர்க்கட்சிகள் உருவாக்கிய நெருக்கடிகளைக் பாரதீயஜனதா கை யாண்டது என்பதை அது தொடர்பான லோக்சபா கூட்டத்தொடரை அவதானித்திருந்தால் தெரிந்திருக்கும். இரண்டு நாட்கள் ஒத்திப் போடப்பட்ட நிலையிலேயே ஒரு தீர்மானம் எட்டப்பட்டது. தீர்மானம் நிறைவுபெற்ற பின்பு, இந்திய முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹ குறிப்பிடும்போது அமெரிக்கா-இந்திய உறவை இத் தீர்மானம் பாதிக்காது என்றார். இது ஒரு அரசியல்வாதியின் அறிவித் தலாக அமைந்திருந்தது. மட்டுமல்ல பாரதீய ஜனதாக்கட்சியினர்-அமெரிக்காவைக் கண்டிப்பதில் அவதானமாக நடந்துகொண்டதுடன், அமெரிக்க எதிர்ப்புவாதத்தைப் பாதுகாப்பு அமைச்சர் அதிக தடவை வெளிப்படுத்தியிருந்ததுடன், அவர் பாரதீய ஜனதாக்கட்சியைச் சாராத வர் என்பதும் குறிப்பிடத் தக்கது. மேலும் பாரதீய ஜனதாக்கட்சியினர்-பாகிஸ்தானைப் பொறுத்தே தமது வெளிநாட்டுக் கொள்கைகளின் வெளிப்பாட்டைக் கொண்டிருந்தார்கள் என்பதும் பாகிஸ்தான் விடயத் தில் அமெரிக்காவின் போக்கைக் கண்டித்திருந்தார்கள் என்பதும் நினைவுகூரத்தக்கது. பாகிஸ்தானைத் தவிர்த்தநிலையில் பாரதீய ஜனதாக்கட்சியினர் அமெரிக்காவை ஒருபோதும் கண்டிக்கவில்லை. ஆனால், அப்போதைய எதிர்க்கட்சிகளின் நெருக்கடியால் ஏற்பட்ட தீர்மானத்தைக் காலம் தாழ்த்தியும், ஆரம்பத்தில் அதனை எதிர்த் ததையும் கொண்டு, பாரதீய ஜனதாவின் போக்கு அமெரிக்காவுக்கு வெளிப்படுத்தப்பட்டுவிட்டது. வெளிப்படையாக எதிர்ப்பைத் தெரியப் படுத்தினாலும், உள்ளூர அமெரிக்காவின் நண்பன் என்பதனைப் பாரதீய ஜனதா காட்டிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதீய ஜனதா அரசாங்கம் இந்துதத்துவக் கொள்கையைக் கொண்டிருப்பதுடன், இஸ்லாத்துக்கு எதிரான பாகிஸ்தானுக்கு எதிரான கொள்கையைப் பின்பற்றுவதைக் காணமுடிகின்றது. அமெரிக்காவின் இஸ்லாத்துக்கு எதிரான கொள்கையும், அதாவது பயங்கரவாதம் என்ற பொதுமைப்படுத்தப்பட்ட கொள்கைக்கும் இந்தியாவின் இஸ்லாமிய எதிர்ப்பு வாதத்திற்கும் இடையில் பொதுமையும், ஒருமைப்பாடும் தென்படுகின்றது. இஸ்லாமியரை எதிரிகளாக நோக்குகின்ற நிலையில் இந்தியாவும், அமெரிக்காவும் ஒன்றாகவே விளங்குகின்றன. அதனடிப்படையில், இரு அரசுகளது உறவும் நெருக்கமானவையே. பாரதீய ஜனதா பல தடவை அமெரிக்க எதிர்ப்பு வாதத்தினை வெளிப்படுத்தினாலும் அல்லது வெளிப்படுத்துவது போன்று காட்டினாலும், இரு அரசுகளுக்குமான உறவு சுமூகமான நிலையிலேயே விளங்குகிறது.

அமெரிக்கா - இந்தியாவிலும், இந்தியா - அமெரிக்காவிலும் பரஸ்பரம் தங்கியிருக்கின்றன. அமெரிக்காவை விட இந்தியா பல மடங்கு பலவீனமான அரசாக விளங்கியபோதும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் காணப்படும் கொதிநிலையும், ஆசியாவின் உப பிராந்தியங்களில் காணப்படும் அசௌகரியமான சூழலாலும் அமெரிக்க நலன் பேணப்படவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ஆசியாவை முதன்மைப்படுத்துவதனால், இந்தியாவை "அணைத்துக் கெடுக்கும்" கொள்கையை நீண்டகாலமாக அமெரிக்கா பின்பற்றி வருகின்றது. ஏனெனில், சீனாவுடனான பகையை முடிப்பதற்கு இந்தியாவின் நட்பு மிக உறுதியானதாக அமெரிக்காவுக்கு தேவைப்படுகிறது. இதனால், இந்தியாவை அணைப்பதும், பாகிஸ்தானை தட்டிக் கொடுப்பதுமாக அமெரிக்கா நடந்து கொள்கின்றது. இப்பிராந்தியத்தில் மிகப் பலமான சக்தியான சீனாவைக் கையாளமுயலும் அமெரிக்கா, இந்தியாவின் நட்பினைப் பேணுவது போன்று பாகிஸ்தானையும் நகர்த்த விரும்புகின்றது. இதிலேயே இந்தியாவுக்கு அமெரிக்கா மீது அதிக வெறுப்புண்டு. ஈராக் விவகாரம் - மூர்க்கத்தனமான எதிரியை முறியடித்து விட்டதுடன், அப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் நீண்டகால எதிரி தோற்கடிக்கப்பட்டு விட்டதென்றநிலை வில்லியம் புஷ் நிர்வாகத்திற்கு ஏற்படுத்தியுள்ளது. இது இஸ்லாமியரின் ஐக்கியத்தினைச் சாத்தியப்படுத்தமுடியாத நிலையை உருவாக்கியுள்ளதுடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைமைக்குப் புதிய அர்த்தமும், அரசுகளுக்கு மாறுபட்ட எல்லை நிர்ணயத்தையும் அமெரிக்கா கொடுத்துள்ளது. ஈராக் வரிசையில் ஈரான், சிரியா போன்ற அரசுகளுக்கு உடனடியாக விளைவுகளும், பல மான இஸ்லாமிய அரசுகளுக்கு நீண்டகால எச்சரிக்கையையும் அமெரிக்க, பிரிட்டிஷ் நாடுகளின் ஈராக் மீதான தாக்குதலால் ஏற்படுத் தியுள்ளன.

இதன் தாக்கமும் விளைவுகளும் இனிவரும் அரசியல் வரலாற் றில் ஏற்படப்போகும் மாற்றங்களுக்கு அடிப்படையாகும். இதில், இந்திய-அமெரிக்க நெருக்கமும் அதன் தொடர்ச்சியான பாரதீய ஜனதாகட்சியின் அரசியலும் விதிவிலக்கானவை அல்ல. பாரதீய ஜனதாக்கட்சியின் வெளிநாட்டுக் கொள்கையை மதிப்பீடு செய்த *Achin Vanaik* என்பவர் 1998 இற்குப் பிந்திய வெளிநாட்டுக் கொள்கை யில் அணுவாயுதப் பரிசோதனை மட்டுமே வெற்றிகரமான நிகழ்வு என்றும் ஏனையவை தோற்றுப்போன வரலாற்றையே ஏற்படுத்திய தென்றும் குற்றஞ்சாட்டியுள்ளார். அமெரிக்க சார்புக்கொள்கை, இலங்கை விடயத்தில் இந்தியாவுக்கு மீண்டுமொரு கறைபடிந்த அத்தியாயத்தை உருவாக்குமா என்பதே அடுத்தகட்ட சந்தேகமாக மாறியுள்ளது. வோஷிங்ரன் மாநாட்டில் இந்திய-அமெரிக்க நெருக்கம் பிராந்திய அரசியலில் மாற்றம் ஏற்படுத்துவதாக இருந்தது.

**முத்தரப்புக் கூட்டு**

செப்ரெம்பர் 11 தாக்குதலின் ஓராண்டு நினைவும் ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடும் அமெரிக்கத் தலைநகரில் உலகத் தலைவர்களை ஒன்றுகூடவைத்தது. இதில் இந்தியப் பிரதமர் வெளி விவகார அமைச்சரான தனது அணியுடன் அமெரிக்காவில் தங்கி யிருப்பதும் இந்திய அமெரிக்க நெருக்கத்தைப் புலப்படுத்தும் அம்ச மாகத் தெரிகிறது. ஆனால் ஜஷ்வந் சின்ஹா வோசிங்டன் போஸ்ட் செப்ரெம்பர் 10ம் திகதி இதழுக்கு அளித்த பேட்டி அமெரிக்கத் தலைவர்களையும் ராஜதந்திரிகளையும் அதிர்ச்சிக் குள்ளாகியிருக் கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அப்பேட்டி யில் அமெரிக் காவுக்கு எதிரான பல கருத்துக்களை அவர் வெளிப்படுத்தியிருந்த போதும் இந்தியா, சீனா, ரஷ்சியா அடங்கிய முற்தரப்புக் கூட்டு பற்றி சிந்திக்க வேண்டியுள்ள நிலை இந்தியர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது அமெரிக்கா, பாகிஸ்தான் நெருக்கத்தினாலோ அல்லது பாகிஸ் தானின் கொள்கையை அமெரிக்கா கண்டிக்காமையினாலேயே ஏற் பட்டது என்றகருத்து அமெரிக்காவுக்கு ஆச்சரியமாக அமைந்திருக் கும்.

### அமெரிக்கர் யார் பக்கம்

அமெரிக்கர்கள் இந்தியா பக்கமா? பாகிஸ்தான் பக்கமா? என்ற போராட்டம் அமெரிக்க அதிபர் வில்லியம் புஷ் பதவிக்கு வந்த பின்பு ஏற்பட்ட மிகப்பெரும் போட்டியாகும். அது முஷாராப்பின் இராஜ தந்திரத்திற்கும் வாஜ்பாயின் இராஜதந்திரத்திற்கும் பெரும் சவாலா கவே அமைந்திருந்தது. இந்திய வெளிநாட்டு அமைச்சர் ஜஷ்வந் சின்ஹா தற்போது வெளியிட்டிருக்கும் முக்கோண அமைப்பே இந்தி யர்களின் உச்சமான இராஜதந்திரம் போல் விளங்குகின்றது. இது வரை எல்லாச் சந்தர்ப்பத்திலும் முஷாராப்பின் இராஜதந்திரமே வெற்றிபெற்றுவந்துள்ளது போல் தென்படுகிறது. அதாவது இதுவரை அமெரிக்கர்கள் இந்தியர்கள் பக்கம் நிற்பது போல் காட்டிக்கொண்டு பாகிஸ்தானியர் பக்கம் உண்மையாகவே செயற்பட்டு வந்தனர். எனினும் தற்போது அமெரிக்கர்களின் இராஜதந்திரம் விமர்சனத் திற்கும் அவமதிப்பிற்கும் உள்ளாகிவிட்டது. எவ்வாறு ஈரானில் மன்னர் ஷாவிற்கு எதிரான புரட்சிக்குப் பின்னர் ஈரானுடன் உறவுகொள்ள முடியாத நிலை ஏற்பட்டதோ அதேபோன்று பாகிஸ்தானாலும் ஏற்படும் என்று அமெரிக்கப் புலமையாளர்கள் விமர்சிக்குமளவுக்கு நிலைமை மாறிவிட்டது. அதுமட்டுமல்ல இந்தியர்கள் முற்தரப்புக் கூட்டில் சேருவார்களேயானால் அமெரிக்கர்களுக்கும் அவர்களது நீண்டகால நலன்களுக்கும் நெருக்கடி ஏற்படும். அதே சந்தர்ப்பத்தில் பாகிஸ் தானியரை தனிமைப்படுத்துவதோ அல்லது முஷாராப்பிற்குப் பதிலாக வேறு பாகிஸ்தானியரை அமர்த்துவதோ எதுவாயினும் அதுவும் அமெரிக்கர்களுக்கு ஆபத்தானது தான். இதில் எது அதிக ஆபத் தானது என்பதனையே அமெரிக்கர்கள் கணக்குப்போட்டு மீதியைத் தீர்மானித்துக் கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தரப்புக் கூட்டுக்கு சாதகமான நிலை

முத்தரப்புக் கூட்டு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் ஷங்காய்-5 (*Shangai-5*) உடன்படிக்கையைத் தொடர்ந்து ஆரம்பித்துவிட்டது என்றே கூறலாம். ஷங்காய்-5 உடன்படிக்கையில் ரஷ்சியாவும் சீனாவும் நெருங்கியே வந்துவிட்டன. அதுமட்டுமல்ல இரண்டு நாடுகளுமே கம்யூனிஸக் கொள்கையின் பெயரால் மிகப்பழைய நண்பர்களாக விளங்கியவர்கள். சீனப் புரட்சிக்குப் பெரும் உதவிபுரிந்த நாடு சோவியற் யூனியன் என்பதை மறந்துவிட முடியாது.

சீனாவின் இராணுவ வளர்ச்சிக்கு பக்கபலமான அரசாக விளங்கியதும் சோவியற் யூனியனே. இதனால் இரண்டு அரசுகளும் ஏற்கனவே இணங்கியிருந்ததுடன் அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு ஏவுகணைத்திட்டத்திற்கு எதிராகவும் நேட்டோவின் விஸ்தரிப்புக்கு எதிராகவும், நேட்டோவின் மாற்றுக்கொள்ளையைப் பற்றியும் மாற்றுக் கருத்துக்கொண்ட நாடுகள் ஆகும்.

குறிப்பாக ரஷ்சியாவின் ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் பதவிக்கு வந்தபின்பு இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ, பொருளாதார உறவு தீவிரமடைந்துள்ளதுடன் அமெரிக்காவுக்கு எதிரான கூட்டுக்களையும் இணைவுகளையும் ஏற்படுத்திவருகின்றார். மிக அண்மையிலும் அதற்கு முன்னரும் இரு அரசுகளும் ஈரான், ஈராக் போன்றவற்றுடன் நெருக்கமான உறவைப் பேணுகிறது. மேலும் ஈராக் மீதான இரண்டாவது அமெரிக்கப் போர்ப் பிரகடனத்திற்குப் பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவித்த அரசுகளாக அவை விளங்கின.

அமெரிக்காவும் அதன் அரசியல் நிபுணர்களும் பல இராஜதந்திர அணுகுமுறைகளைப் பின்பற்றிய பின்னும் ரஷ்சியர்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தத் தவறுவதில்லை. ரஷ்சியர்களின் எதிர்ப்பினால் எந்த பயனும் இல்லை என்ற வாதம் அரசியல் விமர்சகர்களிடம் உண்டுஆனால் அவ்வாறு ரஷ்சியாவும் சீனாவும் எதிர்ப்பதனால் அமெரிக்கப் போர்ப் பிரகடனங்களை முதலாவது ஈராக் மீதான யுத்தம் போன்று சாத்தியப்படுத்த முடியாதிருந்தது. இதனை சற்று விரிவாக நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக் மீதான முதலாவது யுத்தம் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சிலின் தீர்மானமாக அமைந்துள்ளமையால் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை யுத்தமாக முடிந்தது. இதில் அமெரிக்கர்கள் அதிக இலாபம் அடைந்தனர். ஏனெனில் கூட்டுப் படைகளில் அங்கம் வகித்த எல்லா அரசுகளிடமிருந்தும் ஈராக் மீதான யுத்த செலவினங்களை அறவீடு செய்துகொண்டது அமெரிக்கா. ஆப்கானிஸ்தான் யுத்தமும் அவ்வாறு நிகழவில்லை. தனியே அமெரிக்காவும் அதன் நெருங்கிய சகாவான பிரித்தானியாவும் மட்டுமே போரில் ஈடுபட்டன. ஏனைய நாடுகள் தட்டிக்கழித்ததுடன் சமாதான கண்காணிப்புப் படையாக அலுவலை நிறைவேற்றிக் கொண்டன. ரஷ்சியா தனித்து ஆயுத உதவியையும் படை உதவியையும் வழங்கியது. இதனால் அமெரிக்காவால் தனித்து பிரிட்டிஷ்ஷீடன் சேர்ந்து யுத்த செலவைத் தாக்குப்பிடிக்க வேண்டியேற்பட்டதனால் உள்நாட்டின் பொருளாதார நெருக்கடி தவிர்க்கமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. ரஷ்யர்களதும் சீனர்களதும் எதிர்ப்பை மேலோட்டமாக கணக்குப்போட முடியாது. பொருளாதார வீழ்ச்சி வல்லரசின் ஆதிக்கத்தை அழித்துவிடும் என்பது உலகத்தின் அனுபவம். எனவே இம்முயற்சிகள் அமெரிக்காவின் சரிவுக்கு வேகமான வழிவகுப்பை நீண்டகாலத்தில் ஏற்படுத்தலாம்.

அடுத்து சீனாவும் ரஷ்சியாவும் கூட்டாகவும் தனியாகவும் இந்தியாவுடன் வர்த்தக உடன்பாடுகளை ஏற்படுத்தியுள்ளன. மேலும் ரஷ்சிய-இந்திய பாதுகாப்பு இராணுவ, ஆயுத உடன்பாடுகள் பேணப்பட்டு வருவதை குறிப்பிடமுடியும். இரு நாடுகளும் இந்தியாவுடனான அதிருப்தி தரும் விடயங்களைத் தவிர்ப்பதுடன் நெருக்கத்துக்கான பொருளாதார வர்த்தக உறவுகளை ஏற்படுத்தியும் பேணியும் வருகின்றன.

## முத்தரப்புக் கூட்டுக்கு பாதகமான காரணிகள்

முத்தரப்புக் கூட்டுக்கு பாதகமான காரணிகள், சாதகமான காரணிகளைக் காட்டிலும் வலுவடைந்து வருகின்றன. முத்தரப்புக் கூட்டுக்கு சீனர்களையும் ரஷ்சியர்களையும் விட இந்தியர்களே அதிகம் எதிர்ப்பையும் நிராகரிப்பையும் ஏற்படுத்திவருகின்றனர். காரணம் இந்தியர்களின் பொருளாதார இராணுவ வளர்ச்சியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிடும்போது சீனர்கள் மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளனர். சீனாவின் பொருளாதார விவசாயக் கட்டமைப்பிலும் வர்த்தக விருத்தியிலும் முன்னணி வகிப்பதுடன் தொழில்நுட்ப ரீதியான இராணுவ வளர்ச்சியிலும் முதன்மை வகிக்கின்றது. இதற்கு உண்மையான காரணம் என இந்தியர்கள் கருதுவது சீனா-அமெரிக்கா நெருக்கம் காணப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட அமெரிக்க உதவியும், ஒத்துழைப்பும் என்றே முடிவுக்குவந்தனர். அவற்றைவிட பல காரணிகள் சீனர்களின் எழுச்சிக்கு வழிவகுத்தது. இதனைக் கருத்திற்கொண்டே இந்தியர்கள் அமெரிக்கஉறவை தவிர்க்க விரும்பாதவர்களாக விளங்குகின்றனர். மேலும் ஒரு துருவ அரசியல் என்ற நிலையில் அமெரிக்க உதவியும் ஒத்துழைப்பும் அவசியமானதென இந்திய ஆளும் வர்க்கம் கருதுகின்றது.

அடுத்து இந்தியர்களின் எல்லையில் சீனர்கள் இருப்பதனாலும் 1962ம் ஆண்டு யுத்தம் நேருவின் பஞ்சசீல உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்பு நிகழ்ந்ததெனவும் கருதுகின்ற நிலை காணப்படுகின்றது. இதனால் எழுந்துள்ள புவிசார் தொடரிணைப்பு அபாயமாக அமைந்துவிடும் என்ற அச்சுறுத்தல் அமெரிக்காவுடன் ஒட்டிக்கொள்வது இலாபகரமானது என்பதை இந்தியாவுக்கு உணர்த்தியுள்ளது. இதனை அமெரிக்கர்களும் அடிக்கடி இந்தியர்களுக்கு நினைவுபடுத்தி முத்தரப்புக்கூட்டை ஏற்படவிடாது தடுத்துவிடுகின்றனர்.

ஏனெனில் அவ்வாறு முத்தரப்புக்கூட்டு சாத்தியமடையுமாயின் புதிய உலக ஒழுங்கே தலைகீழாக மாற்றமுறுவது மட்டுமன்றி அமெரிக்காவின் சாம்ராஜ்ஜியக் கனவு தகர்ந்துவிடும். இதனால் முத்தரப்புக் கூட்டை தகர்க்கும் ஆயுதமாக இந்தியாவை தமது பக்கம் வைத்துக்கொள்வதிலும் இந்தியாவுக்கு வேண்டிய ஆயுத, தளபாட உதவிகளையும், பொருளாதார ஒத்துழைப்புக்களையும் அமெரிக்கா மேம்படுத்தி வருவதில் கவனம்செலுத்தி வருகிறது.

### சீனர்களின் கடலாதிக்க பரிணாமம்

எல்லாவற்றுக்கும் மேலாக சீனர்களின் இராணுவ பொருளாதார அரசியல் பலமே முத்தரப்புக் கூட்டை ஏற்படுத்தவிடாது தடுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. அது இந்தியர்களுக்கு மட்டுமல்ல அமெரிக்கர்களுக்கும் ஆபத்தானதாகவே அமையும் என்ற அச்சம் மேலோங்கியுள்ளது. சீனர்கள் தற்போது கடலாதிக்கத்திலும் தீவிரம் காட்டிவருகின்றனர். ஆசியாவில் ரஷ்சியர்களுக்கு அடுத்த நிலையில் பலமான கடலை ஆளும் பலத்தை கொண்டவர்களாக சீனர்களே விளங்குகின்றனர். சீனா 2020 ஆம் ஆண்டுக்கிடையில் 40,000 தொன் எடையுள்ள இரண்டு விமானம் தாங்கிக் கப்பல்களை தயாரித்து கடற்படையுடன் இணைப்பதாகவும் அவற்றை இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும் பசுபிக் வட்டகையிலும் நிறுத்துவதாகவும் தீர்மானித்து செயற்பட்டு வருகின்றது. மேலும் சீனா கடற்படையின் சேவையை உயர்சேவையாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. அந்தமான் நிக்கோபார் தீவிலிருந்து 40 கடல்மைல் தொலைவில் உள்ள *great coco's* தீவில் சீனா *signal intelligence (SIGINT)* ஐ நிறுவியுள்ளது. ஏற்கனவே மியான்மாரின் கடல் பிரதேசத்தில் பல கடற்படைத் தளங்களை சீனா கூட்டாக நிறுவியுள்ளது. குறிப்பாக *munaung, Hainggyi, Katan Island, Zadaikyi Island and Mergui* என்பன முக்கிய தளங்களாகும். இது பீஜிங்கில் இருந்து இந்து சமுத்திரப் பிராந்தியத்தை இணைக்கும் தரைப் .போக்குவரத்தையும் விமானத் தளங்களையும் நிறுவும் முயற்சிக்கு வழிவகுத்துள்ளது. இது சீனாவின் தென்கிழக்கு மாகாணமான *yunan* ஐயும் மியான்மாரின் *yangon* ஐயும் நெருக்கமடையச் செய்வதுடன் வங்களா விரிகுடாவின் நேரடியான தொடர்பையும் கொண்டிருக்கின்றது. மேலும் இதனால் *Malacca Singapore straits* ஐயும் நெருக்கமான கண்காணிப்புக்குள் கொண்டுவர வாய்ப்பை ஏற்படுத்தும்.

1992ம் ஆண்டிலிருந்து சீன-மியான்மார் உறவு விரிவானதாகவும் இராணுவ அரசியல், பொருளாதார உறவில் நெருக்கத்தையும் கண்டுகொள்ள முடிகிறது. 1992ம் ஆண்டிற்குப் பின்பு 1.6 பில்லியன் அமெரிக்க டொலருக்கு சீனா ஆயுதத் தளபாடங்களை மியான் மாருக்கு வழங்கியுள்ளது. மேலும் மியான்மார் - பாகிஸ்தான் நெருக்கமும் மறுபக்கத்தில் ஏற்பட்டுவருகின்றது. மியான்மார் விமானப் படைக்கு சீனாவிலும் பாகிஸ்தானிலும் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது. மேலும் மியான்மார் படைகளுக்கான தரைத்தாக்குதல் (V-5) ஆகாயத் தாக்குதல் (F-7) என்பவற்றுக்கான பயிற்சித்திட்டங்களை சீனா மேற்கொண்டு வருகிறது. மொத்தத்தில் சீனா -மியான்மார் நெருக்கம் மிகத் தீவிரம் பெற்றுவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இவ்வாறு இந்தியாவின் அயல் நாடுகளுக்குள் சீனாவின் ஊடுருவல் வங்களா விரிகுடாக்குள்ளும் இந்திய சமுத்திரப் பிராந்தியத்திலும் சீனர்களின் வருகை இந்தியர்களை மட்டுமல்ல அமெரிக்கர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இது அமெரிக்கர்களின் நலன்களை இப் பிராந்தியத்துக்குள் பாதிக்கும் விடயமாக மாற்றமடையும். சீனாவின் விஸ்தரிப்பைத் தடுக்கவே ஆப்கான் போர் நிகழ்ந்தது என்ற அவதானிப்பு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

முத்தரப்புக் கூட்டு சாத்தியமடைவதை விட சாத்தியப்படாது போவதற்கான காரணிகளே அதிகம் உண்டு. ஆனால் அதையும் தாண்டி சாத்தியமானதாக மாற்றமடைவதே தற்போதைய உலக ஒழுங்குக்கும் அமைதிக்கும் சிறந்தது. இந்தியர்கள் தமது நலன்களுக்காக அமெரிக்கர்களுக்கு தமது அயலவர்களைக் காட்டிக் கொடுப்பது அவர்களுக்கே ஆபத்தானதாக முடியும்.

தேசிய ரீதியான எதிரியைத் தோற்கடிப்பதற்கு பிராந்திய எதிரிகள் நட்புக் கலப்பது போல் அமெரிக்காவை எதிர்ப்பதற்காக இந்தியர்கள் முத்தரப்பை உருவாக்குவதே ஆசியாவுக்கும் இந்தியர்களுக்கும் இலாபகரமானது. தவறு நிகழுமாயின் ஆசியா இழக்கப்படுவதுடன் இந்தியர்களும் தாக்கப்படுவார்கள். இதுவரையும் அமெரிக்கர் யார் பக்கம் என்ற கேள்வி தற்பொழுது இந்தியா பக்கம் சாய்ந்துள்ளது. இந்தியா அமெரிக்க பக்கமா? முற்தரப்புப் பக்கமா? உதட்டளவில் முற்தரப்பை ஜஷ்வந் சின்ஹா உச்சரிப்பாராயின் இந்தியா எதனையும் சாதிக்காத அரசாகவே தொடர்ந்தும் விளங்கும்.

### தென்னாசிய தலைமைகளின் அரசியல் வியூகங்கள்

செப்ரெம்பர் தாக்குதலுக்கு பின்பு நியூயோர்க்கில் நடந்து முடிந்த ஐக்கிய நாடுகள் மகாநாடு - உலகத் தலைவர்களின் அரசியல் வியூகங்களைப் படம்பிடித்துக் காட்டியது. அதிலும் ஐரோப்பிய-அமெரிக்கத் தலைவர்களுக்கு நிகராகத் தெற்காசியத் தலைவர்கள் விளங்கியது ஊடகங்களுக்கே பரபரப்பாக அமைந்திருந்தது. வறுமை, பொருளாதாரச்சுமை, போர், வன்முறை என்பன பேசப்பட்டாலும், பயங்கரவாதம் ஐ.நா.மறுசீரமைப்புப் பற்றிய உரை மேற்கு நாட்டுத் தலைவர்களைப் போல், தெற்காசியத் தலைவர்களின் உரைகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான இடம்வகித்தது. இந்தியா, பாகிஸ்தான், இலங்கைத் தலைவர் களின் உரைகளின் பின்னாலுள்ள அரசியல் உள்நோக்கங்களையும் நோக்குவோம்.

**இந்தியா**

இந்தியர்களின் நியூயோர்க் விஜயமும் ஐ.நா. உரையும் இரண்டு பிரதான நோக்கத்தைக் கொண்டது. ஒன்று பாகிஸ்தானையும் அதன் எல்லை கடந்த பயங்கரவாதத்தையும் உலகத்திற்கு மீளவும் அம்பலப்படுத்துவது. அதனூடாகப் பாகிஸ்தானை உலக ஆதரவு சக்திகளிடமிருந்து அன்னியப்படுத்துவது. இத்தகைய கோணத்தில் தொடங்கியஇந்தியர்களின் பிரதான உரை பாகிஸ்தானிடமிருந்து எதிர் நோக்கும் அபாயங்களையும் கோடிட்டுக்காட்டத் தவறவில்லை.

பாகிஸ்தானியர் என்ற தனி சக்தியை விட அவருக்கு ஆதரவும் பக்கபலமாகவும் உள்ள அமெரிக்காவை இந்தியர் கண்டிக்கத் தவற வில்லை. வில்லியம் புஷ்ஷைசந்தித்த வாஜ்பாய் ஐ.நா. உரையை திரும்பக்கூறுவது போல் பாகிஸ்தானைப் பற்றி மிகத்தெளிவாக குறிப் பிட்டதுடன் புஷ் அவற்றை ஏற்றுக்கொண்டதாகவும் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றில் தெரிவித்தார். எப்படி உலகம் பயங்கரவாதத்தை கண்டிக்கின்றதோ அப்படியே வாஜ்பாய் பாகிஸ்தானை விரட்டும் அரசியலை நிகழ்த்தியுள்ளார்.

இரண்டாவது - ஈராக்கில் பணிபுரிய இந்தியப் படைகளை அனுப்பும் பிரச்சனையை பாகிஸ்தான் ஊடாக வாஜ்பாய்-புஷ்ஷிக்கு விளக்கியுள்ளார். அதாவது பாகிஸ்தானின் பயங்கரவாதத்தால் அச் சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் இந்தியாவை பாதுகாக்க இராணுவம் அதிகம் தேவையெனக் கூறி அதனாலேயே ஈராக்கிற்கு இந்தியப்படைகளை அனுப்பமுடியாது என்று தெரிவித்துள்ளார். இது ஒருவகை நொண்டிச்சாட்டு என்றே கூறலாம். மாறாக பாகிஸ்தானால் தான் இந்தியா-அமெரிக்காவுக்கு உதவ முடியாதுள்ளது என்ற இராஜ தந்திர அரசியலையும் கலந்து வாஜ்பாய்-புஷ்ஷிக்கு விளக்கியுள்ளார். முட்டாள்தனமான அரசியலை மேற்கொள்ள விரும்பாத வாஜ்பாய் மிக நாகரிகமாகவும் தந்திரமாகவும் அதனை அமெரிக்க ஆட்சியாளர் களுக்கு எடுத்துக்கூறியுள்ளார். யாதார்த்தமாக இந்தியாவின் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யை உலகம் ஏற்றுக்கொள்ளும் என்பதுடன் இதன் பின்னான இராணுவ அரசியல் விளைவுகளையும் பாகிஸ்தான் எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும்.

**ரணில் விக்கிரமசிங்க**

இலங்கையின் முன்னாள் பிரதமர் உள்நாட்டு அரசியல் பிரச்சினை பிராந்திய அரசியல் நெருக்கடி, உலக அரசியல் நெருக்கடி என்று ஏகப்பட்ட பிரச்சினைகள். ஜனாதிபதி சந்திரிகாவுடனான போட்டியில் வெற்றிபெற்று ஐ.நா.வுக்குச் சென்றாலும் வடக்கு - கிழக்கு அரசியலைக் கையாளும் பலத்தைக் கொடுத்த சக்திகளை திருப்திப்படுத்தும் போக்கை அவர் ஐ.நா.வில் பெரிதுபடுத்த தவறவில்லை.

மேலும் அவர்களது உதவிகளுக்கெல்லாம் நன்றியும் கூறியிருந்தார். ஆனால் இந்தியப் பிரதமர் உரையில் குறிப்பிட்ட ஐ.நா. மறுசீரமைப்புப் பற்றி இலங்கைப் பிரதமர் அதிக கவனமும் முக்கியத்துவமும் தனது உரையில் கொடுத்திருந்தார். அது ஒரு வகையில் இந்தியா சார்புநிலையை தான் தக்கவைத்திருக் கின்றேன் என்று காட்டுவதற்கான இராஜதந்திரத்தை புலப்படுத்து வதாக அமைந்திருந்தது. ஏனெனில், ஜே.வி.பி என்ற அமைப்பில் தீவிர அரசியல் இந்திய ஆசீர்வாதத்துடன் தான் அரங்கேறுகின்றது என்பதுவும் அதன் முயற்சியாக உள்நாட்டு அரசியலில் மாற்றம் நிகழலாம் என்பதும் தந்திரத்தின் தொனிப்பாக இருந்தது.

ரணில் விக்கிரமசிங்க - இந்தியாவுடன் பொருளாதார, வர்த்தக உறவை மேம்படுத்த இரு குழுக்களை நியமிக்க உடன்பட்டிருப்பதுடன் வாஜ்பாயுடனான உரையாடலின் போது பொருளாதார அபிவிருத்திக்கான வழிவகைகள் பற்றிக் கலந்துரையாடியுள்ளார். அதே நேரம் அமெரிக்காவுடன் மேற்கொள்ளவுள்ள சுதந்திர வர்த்தக ஒத்துழைப்பு ஒப்பந்தம் பற்றியும் ஏனைய நாட்டுத் தலைவர்களுடன் வர்த்தகம், பொருளாதாரம் என்ற அடிப்படையில் உரையாடல்களை நிகழ்த்தியுள்ளார். இதன் பின்னால் இலங்கையின் பொருளாதார சுபீட்சம் என்பதுடன் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியலில் அடங்கியிருந்தது. தென்னிலங்கையில் தனக்கு எதிரான சக்திகளுக்கு முறியடிக்கவும், வடக்கு-கிழக்கில் ஏற்பட்டுவரும் சமாதான அரசியல் சூழலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கு சாதகமாகப் பயன்படுத்துவதுமே நோக்கமாக இருந்தது. பொருளாதார உதவியும் உலக நாடுகளின் வருகையும் என்பதை ரணில் விக்கிரமசிங்க விளங்கிக் கொள்ளாதவர் அல்ல. அவர் இலக்கை அடைவதன் வாயிலாக முழு இலங்கையையும் ஐக்கியப் படுத்துவதுடன் எதிர்கால ஆட்சியாளனாகத் திகழலாம் என்ற நம்பிக்கையுடனேயே செயற்பட்டார். அதனை விளக்கவைக்கும் ஒரே அம்சமே ஐ.நாவில் ஜனாதிபதிக்குப் பதிலாக பிரதமரின் உரை சாத்தியப்பட்டது. அந்தளவுக்கு செல்வாக்குடைய சக்தியான மேற்கு நாடுகள் மத்தியில் ரணில் விக்கிரமசிங்க விளங்குகின்றார். இதில் இந்தியாவைக் கையாளுவதே அவர்களது ஐ.நா. மறுசீரமைப்பு என்ற கருத்தாகும். வாஜ்பாய் கூட ஆரம்பத்தில் ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை என்ற கோரிக்கையைக் கொண்டிருந் தாலும் பாகிஸ்தானை கையாளுகின்ற நிலையையே முதன்மைப்படுத் தியிருந்தார்.

எனவே, வாஜ்பாய் காட்டாத கருசனையையும் முக்கியத்துவத்தையும் இலங்கைப் பிரதமர் காட்டியது இந்தியா பொறுத்த அவரது அள வீட்டின் பிரதிபலிப்பாகும். ரணில் விக்கிரமசிங்க மேற்கில் நிரந்தர நண்பன். இந்தியாவின் தற்காலிக கூட்டாளி. இதனையே அவர் தொடர்ந்தும் கடைப்பிடிக்க விரும்புகின்றார். முழு உலக நாடுகளின் சந்தையாக இலங்கையை மாற்றுவதும் அதன் விளைவாக ஏற்படும் பொருளாதார சுபீட்சத்தைக்கொண்டு தென்னிலங்கை அரசியலில் நிரந்தர இடத்தைப் பிடிப்பதும் தமிழர்களின் தாயகப் போராட்டத்தை யும் மக்களையும் பொருளாதார போட்டிக்கூடாகத் தகர்ப்பதையே தற் போதைய கொள்கையாகக் கொண்டிருக்கின்றார்.

## ஆசியான் – இந்திய உச்சி மகாநாடு

ஆசியான் - இந்திய உச்சி மகாநாடு புதிய மாற்றங்களை கோடிட்டுக் காட்ட முயன்றுள்ளது. மேற்குப் பொருளாதாரத்துடன் நெருக்கத்தை கொண்டிருந்த இந்தியா-தென்னாசியாவுக்குள் தனித்துவமும், பாதுகாப்பும், பேணிய இந்தியா-திடீரென கடந்த சில ஆண்டுகளாக ஆசியானை நாடிச் செல்வதன் நோக்கம் எதுவென்பதே தற்போது எழுந்துள்ள கேள்வியாகும். இந்தியாவின் வருடாந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார வளர்ச்சி கடந்த ஒரு தசாப்தத்தில் 5-7 சதவீதத்திற்குள் அமைந்திருந்தது. ஆனால் 2002 இல் இந்நிலை குறைவான வீதத்தையே பதிவுசெய்துள்ளது (52%). இது மட்டுமன்றி வறுமை, வேலையின்மை, மானிடவிருத்தி, சமூக விருத்திகள் எல்லாமே மிகமோசமான பாதிப்பை கொண்டுள்ளதாக அமைந்திருக்கின்றது. இதனால் இந்தியாவின் பொருளாதாரத்தை பலப்படுத்த வேண்டிய அவசியம் மிக நீண்ட காலத்திற்கு முன்பே உணரப்பட்ட போதும் அதனை அமுல்படுத்துவதில் பல நெருக்கடிகள் அவ்வப்போது ஏற்பட்டு வந்தன. இந்தியாவின் பொருளாதாரம் மட்டுமல்ல அரசியல்-சமூகச்சீரழிவுகள் அதிகரிக்கும் நிலை காலப்போக்கில் இந்தியாவை ஆபத்தான நிலைக்கு கொண்டு சென்றுவிடும் என்பது பொருளாதார, சமூகவியலாளர்களின் ஆதங்கமாக அமைந்திருந்தது.

ஆசியான் நாடுகளுடன் கலந்துரையாடுகின்ற போது இரண்டு காரணிகளை வலுவாக இந்தியா உணர்த்தியிருந்தது.

ஒன்று, தடையற்ற வர்த்தகத்தினை (Free Trade) இந்தியாவுடன் ஆசியான் நாடுகள் மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுத்தது அதனை ஆசியான் நாடுகள் வரவேற்றுள்ள தாகவும், அதனைப் பரிசீலிக்க உள்ளதாகவும் ஆசியான் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்ததாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. அதன் முக்கியத்துவத்தை உணர்வதனை விடுத்து இந்தியர் ஆசியானுடன் அவ்வாறு கோரிக்கை விடுவதற்கு வலுவான காரணம் எதுவென்பதே முக்கியமாகும்.

இந்தியர் ஐரோப்பிய நாடுகளுடனான உறவின் போது இதே கோரிக்கையை சில நாடுகளிடம் விடுத்தனர். ஆனால் ஐரோப்பிய நாடுகள் எவையும் கோரிக்கைக்கு பெரியளவில் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. மாறாக இந்தியாவில் வர்த்தகம் செய்ய விரும்புகிறார்கள் என்பதை மட்டுமே கொண்டிருக்கிறார்களே அன்றி இந்தியப் பொருட்களைத் தாம் கொள்வனவு செய்யும் முறைமையை தவிர்க்க விரும்புவதுடன் WTO வின் நிபந்தனைக்குட்பட்டே இந்தியப் பொருட்களை ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துச் செல்ல விரும்புகின்றனர். அதுகூட ஐரோப்பிய நாடுகளில் தட்டுப்பாடான அதேநேரம், உயர் குடும்பங்கள் நுகருகின்ற பொருட்களை மட்டுமே ஐரோப்பிய வர்த்தக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்கள் கொள்வனவு செய்ய விரும்புகின்றனர். இந்தியாவோ, இங்கு உற்பத்தியாகும் அனேக பொருட்களை ஐரோப்பிய நாடு களுக்கு ஏற்றுமதி செய்ய விரும்புகிறதென்பது அடிப்படையானதாகும். இந்த இழுபறித் தன்மை இந்தியர்கள், ஐரோப்பிய - அமெரிக்க நாடுகளுடன் கொண்டிருக்கும் வர்த்தக உறவை படிப்படியாக குறைக்க வழிவகுக்கும். மேற்கு நாடுகள் இந்தியாவுடன் வர்த்தக உறவை விரும்பும் அதேவேளை, இந்தியப் பொருட்களை எல்லைக்குள் நுகரும் பழக்கத்தை பேணுவதுடன், இந்தியப் பொருட்கள் தமக்கு பாதகமாக அமைந்து விடுமென கருதுகின்ற போக்கும் காணப்படு கின்றது. இதன் பாதிப்புக் களை உணரும் இந்திய அரசாங்கம், மாற்று நடவடிக்கைக்குள் இந்தியாவை கொண்டு செல்கின்றது.

இந்தியா தென்னாசியப் பிராந்தியத்திற்குள் ஆபத்தான அரசியலால் அதிக இழப்பீடுகளை பொருளாதார ரீதியில் எதிர் கொள்கிறது. பாகிஸ்தானுடனான அரசியல் முரண்பாடு, ஏனைய நாடு களுடனான உறவுகளில் காணப்படும் பாதகமான போக்கு, வர்த்தகம்-சந்தை வாய்ப்புக்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் என்பவற்றால் பிராந்திய ஒத்துழைப்புப் பொருளாதாரத்தை கட்டிவளர்க்க முடியா துள்ளது. தென்கிழக்காசியப் பிராந்தியத்தின் முன்னுதாரணத்தை இந்தியா பின்பற்ற முயலுமாயின் - அரசியல் அதிகாரத்தை இழப்ப துடன் பிரிவினைக்கு வழியாக அமைந்து விடுமென அஞ்சுகின்றது. மேலும், உள்நாட்டில் மகத்தாக கட்டியெழுப்பப்பட்டுள்ள அரசியலை தக்கவைக்க முடியாது என்பதுடன், வன்முறையையும் கட்டுப்படுத்த முடியாது எனக் கருதுகின்றது. இதனால் தென்னாசிய அல்லாத பிராந்தியத்துடன் இணைந்து செயற்படுவது அரசியல் பொருளாதார அடிப்படையில் இலாபகரமானதென இந்தியா கருதுகின்றது.

இது மட்டுமன்றி, இந்தியா தென்னாசியப் பிராந்தியத்திற்குள் தலைமைதாங்கும் அரசியலை தொடர்ந்தும் தக்கவைக்க வேண்டு மாயின், தென்னாசியா தவிர்ந்த பிராந்தியத்துடன் கூட்டிணைந்து செயற்படுதல் அவசியம். அதனடிப்படையிலேயே ஐரோப்பாவுடன் எடுத்த முயற்சி தோற்றுப்போனமையால், தென்கிழக்கு ஆசியாவுடன் இணைந்து செயற்பட முனைகிறது. இதற்கு முன் ஐரோப்பிய நாடு களுடன் எடுத்த முயற்சிகளில் இந்தியா பக்கம் நியாயப்பாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. ஏனெனில், ஆசியானில் சீனா அங்கத்துவ நாடாக இல்லா விடினும் நெருக்கமான உறவைப் பேணுகின்ற நாடு என்பது மட்டு மன்றி பொருளாதாரப் பலத்திலும், இராணுவ அரசியல் வலுவிலும் இந்தியாவுக்கு சவாலான நாடு என்பதனால் இந்தியா ஐரோப்பிய அரசுகளை நாடியது. அது வலுவற்றுப் போகும் சூழலில் அல்லது ஐரோப்பியர்களுடனான பேரம்பேசலை அதிகரிப்பதற்கு தென்கிழக்காசி யாவுடன் இந்தியா நெருக்கமான பொருளாதார உறவை ஏற்படுத்த விரும்புகிறது என்றும் கருதலாம்.

மேற்கின் இரட்டைவேடம் மட்டுமன்றி ஆசியானுடன் நெருக்க மடைந்திருக்கும் சீனா - பாகிஸ்தான் உறவையும், பொருளாதார இணைப்பினூடாக துண்டிக்க முயலுகின்றது. இந்தியாவின் பிரதான நோக்கங்களில் ஒன்றாக ஐக்கிய ஐரோப்பாவின் இணைப்பு அச்சத் தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. பிராந்தியங்கள் தேசிய எல்லைகளைக் கடந்தநிலையில், பொருளாதாரத்தினை வளர்ப்பதற் காக ஐக்கியமடைகின்றன. குறிப்பாக வட அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, ஆசியான் என்பன கடந்த நூற்றாண்டின் பின்னரைப் பகுதி யில் இணைப்பையும், விருத்தியையும் அடைந்துள்ளன. ஆனால் தென்னாசியாவை கிழக்காசியாவைப் போல் ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை. அரசியல் அதிகாரப் போட்டி யினால் பொருளாதார அடிப்படை தகர்ந்து போகின்றது. தென்னாசிய மக்கள் மேலும் மேலும், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் நிலைக்கே தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதன் தாக்கத்தை இந்தியாவும் அடைந்துகொண்டே இருக்கின்றது. ஐக்கிய ஐரோப்பா எழுச்சியடையு மாயின், இந்தியாவின் பொருளாதாரத்தின் முதலீடுகள் குறைவடைவ துடன் இந்தியாவை வர்த்தக மயப்படுத்துவதற்கான வாய்ப்புக்களே அதிகரிக்கும். ஏனெனில், கிழக்கு ஐரோப்பாவுக்கான பரிமாற்றம் ஐக்கிய ஐரோப்பாவுக்குள் அதிகரிக்கும். அதாவது நேரடி முதலீடுகள் மேற்கிலிருந்து கிழக்குக்கு அதிகமாகப்பாயும். அதனால் இந்திய முதலீடுகள் மட்டுப்படுத்தப்படும். புதிய வேங்கைகளான ஹங்கேரி, போலந்து, செக் குடியரசுகள் என்பன கிழக்கு ஐரோப்பாவுக்குள் எழுச்சி கண்டுவருகின்றன. இது கிழக்காசிய வேங்கைகள் போல அமையாதுவிட்டாலும் உலக மயமாக்கத்தை உள்வாங்குவதிலும், அதனால் ஏற்படும் பொருளாதார வளர்ச்சியிலும் முன்னணி வகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. இந்தியப் பிரதமரின் ஆசியான் விஜயம், இந்தியப் பொருளாதார அரசியலை புதிய திசைக்கு இட்டுச் செல்லுகின்றதற்கு வித்திடுவதாக அமையும். அதனை ஆசியான் நாடுகள் எப்படி எதிர்கொள்ள முயலுகின்றனவோ, அதனைப் பொறுத்து மாற்றம் சாத்தியப்படும்.

**கூரன்டல் பொருளாதாரம்**

புதிய உலக ஒழுங்கின் பிந்திய அபிவிருத்தி தென்னாசியாவுக்குள் அரசியல் இராணுவ, பொருளாதார சச்சரவுகளை அதிகம் மிகைப்படுத்தியுள்ளது. அமெரிக்க நலனுக்கு உகந்த வகையில் வரையப்படும் ஒழுங்குகள் முன்னுக்குப் பின் முரண்பாட்டையும் பகைமையும் தூண்டிவருகின்றது. அடிப்படையான ஒத்திசைவுகளை காண வேண்டிய பிராந்தியம் மேலாதிக்க சக்திகளின் ஊடுருவலாலும் செல்வாக்கினாலும் மேலும் பிரிவினையையே வழியெனக்கருதி செயல்படுகின்றது. இதனால் பிராந்தியம் மட்டுமல்ல நாடுகளின் அரசியல் உறுதிப்பாடும், பொருளாதார செழிப்பும் இராணுவ வலிமையும் வலுக்குன்றுவதுடன் மக்கள் வறுமையாலும், சமூக இசைவாக்கமின்மையாலும் அழிவுகள் அதிகரிக்கின்றன. தென்னாசியாவில் இந்திய பாகிஸ்தான் போன்று இலங்கைப் பிரச்சினையின் போக்கையும் அதன் விளைவுகளையும் அடுத்த அத்தியாயத்தில் பரிசீலிப்போம். இதில் அமெரிக்கா, இந்தியா என்ற இரண்டு அரசுகளையும் அதிகம் முதன்மைப்படுத்தினாலும் மேற்கின் கொள்கை வகுப்பே பிரதானமாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 3

# இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஆதிக்க சக்திகளின் விஸ்தரிப்பு கொள்கை

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு மிக நீண்டகால அரசியல் முரண்பாட்டை ஏற்படுத்தியிருந்தது. சுதந்திர இலங்கையில் ஆட்சி மேற்கொண்ட அனைத்து சிங்கள அரசியல் தலைமைகளும் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனைக்கு தீர்வுகாண பல முயற்சிகள் முன் வைத்தனர். இலங்கைக்குள் கொதிநிலையாக இருந்த இனப்பிரச்சனையை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பிராந்திய மட்டத்திற்கு நகர்த்தினார். இலங்கை தமிழரின் பிரச்சினைக்கு இந்தியாவே காரணம் என்பது போல் இலங்கை-இந்திய உடன்பாட்டை ராஜீவ்காந்தியுடன் மேற்கொண்டு தனக்குரிய பங்கை இந்தியாவுக் குரித்தாக மாற்றினார். அதனால் இலங்கையின் இனப்பிரச்சினையும் பிராந்திய அரசியலை தாண்டி சர்வதேசப் பிரச்சினையாக மாற்றமடைந்தது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் சாதிக்க முடியாத அரசியலை தமிழ்மக்கள் தரப்பிலிருந்து எழுந்த தமிழீழ விடுதலைப்புலிகள் நிகழ்த்திக் காட்டினர். தமிழர்களின் சுயநிர்ணயத்திற்கான விடுதலைப் போராட்டத்தை சர்வதேச மயப்படுத்தியதுடன் ஆயுதப் போராட்ட வடிவத்தில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தினர். இவ்வகையான வளர்ச்சிக் கட்டத்திற்கு நிகராக அதேநேரம் தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக பிராந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திய, சர்வதேச சக்திகளின் இராணுவ, அரசியல் ரீதியான ஊடுருவலும் வளர்ந்தது. இவ்வளர்ச்சி அவ்வப்போது இலங்கை ஆட்சியாளரின் பல வீனமான சந்தர்ப்பங்களில் சமாதானம், பேச்சுவார்த்தை, போர்நிறுத்த உடன்பாடு என பல்பரிமாணம் பெற்றது. எதுவும் நீண்டு நிலைத்து சுமுகமான தீர்வை தரவில்லை. அந்தவகையில் ரணில்விக்கிரமசிங்கா வின் ஆட்சிக்காலமும் இனப்பிரச்சினைக்கான தீர்வு நடவடிக்கைகளில் புதிய அத்தியாயத்தை தொடங்கியது. சமகாலத்தில் ஆட்சியிலிருக்கும் அரசியல் தலைமைகளில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் கொள்கைகளுடன் ஒப்பிடும்போது ரணில்விக்கிரமசிங் காவின் கொள்கைகள் ஆபத்துமிக்க அரசியல் விளைவுகளை தமிழர் களுக்கு ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது. ரணில்விக்கிரமசிங்காவின் பிராந்திய, சர்வதேசக் கொள்கைகளும் அதன் அணுகுமுறைகளும் ஒருபக்கமாக அமையும் போது பிராந்திய, சர்வதேச சக்திகளுடன் ரணில் கூட்டாக இணைந்து ஏற்படுத்த முனையும் அம்சங்களை மறு பக்கமாகவும் இப்பகுதி முன்னிறுத்துகின்றது.

### ஜே. ஆர். பாதையில் ரணில்

இலங்கையை பொருளாதார சுபீட்சமான வளமுடைய, அபி விருத்தி அடைந்த நாடாக மாற்றுவேன் என்ற உத்தரவாதம் கலந்த பேச்சுடன் ஆட்சியில் அமர்ந்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா என்பதை எமது வாசகர்கள் ஒரு போதும் மறக்கமாட்டார்கள். இலங்கையை ஒரு குட்டி சிங்கப்பூராக மாற்றுவேன் என்றவர் நாட்டையும், மக்களையும் குட்டிச்சுவராக்கினாரே தவிர வேறு எதனையும் நாட்டுக்காக சாதிக்க வில்லை. ஆனால் சிங்களப் பேரினவாதத்திற்கு மட்டும் மேலும் ஒரு நூற்றாண்டுக்கான வரலாற்றை எழுதிவிட்டு சென்றுள்ளார். அவரது ஆட்சிக்காலம் மிக நெருக்கடியாகவும், ஆபத்துமிக்க அபாயங்களை யும் ஏற்படுத்து மளவுக்கு பிராந்திய, சர்வதேச அரசியல் நிலை காணப்பட்டது. அவையாவற்றையும் சாதுரியமாகக் கையாண்டு இலங்கையையும் தனது ஆட்சியையும் தக்கவைத்தவர் ஜே.ஆர்.ஜெய வர்த்தனா என்பது குறிப்பிடத்தக்க அம்சம். ஜே.ஆர். எவ்வளவுதான் மிதவாதியாகக் காணப்பட்டாலும் உள்நாட்டு அரசியலிலும் பிராந்திய அரசியலிலும் தீவிரவாதியாக பல சந்தர்ப்பத்தில் செயற்பட்டவர் மிகச்சிறந்த ராஜதந்திரியாகவும் காணப்பட்டவர். 1984 ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவம் ஒன்றை நினைவுகூருவது அவை எல்லாவற்றையும் விளங்கிக் கொள்ள போதுமானது.

1983 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் கன வான்களின் திட்டமிட்ட முயற்சியாலும் ஜே.ஆரின் தந்திரத்தினாலும் பயங்கரமான இனப்படுகொலை நிகழ்ந்தது. அப்போதைய நிலையில் இந்தியாவில் இந்திரா காந்தியின் காங்கிரஸ் அரசாங்கம் ஆட்சியி லிருந்தது. வெளிவிவகார அமைச்சராக நரசிம்மராவ் பதவி வகித்த காலமது. அப்போதைய சூழலை அவதானித்த இந்திராகாந்தி இலங்கை முழுவதையும் கைப்பற்றுவதற்கான தயார்படுத்தலை மேற் கொள்வதற்கு ஏற்றவகையில் திருவனந்தபுரத்தில் விசேட பரா இராணு வப் படையணியை நிறுத்தி வைக்குமாறும் அதற்கான பயிற்சிகளைப் பூரணப்படுத்துமாறும் தென்பிராந்திய கடல்படைத் தளபதிக்கு உத் தரவிட்டிருந்தார். அத்தகைய தயார்படுத்தலை அவதானித்த அமெரிக் காவும் அதற்கு மாற்றீடான திட்டமிடலை செயற்படுத்தத் தொடங்கி யது. அதில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் இணைந்து கொண்டார். 1984 இல் இந்திரா காந்தியின் மரணம் நிகழ்வதற்கு முன்பு பல வாரங்கள் ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதி றேகனுடன் வெள்ளை மாளிகை யில் தங்கியிருந்தர். இதிலிருந்து நிலைமையை கணக்குப்போட முடியும். இந்திராகாந்தியின் மரணம் யாருக்கு நிம்மதியைக் கொடுக் காது விட்டாலும் ஜே.ஆருக்கு நிம்மதியான செய்தியே, பெருங் கண்டத்திலிருந்து ஜே,ஆர் தப்பிக்கொண்டார் அவ்வாறே 1987 இலும் ஏற்பட்ட நெருக்கடிக்கு அமெரிக்கா கைகொடுத்தது. ரணில்விக்கிரம சிங்கவும் நெருக்கடிகளும், ஆபத்துக்களும் தலைக்கு வரும் போது தப்பிக்கொள்ள வேண்டிய ஆலோசனைகளையும் உதவிகளையும் அமெரிக்காவிடம் பெறுவது ஐ.தே.க.வின் பாரம்பரியங்களில் ஒன்றாக உள்ளது.

ரணில் ஒரு தடைவை அமெரிக்க மண்ணில் இறங்கியபோது அமெரிக்கா அவருக்கு கொடுத்த பாதுகாப்பும், வில்லியம் புஷ் வழங்கிய ஒத்துழைப்பும் இலங்கையின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்ட போதுமானது. இதனை இலங்கை தமிழர்கள் மட்டுமல்ல தென்னாசியப் பிராந்திய தலைவர்களும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இதனை சற்று விரிவாக ஆராய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய நிலைப்பாடு

ரணில்விக்கிரமசிங்க அமெரிக்காவில் நிற்கும்போது அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின்பவல் அப்போது இந்தியாவுக்கு வருகைதந்திருந்தார். இந்திய-பாகிஸ்தான் நெருக்கடி உச்சக்கட்டத்தை அடையும்போது அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரொனாலட்ரம்ஸ் பீல்ட் இந்தியாவுக்கு வருகைதந்திருந்தார். பின்னர் பதற்றம் தணிந்து பரஸ்பரம் சுமுகமான நிலை இருப்பதுபோல் காட்டப்படுகின்றபோது கொலின்பவல் வருகைதந்தார். எல்லாமே இந்தியர்களை தாஜா பண்ணுவதற்கான முயற்சி என்பதையே காட்டுகிறது. இந்தியர்கள் அமெரிக்கர்களுடன் நெருக்கமாக இருந்த நிலை கடந்த காலங்களில் மாறியுள்ளது. படிப்படியாக இந்தியர்கள் அமெரிக்கர்களின் போக்கை கண்டிப்பது மட்டுமல்ல ராஜதந்திரத்தையும் பயன்படுத்த தொடங்கி விட்டார்கள். அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் இந்து-பாக் எல்லை நெடுகிலும் சர்வதேசப் படையை நிறுத்தவேண்டும் என்றார். வெளி விவகார அமைச்சர் காஷ்மீர் தேர்தல் சர்வதேச கண்காணிப்பாளர் களால் கண்காணிக்கப் பட வேண்டும் என்றார். இரண்டையும் இந்தியர் கள் நிராகரித்து விட்டார்கள். அவர்கள் நிராகரிப்பார்களோ இல்லை யோ அது அமெரிக்கர்களின் ராஜதந்திரத்திற்கு தேவையில்லை. இந்தியாவை வெற்றிகொள்வதே அமெரிக்கர்களின் குறியாகும்.

இந்தியர்கள் அமெரிக்கர்களை நம்புகிறார்களா என்பதே அமெரிக்கர்களின் ராஜதந்திரத்தில் தற்போதைய அவசியமாகும். அந்த நிலையோடு இலங்கைப் பிரச்சினையும் தொடர்புபட்டது என்ப தனால் பவலின் இந்திய வருகைக்கும் ரணிலின் அமெரிக்க விஜயத் துக்கும் தொடர்புகள் அதிகமுண்டு. அமெரிக்கர்கள் இலங்கை விவகா ரத்தில் அதிகமாக தலையீடு செய்வதை இந்தியர்கள் விரும்பவில்லை. எப்படி பாகிஸ்தான் விடயத்தில் அமெரிக்கர்களோ அப்படியே இலங்கை விடயத்திலும் அமெரிக்கர்கள் தலையீடு அதிகரித்து வருகிறது. இதனால் அதிகமான எரிச்சலை இந்தியர் அடையமுன்பு அவர்களை சமாதானப்படுத்துவதுடன் இந்தியர்கள் தமது விருப்புக்கு எதனையும் முடிவெடுத்து செயல்பட முடியாது என்பதை கண் காணிக்கவுமே பவல் வருகைதந்துள்ளார். இதனை முறியடிக்க இந்தியர்கள் தயார்படுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி ஜே.ஆர். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமெரிக்க-இலங்கை ஒப்பந்தமாக கையாண்டு இந்தியத் தலைவர்களை நடுத் தெருவில் பலியிட வழிவகுத்தாரோ அப்படியான ஓர் அணுகுமுறையை ரணில் ஏற்படுத்தமுயன்றார். அது தற்காலிகமாக தவிர்க்கப்பட்டிருக் கின்றதேயன்றி கைவிடப்படவில்லை. ரணில் அடுத்த ஜனாதிபதி வேட் பாளர் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். எல்லோரும் சமாதான விரும்பிகள்தான். ஆனால் அந்தச் சமாதானம் தமிழ் மக்க ளுக்கு எதனை வழங்கியதென்பது கடந்த மூன்றாண்டுகளில் தெளி வாகிவிட்டது.

## ரணிலின் பிரச்சினை

அமெரிக்காவுக்கு ரணில் விஜயம் செய்ததும் அமெரிக்கர் களின் ஒத்துழைப்பை சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு என ரணில் கூறுவதும் அவரது பிரச்சினைகளுக்கு ஓரளவு பாதுகாப்பு கிடைத்து விட்டதென்பதையே காட்டுகிறது. அதுமட்டுமல்ல அந்த வெற்றிக்களிப் பிலேயே அமைச்சர் மிலிந்தமொரகொட விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்தார். ரணில் எதிர்நோக்கிய பல பிரச்சினைகளுக்கு அமெரிக்க விஜயம் தீர்வைக் கொடுத்தது.

இராணுவ உதவியைப் பெறுவதுடன் இலங்கைப்படைக்கு வேண்டிய பயிற்சிகளை வழங்குவதற்கான ஒத்துழைப்பையும் ரணில் தனது விஜயத்தின் போது வலியுறுத்தினார். ஏற்கனவே செய்யப்பட்ட பாதுகாப்பு உதவிகளுடன் ஆயுத தளபாட உதவிகளும் யுத்த விமான உதவிகளையும் கோரியிருந்தார். மிக முக்கியமானதும் ரணிலின் தலையைக் குடைந்துகொண்டிருந்த அம்சமாகிய சமஷ்டி தொடர்பான பிரச்சினை. தமிழர்களின் பிரச்சினைக்கான இறுதியான தீர்வு ஒற்றை யாட்சியல்ல. சமஷ்டியாட்சிதான் என திரும்பத்திரும்ப இலங்கைக் கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் கூறியிருந்தார். அவர் குறிப்பிடும் சமஷ்டி இந்தியா மாதிரியா அல்லது அமெரிக்கா மாதிரியா என்பதல்ல. சமஷ்டியே ரணிலுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பிரச்சினை. ரணில் மிக அதிகமாகப் போனால் பிராந்திய சபை மாதிரியிலான ஓர் அதிகாரப் பகிர்வையே விரும்பினார். சந்திரிகா குமாரதுங்கா முன்வைத்த தீர்வுப்பொதியை பாராளுமன்றத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொளுத்தியவர்கள் ரணிலின் சகாக்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இது பற்றி அமெரிக்காவில் ரணில் பேசியுள்ளார் என்பது மட்டு மல்ல உங்களுக்குப் பின்னால் நாங்கள் என புஷ் கூறியதில் அர்த் தங்கள் நிறைய உண்டு என ரணில் கூறியுள்ளது அதனையே பூடகமாகச் சுட்டுகிறது. ஏனெனில் அமெரிக்கர்களின் சமஷ்டி என்ற அலகுக்கான பேச்சு வலுக்குமாயின் தமிழர்களுக்கு சமஷ்டி குறைந்த பட்சத் தீர்வாக மாறிவிடும் என்பதே ரணிலின் பயமாகவுள்ளது. அதனால் தாம் தீர்மானிக்கும் தீர்வை அல்லது திணிக்க முயலும் தீர்வை இச்சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்துவது நல்லதும் பாதுகாப் பானதும் என்பதே ரணிலின் பிரதான நோக்கமாகும்.

## அமெரிக்காவின் ஆதிக்க விஸ்தரிப்புக் கொள்கை

அமெரிக்கப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் ஆசிய நாடுகளுக்கு விஜயம் செய்தது மட்டுமன்றி யாழ்ப்பாணத் திற்கும் வருகைதந்திருந்தார். குறிப்பாக தென்னாசியாவில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கும் கிழக்காசியாவில் சீனா வுக்கும் விஜயம் செய்திருந்தார். இலங்கையில் கொழும்பை விட யாழ்ப்பாணம் முக்கிய மையம் என்பதை கோடிட்டுக் காட்டியது அவரது விஜயம். இதேபோன்றே ரணில்விக்கிரமசிங்காவை தெற்காசிய விடயங்களுக்கு பொறுப்பான அமெரிக்கத் தூதுவர் கிறிஸ்ரினாரொக்கா யாழ்ப்பாணத்தில் சந்தித்த நிகழ்வும் அமெரிக்கா-யாழ்ப்பாணம் மீது ஏன் அதிக கவனம் எடுக்கிறது என்ற விடயம் முக்கியம் பெற்றது. அதனை சற்று விரிவாகவும் ஆழமாகவும் அவதானிப்போம்.

## இலங்கையின் முக்கியத்துவம்

இலங்கை ஐரோப்பியர் வருகைதர முன்பே முக்கியம் வகிக் கும் நாடாக காணப்பட்டிருந்தது. ஆனால் ஐரோப்பியரின் வருகை யுடன் முக்கியத்துவத்தின் தீவிரம் அதிகரித்தது. பிரித்தானியர் குறிப் பிட்டது போல் வீட்டுக்கு வீடு வாசல்படி அவசியம் என்பது போன்று இந்திய உபகண்டம் என்ற வீட்டுக்கு இலங்கை வாசற்படியாகும். அதனால் வாசல்படி இல்லாத வீடும் இல்லை. வீடில்லாது வாசல் படியும் இருக்க முடியாது. எனவே, இந்தியத் துணைக்கண்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கவைக்க வேண்டுமாயின் இலங்கை முக்கியமானது என்ற பிரித் தானியர் கூறிய வாதம் இன்றுமே பொய்த்துவிடவில்லை. ஆனால் தற் போது இந்திய உபகண்டம் தென்னாசியாவாகவும் பிரித்தானிய சாம் ராஜ்ஜியத்திற்கு பதிலாக அமெரிக்க வல்லரசையும் ஒப்பீடு செய்து விளங்கிக்கொள்ளலாம்.

ஆனால் அமெரிக்காவின் இராணுவ அரசியல் தந்திரோபாயத் தில் முக்கிய மையமாக இலங்கை விளங்குகிறது என்பது மட்டுமல்ல முழு ஆசியப் பிராந்தியத்திலும் காணப்படும் மையங்கள் போன்று இலங்கையும் ஒன்றாக அமைந்துள்ளது. ஆசியாவின் ஏனைய முக்கிய மான மையங்களைவிட இலங்கை இந்துசமுத்திரத்தின் மையப்பகுதி யிலும் இந்தியர்களுக்கு அயலவர்களாகக் காணப்படுவதும் அமெரிக் கர்களுக்கும் மேலும் இலாபகரமானதாக அமைந்துள்ளது. அப்படியா யின் அமெரிக்கர்கள் இந்தியர்களை இலக்குவைத்து நகருகிறார்கள் என்ற எண்ணப்பாடு தெளிவாகின்றது. இதனை விளங்கப்படுத்த பாகிஸ்தான் - அமெரிக்க நெருக்கத்தை நோக்குவோம்.

**அமெரிக்க – பாகிஸ்தான் நெருக்கம்**

ஆர்மிரோஜும் பாகிஸ்தான் ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் பத்திரிகைகளுக்கு விளக்கமளிக்கும்போது ஜம்மு காஷ்மீருக்குள் தீவிரவாதிகளின் ஊடுருவலுக்கு பாகிஸ்தான் மட்டும் காரணமல்ல என்று கூறினார். இது அமெரிக்க - பாகிஸ்தானிய நெருக்கத்தை காட்டு கிறது. இந்தியர்களை அமெரிக்கர்கள் பாகிஸ்தானியரின் உறவுக்கு அடுத்த நிலையில் தான் வைத்துள்ளனர். அந்த அடிப்படையில் நோக் கினால் இந்தியர்களுக்கு நெருக்கடி கொடுப்பதற்கான நகர்வுகளை அமெரிக்கர்கள் பாகிஸ்தான், இலங்கை என்பவற்றுடன் இணைந்து மேற்கொள்கின்றனர். இலங்கை-பாகிஸ்தான் ஆயுத உடன்பாட்டுக்கும் அமெரிக்காவே பின்னணி.

ரணில்விக்கிரமசிங்காவின் இந்திய விஜயமும் அதனையே வெளிக்காட்டுவது போல் தெரிகிறது. அதுவும் ஆந்திர மாநில முதல் வருடன் நடத்திய புரிந்துணர்வே சந்தேகத்தை மேலும் தூண்டுகிறது. ஆனால் சாதாரண நிலையில் நோக்கும் ஒருவர் இந்திய அமெரிக்க உறவையும் ஒத்துழைப்பையும் கண்டு பூரித்துப்போய் விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வேளைகளில் மேற்படி வாதத்தை நிராகரித்தும் விடுவார்கள். ஆனால் அது மேலோட்டமான நோக்கமாகவே மட்டும் அமையும். ஆழ மாக நோக்கினால் இந்தியர்களை மிக நீண்டகாலத்திற்கு பின்னராவது துண்டாடுவதோ அல்லது பலவீனப்படுத்துவதோ அமெரிக்க நலன் விரும்பிகளது நோக்கம் இதற்கு சில ஆதாரங்களை நோக்குவோம்.

## இந்தியாவுடனான ஒத்துழைப்பு

முதலில் இந்திய அமெரிக்க நெருக்கத்தைக் காட்டும் தகவல்களை எடுத்துக்கொள்வோம். இரு நாடுகளும் இணைந்து *DPG (Defence Policy Group)* என அழைக்கப்படும் பாதுகாப்புக் கொள்ளை வகுப்புக்குழு ஒன்று உருவாக்கியுள்ளன. அப்பாதுகாப்புக் கொள்கை வகுப்புக்குழு 2001 இல் நடத்திய மாநாடு ஒன்றில் இருநாட்டுப் பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சுகள் *(General secretary of military information Agreement - GSOMIA)* பொதுப் பாதுகாப்புக்கான இராணுவத் தகவல் ஒப்பந்தத்தைச் செய்துள்ளன. இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இராணுவ விடயங்களை இரு நாடுகளும் பகிர்ந்துகொள்வது என்றும் உள்நாட்டில் தயாரிக்கும் தொழில்நுட்பம் சார்ந்த ஆயுதத் தளபாடங்களை ஏனைய நாடுகளுக்கு விற்பனை செய்வது எனவும் அதற்குப் பரஸ்பரம் உதவுவது எனவும் தீர்மானமானத்தின் முக்கிய விடயங்களாகும். மேலும் மிக நீண்டகாலத்திற்குப் பின்பு இந்தியா வுக்கு எட்டு அமெரிக்கத் தயாரிப்பான *Fire Finder Weapon Locating radar* ஐ 146 மில்லியன் அமெரிக்க டொலருக்கு வழங்குவதெனவும் *GSOMIA* இன்படி இருபது வகை இராணுவத் தளபாடங்களை புதுடில் லிக்கு வழங்குவதாகவும் முடிவாகியது. விமானங்கள், கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் போன்றவற்றை இந்தியாவுக்கு வழங்க அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது. இந்தியாவுக்கான சர்வதேச இராணுவக் கல்வி மற்றும் பயிற்சித் திட்டம் என்பதை 1.5 மில்லியன் அ.டொலர் செலவில் நிறுவுவதற்கு அமெரிக்கா முன்வந்துள்ளது. இதற்கு அனுசரணையாக கடந்த மே மாதத்திற்குப் பின்னர் 100 இந்திய இராணுவத்தினர் பயிற்சிக்காக அலஸ்கா அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. இத்தகைய ஒத்துழைப்புக்கும் உதவிக்கும் பின்னாலுள்ள நோக்கத் தை விளங்கிக்கொள்ள அமெரிக்காவின் இராணுவ அதிகாரி ஜெனரல் றிச்சட் பி.மயர்ஸ் கூறுவதை அவதானிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமான இராணுவக்கூட்டு என்பது பலமானதாயும் நீண்டகாலத்திற்கு நிலைத்து நிற்கக் கூடியதாகவும் அமைந்திருத்தல் அவசியம். ஏனெனில் அமெரிக்காவின் எதிர்கால நலனுக்கு இந்தியாவின் பாதுகாப்பும், உறுதிப்பாடும் அவசியமானது என்றார்.ஒருவகையில் அமெரிக்காவின் நலன் இந்தியா மீது தங்கியுள்ளது என்பதேயாகும். அப்படியாயின் அமெரிக்கர்களின் நலனுக்காக பேணப்படும் உறவாக மட்டுமே இதனைக் கொள்ள முடியும். அமெரிக்கர்களின் நலன் எது என்பதே அடுத்தகேள்வி. உலகத்தில் சோவியற் யூனியன் சரிவுக்குப் பின்பு பலமான பொருளாதார வளர்ச்சியைக் கொண்ட கொள்கையை பின்பற்றுகின்ற நாடுகளை முறியடிப்பதே அமெரிக்கர்களின் பிரதான அரசியல் இராணுவ இலக்காகும்.

**மத்திய ஆசியா**

மத்திய ஆசியக் குடியரசுகளில் உஷ்பெஸ்கித்தான், தஜிகிஸ்தான், துர்க்கமிஸ்தான் என்பவற்றை ஒன்றிணைத்து அமெரிக்கா இராணுவ ஒத்துழைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த இராணுவ ஒத்துழைப்பு உடன்பாட்டினால் மூன்று மத்திய ஆசியக் குடியரசுகளிலும் அமெரிக்க இராணுவ விஸ்தரிப்புக்கு சாதகமான வாய்ப்பு கிடைத்துள்ளது. புவியியல் நோக்கில் தந்திரோபாயமான மையப் பிரதேசம் பொருளாதார அடிப்படையிலும் எண்ணெய் வளமுடைய பிரதேசமாக உள்ளது. ரஷ்சியாவுக்கு அண்மையில் அமைந்திருப்பதனாலும் அப்பிராந்தியத்தின் முக்கியத்துவம் மேலும் அதிகமாகும். அதனை உணர்ந்துகொண்டே அமெரிக்கா செயற்படுகிறது.

ஒருபக்கம் சீனாவின் எல்லை நாடாக எப்படி ஆப்கானிஸ்தான் விளங்கியதோ அவ்வாறே தஜிகிஸ்தானும் சீனாவில் எல்லை நாடாக விளங்குகின்றது. இவ்வாறு அமெரிக்கா ஏற்படுத்திக்கொண்ட இராணுவ ஒத்துழைப்புப் பற்றி பிரிட்டிஷிலிருந்து வெளியாகும் ஜேன்ஸ் புலனாய்வு மீளாய்வு அறிக்கையில் குறிப்பிடும்போது அமெரிக்கா என்ற சர்வதேச அரசின் பிரசன்னத்தையும் நெருக்கடியையும் எதிர்கொள்ளும் மத்திய ஆசியக் குடியரசுகள் அமெரிக்காவின் இராணுவ பொருளாதார உதவிகளால் ஏமாற்றப்படுவதுடன், நிலையற்ற உதவிகளைக் காட்டிவிட்டு நிலையான இராணுவத் தளங்களை அமைக்க அமெரிக்கா திட்டமிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது எனக் குற்றம் சாட்டியுள்ளது. மேலும் அச்சஞ்சிகையில் ஆசியா வுக்கு உள்ளிருந்தான பனிப்போர் ஒன்று உருவாகாமல் தடுப்பதும் மொஸ்கோவுக்கும் பீக்கிங்கும் இடையில் நிரந்தர பிரிப்பை ஏற்படு வதுமே அமெரிக்காவின் நோக்கம் எனக் குறிப்பிட்டுள்ளது.

**ஏனைய நாடுகள்**

சீனர்களை நெருக்கடிக்குள்ளாக்க மேலும் ஒரு முயற்சியை அமெரிக்கர்கள் இந்தியர்கள் ஊடாக மேற்கொண்டு வருகின்றனர். மிக நீண்டகாலமாகவும் போராட்டக் காலத்திலும் சீனர்கள் அதிக உதவி யளித்த வியட்னாமுக்கு *GSOMIA* இன் கீழ் இந்தியத் தயாரிப்புக்கள் அடங்கிய பல ஆயுதத் தொகுதிகளை வழங்க அமெரிக்கர்கள் முன் வந்தனர். குறிப்பாக இலகுரக கெலிக்கொப்டர்கள் *(Light Helicopters)*, மிக்போர் விமானங்கள் *(MIC fighter air craft)* அணு விஞ்ஞானம் *(Nuclear science)*, தரையிலிருந்து தரைக்குப் பாயும் பிரிதிவி ஏவுகணைகள் *(Surface to surfact prithevi missile)* என்பவை அடங்கும்.

வில்லியம் புஷ் நிர்வாகம் நேபாளத்துக்கு 20 மில்லியன் அமெரிக்க டொலர் இராணுவ உதவியை வழங்கியுள்ளது. இது நேபாளிய இராணுவத்துக்கு *(RNA)* மாவோஸ்டுக்களின் போராட் டத்தை அடக்குவதற்கான போருக்கு உதவியாக அமையுமென அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது. அதனோடு மாவோஸ்க்களின் நடவடிக்கையை உளவுபார்த்ததற்கான வேலையை அமெரிக்க உளவுப்பிரிவு நேபாளத்துடன் இணைந்து ஈடுபடுமென நேபாள பிரதமரின் அமெரிக்க விஜயத்தின் போது முடிவாகியது. இவ்வாறே பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, ஆகிய நாடுகளுடனும் யப்பான், தென்கொரியா ஆகியவற்றுடனும் மிக நெருக்கமான உறவையும் அமெரிக்கா உருவாக்கி பாதுகாத்துவருகிறது.

இவ்வாறு ஆசியாவுக்குள் நிகழும் வலைப்பின்னலுக்குள் ஒன்றாகவே இலங்கை விளங்குகிறது. கடல், வான், தரை என்ற *(seals)* மூன்று பரப்பிலும் அமெரிக்காவின் விசேட பயிற்சியை இலங்கை பெற்றுவருகிறது. ஆயுதத் தளபாட உதவிகள் ஸ்ரேலியத் தயாரிப் புக்களான விமானங்கள் *(Air craft)*, குண்டு வெடிப்புக்களை தடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவிகள் எனப்பலவற்றை அமெரிக்கா இலங்கைக்கு வழங்கி வருகிறது. காரணம் டியாகோகாசியா (*Deigo Gracia*) அடுத்த நிலையில் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் திருகோணமலை அமைந்திருப்பதாகும். இதன் இயற்கையான அமைப்பு தொழில்நுட்ப வளர்ச்சியின் பின்பும் முக்கியம் பெறுகின்றது.

இந்து சமுத்திரத்தைக் கண்காணிக்க திருகோணமலைத் துறைமுகமே போதுமானது. அதன் அடிப்படையிலேயே அமெரிக்கர்களின் கவனம் தமிழர் பிரதேசங்கள் மீது அதிகரித்துள்ளது. சமாதான வழிகளுக்கான தயார்படுத்தல்களும், ஒத்துழைப்பும் நிகழும்போது அமெரிக்கர்கள் காட்டிக்கொள்ளும் அக்கறை முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலையை தக்கவைப்பதையே நோக்கமாகக் கொண்டது. இந்தியர்களை, சீனர்களை, இஸ்லாமியத் தீவிரவாதத்தை இலக்குவைத்து நகர்த்தப்படும் அமெரிக்கர்களின் போருக்குள் இலங்கையோ அல்லது வடக்கு, கிழக்கோ உள்ளீர்க்கப்படலாம். அப்படியான சந்தர்ப்பத்தில் தமிழர்கள் ஒத்துழைக்கவேண்டும் என்பதையே அமெரிக்கர்களின் நோக்கம். அது தவறுமாயின் யாழ்ப்பாணம், சாவகச்சேரி மீண்டும் ஒரு முக்கிய நிலைக்களமாக விளங்கும் என்பதையே றிச்சர் ஆர்மீரோஜ்ன் யாழ்ப்பாண விஜயம் உணர்த்தியது.

**இந்தியக் கொள்கை!**

இலங்கையின் நீண்டகால இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் பெருமெடுப்பில் உலக நாடுகளின் ஒத்துழைப்புடன் அரங்கேறி வருகின்றது. பேச்சுவார்த்தை மட்டுமல்ல போருக்குப் பிந்திய நாட்டின் அபிவிருத்திக்கான உதவியும் ஒத்துழைப்பும் ஆரம்பகட்டத்தை அடைந்திருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க அரசும், விடுதலைப் புலிகளும் இணைந்து கூட்டாக முன்வைத்த நிதியுதவிக்கான கோரிக்கையினை உலக நாடுகள் அங்கீகரித்து வருவதுடன், சமாதானத்துக்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்வதில் அக்கறை செலுத்தி வருகின்றன. ஆனால் உலக நாடுகள் பல உதவியும், ஒத்துழைப்பும் வழங்கிவரும்போதும் இந்தியா மௌனமாக அல்லது சில வேளைகளில் சாதாரண அபிப்பிராயத்தை வெளிப்படுத்தி விட்டு தப்பிக்கொள்கின்றது போல் தெரிகின்றது. அது உண்மையானது தானா? என்பதே இன்றைய கேள்வியாகும். இங்கு இலங்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பூசல்களுக்கான சமாதான முயற்சியில் இந்தியாவின் நிலைப் பாடு எதுவாக உள்ளது என்பதைப் பரிசீலிப்போம்.

பனிப்போர் முடிந்தபோது ஏற்பட்ட உலக ஒழுங்கில் அமெரிக்கா இந்திய நெருக்கம் அதிகரித்துக் கொண்டது. குறிப்பாக வில்லியம் கிளின்டன் அமெரிக்க ஜனாதிபதியாக விளங்கியபோது, இரண்டு அரசுகளுக்குமான உறவு சுமுகமானதாக காணப்பட்டது. ஜன நாயகக் கட்சியின் வெளிநாட்டுக் கொள்கையின் போக்கும் அமெரிக் காவின் நீண்டதூர நோக்கும் கிளின்டனின் அணுகுமுறையைத் தீர்மானித்திருந்தது. இதனால், அமெரிக்கா, இந்தியா பக்கம் நெருங்கி யதைவிட, இந்தியா அமெரிக்கா பக்கம் அதிகமான நெருக்கத்தினை வெளிப்படுத்தியது. ஆனால் அத்தகைய நெருக்கம் அல்லது ஆபத் தில்லா உறவு என அமெரிக்கா கருதியபோது - இந்தியா திடீரென அணுவாயுதப் பரிசோதனையை வெற்றிகரமானதாக முடித்தது. சம காலத்தில் கிளின்டன் ஆட்சி முடிவுக்கு வந்து, வில்லியம் புஷ்ஷின் குடியரசுக்கட்சி பதவியை ஏற்றுக்கொண்டது. அதன் வெளிநாட்டுக் கொள்கையும் மாற்றத்தினை நோக்கி நகர்ந்தது. இந்தியாவை ஆபத்துமிக்க நண்பனாக நோக்கும் உணர்வு அமெரிக்காவுக்கு ஏற்பட்டது. அதற்காகப் பாகிஸ்தானை தனது அணியில் வளைத்துப் போட்டுக் கொண்டது. அதனாலேயே நவாப் ஷெரீப்பின் ஆட்சிக்குப் பதிலாக முஷாராப்பின் ஆட்சியை மறைமுகமாக ஆதரித்தது. அது மட்டுமன்றி ஆப்கானிஸ்தான் யுத்தம் மேலும் அமெரிக்க -பாகிஸ் தானிய நெருக்கத்தினை சாதகமாக்கியது. ஆனால் இந்தியாவை ஆபத்துக்குரிய அரசாக நோக்கும் உணர்வு மேலும் அமெரிக்காவுக்கு அதிகரித்தது. குறிப்பாக வர்த்தக உறவுகளை இந்தியா தனக்கு சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கியமை, அமெரிக்காவை சந்தை யாக இந்தியாவை முழுமையாக பயன்படுத்த அனுமதியளிக்காமை, ஏவுகணை மற்றும் விண்வெளித் தொழில் நுட்பத்தில் முன்னேறிவரு கின்றமை எனப் பல விடயங்களில் இந்தியா செயற்படுவதனை ஏற்றுக்கொள்ளமுடியாத நிலை அமெரிக்காவுக்கு ஏற்பட்டது. அதாவது அமெரிக்காவின் பொருளாதார, இராணுவ, அரசியல் விஸ்தரிப்புகளுக்கு நெருக்கடியை இந்தியாவினாலும் ஏற்படலாமென அமெரிக்கா கருதி யது. அதனால் பாகிஸ்தானை ஒரு பக்கம் தூண்டிவிட்டு, இந்தியா வைத் தாக்க அமெரிக்கா முயன்றது. இத்தகைய திட்டமிடலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தான் போன்று உடனடியாக இலங்கையில் ஏற்படுத்திக் கொள்ள முடியாதநிலை காணப்பட்டது. அதாவது இலங்கை, ஜன நாயக பாரம்பரியத்தினூடாக ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்திய அரசாக விளங்கியது மட்டுமன்றி நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி அமைந்திருந்தது. மேலும் விடுதலைப் புலிகள் வட- கிழக்குப் பகுதியில் பலமான சக்திகளாக விளங்கினர். இதனால் இலங்கை ஆட்சி மாற்றம் சாத்தியப்படுவதுடன் அமைதிச்சூழல் ஏற்படுவதும் அவசியமானதாக இருந்தது. அப்போது இந்திய எதிர்ப்பு உணர்வு இலகுவாக இப்பிராந்திய பலத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது அமெரிக்கர்களின் நோக்கமாக அமைந்திருந்தது. ஏற்கனவே விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவுக்கும் விரிசல் அதிகமுண்டு என்பதுடன், ஐக்கிய தேசியகட்சி இந்திய எதிர்ப்பு வாதத்தை வெளிப் படுத்துவதுடன் மேற்கின் விசுவாசத்தை பாதுகாக்கும் கட்சி என்ற வகையிலேயே இலங்கையை அமெரிக்கா கையாளத் தொடங்கியது.

இதனை உணர்ந்து கொள்ளும் நிலை இந்தியாவுக்கு ஏற்பட் டதோ அல்லது இல்லையோ என்பதனை விட, இலங்கையின் சமா தானம் இந்தியாவுக்கு விருப்பமற்றதொன்றாகவே அமைந்திருப்பதாக அவதானிகள் கூறுகின்றனர். தனக்கு அப்பாற்பட்ட நிலையில் இந்தியா வுக்கு சாதகமற்றோர் ஒன்றுசேர்ந்து உருவாக்குகின்ற சமாதானம் இந்தியாவுக்கு விருப்பமற்றதாக உள்ளது. இதனை விளங்கிக்கொள்ள இன்னோர் சம்பவத்தினை நோக்குவோம்.

கட்டுநாயக்க விமான நிலையம் விடுதலைப் புலிகளால் தாக் கப்பட்ட போது, அமெரிக்காவும், இந்தியாவும் போட்டி போட்டுக் கொண்டு களத்தில் இறங்கின. அமெரிக்கா ஜனாதிபதி சந்திரிக்கா அரசாங்கத்திற்கு, உடனடியாக வட - கிழக்கில் நிகழ்த்தப்படும் விமானத் தாக்குதல்கள் நிறுத்தப்படுதல் வேண்டும் என்று ஓர் எச்சரிக் கை விடுத்தது. ஆனால், இந்தியா விடுதலைப் புலிகளை கண்டிக்கா மல் மௌனம் சாதித்ததுடன் மறைமுகமாக விடுதலைப் புலிகளை ஆதரிப்பது போன்று காட்டிக் கொண்டது. ஒருவகையில் இரண்டு அரசுகளுமே விடுதலைப் புலிகளை ஆதரிப்பதன் வாயிலாக புதிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த விரும்பியதுடன், ஜனாதிபதி சந்திரிக்கா அரசையும் அதன் போக்கையும் கண்டிப்பது போன்று அமைந்திருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன. ஆனால் ஏலவே நோர்வேயின் முயற்சியினால் இலங்கை விடயத்தில் நுழைந்துகொண்ட அமெரிக்கா களத்தில் வெற்றிபெற, ஏற்கனவே தனது அணுகுமுறையால் அவப்பெயரைப் பெற்ற இந்தியா தோல்வியுடன் பின்வாங்கியது.

அப்போது பின்வாங்கிய இந்தியா படிப்படியாக முன்னேற ஆரம்பித்தது. அதற்காக இலங்கையிலிருந்து நான்கு சக்திகளை இனங்கண்டுள்ளது. அவை ஒவ்வொன்றும் முழுமையாக இல்லாத போதும் பகுதியாகவேனும் சமாதானத்தின் மீது நம்பிக்கை அற்றவர்கள் அல்லது சமாதானம் மலர்ந்தால் அரசியலே அஸ்தமனமாகி விடும் என்று கருதுபவர்களாக இருந்த சக்திகளாகும். முதலாவது பிரிவு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிக்காவும் அவரது ஆலோசகரும், வெளிவிவகார அமைச்சருமான லக்ஸ்மன் கதிர்காமரைப் போன்றுதான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்தியா செல்கிறார். ஆனால் கதிர்காமர் மந்திர ஆலோசனை நிகழ்த்தச் செல்கிறார். ரணில் இந்தியர்களைத் திருப்திப்படுத்தச் செல்கிறார். ரணில், இந்தியப் பிரதமரை அமெரிக்காவில் வைத்து தாய்லாந்து பேச்சுக்கள் பற்றி விளக்கமளித்த சம்பவம் அவரதும், அமெரிக்காவினதும் கலவையான ராஜதந்திரத்தினைக் காட்டுகின்ற செயலாகவுள்ளது.

இரண்டாவது சக்தி ஜனதா விமுக்திப் பெரமுன என அழைக்கப்படும் ஜே.வி.பி. இதனை மீண்டும் வளர்ப்பதில் அதிக கவனம் இந்தியா செலுத்த ஆரம்பித்துள்ளது. 1989 இல் பிரேமதாச அரசாங்கம் ஜே.வி.பி.இன் தலைமையை அழித்த போது தப்பியோடித் தஞ்சமடைந்திருந்த சோமவன்சாவை இந்தியா பாதுகாத்து வைத்திருந்தமை நினைவு கூறத்தக்க அம்சமாகும். 1971 இல் ஜே.வி.பியின் கிளர்ச்சியை அடக்கவந்த இந்தியா, சோமவன்சாவைப் பாதுகாக்க முயன்ற போது அதன் உள்நோக்கம் தெளிவானது. மீண்டும் ஜே.வி.பி. எழுச்சியடைவதனால் அது இந்தியாவுக்குச் சாதகமானதாகவே அமையும் என்பதில் இந்தியாவுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. ஏற்கனவே ஜே.வி.பி, பல்கலைக்கழக மட்டத்தில் தீவிர போராட்ட உணர்வைத் தூண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது தெரியவந்துள்ளது. அதற்கு ஒரு வகையில் இந்தியர்களும் உறுதுணையாக இருப்பதென கொழும்பு கருதுகிறது. அத்தோடு ஜே.வி.பி சமாதானத்தை எதிர்ப்பது மட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லாது புலிகள் எதிர்ப்பு வாதத்தையும் கொண்டது என்பதை இந்தியா நன்கு விளங்கிக் கொண்டுள்ளது.

மூன்றாவது சக்தி முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம். பல தடவை இந்தியாவுக்குச் சென்று வருவதுடன் இந்தியாவுடன் நல்லுறவை வளர்க்கவே ஹக்கீம் செயல்ப்படுவதாக தெரிகின்றது. சந்திரிக்கா - ரணில் மோதலை புதுடெல்கி தீர்த்து வைக்க வேண்டுமென அவர் கோருவதிலிருந்து இந்தியாவுடனான அவரது நெருக்கத்தை உணரமுடிகின்றது. பாலம் கட்டுவது, தூத்துக்குடி கப்பல் பயணத்தை ஆரம்பிப்பது என பல செயற்பாடுகளில் ஹக்கீம் நாட்டம் கொண்டு வருவதும் கவனிக்கத்தக்கது.

இறுதியாக விடுதலைப்புலிகளுடன் முரண்படுகின்ற சக்திகள் என இனங்காணப்பட்டவைகளையும் பாதுகாக்க இந்தியா முயல்கிறது. குறிப்பாக முன்னாள் ஆயுதக் குழுக்களாகச் செயற்பட்டு பின்னர் அரசியல் வாழ்வுக்கு வந்தவர்களாகத் தங்களை அறிவித்தவர்களுடன், அதிலும் குறிப்பான சில தலைமைகளுடன் இந்தியா மிக நெருங்கிய உறவைப் பேணவே விரும்புவதாகத் தெரிகிறது. அதில் சில மிதவாத தலைமைகளும் அடங்குவர். அவர்களுக்கான பலவித உதவிகளையும் இந்தியா செய்யத்தயாராகவிருப்பதாகவே தெரியவருகிறது.

எனவே மொத்தத்தில் இந்தியா எதிர்பார்ப்பது இலங்கையில் சமாதானம் அமெரிக்காவின் தலைமையில் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதாகும். அதனால் இந்தியாவின் பிராந்திய பலம் நசுக்கப்படுவதுடன் அமெரிக்காவின் கை ஓங்கிவிடும் என்பதே இந்தியாவின் அச்சமாகும். இதுவே இந்தியாவின் பிரதான நோக்கமாகும். அதைவிட பல முக்கியத்துவமான உள்நோக்கங்களும் காணப்படலாம். ஏனெனில் இந்தியாவுக்கு அப்பாற்பட்ட அரசியல் தீர்விலோ அதிகாரப் பகிர்விலோ சுயாட்சித் திட்டத்திலோ இந்தியாவை விட அதிகமானதாக இலங்கை அரசினால் பகிரப்படுமாயின் - அதுதமக்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தலாம் என இந்தியா கருதுவதாகவே தெரிகின்றது.

அது மட்டுமன்றி பலமான சக்தியாகவுள்ள விடுதலைப்புலிகள் சர்வதேச அரங்கில் அங்கீகாரம் பெறுவதும், வடகிழக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் ஆட்சி அதிகாரம் கொண்டவர்களாக உறுதியாவதும் இந்தி யாவுக்கு மனமொப்பாத செயல்களாகவே கருதப்படுகிறது. இவை நிறைவேறாது தடுக்க வேண்டுமாயின் அமெரிக்கத் தலையீட்டைத் தவிர்க்க வேண்டும். ஆனால் இந்தியாவின் அபிலாசை எல்லை தாண்டிவிட்டதென்றே கருத முடிகிறது. படிப்படியாக இலங்கை இனப் பிணக்கு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாக நகருகின்றது. எனவே தன்கையை விட்டுப் பிரிந்துசெல்லும் - இலங்கை இனப்பிரச்சினைக் கான மேலதிகாரத் தன்மை, இந்தியாவுக்கு விருப்பத்தைத்தராதது மட்டுமல்ல, அமெரிக்காவின் செல்வாக்கு இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில் அதிகமாகவும் - இந்தியாவைப் பொறுத்தமட்டில் முக்கியமான விடயங்களேயாகும். எது எப்படியிருந்தாலும் இந்தியா இவ்வாறான பின்னடைவுகளைத் தவிர்க்க தொடர்ந்தும் ஏதாவதொன்று செய்து கொண்டேயிருக்கும். அவற்றில் ஒன்றுதான், தாய்லாந்து அரசுக்கு அழுத்தம் கொடுத்தது. தொடர்ந்தும் அங்கு பேச்சுக்கள் நடை பெறுவதை தடுப்பதான இந்திய அரசின் இராஜீக அழுத்தமாகவும் காணப்படுகின்றது.

## ரணிலின் இந்திய விஜயம்

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்ன ணியின் வெளிநாட்டுக் கொள்கை இரண்டு பிரதான மையங்களைக் கொண்டது. ஒன்று மேற்கு நாடுகள் தொடர்பானது. இது பற்றி ஏற் கனவே அவதானித்துள்ளோம். இரண்டாவது அயல் நாடான இந்தியா சம்பந்தப்பட்டது. ரணிலின் வெளிநாட்டுக் கொள்கை மேற்கு சார் பானது என்பதில் எந்தவித சந்தேகமும் கொள்ள வேண்டியதில்லை. அது ஒருவகையில் ரணிலின் வழிகாட்டியான ஜே.ஆர். ஜெயவர்த்தனா, தனது ஆட்சிக்காலத்தில் வகுத்துக்கொண்ட கொள்கைக்கு ஒப்பானது. அதன்படி மேற்கு சார்புநிலையில், இலங்கையின் பொருளாதார அபி விருத்தியை இலக்காகக்கொண்டு, மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டின் அரசியலில் ஐ.தே.மு. ஆட்சியை ஸ்திரப்படுத்துவதுடன், எதிர்கால தேர்தல்களுக்கு (நாடாளுமன்றம், ஜனாதிபதி) வெற்றிகரமாக முகங் கொடுக்கத் தயாராகின்ற பணியையும், ரணில் ஏற்படுத்த விரும்பினார். அதன்படி, சமாதான காலம் முழுவதும் இலங்கையின் பொருளா தாரத்தை, வளர்ச்சிநிலை நோக்கி நகர்த்திக்கொண்டு செல்ல ரணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பினார். வட-கிழக்கு பகுதியைவிட தென்னிலங்கையின் நேரடி முதலீடு, உல்லாசப் பயணிகளது வருகை, வர்த்தக ரீதியான ஏற்றமதி போன்றவற்றில், 2000 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போத, ஏறக்குறைய 60 சதவீதமான வளர்ச்சியை 2003 ஆம் ஆண்டு எட்டியது. 2003 முதல் ஆறு மாதங்களில், இலங்கையில் குவிந்த நேரடிமுதலீடு 170 மில்லியன் அமெரிக்க டொலர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இம் முதலீட்டால், இலங்கைக்கு அசலாகக் கிடைத்த வருமானம் 55 மில்லியன் அமெரிக்க டொலர் என்பது குறிப்பிடத்தக்கது. இதே போன் றே, ஏனைய துறைகளிலும் தென்னிலங்கையின் பொருளாதாரம் அபிவிருத்தியை நோக்கி நகர்கிறது. இதற்கு மிகப்பிரதான பலமாக அமைந்திருப்பது மேற்கு நாடுகளுடனான இலங்கை அரசின் நெருக்க மான உறவாகும். மேற்கு நாடுகளின் உறவினால், இலங்கையில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

இரண்டாவது மிகப்பிரதான சக்தியாகவும், சவாலாகவும் அமைந்திருப்பது இந்தியாவாகும். இதனை எதிர்கொள்வதே ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிரதான பிரச்சினையாக அமைந்துள்ளது. அப்பிரச்சினையை ஜே.ஆர். மாதிரிக் கையாள ரணில் விரும்பவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அதாவது, இந்தியாவை-ஜே.ஆர். உதா சீனம் செய்யும் பாணியிலான அரசியலை *(Ignoring Polities)* பின் பற்றி, பிற்காலத்தில் பல நெருக்கடிகளையும் ஆபத்துக்களையும் எதிர் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் ரணில்விக்கிரமசிங்க வோ அவ்வாறில்லாது, ஒரு புரிந்துணர்வான வெளிநாட்டுறவை இந்தி யாவுடன் பேண முயலுகின்றார். அவ்வாறு இந்தியாவைப் பகைத்துக் கொள்ளாத உறவை ஏற்படுத்திக்கொள்ள ரணில் விரும்புவதற்கு, ஆழமான அரசியல் காரணமும் உண்டு.

விடுதலைப்புலிகளின் இராணுவ வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கக் கூடிய பலம் - இலங்கைப் படைகளுக்கு இல்லை என்பதை, வெளி நாட்டு நிபுணர்கள் கூறமுன்பே ரணில் புரிந்துகொண்டு விட்டார். அதனால் போர்நிறுத்த உடன்பாடு முறிந்தால், ஏற்படக்கூடிய நிலை மையை எதிர்கொள்வதற்கோ அல்லது சமாதான முயற்சியின் போது, புலிகளின் கோரிக்கை மேலோங்காமல் தடுப்பதற்கோ இந்தியாவின் உதவி யும், ஒத்துழைப்பும் இலங்கைக்கு தேவையானது. இதேவேளை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு அயலிலுள்ள ஒரேயொரு நாடு இந்தியா என்பதுடன், பலமான இலங்கை ஆட்சியாளர் சார்பான மனிதாபிமான மனநிலையைக் கொண்ட அரசும் இந்தியா என்பதை, ரணில் நன்கு விளங்கி வைத்துள்ளார். மேலும், விடுதலைப்புலிகளின் கடற்படைப் பலத்தைக் கட்டுப்படுத்தவோ, எதிர்கொள்ளவோ திராணியற்ற இலங்கைக் கடற்படைக்கு இந்தியாவின் உதவியும். ஒத்துழைப்பும் அவசியமானது.

ஒரு வகையில் கூறுவதாயின், இலங்கையின் பாதுகாப்புக்குரிய வெளிநாட்டுக் கொள்கையில் இந்தியா முதலிடத்தில் அமைந்துள்ளது. இந்தியாவை இலங்கையின் பாதுகாப்புக்கும், மேற்கு நாடுகளை இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கும் என வகைப்படுத்தி, ரணில் அரசாங்கம் ஒரு வெளிநாட்டுக் கொள்கையை வகுத்திருந்தது. இதனையே, ரணில் தனது இந்திய விஜயத்திலும் செய்யமுயன்றார். ஏற்கனவே நிறைய பாதுகாப்பு உதவிகளைப் பெற்றுள்ள இலங்கை அரசு, வெளிப்படையாகப் பாதுகாப்பு உடன்பாட்டை மேற்கொள்ளப் போவதாகக் கூறியிருப்பதும், ரணிலின் இலக்கு எட்டப்பட்டதற்கான அறிகுறியாகவுள்ளது. இந்தியாவுடன் இலங்கை செய்யவுள்ள பாதுகாப்பு உடன்படிக்கை புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறுகின்ற செயலாக அமையாதா? என்ற சர்ச்சையும் கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும். ஆனால், பாதுகாப்புச் சார்ந்த கொள்கை என்பதை உடைக்கும் வகையிலான, பல பொருளாதார உடன்பாடுகளுக்கான உத்தேச எண்ணப்பாடு முன்மொழியப்பட்டுள்ளது.

1998 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையில் தடையற்ற வர்த்தக உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. (குறிப்பிட்ட எண்ணிக்கையான பொருட்களுக்கு) அதன் கீழ், இலங்கையின் சந்தைகளில் இந்திய உற்பத்திப் பொருட்கள் குவிக்கப்படுகின்றன. இலங்கையின் சிறு கைத்தொழில் உற்பத்திகள் அனைத்தும் கிடப்பில் போடப்படும் நிலை ஏற்பட்டு விட்டது. உள்ளூர் உற்பத்தியாளர்களுக்குப் பதிலாக, இறக்குமதி முகவர்கள் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இந்தியாவில் இருந்தும், பிற நாடுகளிலிருந்தும் பொருட்களை இறக்குமதி செய்து, விநியோகிக்கும் முகவர்களாகவே உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மாறி வருகின்றனர். இந்த உடன்படிக்கையால், இந்தியா அடைந்த வர்த்தக மீதி மட்டும் 667.8 மில்லியன் அமெரிக்க டொலர் என்பதும், இலங்கை அடைந்த இழப்பீடு மட்டும் 100.6 மில்லியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க டொலர் எனபதும் குறிப்பிடத்தக்கதாகும். இதனால், ரணில் விக்கிரமசிங்க அரசு இந்தியாவை, இலங்கையின் பொருளாதார விடயத்தில் இணைத்துக் கொள்வது ஆபத்தானது எனக் கருதுகிறார். அதனைத் தவிர்க்கவே ரணில் பல தடவை முனைந்துள்ளார். அவரது வெளிநாட்டுப் பயணங்கள் அரைவாசிக்கு அதிகமானவை இந்தியாவை நோக்கியே நிகழ்ந்துள்ளது. ஆனால், எந்த தடவையும் நேரடியாகப் பொருளாதார உடன்படிக்கை எதிலும் ரணில் கைச்சாத்திடவில்லை. திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பான விடயத்தை யாராவது குறிப்பிடலாம். அதனை இராணுவப் பாதுகாப்புச் சார்ந்த அரசியல் ரீதியான உடன்படிக்கையாகவே ரணில் விக்கிரமசிங்க அரசு கருதியது. ஆனால், அதற்குப் பொருளாதார அர்த்தம் கொடுத்தவர்கள் இந்தியர்களே. அதனைத் தொடர்ந்து பல முயற்சிகளில் இந்தியாவினது தலையீடு ஏற்பட்டுவருகிறது. ஏனெனில், இந்தியாவுக்குப் பாதுகாப்பு எப்படி முக்கியமோ அப்படியே பொருளாதாரம் சார்ந்த நோக்கு நிலையும் உள்ளது.

பொருளாதாரத்தைப் பிரயோகிப்பதன் ஊடாக, ஓர் அரசின் இறைமையை முறியடிக்கலாம் என்பது தற்போதைய உலகவல்லரசுகளின் வர்த்தகக் கொள்கையாக உள்ளது. அதனை இலங்கை விடயத்தில் கையாளும் இந்திய அரசு இலங்கையின் உள்நாட்டு அரசியல் பிரச்சினைகளையும் அத்தகைய அணுகு முறையூடாக முறியடிக்கலாம் எனக் கருதுகின்றது. இதில், ரணில் விக்கிரமசிங்க அரசுக்கும் உடன்பாடு இருந்தது. ஆனால், ரணில் விக்கிரமசிங்க அரசு மேற்கு நாடுகளினது ஆதரவையும், அவற்றின் உதவிகளையும் கொண்டு-உள்நாட்டு விடுதலைப் போராட்டத்தை முறியடிக்கலாமெனக் கருதியது. அதாவது, இந்தியாவின் பொருளாதாரத் தலையீட்டினால் முறியடிக்காது, மேற்கு சக்திகளின் பொருளாதார ஒத்துழைப்பால் முறியடிக்கலாமெனக் கருதியது. இதுவே, இந்திய அரசிற்கும் ரணில் தலைமையிலான அரசிற்குமான இழுபறிக்குரிய அடிப்படை கருத்தியல் வேறுபாடாகும் . அவ்வாறு இந்தியாவைத் தலையிட இடமளித்தால், முழு இலங்கையும் இந்தியாவின் ஆதிக்கப் பொருளாதாரத்திற்குள் மூழ்கிவிடும் என்பதே அவரது எச்சரிக்கையாகும். அவ்வாறு மூழ்குகின்ற சந்தர்ப்பம் ஏற்பட்டால், வடக்கு கிழக்கை மூழ்கடிக்க வைப்பதே ஐ.தே.மு.அரசின் தலைமையின் விருப்பமாகும். அதற்கு உதாரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குவது திருகோணமலை எண்ணெய்க்குதமாகும். இத்தகைய எண்ணெய்க் குதங்களை இந்தியாவிற்குக் கையளித்த நிலை ஆட்சி மாற்றத்தின் பின்பும் வடக்கை இந்தியாவிற்கு தாரைவார்க்கும் அரசியல் - பொருளாதார -இராணுவ உபாயம் தென்னிலங்கை ஆட்சி யாளர் களால் பின்பற்றப்படுகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை-இலங்கையின் இறையாண்மை யில் தனது பிடி தொடருவதுடன், இந்தியாவின் விருப்புக்கு அப்பால், எதனையும் அடைந்துவிடக்கூடாது என்பதில் அக்கறையாகவுள்ளது. அதனை இலங்கையிலுள்ள எந்த ஆட்சியாளர் ஏற்றுக்கொள்கின்றா ரோ, அவருடன் கூட்டுச்சேர இந்தியா தயாராகவுள்ளது. இந்தியத் தலைமை இலங்கை தலைவர்களோடு உரையாடியபோது, தெரிவித்த கருத்துக்களைப் பார்த்தால், அதீதமாகச் சமாதானத்தை விரும்பும் நாடாக இந்தியா உள்ளதென்பது வெளிப்படுத்தப்படும் அம்சமாகும். ஆனால், அது முற்றிலும் தவறான அவதானிப்பாகும் சமாதானம் என்ப தைவிட, தனது விருப்புக்களையும், முடிவுகளையும் அமுலாக்குவதே இந்தியாவின் நோக்கமாகும். அதாவது, சமாதான காலத்தில் இந்தியா வின் ஊடுருவல், செல்வாக்கு போர்க்காலத்தை விட அதிகரித் துள்ளது என்பதை யாரும் இலகுவில் நிராகரித்துவிட முடியாது. அதனால், இச்சூழலை மேலும் நீடிக்கச் செய்வதும், அதன் வாயிலாக இந்தியா தனது நலன்களை அடைவதையுமே இலக்காகக் கருது கின்றது. அதுமட்டுமல்லாது, ஆட்சியின் தலைமையுடன் ஏற்படுத்திக் கொள்ளும் உறவினால் சரியான, நியாயமான தீர்வு எதனையும் எட்ட விடாது தடுப்பதுடன், தீர்வுக்கான உபாயங்களைக் கண்டறியும் காலத் தை நீடிப்பது இந்தியாவின் இன்னோர் தந்திரோபாயமாகும். தீவிர இந்திய எதிர்ப்பை-இலங்கையில் காட்டிய ஆட்சியாளராக முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா காணப்பட்டார். ஆனால், அவரது இறுதிக்காலம் நெருக்கமான இந்திய நண்பனாக மாற்றிய அரசியலை புரிந்துகொண்ட ரணில் - இந்திய விரோதியுமல்ல. நெருக்கமான, மிக நெருக்கமான நண்பனுமல்ல. இந்தியாவை ரணில் தன்பக்கம் இழுப் பதில் வெற்றி கண்டிருக்கலாம். ஆனால் அந்த வெற்றிக்குப் பின்னால் நிகழ்ந்த குழிபறிப்பு மிக அபாயமானது. ரணில் - இந்திய நெருக்க மானது, புலிகள் - ரணில் விரிசலுக்கு வழிவகுக்குமென இந்தியா கணக்குப் போட்டது. இந்த விரிசல் உள்நாட்டுப் பாதுகாப்பைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகர்ப்பது மட்டுமல்ல, பொருளாதார அபிவிருத்தியையும் தேசிய ஒருமைப்பாட்டையும் உடைக்கும் என்பதில் யதார்த்தமானது. அது ரணில்விக்கிரமசிங்காவின் எதிர்கால அரசியலை முடிவுக்குக் கொண்டு வந்து விடுமென்பது யதார்த்தமான விடயமாகும். எனவே, இந்தியா மாறிவிட்டது என்பதைவிட, இந்தியா இலங்கை ஆட்சியாளர்களை மாற்ற விருப்புகின்றது. இந்தியாவினதும் அமெரிக்காவினதும் ஆதிக்க கொள்கையை பரிசீலிக்க சிறப்பான அரசியல் களமொன்று சந்திரிக்கா - ரணில் முறுகலில் கண்டுகொள்ள முடிந்தது.

## சந்திரிகா – ரணில் பலப்பரீட்சைக்கு பின்னணி

பெருமளவான அரசியல் விமர்சகர்களும், ஆய்வாளர்களும் சந்திரிக்கா-ரணில் அரசியல் குழப்பத்தை அரசியலமைப்புக்கான குழப்பம் என்றும் அதிகாரப் போட்டி என்றும் குறிப்பிடுகின்றனர். அதில் ஓரளவு உண்மையிருந்தாலும், அடிப்படையில் அத்தகைய குழப்பம் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்த காலப்பகுதியிலிருந்தே நிகழ்ந்து வருகின்றது. அது ரணில் கூறுவது போல, பருவக்காற்று மழை போன்றதுதான். ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள குழப்பம் மேற்கு-கிழக்கு முரண்பாட்டில் எழுந்த குழப்பத்தினால் விளைந்த மழையாகும். அதாவது, மேற்கு என்பது இங்கு மேற்கு நாடுகளைக் குறிக்கின்றது. அதிலும், அமெரிக்க நட்புக்கலந்த நாடுகளைக் குறிப்பதாகும். கிழக்குநாடு என்பது, இங்கு இந்தியாவைக் குறிப்பதாகும். அதாவது அமெரிக்க-இந்திய முரண்பாடே, ரணில்-சந்திரிகா முரண்பாடாகும். ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்றதும், அங்கு இலங்கையின் பாதுகாப்புப் பற்றிப் பேசியதும், ஏதோ உடன்பாடு செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டதும் உண்மையே. ஆனால், அவற்றில் ரணிலுக்கு முழுமையான நம்பிக்கை இல்லையென்று கருதுமளவுக்கு, ரணில் அமெரிக்காவுக்கு சென்றதும், அங்கு பொருளாதாரம் பற்றிய தீவிர உரையாடலையும், அதேநேரம் பாதுகாப்புப் பற்றிய பேச்சுக்களை செய்ததன் மூலமும் யாரும் விளங்கிக் கொள்ளலாம். இதனை இந்திய ஆளும் வர்க்கத்தினர் விளங்கிக் கொள்ளாமலில்லை. இதனை இந்தியத் தரப்பு ரணிலை தங்கள் சட்டைப்பைகளுக்குள் போடப் பல தடவை முயன்றாலும், ரணிலுக்கு நம்பிக்கை ஏற்படுவது போல் நடந்துகொள்ள முயன்றாலும், ரணில் நழுவிக் கொண்டே போகிறார். அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா பக்கம் தான் இருப்பது போல் காட்டிக்கொண்டு மேற்கின் விசுவாசியாக நடந்து கொள்கின்றார். இதனால், இலங்கை விடயத்தில் இந்தியா மௌனமான அதிரடி நடவடிக்கைகளை எடுக்க விரும்பியது.

இந்தியாவின் நடவடிக்கைக்கு இன்னோர் வலுவான காரணமும் இல்லாமலில்லை. விடுதலைப்புலிகள் அண்மையில் முன்வைத்த இடைக்கால நிர்வாக வரைபுபற்றி இலங்கையில் எழுந்த விமர்சனத்தை விட, இந்தியாவில் எழுந்த விமர்சனம் மிக அதிகம். குறிப்பாக இந்து பத்திரிகையில் *(The Hindu)* முன்னாள் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஜே.என்.டிக்ஷிற் வெளிப்படுத்திய தகவலின்படி - இலங்கையின் இறைமையிலும், ஒருமைப்பாட்டிலும் மேற்கு நாடுகளைவிட இந்தியாவுக்கு அதிக கரிசனை உண்டு எனக் குறிப்பிட்டிருந்தார். அதாவது, இடைக்கால வரைபை மேற்குநாடுகள் வரவேற்று அறிக்கைவிடும் போது, இந்தியர்கள் வரவேற்காதது மட்டுமன்றி, மேற்கைவிட தமக்குள்ள கரிகனையையும் தெளிவாகக் காட்டியுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா ஏற்படுத்திய அரசியலமைப்புக் குழப்பமௌமட்டும் கணக்குப் போடமுடியாது. அவர் திட்டமிட்டு வழிநடத்தப்பட்டுள்ளார். அது ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பல நன்மைகள் எதிர்காலத்தில் ஏற்படலாமென்ற எதிர்பார்ப்புடனே இந்தக் குழப்பம் உருவானது. நிச்சயமாக அதிகாரப் போட்டிதான், ஜனாதிபதி சந்திரிகாவின் இலக்காக மட்டும் இருந்திருந்தால், ஏற்கனவே பல வாய்ப்புக்களும், சந்தர்ப்பங்களும் அவரை நாடி வந்தது. அப்போதெல்லாம் மௌனமாக இருந்துவிட்டு, திடீரென தற்போது எழுச்சியடைந்தது ஏனென்று கேள்வி எழுப்புகின்றபோதே, அதனை விளங்கிக் கொள்ள முடிகின்றது.

இடைக்கால வரைபினைக் கண்டு ஜனாதிபதி ஆட்டங்கண்டுவிட்டார். அதே மாதிரி இந்தியாவும் இடைக்கால வரைபை ஆபத்தாக கருதியது. இதனால் இரு சக்திகளும் ஒன்றிணைந்தன. பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் மக்கள் தொடர்பாடல் அமைச்சுக்களை திட்டமிட்டே அவர் கைப்பற்றினார். அதனூடாக, நாட்டின் பாதுகாப்பைப் பேணுவதுடன், வடக்கு - கிழக்கில் காணப்படும் நோர்வேயின் பிரசன்னத்துடனான கண்காணிப்புக் குழுவையும், வடக்கு-கிழக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் இராணுவம், பொலிஸ் பிரிவையும் கையாளலாம் என்பதுடன், அதற்கான பிரகடனங்களை வெளிக்கொண்டுவரும் நோக்கில், தொடர்பாடல் அமைச்சையும் ஜனாதிபதி கைப்பற்றியிருந்தார். இவற்றின் மூலம், சமாதான முயற்சியை சீர்குலைக்கலாம் என்பதே, ஜனாதிபதியின் நோக்கமாக அமைந்திருந்தது. அவ்வாறாயின், ஜனாதிபதி ஏன் விடுதலைப் புலிகளுடன் தான் தொடர்ந்து பேச விரும்புவதாகக் கூறுகின்றார் என்ற கேள்வி எழலாம். அக்கேள்வி நியாயமானதுதான். சாதாரணமாகப் பார்த்தால் ஏமாற்றுத்தனமான அணுகுமுறையாக அமையும். ஜனாதிபதி சமாதானமான அரசியல் கலாசாரத்துக்குள் வந்திருப்பாராயின், ரணிலின் முயற்சியை ஊக்குவிப்பதுடன், இத்தகைய போக்கை அனுசரித்துச் செயற்பட்டிருப்பார். இவ்வாறானதோர் குழப்பத்தை தோற்றுவித்திருக்கமாட்டார். இதுவரை நடந்த சமாதான முயற்சியை அரைகுறையில் தடுத்து நிறுத்திவிட்டு, மீண்டும் ஆரம்பத்திலிருந்து தொடங்க ஜனாதிபதி திட்டமிடுகிறார். அதாவது, 1957 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஆட்சியிலிருப்பவர்கள் தொடக்கத்தை உருவாக்க, எதிர்க்கட்சியினர் தொடக்கப் புள்ளியை அழித்துவிடுவது வழமையாகிவிட்டது. இதன் ஒன்றாகவே, இந்நடவடிக்கையையும் ஜனாதிபதி கையாண்டார்.

ரணில்விக்கிரமசிங்கவை தவறாகக் கணக்குப் போட்டவர்களுக்கு, இந்தசம்பவம் தெளிவான விளக்கத்தை எடுத்துக் காட்டியிருக்கும். இலங்கையில் அரசியல் குழப்பம் ஏற்பட்டபோதும், ரணில் அமெரிக்கப் பயணத்தை இடைநடுவில் கைவிட்டு விட்டுக் கிளம்பவில்லை. அதுமட்டுமல்ல, பெரும் குழப்பங்களையும், அதிர்ச்சியையும் ரணில் அடையவில்லை. மிக நிதானமாக தனது நடவடிக்கையைக் கையாண்டதுடன், அமெரிக்காவிலிருந்தே இங்கு வழிகாட்டியுமிருந்தார் என்பதைக் கவனத்தில் கொள்ளும்போது, ரணிலை சிரத்தையுடன் அணுகுவதே பொருத்தமானதெனத் தெரிகின்றது. எனவே, இரு தலைமைகளிடையிலான பலப்பரீட்சையில், சர்வதேச நாடுகளின் ஆதரவு யார் பக்கமுள்ளதோ அவரது கை ஓங்கும் என்பதை கடந்த அனுபவத்திலிருந்து விளங்கிக்கொள்ளலாம். ஜனாதிபதிக்கு இந்தியாவின் ஆதரவு இருந்த போதும், அமெரிக்காவின் ஆதரவு ரணிலுக்கு அதிகம் உண்டென்பதும் தெளிவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமாதானத்தின் நிலை**

இனப்பிரச்சனை தொடர்பாக எழுந்துள்ள சூழல், ஜனாதிபத யியால் ஏற்பட்டது என்பதை சர்வதேச ஊடகங்களும், உள்நாட்டு ஊடகங்களும் வெளிப்படுதியுள்ளன. இதனாலேயே, ஜனாதிபதி சமாதானத்தின் மீது அக்கறையும், கரிசனையும் உடையவர் போல் காட்டுகின்றார். ஜனாதிபதிக்கும் சமாதானத்தின் மீது கரிசனை இருந்தி ருந்தால், விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால வரைவுத் திட்டத்தைப் பரிசீலித்து, அதற்குரிய திருத்தங்களைச் சிபார்சு செய்தி ருப்பார் இவ்வாறு உள்நாட்டு அரசியல் குழப்பம் நீடிப்பது போன்று, வெளிநாட்டு சக்திகளும் ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு மேலும் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றன. அதில் மிகப்பிரதான குழப்பமாக விளங்குவது நோர்வே தனது பணியிலிருந்து தற்காலிகமாக விலகுவ தாக அறிவித்துள்ளமை யாகும். உண்மையில் ஜனாதிபதி சமாதானத் தை, தான் விரும்புவதாகக் காட்டிக்கொண்டு, தென்னிலங்கையில் பொருளாதாரத்தையும், அதற்கான வெளிநாட்டு உதவிகளையும் தொடர்ந்து பேண விரும்பினார். சமாதானம் நிலைத்திருந்தால் மட்டு மே, ஐரோப்பா மற்றும் யப்பான் உட்பட்ட உதவி வழங்கும் நாடுகள் உதவிகளையும், முதலீடுகளையும் வழங்க முடியுமென குறிப்பிட் டிருந்தன. இதனால், சமாதானத்தின் பெயரால் அவற்றைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளலாம் என ஜனாதிபதி தீர்மானித்திருந்தார்.

அத்தகைய நிலையை நீடிக்க வாய்ப்பாக வெளிநாட்டு தூது வர்களையும், இராஜதந்திரிகளையும் சந்தித்து, அவர்களுக்குத் தனது சமாதான அணுகுமுறைகள் பற்றித் தெரிவித்ததுடன், முதலீடுகளைத் தொடருமாறும் கூறியிருந்தார்.இத்தகைய நெருக்கடியுடன், ரணில் விக்கிரமசிங்கவும் சமாதான நடவடிக்கையிலிருந்து விலகுவதாக முடி வெடுத்தார். அதாவது, சமாதானம் முற்றாகக் குழம்பியுள்ளது அல்லது குழப்பப்பட்டுள்ளது. ஜனாதிபதியும், பொதுஜன ஐக்கிய முன்னணியி னரும், ஜே.வி.பி கட்சியினரும், பௌத்தபிக்குகள் சிலரும் எதிர்பார்த் தது போன்று, இலங்கையின் சமாதான முயற்சியைச் சீர்குலைப்பதில் தமது இலக்கை அடைந்துள்ளனர். ஆனால், ரணிலும் நோர்வே அனு சரணையாளர்களும் ஒரே சந்தர்ப்பத்தில் விலகுவதாக அறிவித்த நிகழ்வு ரணிலுக்கு மேற்கு நாடுகள் அளிக்கும் ஆதரவையும் ஒத்து ழைப்பையுமே காட்டியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா - விடுதலைப்புலிகள் முன்வைத்த வரைபை முழு மையாக நிராகரிக்காத நிலையில், சில திருத்தங்களுடன் அமுல் படுத்தி, ஓர் ஐக்கியப்பட்ட சமாதானமான இலங்கையை உருவாக்க விரும்புகிறதென்பது புலனாகின்றது. தனது நலன்களையும், இலங்கை அரசின் நலன்களையும் பாதுகாப்பதுடன், போரற்ற இலங்கையை உருவாக்க விரும்புகின்றது. எனவே, தற்போதைய நிலை நீடித்தால், போர் வெடிக்கும் என்பது இலங்கை மக்களிடம், குறிப்பாக தமிழ்மக் களிடம் எழுந்துள்ள பிரதான கேள்வியாகும். புலிகள் தெளிவாக அறிவித்துவிட்டனர். போர் திணிக்கப்பட்டாலன்றி, போரைத் தொடரு வது தமக்கு விரும்பாத ஓரம்சம் என்று. இலங்கை இராணுவம் ஒரு போரைப் பெரியளவில் திணிக்கும் வலுவிலில்லை என்பது மேற்கு நாட்டு நிபுணர்களது கடந்தகாலக் கணிப்பீடு. அதற்காகவே பிரித்தா னிய, அமெரிக்க நிபுணர்கள் இங்கு வரவழைக்கப்பட்டு, பரிசீலிக் கப்பட்டு, இலங்கை இராணுவத்தின் திறனை வளர்க்க வேண்டுமென ஆலோசனை வழங்கியுள்ளனர். எனவே, போர் உடனடியாக மூழுவது - இராணுவ வல்லுநர்களது நோக்கில் இயலாத தொன்றாகவே உள்ளது. மற்றும் பொருளாதார அடிப்படையில் நோக்கினாலும் போர் கடினமான தொன்றாகவே காணப்படுகின்றது. தென்னிலங்கை பொரு ளாதாரம் ரணில் அரசின் காலத்திலேயே ஒரளவு வளர்ச்சி கண்டது. போரைத்தொடக்கிவிட்டு, இந்தியாவின் உதவியை நாடிப்போரைத் தொடரலாமென்ற வாதமும் தமிழ் மக்களிடம் காணப்படுகின்றது நிச்சயமாக இந்தியத்தரப்பு நேரடியாகப் போரில் ஈடுபடுமென எதிர் பார்ப்பது கடினமானது. அவர்களது உள்நாட்டு நிலைவரம், காஷ்மீர் தொடர்பான பாகிஸ்தானின் நிலைப்பாடு என்பவற்றுக் கப்பால், கடந்த தடவை இலங்கையில் நேரடியாகத் தலையிட்டு, ஏற்பட்ட விளைவு களைத் தீர்த்துக்கொள்ள முடியாத நிலையில், மீளவும் இலங்கை விடயத்தில் நேரடித் தலையீட்டை இந்தியா மேற்கொள்ளுமெனக் கருதுவதற்கான வாய்ப்பு அரிதாகவே உள்ளது. மொத்தத்தில் தமிழ் மக்கள்-போரையும், சமாதானத்தையும் எதிர்கொள்ளக் கூடியவர்களா கவே உள்ளனர். சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இப்படியான பல கட்டங்களைச் சந்தித்தவர்கள் என்பதை இலங்கையின் பெரும்பான் மை அரசியல் தலைமையும், உலகமும் விளங்கிக் கொள்ளுதல் அவ சியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, தமிழ் மக்களது சுயநிர்ணயத்திற்கான போராட்டத்தை எதிர்கொள்ள திராணியற்ற இலங்கை அரசு வஞ்சக எண்ணத்துடன் பிராந்திய சக்தியினதும், சர்வதேச சக்தியினதும் ஆதரவுடன் போராட்டத்தை முறியடிக்க முனைகின்றது. மறுபக்கத்தில் போராட்டத்தின் இயல்பான வளர்ச்சிப் போக்கு தவிர்க்கமுடியாத மாறுதலை நிகழ்த்தி வருகின்றது. சமாதானம் என்ற அரசியல் களமுனையில் தந்திரமான அணுகுமுறைகளை பின்பற்றிவரும் உள்நாட்டு அரசியல் தலைமையும் சர்வதேச சக்திகளும் ஒன்றுசேர்ந்து தமிழர் தலைமைகளுக்கும், தமிழ் மக்களுக்கும் நெருக்கடியை கொடுக்க முன்பு தமிழர் தரப்பு முறியடிப்பு தந்திரத்தை பிரயோகித்து வெற்றியை அடையவேண்டும். அந்தவகையில் ஆசியாவுக்குள் தற்காப்புத் தந்திரத்தை பயன்படுத்தி வரும் சீனாவின் அரசியலையும் அதனால் உலகளாவிய போக்கில் காணப்படும் மாறுதலையும் அடுத்த அத்தியாயத்தில் பரிசீலிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 04

# சீனாவின் விஸ்தரிப்பு கொள்கையும் எதிர்ப்புவாத சிந்தனைகளும்

"சீனா எந்தவொரு வெளிநாட்டினதும் நெருக்கடிக்கோ அச்சுறுத் தலுக்கோ பணியப் போவதில்லை என்றும் நன்மையோ, தீமையோ எதுவந்தாலும் சீனா அதை சந்திக்க தயாராக இருக்கிறது. உலக வர்த்தகத்தின் தொடக்க உறுப்பினர்களுள் ஒருவராக சீனாவை அனும திக்காது விட்டால் அதற்கும் பதிலடியாக சீனா தன்னுடைய பொருளா தார வர்த்தகத் தடைகளைக் கொண்டுவரும்" என சீனாவின் மூத்த வர்த்தக அதிகாரியான லூகீக் கூறியிருக்கிறார்.

இதன் உண்மைத் தன்மையையும் அடிப்படை விளக்கத்தையும் நோக்குவோம். உலக வர்த்தக ஒப்பந்த நாடுகள் உருகுவேயில் கூடிய போது புதிய சில முடிவுகளை எடுத்திருந்தன. குறிப்பாக விவசாயம் தொடர்பான உற்பத்திகளைக் கொண்டுள்ள நாடுகளைப் பாதிக்கும் வகையில் அவை அமைந்திருந்தன. குறிப்பிட்ட தரத்தையும், பெறுமதி யையும் கொண்ட பொருட்கள் மட்டுமே ஏற்றுமதியில் ஈடுபடுத்தப்பட வேண்டும். குறிப்பிட்டளவு வரிகளை மட்டுமே அவை விதிக்கலாம். அதுவும் குறிப்பிட்ட அளவான பொருட்களுக்கு மேல் வரிகளை விதிக்க முடியாது என பல விடயங்களை முன்வைத்தன. அத்துடன் மானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்கள், ஊக்குவிப்புக்கள், கடன்திட்டங்கள் வழங்குவதற்கானஎல்லை மட்டுப்படுத்தியிருந்தன.

"சீன பொருளாதார பிரதேசம்" என அழைக்கப்படும் சீனா, ஹொங்கொங், தைய்வான் (சீனாவின் மாகாணம்) என்பன உலகப் பொருளாதாரத்தில் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் பிரதேச மாகும். இப்பிரதேசம். உலகம் பொருளாதாரத்தில் கணிசமான இடத் தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றது. அமெரிக்காவுக்கோ உலகத் துக்கோ சவால் விடக்கூடியளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது. 1972 ம் ஆண்டு சீன அமெரிக்க உறவின் பின்பு பரஸ்பரம் ஒன்றில் ஒன்று தங்கிநிற்கும் நாடுகளாக மாறின. சோவியத் யூனியன் வீழ்ந்த பின்னர் சீனாவின் வளர்ச்சி அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாகவே தென்பட்டது. தடைகளைப் போட அமெரிக்கா முயல்கிறது. ஆனால் அமெரிக்காவின் பிரதான சந்தையில் சீனாவும் ஒன்று என்பதை அமெரிக்கா மறந்து விடவில்லை. இதனால் இரண்டும் கெட்ட நிலைக்கு அமெரிக்கா தள்ளப்பட்டுள்ளது. அதனையே மூத்த அதிகாரி சூசமாக அமெரிக் காவுக்கு தெரிவித்துள்ளார். ஈராக்கைப் போன்றோ லிபியாவைப் போன்றோ சீனாவை தனிமைப்படுத்த முடியாது. அது சாத்தியப்படு வது கடினம்.

இது ஒருவகையான பொருளாதார விளக்கமாகும். மறுபுறமாக அரசியல் பலத்தை கணிப்பீடு செய்து பார்ப்போம். சீனா சோஸலிஸ சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்ட நாடு. அதிக இனப்பிரிவுகளை யோ முரண்பாடுகளையோ கொண்டிராத நாடு. தனிக்கட்சியதிகாரத் தைக் கொண்டுள்ள நாடு. பொருளாதாரத்தில் அடைந்துள்ள பலம் அரசியல் கொந்தளிப்புகளையோ, முரண்பாடுகளையோ இராணுவத் தினால் அடக்கப்பட்டாலும் மக்களால் வெறுக்கப்படக்கூடிய அரசாக இல்லை. சர்வதேச ரீதியாக இராணுவத்தை எந்த நாட்டின் எல்லை யிலோ நாடுகளிலோ கொண்டிருக்காத அரசு ஆசியாவிலே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்கான "வீட்டோ" அதிகாரத்தைக் கொண்டுள்ள அரசு என்ற அடிப்படையில் நோக்குவோமாயின் அரசியலிலும் ஸ்திர மான அரசு சீனா.

எனவே, சீன அதிகாரியான வூகீக்கின் கருத்து சீனாவின் பலத் தையும், நம்பிக்கையும், இனங்காட்டுகிறது. உலகத் தலைமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ள அமெரிக்காவின் வெற்றிக்கு சீனா நெருக்கடி கொடுக்கும் அரசாக மாறுகிறது. அமெரிக்கா எத்தகைய திட்டங்களை போட்டு சீனாவை தோற்கடிக்க முயன்றாலும் குறுகிய காலத்தில் சாத்தியப் படுவது கடினம். இவ்வாறான அமெரிக்க-சீன விரிசலானது முதலாளித் துவ-சோஸலிஸ முறுகலாக ஆரம்பத்தில் காணப்பட்டாலும் பிற் காலத்தில் அதன் தனித்துவம் மங்கி அரசுகளுக்கிடையிலான முறுக லாக மாறியுள்ளது. இத்தகைய அரசியல் பொருளாதார, இராணுவ நெருக்கடியை எதிர்கொள்ள சீனா பல மாற்றுத் திட்டங்களை முன் வைத்து இயங்கிவருகின்றது. அதனால் சீனா எதிர்நோக்கிவரும் சவால்களையும் அதன் முறியடிப்பு உத்திகளையும் முன்னனுபவமாக கொண்டு இப்பகுதியை விரிவாக நோக்குவோம்.

## இந்து சமுத்திரப் பிராந்தியமும் சீனாவின் விஸ்தரிப்புவாதமும்

உலகில் சீனா பெரும்மக்கள் எண்ணிக்கையையும் பரந்த நிலப்பரப்பையும் உள்ளடக்கிய வலுவான, பொருளாதார இராணுவ அரசாக விளங்குகிறது. மிக நீண்ட காலத்துக்கு முன்பே பல கண்டு பிடிப்புக்களை உலகத்திற்கு அறிமுகப்படுத்தியதுடன் உலகின் அதிசயத்தையும் கொண்டிருக்கும் பெருமைமிக்க நாடு. சீனாவின் வரலாற்றில் 1949ஆம் ஆண்டு புரட்சிகரமான சிறப்புமிக்க ஆண்டாகும். அதன் பின்னர் கம்யூனிஸநாடு என சீனா தன்னை அழைத்துக் கொண்டாலும் அடிப்படையில் அதற்கு மேலதிகமான விமர்சனங்களும் உண்டு. எது எவ்வாறாயினும் சீனா பலமான இறைமை கொண்ட அரசு இலங்கை தமிழ் மக்களாகிய நாம் சீனாவைப்பற்றி புரட்சியை முதன் மைப்படுத்தி நோக்குவோமோ இல்லையோ தற்காலத்தில் நிலவும் சர்வதேச அரசியலைப் பற்றியாவது முதன்மைப்படுத்தி நோக்குதல் அவசியம். சமகால சர்வதேசப் போக்கில் மாற்றம் நிகழவேண்டு மாயின் சீனாவின் பங்கின்றி சாத்தியப்படுவது கடினம். அதுபற்றி இதே பகுதியில் பலதடவை சீனா தொடர்பாக சில விடயங்கள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இதே சமயம் இலங்கைக்கான சீனத்தூதுவர் ஜியாங்குவின் சென்னின் வடபகுதி விஜயம் மேலும் சீனாவைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சீனாவின் கொள்கையில் ஏற்பட்ட மாற்றம்

சீனாவின் கொள்கையில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களை சீனாவின் பாதுகாப்பு அமைச்சரான *Shi Hoatian* பின் வருமாறு குறிப்பிடுகின்றார். சீனா தனது அடிப்படைக் கொள்கையில் சில அம்சங்களுக்கு முதன்மையும், முக்கியத்துவத்தை யும் அளிக்க ஆரம்பித்துள்ளது. குறிப்பாக சீனாவின் தேசிய பாதுகாப்பில் சீனக்கம் யூனிஸக் கட்சி என்னுமில்லாதவாறு அக்கறை கொண்டிருப்பதுடன் ஒவ் வொரு காலாண்டிலும் அதனை மீளாய்வு செய்து வருகின்றது. சீனா தனது அயல் நாடுகளுடனும் ஏனைய வெளிநாடுகளுடனும் நெருக்க மான, புரிந்துனர்வுடைய உறவைப் பேணத்திட்டமிட்டு வருகிறது. அரசின் இறைமைக்கும் தன்னாதிக்கத்துக்கும் பங்கம் வராத வகை யில் சர்வதேச வல்லரசுகளுடன் உறவுகளை ஏற்படுத்துதல் தேசிய பாதுகாப்புக்கும் ஒருமைப்பாட்டுக்கும் ஏற்ப தரைப்பாதுகாப்பை மட்டு மன்றி கடல் பாதுகாப்பையும் தனது செல்வாக்குப் பிராந்தியத்தையும் பாதுகாப்பது. மேலும் கடல் பிராந்தியத்தில் சீனாவின் உரிமையை நிலைநாட்டுவதுடன் புதிய சமுத்திரக் கொள்கையை உருவாக்குவ தென சீன அரசும் கம்யூனிஸக் கட்சியும் முடிவெடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். அதனடிப்படையில் சீனா கடற்பிரதேசத்தில் பாது காப்பை இலக்காகக் கொண்டு எதிர்கால அதிகார விஸ்தரிப்பை தயார்படுத்தி வருகிறது. சீனா தனது கடல் ஆதிக்கக் கொள்கையை விஸ்தரிப்பதற்கான வலுவை பின்வரும் மூன்று காரணிக்கூடாகவும் ஏற்படுத்துவதெனத் தீர்மானித்துள்ளது.

*First Island Chain* என அழைக்கப்படும் இணையம் ஒன்றை *Modern Surface Fleet* என்ற அடிப்படையில் அபிவிருத்தி செய்து வருகிறது. அத்தகைய தொடர் அல்லது இணையம் யப்பான், ஒக்கினாவா, தைவான், பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா என்பவற்றை உள்ளடக்கியதாக உருவாக்கிவருகிறது.

*Second Island Chain* என்று அழைக்கப்படும் இணையத்தொடர், பசுபிக்கடல் பிரதேசத்தில் காணப்படும் சீனாவுக் குரித்துடைய தீவுகளை உள்ளடக்கியதாகும். அது பொனின்ஸ், மரியனஸ், பாலு என்பவற்றைக் கொண்டது. இவை அநேகம் 2020இல் சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். இது கடற்படை அபிவிருத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித் திட்டத்திற்கு மிகவும் சாதகமான பிரதேசமாக விளங்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

மூன்றாவது *Blue Water Region* என்ற ஆழ்கடல் பிரதேசத்தில் விமானப்படைகளைக் கொண்ட கடற்படைக் கப்பல்களை உருவாக் குவதென்பதாகும். தற்போதைய நிலையில் பீஜீங் 2020ஆம் ஆண்டில் பாவனைக்கு கொண்டுவரும் நோக்கோடு இரண்டு எயார் கிறாவ்ட்டை *(Air Craft)* அப்பிரதேசத்தின் நிறுத்துவதற்கு தீர்மானித்து தயாரித்து வருகின்றது. அவ்வகையான எயார் கிறாவ்ட்டுக்கள் எதிர்த்தாக்கு தலை மேற்கொள்ளக்கூடிய படைகளையும் வலுவையும் கொண்டிருத் தல் வேண்டுமெனவும் தீர்மானித்துள்ளது. இம் மூன்று திட்டங்களையும் 2020இல் பூர்த்தி செய்வதெனவும் அதன்பின்னர் மிகப்பிரதான கடல திகார அரசாக மிளிர்வதென்பதுமே சீனாவின் தற்போதைய கொள்கை யாகும். ஆனால் சீனா இவ்வாறான விஸ்தரிப்பு நலன்களுடன் வர்த் தகம், பொருளாதார, அபிவிருத்தி என்பவற்றையும் கருத்தில் கொண்டு செயல்படுகிறது.

இது வெற்றி பெறுமாயின் சீனாவே உலகத்தில் பாரிய வர்த் தகக் கப்பல்பிரிவையும் கடல் படையையும் கொண்ட நாடாக விளங் கும். அவற்றுடன் கப்பல் கட்டும் கைத்தொழில் விருத்தியை ஏற்படுத் தும் முயற்சியிலும் சீனா புதிய தொழில்நுட்பத்தை இதனூடாக பயன் படுத்த முயற்சிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. கடல் வியாபாரம் கடல்வளக் கைத்தொழில் எனச் செயல்படும் சீனா பொருளாதார சுயாட்சிப் பகுதிகளாக கடல் பிரதேசங்களை உரு வாக்கத் தொடங்கிவிடும். தற்போதைய சூழலில் சீனா *Sea Lines Of Communication (SLOCS)* என்பதை தனது கடல் பிராந்தியத்தில் அபிவிருத்தி செய்து வருகின்றது. அத்துடன் சீனா கஜகஸ்தானுடன் 350 மைல் பிரதேசத்தில் மசகு எண்ணெயை கைமாற்றுவதற்கான பைப்லைனை *(Pipeline politics)* உருவாக்கி வைத்துள்ளது. இது காலப்போக்கில் *SLOCS politics* ஆகவும் பைப்லைன் அரசியலாகவும் உருவெடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமுத்திரப் பிராந்தியம்

புதிய உலக அரசியல் ஒழுங்கு உருவான பிற்பாடு சீனா தனது கடலாதிக்க விஸ்தரிப்பில் ஆசிய பசுபிக் பிராந்தியக் கடல் பிரதேசத்தைக் கடந்து இந்துசமுத்திர விழிம்பு நாடுகளுடன் உறவை உருவாக்க ஆரம்பித்து கடந்த ஒரு தசாப்த காலமாக பலப்படுத்தி வருகிறது. இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவையும் அமெரிக்க செல்வாக்கையும் கடந்து நெருக்கம் அதிகரித்து வருகின்றது.

### இந்தோனேசியா

இந்தோனேசியாவுடன் சீனாவின் இராணுவ ரீதியான நெருக்கம் நேரடியாகவும் மியான்மாருக்கூடாகவும் நிகழ்ந்து வருகிறது. சீனாவுக்கும் இந்தோனேசியாவுக்குமான நெருக்கத்தை உடைக்கும் நோக்கத்துடனும் இந்தோனேசியாவின் இறைமைக்குட்பட்டிருந்த கிழக்குத் திமோரை அமெரிக்காவும் அதன் மேற்குலகக் கூட்டாளிகளும் இணைந்து தனியரசாக பிரிப்பதில் வெற்றிகண்டன. யாரும் எதிர்பார்க்காது கிழக்குத் திமோரியரின் விடுதலைப்போராட்டம் வெற்றிபெற்றதென்றோ சுதந்திரம் சாத்தியமாகி விட்டதென்றோ அர்த்தப்படுத்த முடியாது. மாறாக கிழக்குத் திமோர் இந்தோனேசியாவின் பிடியிலிருந்து பிரிக்கப்பட்டு அமெரிக்க மேற்குலக விரும்பிகளின் அடக்குமுறைக்குள் அகப்பட வைத்ததே கிழக்குத் திமோர் விடுதலையாகும். அமெரிக்காவோ மேற்குலகமோ கிழக்குத்திமோர் மக்களின் சுதந்திரத்திலும், வாழ்விலும் அக்கறை கொண்டதென்று யாரும் கணக்குப் போட்டுவிடக்கூடாது.

### ஈரான்

ஈரானுடன் சீனாவுக்கு இராணுவரீதியான பாரிய உடன்படிக்கைகள் கையெழுத்தாகியுள்ளது. ஈரானின் அணுவாற்றலை பெருக்குவதற்கான தொழில்நுட்ப உதவிகளை அமெரிக்கா நிராகரித்த பிற்பாடு அதனை சீனா வழங்குவதாகவும், ஈரானிய அதிபர் மொஸ்கோவுக்கு விஜயம் செய்த போது ரஷ்சிய அதிபரும் ஈரானுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு முன்வந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. மேற்காசியாவிலும் வளைகுடாப் பகுதியிலும் அமெரிக்க இராணுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடியை எதிர்கொள்வதற்கான பலத்தை சீனா ஈரானுக்கு வழங்க முன்வந்துள்ளமையும், ஈரான் சீனாவுக்கு எண்ணெய் வளத்தை வழங்குவதெனவும் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இந்த உறவு சீனாவின் *Xinsiang* மாகாண முஸ்லீம்களால் ஏற்படும் உணர்வுகளை திருப்திப் படுத்துவதாகக் கூடஅமைய வாய்ப்புக்கள் உண்டு.

**தென் ஆபிரிக்கா**

சீனாவுக்கும் தென்னாபிரிக்காவுக்கும் இடையில் மிக நெருக்கமான உறவு பேணப்பட்டு வருகின்றது. 1998களுக்கு பிற்பாடு வர்த்த கரீதியிலும் சுகாதாரம் மற்றும் காவல்துறை ஒத்துழைப்புக்களையும் வரிக்கொள்கைகளையும் வாணிப கப்பல் தொடர்புகளையும் அபிவிருத்தி செய்துவருகின்றது. 1998 ஆம் ஆண்டில் மட்டும் 1.588 மில்லியன் அமெரிக்க டொலருக்கான வர்த்தக உடன்பாடு இருநாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவால் சீனாவில் 130 மில்லியன் அமெரிக்க டொலருக்கு முதலீடு செய்துள்ளதை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இருநாடுகளும் முதலீட்டுக்கான உற்பத்திகள், இணைந்து தொழிற்படும் பொருளாதார வர்த்தகக் குழுக்கள் மற்றும் வர்த்தக பொருளாதார தொழில்நுட்ப பரிமாற்றங்கள் என்பனவற்றில் உடன்பட்டு செயல்படுவதென ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

**மாலைதீவு**

மாலைதீவின் தீவுக்கூட்டத்தில் ஒன்றான மாறோ தீவில் சீனாவின் தளம் அமைப்பதற்கான நடவடிக்கைகளின் 2001.05.17 ல் சீனப் பிரதமர் *Zhu Rongji* மாலைதீவு விஜயத்துடன் பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. குறிப்பாக மாலைதீவுத் தலைநகர் மாலியின் தென்பகுதியில் 40 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள மாறோ தீவு சீனாவின் இராணுவ நோக்கில் பிரதான மையமாகும். இதில் *Dong Feng-44* ஏவுகணைகளையும் பலஸ்ரிக் வகை ஏவுகணைகளையும் நிறுத்துவதாக சீனப்பிரதமரின் விஜயத்துடன் முடிவாகியுள்ளது. ஆனால் 2010 வரை யுத்தப் பிரிவாக இத்தளம் பயன்படுத்தப்படுவதில்லை என சீனா கூறிவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேநேரம் இவ்வாறான தளம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் வருகையை உணர்த்தியதுடன் இந்தியர்களுக்கு நெருக்கடி மிக்கதாகவும் விளங்க வாய்ப்பு உண்டு எனக் கூறப்படுகிறது. எவ்வாறு பனிப்போர்க் காலத்தில் சோவியத் யூனியன், அமெரிக்கா என்பன *Counter-Offensive* மேற்கொண்டனவோ அவ்வாறே இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இந்துசமுத்திரம் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**தன்சானியா**

1964 களிலிருந்து சீனா ராஜதந்திர ரீதியான உறவை தன்சானியாவுடன் கொண்டுள்ளது. ஆபிரிக்காவிலேயே சீனாவின் அதிக உதவியைப் பெறும் நாட்டில் முதலாவது நாடு தன்சானியாவாகும். 2000 ஆம் ஆண்டில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள வர்த்தக முதலீடு 90.553 மில்லியன் அமெ.டொலர் ஆகும். சீனாவின் ஏற்றுமதி 85.763 மில்லியன் அமெ.டொலர் ஆகும். இறக்குமதி 4.77 மில்லியன் அமெ.டொலர் ஆகும் எனப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. 2000 மார்ச்சில் சீனாவின் முதலீட்டு மையமாக ஆபிரிக்காவுக்குள் தன்சானியாவே விளங்குகிறது.

**கென்யா**

கென்யாவும் தன்சானியா போன்றே 1964 களில் சீன நெருக்கத்தை கொண்டது. 1978 களிலேயே வர்த்தக உடன்படிக்கையில் இரண்டு நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன. பொதுவாக விவசாய, வர்த்தக உறவுகளை முதன்மைப்படுத்தும் இரு நாடுகளும் பரஸ்பரம் பொருளாதார தொழில்நுட்பத்தில் பரிமாற்றத்தை ஏற்படுத்திவருகின்றன. மியான்மாரின் இராணுவ ஆட்சியுடன் சீனா கொண்டிருக்கும் நெருக்கம் பல பரிமாணங்களை உலக அரசியலில் கொண்டுள்ளது. குறிப்பாக இந்துசமுத்திர நாடுகளுடனான வர்த்தகத்திற்கான மைய நிலமாக விளங்குவதுடன் *Yunnan and Sichnan* ஆகிய மாகாணங்கள் சீனாவின் தொடர்புகளையும் பரிமாற்றங்களையும் இலகுவாக்கும் தன்மை கொண்ட *Interland* ஆக திகழுகின்றன. மேலும் தென் ஆசியாவுக்கும் தென்கிழக்காசியாவுக்குமான இராணுவ பொருளாதாரத் தொடர்பை ஏற்படுத்தும் புதிய வர்த்தகப் பாதைக்கான பிரதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகவும் உள்ளது. அதனுடன் இந்தியாவின் இராணுவ கடற்படை நடமாட்டத்தை கண்காணிப்பதுடன் வங்காள விரிகுடாவுக்கூடாக அந்த மான் கடற்பகுதியையும் நேரடியாக பார்வையிடவும் நகர்வுகளை சாத்தியப்படுத்தவும் உதவுகிறது. மியான்மாருக்கு அதிக பொருளாதார உதவியை வழங்கும் நாடுகளின் பட்டியலில் சீனா முதலாவது நாடாக விளங்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஏறக்குறைய 150 மில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தகத்தினை சீன-மியான்மாருடன் கொண்டுள்ளது. இவற்றுடன் இராணுவ ஒத்திகைகள் கூட்டான கடற்படை ரோந்து நடவடிக்கைகள் என பல அம்சங்களில் சீனாவும் மியான்மாருக்கூடாக ஈடுபட்டுவருகின்றன. மியான்மார் சீனாவின் மிகப்பெரிய பங்காளி நாடாக விளங்குகின்றது.

**இலங்கை**

இலங்கையுடன் சீனாவுக்கு மிக நீண்டகால உறவு உண்டு. அரிசி - ரப்பர் உடன்பாடு 100 ஆண்டுகளுக்கு கைச்சாத்திடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அதைவிட இராணுவ ஆயுத உதவியும் ஒத்துழைப்பும் சுதந்திரத்துக்குப் பின்னர் படிப்படியாக விரிவடைந்து சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியில் இலங்கையின் கடற்படைக்குமான ஆயுத ஒத்துழைப்புடன் தீவிரமடைந்தது. இது ஜே.வி.பி. யுடனும் வடக்கில் விடுதலைப்புலிகளுடனும் இலங்கை அரசுக்கு ஏற்பட்ட யுத்தத்தினால் சீனா அரசுடன் மேலும் உறவு விரிவடைந்து வருகிறது. பொதுவாகவே சீனாவின் நெருக்கம் கொழும்புடனே பேணப்பட்டு வருவதனையும் அது தற்போதைய காலகட்டத்தில் மட்டுமே வடகிழக்குப் பகுதியை நோக்கி விஸ்தரிப்படைந்துள்ளதெனவும் கூறமுடியும்.

எனவே சீனாவின் இந்து சமுத்திரம் நோக்கி விஸ்தரிப்பில் இலங்கையும் ஒரு முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. மேலும் முழு உலகத்திலும் சீனா மாற்றத்தையும் அபிவிருத்தியையும் திருப்பங்களையும் ஏற்படுத்தக்கூடிய நிலையில் காணப்படுவதனால் சீனாவுடனான உறவு இலங்கைக்கு எப்படியோ வட கிழக்குப் பகுதியிலுள்ள அரசியல் தலைமைக்கு முக்கியமானதும் முதன்மையானதுமாகும். இப்பிராந்தியத்தைப் பொறுத்தும் சர்வதேச அரசியலைப் பொறுத்தும் சீனா திருப்புமுனையின் மையமென்பதை கணக்குப் போடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறக்கூடாது. சீனாவும் இந்தியாவும் சமதூரத்தில் இருக்கும் இரண்டு அயல்நாடுகள் என்ற எண்ணம் அரசியல் ரீதியில் தமிழ் மக்களுக்கு ஏற்படவேண்டும். அவ்வாறான உறவு வலுப்படுத்தப்படுமாயின் பிராந்திய சமநிலையை இலகுவாக கையாண்டு விடலாமென தெளிவாகக் கூறலாம். இந்த சந்தர்ப்பத்தில் சீனாவின் 16 வது கம்யூனியக் கட்சியின் நிகழ்வை பரிசீலிப்போம்.

## 16வது கம்யூனிஸக் கட்சியின் மகாநாடு

சோவியத் யூனியன் வீழ்ச்சியுடன் சோஸலிசம் வீழ்ந்து விட்டதெனக் கருதும் அறிஞர்கள் நம்மிடையேயும் இல்லாமலில்லை. ஆனால் சோஸலிசம் இல்லாவிட்டாலும் கம்யூனிஸக் கட்சிகள் உயிர் வாழ்கின்றன என்பதற்குச் சீனக் கம்யூனிஸக் கட்சியின் 16 ஆவது உச்சிமகாநாடு சிறப்பான எடுத்துக்காட்டாகும். சீனாவின் கம்யூனிஸமோ சோஸலிசமோ இல்லாதுவிட்டாலும் கம்யூனிஸக் கட்சியும் அதன் செல்வாக்குமிக்க ஆட்சியும் நிலைக்களமாக அமைந்திருக்கின்றது என்பது தவிர்க்க முடியாதது மட்டுமல்ல, அதுவே ஆசியாவினதும், முழு அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளதும் எதிர்காலமென நம்பப்படும் ஒரு அரசியலையும் கொண்டிருக்கின்றது. ஆனால் சீனாவும், சோஸலிசப் பொருளாதாரமும், அது சார்ந்த உலகப் போக்கும் மாறியேவிட்டது என்பதே பொதுவான எடுகோளாகும். அத்தகைய மாற்றத்தை நோக்குவதன் வாயிலாக சீனாவின் எதிர்கால விருப்பத்தினை மதிப்பீடு செய்ய முயலலாம்.

சீனக் கம்யூனிஸக் கட்சியின் 16 ஆவது உச்சிமகாநாடு தியன்மென் சதுக்கத்தில் பல ஆயிரக்கணக்கான கட்சி உறுப்பினர்களுடன் ஆரம்பமாகியது. கட்சியினதும், அரசாங்கத்தினதும், புதிய தலைமைகளைத் தெரிவுசெய்வதுடன், கட்சியில் புதிய உறுப்பினர்களை இணைத்துக் கொள்வதற்குமான மகாநாடாக அமைந்துள்ளது. வரலாற்றில் சீனக் கம்யூனிஸக் கட்சி எழுபது வயதுக்கு மேற்பட்டவர்களை அதிகாரத்திலிருந்து நீக்குவதுடன் இளந்தலைமுறையினருக்கு வாய்ப்பைக் கொடுக்கப் போகின்ற நிகழ்வாகவும் இம்மகாநாடு அமைந்துள்ளது. மாவோ சேதுங் இறக்கும் வரையும் ஆட்சியில் அமர்ந்தது போல், டெங்ஸியாவோ இயங்க முடியாத நிலைவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியில் அமர்ந்தது போல், அல்லாமல் ஜியாங் செமின் செயற்படு வதையும், புதியவர்களை ஆட்சியில் அமர்த்துவது மட்டுமல்லாது ஆட்சிக்காலத்தை ஐந்து ஆண்டுகளாக வரையறுக்கின்ற போக்கையும் இம் மகாநாடு காட்ட முயன்றுள்ளது.

ஜியாங் செமின் கட்சி மகாநாட்டு உரையின்போது ஜனநாயகத்தை சீனாவும், சீனக் கம்யூனிஸக்கட்சியும் வரவேற்பதாக வும், அதிகமான ஜனநாயகமயவாக்கத்தை ஏற்படுத்தப் போவதாகவும் கூறியிருந்தார். மேற்கு மாதிரியில் உலகத்திற்குப் பதிலளிக்கும் பாணி யிலேயே செமினின் தலைமை செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பது தெளிவாகின்றது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை கட்சி யின் தேர்தலுக்கூடாக ஆட்சி மாற்றம் என்பது மேற்கு நாடுகள் அல்லது ஜனநாயக நாடுகள் நிகழ்த்தும் தேர்தலுக்கு ஓரளவேனும் ஒத்துப் போகக் கூடியதாகவே உள்ளது. ஜனநாயக நாடுகளின் கட்சிகளுக்கு பதிலாக சீனாவில் கம்யூனிஸக் கட்சி என்பதுதான் வேறுபாடாக உள்ளது. அமெரிக்க ஜனாதிபதி காங்கிரஸினால் தெரிவு செய்யப் படுகின்றார். சீனாவின் அதிபர் கம்யூனிஸக் கட்சியின் தேசிய மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படுகின்றனர். கம்யூனிஸக் கட்சிக்கு உறுதுணையாக எட்டுக்கு மேற்பட்ட சிறிய கட்சி கள் சீனாவில் பதிவு செய்யப்பட்டிருக் கின்றமை குறிப்பிடத்தக்க தாகும்.

எனவே மாவோவின் நவீன ஜனநாயகத்திற்கு புதிய அர்த் தங்களை ஜியாங்செமின் ஏற்படுத்திவருகின்றமை மேற்கு நாடுகளின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிப்பது போன்றும் காணப்படுகிறது. ஆனால் செமின் மாற்றத்துக்கு மேற்கு மட்டுமல்ல தியன்மென் சதுக் கமும் ஒரு காரணமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. 1989 களில் மாணவர் மீது சீனாவின் ஆட்சி மேற்கொண்ட 'தியன்மென் படுகொ லை' என்று அழைக்கப்படும் சம்பவத்தின் பின்னர், சீன ஆட்சி யாளர்கள் மத்தியில் ஜனநாயகம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படத் தொடங்கியுள்ளது. அது எழுபது வயதுக்கு உட்பட்டவரை இளந்தலை முறையென இனங்கண்டிருப்பதுதான் வேடிக்கையாகவுள்ளது. சீனா மட்டுமல்ல இந்தியா உட்பட அனேக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இளந்தலைமுறையினரிடம் ஆட்சி அதிகாரம் கைமாற்றப் படாமை பெரும் குறைபாடாகவே காணப்படுகின்றது. ஏனைய நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் ஒப்பிடும்போது சீனா அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இளந் தலைமுறையினரை ஆட்சியில் உள்வாங்க முன்வந்திருப்பது திருப்தி தரக்கூடிய அம்சமாகும்.

சீனாவின் இவ்வகையான அணுகுமுறை மேற்கு நாடுகளுட னான வல்லரசுப் போட்டிக்கான தயார்ப்படுத்தலாகவே கொள்ள வேண்டியுள்ளது. சீனாவின் அரசியல் கொள்கையில் ஏற்பட்டுவரும் திடீர் திருப்பங்களால் மேற்கு நாடுகளின் ஜனநாயகக் கொள்கைக்கு ஒப்பானதாக இல்லாது விட்டாலும் கம்யூனிஸக் கட்சியின் கொள்கை யமைப்பிலிருந்து மாறுபட்டதாகவே உள்ளது. ஜனநாயகத்தினையும் மனித உரிமைகளையும் பற்றி மிகத்தீவிரமாக உச்சரிக்கும் மேற்கு உலகத்திற்கு சீனாவின் அணுகுமுறை புதிய நெருக்கடியை வழங்கி யுள்ளதையே உணர்த்துகின்றது. தைவான் விவகாரத்தைக் கையாளு வதற்கு ஏற்ற வகையிலும், பல விடயங்களை சீனக் கம்யூனிஸக்கட்சி தனது மகாநாட்டில் ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே ஹொங்ஹொங், மக்கோ பிரதேசங்கள் சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருப்பது *"One China Principle"* ஐ பின்பற்றும் சீன ஆட்சியாளர்களுக்கு தை வான் அடுத்த இலக்காக அமைந்திருக்கின்றதென்பதையும் உறுதிப் படுத்தி கொள்ள வேண்டியுள்ளது.

பொருளாதாரச் சீர்திருத்தங்களை அதிகமாக ஏற்படுத்திவரும் சீனா 1970 களின் பிற்பகுதியிலேயே சந்தைப் பொருளாதாரத்தை பின் பற்றத் தொடங்கிவிட்டது. சந்தைப் பொருளாதாரத்தின் அடிப் படைகளைக் கொண்ட சீனா வேகமாக தனியார் மயமாக்கத்துக்குள் இணைந்து வருகின்றது. சீனாவின் ஊழியப் படையின் வீதாசாரத்தை நோக்கும் போது விவசாயத்தில் பங்கு (73%) மிக உயர்வாக காணப் படுவதும், கைத்தொழில் (14%) மற்றும் சேவைகளின் (13%) பங்கு மிகக் குறைந்த நிலையிலுள்ள போதும் சீனாவின் உள்நாட்டு உற் பத்தி விவசாயத் துறையில் 19 வீதத்தினையும், கைத்தொழில் 48 வீதத் தினையும், சேவைத்துறை 33 வீத்தினையும் கொண்டிருப்பது தனியார் பொருளாதாரத்தில் உள்வாங்கப்படும் அளவின் வேகத்தினை உணர்ந்து கொள்ள முடியும். இதனைத் தெளிவுபடுத்த இன்னோர் தக்கவலையும் சேர்த்துக்கொள்ளலாம். 1978 ஆம் ஆண்டு உற்பத்தியின் பங்கில் அரசு 78 வீதத்தினையும், 22 வீதக் கூட்டு உற்பத்தியும் காணப் பட்ட நிலை, 2000 ஆம் ஆண்டில் தனியார் 25 வீதமாகவும் அரசு வெறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனே 27 வீதத்தினை மட்டும் கொண்டதாகவும், அரசும் தனியாரும் கூட்டாக 48 வீதத்தினை பங்கெடுத்துக் கொள்வதாகவும் அமைந் திருந்தது. இதிலிருந்து சீனாவின் தனியார் மயப்படுத்தல், பொருளாதா ரத்தில் எந்தளவுக்குச் செல்வாக்கு செலுத்தி வருகின்றது என்பது தெளிவாகும். சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குத் திட்டமிடல் பொரு ளாதாரத்தின் அமுல்படுத்தலும் ஒரு காரணமெனக் கருதுகின்ற போக்கு சீனாவுக்கு முன்னனுபவமாக அமைந்திருக்கிறது போல் தெரி கின்றது. சீனாவின் எழுச்சிக்கும், அரசியல் பலத்திற்கும் பொருளா தாரமே அடிப்படையென்பது புலனாகும் விடயமாகும்.

அதனாலேயே சீனா மீள்பொருளாதாரச் சீர்திருத்தத்தினை (Re-Reform) ஏற்படுத்திக் கொண்டு வருவதுடன் உலகப் பொருளா தாரத்தின் பங்கிலும் அதன் செல்வாக்கினை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் சீனாவின் அதிகாரமும், கம்யூனிஸக்கட்சியின் அரசியலும் நிலையானதாக அமைந்துவிடுமென சீனாவின் ஆட்சியாளர்கள் கருது கின்றனர்.

பொருளாதார வளர்ச்சியானது இனப்பகைமையையும், முரண் பாட்டையும் தீர்க்கும் காரணியாகவே கொள்ளப்படுகின்றது. சீன மக்கள் தொகையில் முஸ்லிம்கள் 2%மாகக் காணப்பட்டபோதும் அவர்கள் இஸ்லாமிய நாடுகளை அண்டிய மாகாணமான எக்ஸ்யாங் யுகார் பகுதியிலேயே அதிகமாக உள்ளனர். அது மட்டுமன்றி மத அடிப்படையில் எழுந்துள்ள புதிய நெருக்கடிகள் அரசியலில் சீனாவுக்கு நெருக்கடியை ஏற்படுத்துவதாக உள்ளது. அதனை தீர்த் துக் கொள்வதற்கான நடவடிக்கையிலேயே சீனா பொருளாதார வளர்ச்சியை முதன்மைப்படுத்தி வருகின்றது. தீபெத்தினை முழுமை யாக விழுங்கிக் கொண்ட சீனா இனக்கலப்பினாலும் பொருளாதாரச் செழிப்பினாலும் முரண்பாட்டைத் தவிர்த்துக் கொண்டு படிப்படியாக சீனர்களாக்கும் போக்கினை கடைப்பிடித்து வருகின்றது. ஹொங் கொங் சீனாவின் அதிகாரத்துக்குள் வந்த பின்னர் மேலும் சீனா தனி யார் பொருளாதார வகைக்குள் தீவிரமாக மாறிக்கொண்டு வருகின்ற தை அவதானிக்க முடிகின்றது. உலகம் வியக்கும் வகையில் சீனா ஹொங்கொங்கைக் கையாண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவின் வெளிநாட்டுக்கொள்கை சுமுகமாகவும், அமைதி யானதாகவும் அமைவதுடன் அயல் நாடுகளுடனும் பிராந்தியங்களுட னும் நல்லிணக்கமுடைய உறவினைக் கடைப்பிடிப்பதே பொருத்தப் பாடானது என ஜியாங் செமின் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். முரண்பாடற்ற உலகத்தை ஏற்படுத்துவது என சீனா குறிப்பிட்டிருப்பது அதன் வெளிநாட்டுக் கொள்கையை மாற்றிக்கொள்வதையும் அதற் காகப் போட்டியிடப் போவதென்பதையுமே காட்டுகின்றது. அதாவது முழு உலகத்திலும் சீனாவின் அரசியல் செல்வாக்கினையும் அதிகார பலத்தையுமே எடுத்துக்காட்ட முயல்வதனையே குறிப்பிடுகின்றது.

இது மேலும் கிழக்காசியாவிலும், மேற்காசியாவிலும் நெருக் கடியை அடைந்துவரும் சீனாவின் உறவினை சீர்செய்வதற்கான அணுகுமுறையாக அமையலாம். சீனாவே அணுவாயுதப் பரவலுக்கு (மேற்காசிய, கிழக்காசிய) காரணம் என்ற மேற்கின் குற்றச்சாட்டினைத் தவிர்ப்பதற்கான முயற்சியாகவும் கொள்ளலாம். அதனால் மேற்குட னான முரண்பாட்டை தவிர்ப்பது மட்டுமல்ல கிழக்காசிய, மேற்காசிய நெருக்கடியை தவிர்த்துக் கொள்வதற்கான அணுகு முறையாகவும் சீனாவின் அரசியல் தலைமை கருதுகின்றது. சீனாவின் கடந்தகால வெளிநாட்டுக் கொள்கையினால் அரசியலை விட பொருளாதார இலக்கு முதன்மையாக அமைந்ததென்பது ஜியாங் செமினின் உரையில் அழுத்திக் கூறப்பட்டது. அதனால் ஏற்பட்டுள்ள விளைவுகள் சீனாவுக்கு சாதகமானதாக அமைந்திருப்பதனாலும் அதே அணுகு முறையைத் தொடர்ந்து பேண முயலுகின்றபோது, உலகளாவிய அதி காரப் போட்டியிலும் சீனாவின் பங்கை உணர்த்தப் போராடும் என்பது தெளிவாகின்றது. ஆனால் அதனை உடனடியாக சாத்தியப்படுத்த முயலக்கூடாது என்பதில் செமின் மிகவும் அக்கறையுடன் செயல் பட்டார். அவரது காலத்தில் நிகழ்ந்த ஆப்கானிஸ்தான் போர், கைனன் தீவில் தரையிறக்கப்பட்ட அமெரிக்க வேவு விமானம் என்பன செமி னின் அணுகு முறையை தெளிவுபடுத்துகின்றது.

ஆப்கான்போரில் நிதானத்தையும் அமைதியையும் கடைப் பிடித்ததுடன் போரில் எந்தப் பங்களிப்பையும் எந்த நாட்டுக்கும் வெளிப்படையாக வழங்க முன்வரவில்லை. மேலும் போரின் பாதிப் புக்களைத் தவிர்ப்பதற்கான தற்காப்புடன் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அதேபோன்றே தைவான் கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் அமெரிக்காவின் ஊடுருவலை தவிர்க்க சீனா முயலுகின்றது என்பதை கடந்தகால சம்பவங்கள் உணர்த்தி நிற்கின்றது.

இது புஷ் நிர்வாகத்திற்குக் கிடைத்த பதிலடி என்பதைவிட சீனாவின் அணுகுமுறை எவ்வாறுள்ளது என்பதனை வெளிப்படுத்துவ தாக அமைந்துள்ளது. அவ்வாறான போக்கு அடுத்துவரும் புதிய தலைமையிடம் இருத்தல் வேண்டுமென செமின் மட்டுமல்ல சீனக் கம்யூனிஸக் கட்சியியே விரும்புகின்றது. அதாவது சுருக்கமாகக் கூறுவதாயின் சீனா சர்வதேச விவகாரத்தில் ஈடுபட விரும்புவதுடன் அதற்கான தேவைப்பாடு ஏற்படும் சூழலிலும், அதற்கான உலக ஒழுங்கு அமையும்போது முன்வருவது பொருத்தமானதெனக் கருது கிறது. அதுவரை சகலவிதமான தயார்படுத்தலுடனும் சீனா இருப் பதுடன் அவ்வெற்றிடத்தை விரைவாக நிரப்ப முயல வேண்டுமென வும் விரும்புகின்றது. ஆனால் சீனக் கம்யூனிஸக் கட்சியின் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களில் உள்நாட்டு ஜனநாயகம் பற்றியோ அல்லது மனித உரிமை விவகாரம் தொடர்பாகவே அது பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. சீன மக்கள் தொகையை குறைப்பதற்காக எடுத்த முயற்சி மீளவும் கைவிடப்பட்டு வருவதும், மானிட விருத்திக்கான, சமூக விருத்திக்காக, மாற்று நிலைகள் தொடர்பான சில கருத்துக்கள் கட்சி மகாநாட்டில் தொனித்தனவே அன்றி அவை பெரியளவில் முதன் மையடைய வில்லை. மாறாக பொருளாதாரம் மீள் மறுசீரமைப்பை உருவாக்கும் வடிவம் அதிகமாக உணர்த்தப்பட்டதைக் கவனத்தில் கொள்ள முடிந்தது. மேலும் சீனக் கலாசாரம், தேசியம், இறை யாண்மை, மேலாதிக்க எதிர்ப்பு என்ற கோணத்தில் பல விடயங்கள் கட்சி மகாநாட்டினூடாக வெளிவந்தன.

மொத்தத்தில் சீனக் கம்யூனிஸக் கட்சி மகாநாடு சீனாவின் உள்ளார்ந்த போக்கைக் காட்டிலும் வெளிவிவகாரத்திற்கான போக் கையே அதிகம் வெளிப்படுத்தியிருந்தது. குறிப்பாக மேற்கு உலகத் தின் மாதிரிக்கு ஏற்ப சீனாவை தயார்படுத்த வலுவான அரசாக சீனக் கம்யூனிஸக் கட்சி சீனக்குடியரை ஆக்க முயன்றுள்ளதனைக் காண முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தைவான் சுதந்திரப் பிரகடனம்

இருதுருவ அரசியல்- உலக அரசியலில் மறைந்த பின்னர், உலக ஒழுங்கு அமெரிக்கா தலைமையில் அணிவகுத்தாலும், சீனா ஒரு சவாலான அரசாக உலக ஒழுங்குக்குள் காணப்பட்டே வருகின்றது. சீனாவின் அரசியல், பொருளாதார, இராணுவ சித்தாந்தங்களில் ஆரம்ப காலப்போக்குகளில் மாற்றமும், போலித்தன்மையும் காணப்பட்டாலும், போட்டித்தன்மையில் தனித்துவம் பெற்று வருகின்ற நாடாக அமைந்துள்ளது. சீனாவின் போக்கு சரியானதா? தவறானதா? என்பதை அலசுவதல்ல இப்பகுதியின் நோக்கம். மாறாக சீனா-தைவான் முறுகலும், அதில் அமெரிக்கா எடுத்துக்கொள்ளும் சிரத்தையும் எவ்வகையான பரிமாணத்தை ஏற்படுத்தக் கூடியதென்பதை நோக்குவதாகும்.

தைவான் மீது சீனா இராணுவ ரீதியான நடவடிக்கைக்குத் தயாராகிவிட்டதாகவும், தைவான் சுதந்திர நாடாக தன்னைக் பிரகடனப்படுத்தப் போவதாகவும் மாறிமாறி தகவல்கள் வெளிவந்தவண்ணமுள்ளன. தைவானின் சுதந்திர பிரகடனத்தை எதிர்த்து, சீனாவின் சிரேஸ்ட இராணுவ அதிகாரி எச்சரிக்கை செய்ததுடன், இராணுவ ரீதியான நடவடிக்கைக்கும் தயாரெனவும் அறிவித்தார். அதற்குத் தயாராகும் சீன இராணுவத்தினைப் போன்றே, தைவான் ஜனாதிபதியான சென்சூய் பியன்ஸ் தைவான் மக்களிடம் பொதுஜன வாக்கெடுப்பொன்றை நடத்தி, சுதந்திர பிரகடனத்தைச் சாத்தியப்படுத்தலாமென கூறியுள்ளார். எனவே, இது ஒரு பெரும் நெருக்கடியைச் சீனாவுக்கு ஏற்படுத்தியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் தைவானில் வரலாற்றுச் சுருக்கமாக அவதானிப்போம்.

தைவான் 13,895 சதுர மைல் பரப்பைக்கொண்ட ஒரு தீவு. ஏறக்குறைய 21 மில்லியன் மக்கள் வாழும் அத்தீவில் 84சதவீதமானவர்கள் தைவானியர்களும், 14சதவீதமானவர்கள் சீனர்களும், ஏனைய பிரிவினர் 2 சதவீதமாகவுமுள்ளனர். பொருளாதாரத்தில் செழிப்புமிக்க தென்கிழக்காசிய நாடுகளில் தைவானும் ஒன்றாகும். NIC என்று அழைக்கப்படும் புதிய கைத்தொழில் வளநாடுகளின் பட்டியலிலும் தைவான் இடம்பிடித்திருந்தது குறிப்பிடத்தக்கது. தைவானின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுக்கான தேசிய உற்பத்தி ஏறக்குறைய 257 மில்லியன் அமெரிக்க டொலராகும். தேசிய உற்பத்திக்கான மூலதனம் மட்டும் 12,070 அமெரிக்க டொலராக உள்ளது. இதனால் தைவான் தனித்துவம் மிக்க அரசாக எழுச்சியடைய முயன்று வருகின்றது.

இத்தகைய இயல்புகளைக்கொண்ட தைவானின் அரசியல், 1947ஆம் ஆண்டுகளுக்குப் பின்பே தனித்துவம் மிக்கதாக மாறியது. 1949 ஆம் ஆண்டு சீனா கம்யூனிஸ்டுகளிடம் வீழ்ந்ததைத் தொடர்ந்து, சீன தேசியவாதிகள் என்று கருதப்பட்ட சீனக் கம்யூனிஸ்டுகளால் விரட்டப்பட்ட பிரிவினரே, தைவானை அரசியல் வலுவுடைய நாடாக மாற்றினர். ஆனால், சீனாவோ அதனைத் தனது ஒரு சுயாட்சிப் பிரதேசமாகவே கருதி வருகின்றது. தேசியவாதிகள் சீனாவுக்கும், தைவானுக்குமான நெருக்கத்தைப் பாதிக்கும் விதத்தில் செயற்பட்டதுடன், தைவானின் அரசியலை மேற்கு நாடுகளுடன் இணைத்துக் கொள்வதில் வெற்றிபெற்றனர். இதில் சியாங்கை ஷேக் (*Chiang kai-Shek*) மிகப் பிரதான கொள்கை வகுப்பாளராகச் செயற்பட்டு வந்தார். தீவிர அரசியல் மாற்றம் எதனையும் மெதுவாகவே உள்வாங்கும் தைவானின் ஆட்சியாளர்கள், அதிகாரம் பொருந்திய ஆட்சி முறைமையையே பேணிவந்தனர். 1975 களில் ஷேக் (*shek*) இன் மறைவையடுத்து அவரது மகனான சியாங் சிங் குவர் (*Chiang ching kuo*) ஆட்சிக்கு வந்தார். அவரது ஆட்சியில் சீனாவுடனான பொருளாதார, வர்த்தக நெருக்கம் விரிவடைந்தது. இது சீனாவுக்கும் வாய்ப்பாக அமைந்ததுடன் சீனாவின் ஆட்சியாளரான டொங்சியாவே பிங்ன் ஆட்சியில் மேலும் வலுவடைந்தது. இதன் பின்னர் 1988 ஆம் ஆண்டுகளில் குவா (*kuo*) வின் மறைவும் உப ஜனாதிபதியான லீ ரெங் குய் (*Lee teng hui*) இன் அரசியல் நடவடிக்கைகளும், அரசியல் கட்சி அமைப்புக்களின் உருவாக்கமும் புதிய அதிகார முறைமைக்கு வாய்ப்பைக் கொடுத்தது. அதன் கீழ் தேசிய தனித்துவம் மிக்க அரசியலமைப்புக்கான வாய்ப்புக்கள் தைவானின் ஏற்பட்டதுடன், ஜனநாயக முறைமையின் வலுவூட்டல் விரிவடைந்து இருந்தபோதும், சீனாவுடனான பொருளாதார உதவிகள் தைவானியருக்கு கிடைத்ததுடன், தைவான் மக்கள் சீனாவுக்கு சென்று வர்த்தக மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சூழல் காணப்பட்டது. தைவான் நாடாளுமன்றத்தினை தேர்ந்தெடுப்பதற்காக 1992 ஆம் ஆண்டில் நிகழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலில் தேசியவாதிகள் என்று கூறப்படும் பிரிவினரைச் சேர்ந்த வர்கள் 53 சதவீத வாக்குகளைப் பெற்றனர். பிரதான எதிர்க்கட்சி யானது 31 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. எனவே, சீனாவுக்கு எதிரானவர்களது வலு தைவானில் ஓங்கியிருப்ப தென்பது இதனூடாக புலனாகின்றது.

எனவே, தைவானின் அரசியல் நிலை அவ்வாறே வளர்ந்து வந்ததும் ஆரம்பத்திலிருந்து தைவானை ஆதரிக்கும் அமெரிக்கா சீனாவுடன் தனக்கிருந்த உறவினை பராமரிப்பதற்கான நிரந்தர பாது காப்பு அந்தஸ்தை சீனாவுக்கும் கைமாற்றியது. ஆரம்பத்தில் அதனை தைவானியரே தக்கவைத்திருந்தனர். இது சீன அமெரிக்க நெருக்கத்தின் போதே ஏற்பட்டதாகும். தற்போது, சீன அமெரிக்க உறவு விரிசல டைந்து கொண்டிருப்பதாக புலப்படாது தென்பட்டாலும் சீனாவுக்கு எதிரான நடவடிக்கைகளையே அமெரிக்கா மேற்கொண்டுவருகின்றது. ஆனால், தைவானா? சீனாவா? என்ற இழுபறியில் உண்மையிலேயே மறைந்திருப்பது அமெரிக்காவா-சீனாவா என்ற போட்டியாகவே புலப் படுகிறது.

உலகத்தின் புதிய நாடுகளது வருகையை தவிர்க்க விரும்பு வதாகக் கூறும் அமெரிக்கா தைவானின் சுதந்திரத்தை ஆதரிப்பதுடன் தைவானின் இராணுவப்பலத்தை பலப்படுத்தி வரும் பாரிய முயற் சியை எடுத்துவருகிறது. ஏனெனில், சீனாவுக்கு அண்மையில் தனது செல்வாக்கு பிரதிபலிக்கும் அரசொன்று அமைந்திருப்பது அவசிய மானதென அமெரிக்கா கருதுகிறது. இராணுவ ரீதியில் பலஸ்ரிக் *(Ballistic)* வகை ஏவுகணைத் தொழில்நுட்பத்தை தைவானுக்கு வழங்கியதுடன், இராணுவப் பயிற்சிகளையும், ஆயுத உதவிகளையும் அமெரிக்கா தைவானுக்கு வழங்கி வருகிறது. இராணுவ தேவை களைப் பூர்த்தி செய்யும் செயற்கைக் கோள்களை தாய்வான் பெற்றி ருப்பதுடன் 2004 ஜனவரியிலிருந்து அமெரிக்காவிடம் செயற்கைக் கோள் தொழில் நுட்பத்தைப் பெற்றுவருகிறது.

எனவே, சீனாவுடனான உறவை உடைக்க விரும்பும் தை வானின் அணுகுமுறையை ஆதரிக்கும் அமெரிக்கா- எதிர்கால சீனா வின் போக்கை எதிர்த்தே செயல்படுகின்றது. சீனாவின் இராணுவக் கடற்படை விரிவாக்கம் படிப்படியாக அதிகரித்து வருகிறது. அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலன்கள் பசுபிக் கடலையும், இந்து சமுத்திரக்கடலையும் மையப் படுத்தி நகருகின்றது. அதிலும் இந்து சமுத்திரம் மிகப்பிரதான கடலா திக்க பிரதேசமாக சீனா மாறிவருகின்றது. ஆனாலும், அண்டவெளி தொழில்நுட்பத்தில் மனிதனை விண்ணுக்கு வெற்றிகரமாக அனுப்பி சாதனை படைத்திருக்கின்றது சீனா. இதனால், சீனாவின் வளர்ச்சி பெருகுவதுடன், பொரளாதாரமும் வளர்ச்சி நோக்கியே நகருகின்றது. இதனை தடுத்து நிறுத்த வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு ஏற்பட் டுள்ளது.

இப்பிராந்தியத்தில் சீனாவின் தனித்துவம் பொருளாதாரத்தில் மட்டுமல்ல, அரசியலிலும், இராணுவத்திலும் அதிகரித்து வருகின்றது. வடகொரிய விவகாரம் அமெரிக்காவுக்கு சாதாரணமான படிப்பினை யை மட்டும் ஏற்படுத்தவில்லை மாறாக சீனாவின் பலத்தையே முழுமையாகப் புலப்படுத்தக் கூடியது அதனைக்கண்டு அதிர்ந்து போயுள்ள அமெரிக்கா தைவானின் அணுகுமுறையை ஊக்குவிப்பதற் கான நடவடிக்கையில் மீண்டும் ஈடுபட்டு வருகின்றது. ஆரம்பத்தி லிருந்து பலதடவை இவ்வாறு நடந்து கொண்ட தைவான், சீனாவின் நடவடிக்கையால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. அதேபோன்றே, தற் போதும் சீனாவின் அணுகுமுறைகள் நிகழ்ந்த வருகிறது. அமெரிக்க விஜயத்துக்குத் தயாரான சீனப்பிரதமர் வென் ஜியாபோ அமெரிக்கா வின் நடவடிக்கையைக் கண்டித்திருந்ததுடன், தைவானை எச்சரிக்கை செய்திருந்தார். அது தைவானுக்கு மட்டுமல்ல என்பது நினைவுகூறத் தக்கது. அமெரிக்காவின் பொறுப்பையே சுட்டிக்காட்டியுள்ள சீனப்பிரத மரின் கண்டனம் தைவான் சுதந்திரப் பிரகடனத்தைத் தடுத்து நிறுத்து வதே நோக்கமாக உள்ளது.

சீனா அரசியல் ரீதியான நடவடிக்கைகளை உலகம் முழு வதும் பிரச்சாரப்படுத்துவதும், நடவடிக்கையில் ஈடுபடுவதுமாக இருந் தாலும், இராணுவ நகர்விலும் தயாராகிக்கொண்டு வருகிறது. கடந்த காலப்பகுதியில், தைவான்-சீனக் கடற்பகுதியில் கடற்படை பயிற்சி யொன்றை மேற்கொண்டதுடன், தாக்குதலை எப்படி நகர்த்தி முடிப்ப தென ஈடுபட்டுமுள்ளனர். அத்துடன் சீனாவின் படைகளை தைவான்-சீனா கடற்பிரதேசம் நோக்கி நகர்த்தி வருவதுடன், அவற்றை ஒழிவு மறைவின்றி செயல்படுத்தி வருகின்றது. 500க்கு மேற்பட்ட ballistic



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகை ஏவுகணை சீனா நிறுத்தியுள்ளது. இது இராணுவரீதியில் பெரும் உபாயமாகும். இவ்வாறு வெளிப்படையாக நடந்துகொள்வதன் வாயிலாக மாற்று நடவடிக்கையை எதிர்பார்த்து செயற்படுவது தெளிவாகின்றது. குறுகியதூர ஏவுகணைகள் பலவற்றை தைவான் கடற்பகுதியில் நிறுத்தி வைத்துக்கொண்டு சீனா செயற்படுகின்றது. இவை யாவற்றையும் அவதானித்தால், தைவானை மிரட்டும் நடவடிக்கையில் சீனா ஈடுபட்டுவருவது தெளிவாகும். இத்தகைய மிரட்டலூடாக கடந்த காலங்களில் தைவானின் சுதந்திரப் பிரகடனத்தை சீனா தடுத்து நிறுத்தியுள்ளது. ஆனால், இத்தடவை சீனாவின் போக்கு சற்று கடினமாகவே தென்படுகிறது. 2008 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிக்குத் தயாராகி வரும் சீனா, அதிக எதிர்பார்ப்பை நோக்கி ஈடுபட்டுவருகின்றது. ஒலிம்பிக் போட்டியை நிகழ்த்துவதைப் பயன்படுத்தியே தைவான் சுதந்திரப் பிரகடனத்தை ஏற்படுத்த விரும்புகிறது. ஆனால், சீனா போலியான கம்யூனிஸ நாடாக இருந்தபோதும், தனது நலனுக்கு சார்பாக ஈடுபட அது ஒருபோதும் பின்நிற்பதில்லை. தினமென் சதுக்க சம்பவம், கைனன் சம்பவம் இரண்டும் நினைவுகூரத்தக்கது. அந்தளவுக்கு சீனா செயற்படவல்லது. சீனாவின் நடவடிக்கையைக் குறைத்து மதிப்பீடுசெய்ய முடியாது. ஆனால், ஆட்சியாளரும், அதன் அதிகார பீடமும் கொள்கின்ற நோக்கு எதுவோ அதனையே அமுல்படுத்தலிலும் காணலாம். சீனா அமைதியான முறையில் தைவானை சேர்த்துக்கொள்ள விரும்புகின்றது. அவ்வாறே, ஹொங்ஹொங், மக்கோ பிரதேசங்களை இணைத்துக்கொண்டது. அதாவது, இரட்டைசீனா (*one country two system*) என்ற கொள்கையாகும். எனவே இரட்டைச் சீனக் கொள்கையை சாத்தியப்பாடற்றதாக ஆக்குவதில் அமெரிக்காவின் இரட்டைக் கொள்கை சார்ந்த நலன் முக்கிய பங்கை பெறுகின்றது. இதில் சீனாவின் போக்கு முற்றிலும் மாறுபட்டதொன்றாகவே அமையும். அவ்வாறு பலமான மாறுபாடுடைய கொள்கையை சீன அரசு நிராகரிக்குமாயின், பலமான மாறுதல் உலக அரசியலில் ஏற்டுவது தவிர்க்க முடியாததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 05

# ஈராக் மீதான அமெரிக்கப் போரும் அரசியல் பொருளாதார இராணுவ விளைவுகளும்.

ஈராக் போர் முடிந்துவிட்டதாக மேற்குலக ஊடகங்களும் அவற்றை பிரதிசெய்யும் ஏனைய நாட்டு ஊடகங்களும் உறுதிப்படுத்தி வருகின்றன. ஆனால் அத்தகைய முடிவு முற்றாக ஏற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதனை அவதானிக்க முடியாமலில்லை. ஈராக்கின் முன்னாள் ஆட்சியாளர் சதாம் உஷைன் கைது செய்யப் பட்ட பின்னரும் பல இலட்சம் படைகள் தலைமறைவாகியுள்ளதும், அமெரிக்கப் பிரித்தானியக் கூட்டுப் படைகளுக்கு ஈராக்கிய மக்களா லும் கிளர்ச்சியாளர்களாலும் எதிர்ப்பு அதிகரித்து வரும் நிலையிலும் ஈராக் போர்முடிவுக்கு வரவில்லை என்றவாதம் மாற்று ஊடகவிய லாளர்களிடம் உண்டு.

ஈராக் மொஸபத்தேமிய நாகரீகத்தைக் கொண்ட தேசம் இஸ்லாமிய அடிப்படைவாதத்தினை பிரதிபலிக்கும் அரசாக விளங்கி யதுடன் மேற்காசியாவில் இரண்டாவது எண்ணெய் வளத்தினைக் கொண்ட நாடாகவும் உள்ளது. ஷியா, சின்னி முஸ்லீம் பிரிவுகளைக் கொண்டிருக்கும் ஈராக் பிரதேசம் குருட்டிஸ் இன முஸ்லீம்களையும் உள்ளடக்கிய வலுவான அரசாக சதாம் ஆட்சிவரை காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈராக் பற்றிய அரசியல் வரலாற்றுக் குறிப்பு

ஓட்டமன் (***Ottoman***) பேரரசின் பகுதியாக 1638 முதல் 1918 வரை விளங்கிய ஈராக் 1918 இல் முதல் முதலாக (மொசப்பத்தேமிய என அழைக்கப்பட்ட போது) ***Mosul, Baghda, Basra*** ஆகிய மூன்று நகரங்களும் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்ட பகுதியாகின்றது. பிரித்தானியா பிரான்ஸ் உடன் மேற்கொண்ட ***Sykes-picot*** உடன்பாட் டின்கீழ் ***Mosul*** நகர் பிரான்ஸ்ன் தனித்துவமான அதிகாரப் பிரதேச மாக மாறுகின்றது. 1920 களில் ஈராக் முழுவதும் பிரித்தானியாவின் கட்டுப்பாட்டுக்குள் வருவதுடன் ***Leauge of Nations*** இன் கட்டளைக் குட்பட்ட பிரதேசமாக அமைகின்றது. அக்காலப்பகுதியில் ***Faisal Ibn Hussein*** ஆட்சி நிலவியது. அவரது சிரியா தொடர்பான கொள்கை யினால் விரக்தியடைந்த பிரித்தானியா ***Nuri-al-said*** ஐ அதிகாரத்தில் அமர்த்துகின்றது. இக்காலப்பகுதியில் வட ஈராக்கிலிருந்த ***Kurdish*** பிரிவினர் பலமான புரட்சியொன்றை பிரித்தானியா சார்புடைய ஈராக் அரசுக்கெதிராக மேற்கொண்டதாகவும் இதனால் ஈராக் பிராந்தியங்கள் ஒரே அதிகாரத்திற்குள் வருவதனையும் அக்காலப் பகுதியில் காணக் கூடிய சிறப்பம்சங்களாகும்.

இதே காலப்பகுதியில் 1933-1939 வரை ***Ghazi (Faisal*** இன் மகன்) பிரித்தானியருக்கு எதிரான கொள்கையை வெளிப்படுத்தி இஸ்லாமிய தேசியவாதத்தினை ஈராக் மக்கள் மீது வளர்க்கும் தேசிய வீரனாக திகழ்ந்தார். இவரது மரணத்தை அடுத்து ஜேர்மனிய ஆதர வுடன் 1941களில் ***Rashid Ali*** இன் எழுச்சி பிரித்தானியரை மீளவும் ஈராக்கைக் கைப்பற்றுகின்ற நிலையை உருவாக்கியது. 1947 வரை ஈராக் பிரித்தானியரின் கட்டுப்பாட்டில் இருந்தது. 1947 தொடக்கம் 1958 வரை பிரித்தானிய ஆதரவு தேசியவாதியான ***Nuri-al said*** இடம் மீளவும் ஆட்சியதிகாரம் கைமாறியது. அதன் பின்பு இடது சார்பு புரட்சியாளனான ***Brigadier Cashen*** பாத் (***Baath***) கட்சியின் கீழான குடியரசாக ஈராக்கினை நிறுவினார். 1963 களில் சோஸலிஸ்டான ***Aref*** ஜனாதிபதியாக ஈராக்கினை நிர்வகித்தார். 1968 தொடக்கம் 1979 வரை ***Hasan al Baker*** ஆட்சியும் பின்னர் ***Saddam Hussein*** 1979-2003 வரை ஆட்சியும் ஈராக் அரசியலில் காணக்கூடிய அம்சங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாம் ஆட்சியில் குர்டிஸ் மக்களின் சுயராட்சியத்திற்கான போராட்டமும் (1986 மே) அதனை முறியடிப்பதற்கு சதாம் இரசாயன ஆயுதங்களை அம்மக்கள் மீது பயன்படுத்தியதும் ஈராக் அரசியலில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. 1980 தொடக்கம் 1988 வரை நிகழ்ந்த ஈரான், ஈராக் யுத்தமும் 1991 களில் நிகழ்ந்த வளைகுடாப் போரும் சதாம் உஷைனை மேற்காசியாவின் கதாநாயகனாக மாற்றியது.

## ஈராக் போருக்கான காரணிகள்

ஈராக் மீது பெரும் யுத்தம் ஒன்றை நிகழ்த்துவதற்கு அமெரிக்கா வகுத்துக்கொண்ட வெளிப்படையான காரணங்களைவிட பல உள்காரணங்களே போருக்கு வழிவகுத்தது மேற்காசியப் பிராந்தியத்திலும், ஏனைய பிராந்தியங்களை உள்ளடக்கிய உலகத்திலும் அத்தகைய உள்நோக்கங்கள் போரை வேகப்படுத்தியது. இதனால் வெளிப்படையான காரணங்களையும், அமெரிக்காவின் உள்நோக்கத்தில் மறைந்திருந்த காரணங்களையும் வேறுபடுத்தி நோக்குவது பொருத்தப்பாடானது.

அமெரிக்கா வெளிப்படையாக உலகத்திற்கு பிரச்சாரப்படுத்திய காரணி ஈராக்கிடம் உயிரியில் இரசாயன ஆயுதங்கள் உண்டு என்பதும் அதனால் உலகத்தின் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் ஆபத்து ஏற்பட வாய்ப்புண்டு எனக்கூறியது. ஈராக் மக்கள் சதாம் உஷைன் என்ற சர்வாதிகாரியின் ஆட்சியின் கீழ் அடிமைகளாக உள்ளனர் என்றும் ஈராக்கிய மக்களின் விடுதலை அல்லது சுதந்திரத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான போரென அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் புஷ் உலகத்திற்கு தெரிவித்தார். இவற்றைவிட அமெரிக்க ஆட்சியாளர்கள் சதாம் உஷைன் ஆட்சிக்கும் உலகத் திலுள்ள பயங்கரவாத அமைப்புக்களுக்கும் தொடர்புகள் உண்டு என்றும், அத்தகைய பயங்கரவாத அமைப்புக்களுக்கு ஜனாதிபதி சதாம் உஷைன் உதவிவருவதாகவும் பிரச்சாரப்படுத்தினார். ஆனால் இத்தகைய காரணங்களை ஆதாரமாகக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபை ஈராக்கிடம் இரசாயன, உயிரியில் ஆயுதங்கள் உண்டா என்பதனை பரிசோதிக்கும் குழு ஒன்றை அமர்த்தியது. அக்குழுவின் பரிசோதனை பூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடைய முன்பே போர் ஐ.நா. அமைப்புக்கு புறம்பாக ஆரம்பிக்கப் பட்டது. இது அமெரிக்கா மீது அதிக சந்தேகங்களை கிளப்பிவிட்டது. அதாவது இப்போரை அமெரிக்கா பிரித்தானியாவுடன் (அவுஸ்திரேலி யாவும் பின்னர் சேர்ந்து கொண்டது) மட்டும் சேர்த்துக்கொண்டு ஆரம்பித்தமையும் அமெரிக்காவிற்கு இப்போரினால் ஏற்படப்போகும் விளைவுகளையும் அடிப்படையாகக் கொண்டு போருக்கான உண்மைக் காரணங்களை உணரமுடியும். அதனை விளங்கிக்கொள்ள புதிய உலக ஒழுங்கையும் அதிலேற்பட்ட மாறுதல்களையும் அவதானிப்பது அவசியம்.

சோவியத் யூனியனை வீழ்த்தி உலக அரசில் காணப்பட்ட சமநிலையை தகர்த்து தனிப்பெரும் வல்லரசாக அமெரிக்கா உருவெ டுத்ததே புதிய உலக ஒழுங்கு என்பதன் விபரணமாக விளங்கியது. அத்தகைய தனித்துவத்தை அமெரிக்கா காட்டுவதற்கு நிகழ்த்திய "வளைகுடாப் போர்" என்ற முதலாவது ஈராக் மீதான தாக்குதலாகும். அதில் அமெரிக்கா அடைந்த வெற்றியும் ஐ.நா. வின் கூட்டான பங்க ளிப்பும் அதன் அரசியல், பொருளாதார இராணுவப் பலத்தை கடந்த ஒரு தசாப்தங்களுக்குள் ஸ்திரமாகப் பேணியது. 1999ம் ஆண்டு களுக்குப் பின்பு அமெரிக்கப் பொருளாதாரம் சரிவடையத் தொடங்கி யது. இது படிப்படியாக அதிகரித்தது. குறிப்பாக 2002 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை அமெரிக்கப் பொருளாதார வளர்ச்சி வீதம் 0.5 என்ற நிலையிலேயே அமைந்திருந்தது. இது ஈராக் மீதான போருக்குப் பின்பு 0.4% இற்கு சரிவடைந்து விட்டதாக புள்ளிவிபரரீதியான கணிப் பீடுகள் காட்டுகின்றன.(இது பற்றி முதலாவது அத்தியாயத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது) இதனால் அமெரிக்கப் பொருளாதாரத் தினை கட்டி வளர்க்க வேண்டிய சூழலில் ஈராக் மீதான போரை அமெரிக்க ஆட்சியாளர்கள் திட்டமிட்டிருந்தனர். ஈராக்கின் எண்ணெய் வளத்தினை மட்டும் கொண்டு இப்பொருளாதார வீழ்ச்சியை எழுச்சி யடையச் செய்யலாமா என்பது பிரதான கேள்வியாகும். உண்மையில் ஈராக் எண்ணெய் வளத்தினைக் காட்டிலும் முழு உலகத்திலும் புதி தாக எழுச்சியடைந்து வரும் யூரோலாந்தின் பொருளாதாரமே அமெரிக்கப் பொருளாதாரத்தினை முதலில் நெருக்கடிக்குள்ளாக்கி வருகிறது.

"யூரோ" நாணயத்தின் வருகையால் அமெரிக்க டொலர் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. யூரோலாந்து தேசியக் கட்டுமானத்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாகக் கொண்ட பெரும் சந்தை வாய்ப்பை (550 மில்லியன் மக்கள் தொகை) உடைய ஒரே தேசமாக அமைவதற்கான வாய்ப் பினைக் கொண்டிருக்கின்றது. எதிர்காலத்தில் ஒரே அரசியல் யாப்பின் கீழ் ஐரோப்பாவின் முழுப் பகுதியும் பெருமளவுக்கு நிர்வகிக்கப்பட வாய்ப்பு அதிகம் உண்டு. இது அமெரிக்காவின் பொருளாதாரத்தினை மட்டுமல்ல உலகப் பொருளாதாரத்தினையே யூரோலாந்திற்குள் குவியவைக்கும் நிலைக்கு வழிவகுக்கப்போகின்றது. மூலதனத் திரட்சி வலுவடையும் போது அரசியல் இராணுவப் பலமனைத்தும் மூலதனத் திரட்சியை நோக்கி விரிவடையும். இதனால் அமெரிக்கா எதிர் பார்க்கும் **Unipolar System** குறுகிய காலத்தில் முடிவடைந்து விடலாம். அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு அமெரிக்காவிற்குத் தேவைப்பட்ட போரே ஈராக் மீதான போராகும். ஈராக் போரைச் சாட் டாகக் கொண்டு அமெரிக்கா ஐரோப்பாவைத் துண்டாடத் திட்டமிட் டது. அதில் கணிசமான பங்கை பிரித்தானியாவின் போக்கினால் சாதகமாக்கியதாக அமெரிக்கா கருதுகின்றது. இருந்தபோதும் போருக்கு பிரித்தானியா ஒத்துழைப்பு வழங்கினாலும் அது "யூரோ" நாணயத் தினையோ யூரோலாந்தின் பொருளாதார, அரசியல் ஒழுங்கையோ ஏற்றுக்கொள்ளாத நாடு என்ற வகையில் யூரோலாந்திற்குப் பெரும் பாதிப்பினை உடனடியாக ஏற்படுத்தவில்லை. மாறாக *NATO* வின் பங்களிப்பு ஈராக் போருக்கு கிடைக்காமல் போனமை வீட்டோவைப் பயன்படுத்த பிரான்ஸ் தயாரானவை, ஜேர்மனி போரை நிராகரித் தமை, துருக்கி போருக்கு நகர்வில் ஆரம்பகட்டத்தில் எதிர்ப்புக் காட்டி யமை என்றெல்லாம் அமெரிக்க எதிர்ப்புணர்வே ஐரோப்பாவிற்குள் ஏற்பட்டது. மாறாக ஐரோப்பிய யூனியனில் மேலும் பத்து கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சேர்த்துக் கொள்வதற்கான முன்னேற்றம் கண்டுள் ளமை ஐரோப்பா விரிவடைகின்ற பொருளாதாரக் குடும்பமாக மாறு கின்ற போக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால் அமெரிக்காவின் தந்திரமான அணுகுமுறையால் எண்ணெய் வளத்தை பூரணமாக உறிஞ்சிக் கொள்ளுமாயின் ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்கா நல்லதொரு எண்ணெய் சந்தையை ஏற்படுத்திக் கொள்ளும். அதற்கான சூழல் ஈராக் மீதான பொருளாதாரத் தடை அகற்றப்பட்டமையால் ஏற்பட் டுள்ளது. ஈராக் மக்களின் எதிர்ப்புணர்வு, கொரில்லாத் தாக்குதல் என்பன அமெரிக்கா இலகுவாக எண்ணெய் வளத்தினைச் சுரண்டுவது ஈராக்கினைத்தக்க வைப்பதும் சந்தேகத்திற்குரியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான வாய்ப்பு நிகழும் என்ற எதிர்பார்ப்பு போருக்கு முந்திய அமெரிக்க வர்த்தக அமைப்புக்களிடமும், ஆட்சியாளரிடமும் காணப் பட்டது. ஆனால் போருக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் அமெரிக்காவுக்குப் புதிய பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. இந் நெருக்கடிகளை வெற்றிகரமாக அமெரிக்கா கையாளுமாயின் இறுதி யில் ஐரோப்பாவிற்கு பாரிய எண்ணெய் ஏற்றுமதி நாடான ஈராக்கின் வளங்களுக்கு அமெரிக்கா விலை நிர்ணயத்தை சாத்தியப்படுத்தும்.

## ஈராக் அமெரிக்காவுக்கு மற்றொரு வியட்னாம்

இஸ்லாமிய நாடுகளில் ஏற்பட்டு வரும் அதிருப்தியும் வன் முறைகளும் மேற்கு நாடுகளுக்கு எதிரானதாகவே அமைந்து வரு கின்றது. அதிலும், குறிப்பாக அமெரிக்காவின் ஆதிக்கத்துக்கு எதிரான தாகவே அதிக வன்முறைத் தாக்குதல்களும், சம்பவங்களும் நிகழ்ந்து வருகின்றன. இது, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், அதன் வளர்ச் சிக்கும் பெரும் தடையாக அமைந்து வருவதுடன், அமெரிக்காவின் கூட்டில் இணைந்திருக்கும் சக்திகளுக்கும் பெரும் நெருக்கடியாக மாறிவருகிறது. இத்தகைய தாக்குதல்களில் மிக அபாயமானவை யாக அமைந்திருப்பது தற்கொலைத் தாக்குதல்களே ஆகும். அத் தகைய தற்கொலைத்தாக்குதல்களின் அதிகரிப்புக்கள் ஆக்கிரமிப்புச் சக்திகளின் நடவடிக்கைகளை நெருக்கடிக்குள்ளாக்கும் என்பதில் இலங்கை தமிழ் மக்களுக்கு நல்ல அனுபவம் உண்டு என்பதனை மறுத்துவிட முடியாது. ஈராக்கில் நடந்துள்ள அமெரிக்கா உட்பட மேற்கு நாடு களுக்கு எதிரான தாக்குதல்கள் பற்றிப் பரிசீலிப்போம்.

ஈராக் மீதான போர் முடிந்த கையோடு, பல அரசியல் விமர் சகர்கள் போர் முடிவுக்கு வந்து விட்டதாகவும், ஈராக் போர் அமெரிக்க பேரரசுவாதத்திற்கான ஆரம்பம் என்ற கருத்தினையும் முன்வைத்தனர். இதில் அமெரிக்க விரும்பிகள் பலர் ஈராக் அரசியலைப் பற்றி இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பதுடன் நின்றுவிடாது. பயங்கரவாதப் பிரச்சினை யாகக்கூட கையாண்டனர். இறுதியில் சதாம் உசைன் மீதும், அவரது ஆட்சி மீதும் திணித்த குற்றச்சாட்டுக்களும் கூட பொய்யானதென்பது அம்பலமானது. அமெரிக்கா திட்டமிட்டு சதாமை அழிப்பதன்மூலம் எதிர்கால மேற்கின் நலன்களைப் பாதுகாக்கலாம் என்ற நோக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு செயற்பட்டதுடன் தனிப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷிக்கு உரித்தான போராகவும், அந்த யுத்தத்தை கையாண்டுள்ளனர் என்பதை விளங்கிக்கொள்ள முடியும். அவ்வாறு எல்லாம் ஏமாற்றுத்தனத்தையும், போலியையும் பிரதிபலித்த இந்தப் போரை, நியாயப் படுத்திய அரசியல் தலைமைகளும் இல்லாமலில்லை. இப்போது இந்தப் போர்மிக இக்கட்டான அல்லது திருப்பத்திற்குரிய கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

ஈராக் மீதான ஆரம்பநாள் போர்களிலும் தற்கொலைத் தாக்குதல்கள் ஒன்று. இரண்டு இலக்குத்தவறி நிகழ்ந்தன. தற்போதும் கூட, இலக்கை சரிவர சென்றடைய முன்பு. தாக்குதல் நிகழ்ந்து முடிந்துள்ள சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன. ஆனால், ஆரம்பத்திலிருந்ததைவிட, தற்போது தாக்குதலின் துல்லியம் ஓரளவேனும் சாத்தியப் படுகின்றது. இது காலப்போக்கில் சரியான துல்லியமான இலக்குகளைச் சாத்தியப்படுத்தும் தாக்குதலாக மாறும். அதற்கான அடிப் படை தாக்கும் பிரிவுகளின் இயல்பான வளர்ச்சியாக அமையும். அவ்வாறே அமெரிக்க நிர்வாக அமைப்பின் மீதும், பக்தாத் நகரத்தின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல் உரிய அதிகாரியைத் தவறவிட்டாலும், உரிய கட்டத்தை இலக்குத் தவறாது தாக்கியிருந்தது. ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் என்பன அமைந்திருந்த கட்டடங்கள் தாக்கப்பட்டுள்ளன. இது கார்க்குண்டுத் தாக்குதலால் சாத்தியப்பட்டிருந்ததுடன், அதிக பாதிப்பை அமெரிக்கத் தரப்புக்கு ஏற்படுத்தியுமுள்ளது. ஈராக்கை மீளப் புனரமைக்கப் போவதாகக் கூறிக்கொண்டு, உலகநாடுகளிடமும், தொண்டு நிறுவனங்களிடமும் அமெரிக்கா உதவி கோரிவருகின்ற சந்தர்ப்பத்தில், ஈராக்கில் அடுத்தடுத்து தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் நிகழ்ந்து வருகின்றன.

மேலும், அமெரிக்க உயர் பாதுகாப்பு அலுவலகத்தின் மீது, றொக்கட் தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. அப்போது, அமெரிக்காவின் பிரதிப் பாதுகாப்புச் செயலாளரை இலக்கு வைத்தே தாக்குதல் நிகழ்ந்துள்ளது என்பதும் புலனாகின்றது. றொக்கட் தாக்குதல் நிகழ்ந்த அன்றைய தினமே, அமெரிக்க உலங்கு வானூர்தி சுட்டு வீழ்த்தப் பட்டதும் குறிப்பிடக்கூடிய விடயமாகும். இந்த றொக்கட் தாக்குதல், சரிவர திட்டமிடப்பட்ட தாக்குதல் என்பதற்கு மேலும் பல ஆதாரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. அதாவது, தாக்குதல் நிகழ்ந்த கட்டடத்திலிருந்து 400 மீற்றர் தூரத்துக்குள்ளேயே நடந்திருக்கலாம் என்பதும், 29 ரொக்கட் குண்டு கள் வீசப்பட்டன என்பதும், தெரியவந்துள்ளது. அத்துடன், வேறு ஒரு வாகனத்திலிருந்தே தாக்குதல் நிகழ்த்தப்பட்டது என்பதையும் அமெரிக்கப் படைகள் கண்டறிந்துள்ளனர்.

ரொக்கட் தாக்குதல் நிகழ்ந்த மறுநாள், பக்தாத் நகரை அண் டிய பகுதியில் நிகழ்ந்த இரு தாக்குதலில், 43 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 200 இற்கு மேற்பட்டவர்கள் காய மடைந்துள்ளனர். காவல் நிலையங்களை அண்மித்த பகுதிகளிலேயே பல தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. மொத்தத்தில் பெரும் தாக்குதல் நிறைவுபெற்றதென வெள்ளைமாளிகை அறிவித்தது. இது வரை 1000 மேற்பட்ட அமெரிக்கப் படைகள் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக் கான படைகள் காயமடைந்துள்ளனர். உடல்ரீதியான விளைவுகளைக் காட்டிலும், உளரீதியான பாதிப்புக்களுக்கும், நெருக்கீடுகளுக்கும் அமெரிக்கப் படையினர் உள்ளாகியிருப்பதாகத் தெரியவருகின்றது. எனவே, இத்தகைய நடவடிக்கையை பார்க்கும் போது, ஈராக்-அமெரிக் காவுக்கு மீண்டுமொரு வியட்னாமாக மாறுமா என்ற கேள்வி எழ வாய்ப்புண்டு. இதற்குரிய சாதகமானதும் பாதகமானதுமான அம்சங் களை நோக்குவோம்.

ஈராக் ஒரு வியட்னாமாக மாறும் என்பதை உறுதிப்படுத்தும் தகவல்களே மேலே குறிப்பிடப்பட்டவையில் காணப்படுகின்றன. ஆனால், அவை மட்டுமல்லாது ஈராக் மக்களதும், இதனை வழிநடத்தும் தலை மையினதும் பலத்திலும், ஆளுமையிலும் இது தங்கியுள்ளது என்பதை மறுக்கமுடியாது. வியட்நாமின் தலைமை-அமெரிக்க ஏகாபத்தியத்தை எதிர்த்தது மட்டுமல்லாது, வியட்னாமிய மக்களை அமெரிக்க ஆதிக் கத்துக்கு எதிராக உருவாக்குவதிலும், அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போக்கை தோலுரித்துக் காட்டுவதிலும், மக்களிடம் தேசிய விழிப் புணர்வுமிக்க அரசியலைத் தூண்டுதிலும் அதிக அக்கறை செலுத்தி யது. மக்கள் உணர்வுபூர்வமாக மட்டுமல்லாது, அறிவுபூர்வமாகவும் ஹோசிமினின் புரட்சியை ஆதரித்தார்கள். ஹோர்சிமினும், அவரது போராளிகளும் மக்களுக்காகப் போராடியது மட்டுமன்றி, மக்களைத் தேசியப் பற்றுடையவர்களாகவும், ஆக்கிரமிப்பாளர்கள் யாராக இருந் தாலும், அவர்களை எதிர்க்கும் பக்குவத்தை உடையவர்களாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கினார்கள். இதனாலேயே, அமெரிக்க ஆக்கிரமிப்பு எதனூடாகவும் சாத்தியப்படவில்லை என்பது மட்டுமல்லாது, வெற்றி பெறமுடியாத நிலையும் வியட்நாமில் உருவானது.

அத்தகைய சூழலுக்கு ஏற்றவகையில், அன்றைய உலக அரசியலும்-வியட்நாமுக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது. பனிப்போர் என்பது கம்யூனிஸத்திற்கும், முதலாளித்துவத்திற்குமான போராக விளங்கியதால், வியட்நாமுக்கு கம்யூனிஸ நாடுகளின் ஆதரவு கிடைத்தது. போதியளவில் சீனாவும், வெளிப்படையாக இல்லாவிட்டாலும், மறைமுகமாக சோவியத்யூனியனும் - வியட்நாமுக்கு இராணுவ, பொருளாதார, ஆயுத தளபாட உதவிகளை வழங்கி வந்தன. இதனால், ஹோசிமின் தொடர்ந்து ஆயுதப் போராட்டத்தையும், அதேநேரம் அரசியல் விழிப்பணர்வுப் போராட்டத்தையும் சமநிலையாக ஏற்படுத்தி வந்தார்.

இந்தநிலை, ஈராக்கிடம் உண்டா என்பது கேள்விக்குரியது. அதற்காக வியட்நாம் போன்றுதான் ஈராக் இருக்கவேண்டும் என்பதுமல்ல. ஆனாலும் ஈராக்கின் தலைமை யாரிடம் தொடருவதென்பதில் ஷியா முஸ்லிம்களுக்கும், குர்திஷ் பிரிவு முஸ்லிம்களுக்கும் உடன்பாடு உண்டு என்பது கேள்விக்குரியது. இவ்விரு பிரிவினரும் அமெரிக்காவை எதிரியாகவே நோக்குகின்றனர். அதேயளவுக்குத் தமக்கிடையேயும் முரண்பாடுடையவர்களாக காணப்படுகின்றனர். கடந்தகால அரசியலில் சதாமின் ஆட்சியை-கறைபடிந்த ஆட்சியாகக் கருதுகின்ற ஷியா இனமக்கள் காணப்படுகின்றனர். இதுமட்டுமன்றி, சதாமின் அணுகுமுறையால் உள்நாட்டுக்குள்ளேயே உருவாகியிருக்கும் அரசியல் எதிரிகளையும், ஏனைய பல சிக்கல்களையும் கொண்ட இனமாக சுனி முஸ்லீம்கள் விளங்குகின்றார். வியட்னாமைப் போல கருதமுடியாத நிலையில் முரண்பாடுகளின் யதார்த்தத்திற்குள் ஈராக் அடங்கியுள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக உலக அரசியலின் ஒழுங்கு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சார்பானதாக இருக்குமா என்பது கேள்விக்குறியாகும். உலக அரசுகள் அனைத்தும் - பலமுடைய அதிகார அரசுகள் என்று கருதக்கூடியவைகள் அனைத்தும், பெருமளவுக்கு அமெரிக்கா பக்கமே சாய்ந்துள்ளன. பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்சியா என்பன அமெரிக்க எதிர்ப்பை வெளிப்படுத்தினாலும், அதற்கு ஒரு எல்லையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறுத்துள்ளநிலை காணப்படுகின்றது. அதனால், அத்தகைய அரசுகளின் அணுகுமுறை ஈராக்கின் அரசியல் போக்கையும், போராட்ட முறையையும் ஆதரிக்க வாய்ப்பில்லை. ஏனெனில், அவ்வரசகள் அமெரிக்கா மாதிரியான அல்லது தமது நலன் சார்பானதாகவே எந்த முடிவையும் எடுக்க விரும்புகின்றன. அமெரிக்கா பெரும் இழப்புக் களுக்கு பின்னால், ஒரு இலாபத்தையும், நலனையும் விரும்புகின்ற போது, ஏனைய நாடுகள் இழப்பீடில்லாத இலாபத்தை அடைய விரும் புகின்ற உலக அரசியல், பொருளாதார, இராணுவ ஒழுங்கே தற் போது காணப்படுகின்றன. சிரியா, ஈரான், ஜோர்டான் போன்ற சிறிய அரசுகளால் அமெரிக்க இராணுவ, பொருளாதார பலத்துக்கு முன்னால் தாக்குப்பிடிக்க முடியாதுள்ளன. இதனால் ஈராக்கும், அதன் மக்களும் வெளிப்படையான ஆதரவற்ற, தனித்துவிடப்பட்ட சக்திகளாகவே காணப்படுகின்றனர். ஈராக்கின் தேச விடுதலைக்கான போராட்டமெனக் கூறு வதைவிட, இழந்த நாட்டை மீட்டெடுக்க போராடுகின்ற தன்மையே அதிகம் காணப்படுகின்றது.

ஆனாலும், ஈராக்கிடம் ஒரு நம்பிக்கை இருக்கின்றது. இஸ்லாமியர்களுக்கு குண்டுகளை உடலில் சுமக்கும் தற்கொலைத் தாக்குதல் என்பது ஒரு புதிய அத்தியாயமாகும். அதனை ஏற்கும் மனோபலம் அதிகரிக்க, அதிகரிக்க ஆதிக்க சக்திகள் ஆட்டங்காண வேண்டியநிலை ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகும். தற்கொலைத் தாக்குதல் என்பது இலகுவானதுமல்ல. சாதாரணமான விளைவை ஏற்படுத்துமெனவும் கணக்குப்போட முடியாதது. இராணுவ தளபாடங் களையும் விட, தொழில்நுட்ப பலத்தையும்விட அதிகமான விளைவை ஏற்படுத்தக்கூடியனதற்கொலைத் தாக்குதல்கள் என்பதை உலகத்தில் யாருமே நிராகரித்துவிட முடியாது.

மக்களின் கவனம், கூட்டுப்படைகள் பக்கமல்லாது, கிளர்ச்சிப் படைகள் பக்கமே என்ற அடிப்படையில், மக்களை இணைத்துக் கொள்வதற்கான சாத்தியப்பாடுகளைச் உருவாக்கலாம். அத்துடன் ஜனநாயகம் என்ற அரசியல் பொறியையும், மீள்கட்டுமானம், அபி விருத்தி என்ற பொருளாதார பொறியையும் இலகுவில் கிளர்ச்சிப் படைகள் முறியடித்துவிடும். அதனைப் போலியென்று உணராத மக்க ளையும், உதவிகளை நாடியுள்ள மக்களையும் கிளர்ச்சிப் படைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றுவிட சந்தர்ப்பம் உண்டு. ஈராக் படையெடுப்பு அமெரிக்கா வுக்கு அதிக நன்மைகளைக் கொடுத்தாலும். அதற்காக அமெரிக்கா செலுத்தவுள்ள இழப்பீடு அபாயகரமானதாக அமையலாம். கிளர்ச்சிப் படைகளின் தாக்குதல் நடவடிக்கை அதனை உடனடியாக ஏற்படுத் தாதுவிட்டாலும், ஆக்கிரமிப்புச் சக்திகளின் படையெடுப்புவாதத் திற்கு நல்ல பாடமாக அமையும் என்பது தெளிவாகும். இத்தகைய அனுபவத்தை அமெரிக்கர்கள்-வியட்நாமில் பெற்ற பின்பு, தற்போது தான் மீளவும் சந்தித்துள்ளனர். எனவே, ஏனைய ஆக்கிரமிப்பு எண்ணங்கொண்ட சக்திகளுக்கு முன்னனுபவமாக அமைவதுடன், விடுதலைப் போராட்டங்களை நிகழ்த்துகின்ற இனங்களுக்கு நம்பிக் கையூட்டும் வலுவையும் இது கொடுக்கக்கூடியதே.

## சதாம் ஹுசைனின் கைதும் "பாத்" கட்சியின் அரசியல் நகர்வும்

முன்னாள் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் கைதுசெய் யப்பட்ட செய்தி பரபரப்பான அரசியல் நிகழ்வாக அமைந்திருந்தது. உலகம் முழுவதும் அதிர்ச்சியும், ஆரவாரமும் போராட்டமுமாக கலந்த ஒரு கலக்கல் மனிதனாக சதாமை நோக்க முடிந்தது. சதாம் கைப்பற்றமுடியாத நபர் என்பதிலிருந்து நிலைமாறி கைதின் பின்னரும் கிறுக்கனாக நிமிரமுயலும் ஆட்சியாளனாக அலங்கரிக்கப்படுகின்றார். உறவினரும், குடும்பத்தவரும் ஏன் சுனி முஸ்லிம்களும் சதாமை ஆட்சியாளனுக்கு அப்பால் ஒரு தலைவனாகக் கருதும் நிலையே இன்றும் காணப்படுகின்றது. இதனால், சதாமின் கைதையும் அதன் பின்னால் ஏற்பட்டுவரும் அரசியலையும் பரிசீலிப்போம்.

## சதாமின் கைது

சதாமின் மறைவான அரசியல் வாழ்வு இவ்வளவு பலவீனமான தாக அமையும் என உலகம் எதிர்பார்க்கவில்லை. குறிப்பாக வல்லா திக்க சக்திகளை எதிர்த்தும், எந்த தலைமைகளும், அதன் மக்களும் ஒரு போதும் அப்படி எண்ணியிருக்கவில்லை. ஒரு சுரங்க அறைக்குள் இரண்டு *AK 47* ஐயும் குறிப்பிட்ட தொகையைக் கொண்ட அமெரிக்க நாணயங்களையும் வைத்திருக்கும் சதாமாக மட்டும் சதாமை உலகம் கணிக்கவில்லை. அதுமட்டுமன்றி அத்தகைய இரண்டு துப்பாக்கி களை கொண்டிருந்த போதும், எதிரியை கண்டு தாக்காது தவிர்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் உங்களுடன் பேசவிரும்புகிறேன் என சதாம் கூறியதாக அமெரிக்க அதிகாரிகள் விடும் கதைகள் ஏற்கமுடியாததாகவே உள்ளன. இவை போன்ற பல கதைகள் அமெரிக்கர்களின் அடுத்தகட்ட அரசியலுக்கு உலகத்தை தயாராக்குவதற்கும் உதவக்கூடியன. எல்லாமே அவர்களுடையது தான். அமெரிக்கர்களது ஊடகங்கள் கூறும் செய்திகளைக் கேட்கும் செவிகள் மட்டமே எங்களுடையது. ஏனவே, அவர்கள் எந்தக் கதை யை விட்டாலும் நாங்கள் கேட்போம், கேட்டுக்கொண்டே இருப்போம். ஹிட்லர், முசோலினி, இடிஅமீன் என்ற பெரிய பட்டியல் ஒன்று எங்க ளுக்கு முன்பு வைக்கப்பட்டது. அதனை நாம் தவிர்க்க முடியாது. ஏற்றுக் கொண்டோம். ஆனால், இப்போது எமது சமகாலத்தில் ஆட்சி புரிந்த சதாம் அதேவரிசையில் மேற்குலகத்தவரால் நிறுத்தப்படும் போதே, கொடியவர்கள் யார், இனியவர்கள் யார் என்பது புலப்படுகிறது. சதாம் ஈராக் நாட்டின் ஜனாதிபதி. அமெரிக்க ஜனாதிபதி எப்படியோ, அப்படி யான தலைவராகவே சதாம் ஆட்சிபுரிந்தார். அமெரிக்காவின் பலவீன மான ஜனநாயகத்தினை வீழ்த்தி விட்டு ஆட்சியைப் பிடித்த அமெரிக்க ஜனாதிபதியைவிட ஒருபடி மேல் சென்று தனது நாட்டு அரசியல் கலாசாரத்துக்கு ஏற்ப ஆயுத பலத்தால் ஆட்சியைப் பிடித்தவர் தான் சதாம். புஷ் ஜனநாயகத்தைப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடித்தவர் சதாம் இராணுவத்தைப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடித்தவர். இதில் இருவருமே ஒரே தரத்தைக் கொண்ட தலைவர்கள் என்பதை மறுக்க முடியாது.

### பாத் கட்சிகளின் நிலை

சதாம் ஒரு இராணுவ ஆட்சியாளன் அமெரிக்காவை நன்கு தெரிந்த, விளங்கிக் கொண்ட ஆட்சியாளனான பலவீனங்களில் இருந்தே பலத்தைப் பிடித்த ஜனாதிபதி, எதிரி, நண்பன் யார் என்பதை விளங்கிக் கொள்ளாத ஆட்சியாளனாக இல்லை. அப்படிப்பட்ட இராணுவ வலிமையைக் கொண்ட ஈராக் மக்களின் இரு தசாப்த ஆட்சி யாளன், எப்படி இலகுவாக அமெரிக்காவினால் கைது செய்யப்படக் கூடியவனாக இருந்தார் என்பதே எல்லோர் மத்தியிலும் உள்ள கேள்வியாகும். ஈராக்கில் சதாமுக்கு எதிரியாகவுள்ள குர்திஷ் அல்லது ஷியா முஸ்லிம் பிரிவினரால் காட்டிக் கொடுக்கப்பட்டிருக்கலாம். அவ்வாறான தகவல்களையும் அமெரிக்க அதிகாரிகள் பரப்பத் தவற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. அப்படியாயினும் சதாமின் படைகள் இல்லாமல் குறிப்பாக சதாமின் மெய்க்காவலாளர்கள் இல்லாமல் சதாம் எப்படி தனிமனி தரானார். இங்கேதான் பாத் கட்சியைப் பற்றிய சந்தேசம் தொடங்கு கிறது. இது பற்றி அமெரிக்காவின் காங்கிரஸ் உறுப்பினரும் ஜனநாய கக் கட்சியின் தற்போதைய உப ஜனாதிபதி வேட்பாளர் பாத் கட்சி யைப் பற்றிய நடவடிக்கையில் ஈடுபடுவதே பொருத்தமானதென தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில், பாத் கட்சி சதா முக்கு பதிலாக புதிய தலைமையைக் கண்டு பிடித்துவிட்டது போல் தெரிகிறது. சதாம் ஒரு காலத்து ஆட்சியாளனாகவே பாத் கட்சி கருத வாய்ப்புண்டு. அது மட்டுமன்றி சதாம் என்ற தனிமனிதனால் ஏற்பட்ட முரண்பாடுகளாகவே ஷியா மற்றும் குர்திஷ் மக்களது பிரச்சினைகள் முன்மொழியப்பட்டு வந்தது. பாத் கட்சியைவிட சதாமே அமெரிக்கா வின் எதிரியாகவும், ஈரான், குவைத் போன்ற இஸ்லாமிய நாடுகளின் எதிரியாகவும், நோக்கமுடியும். அதனால், சதாமைப் பாத் கட்சியினரே தனிமைப்படுத்தியிருக்கலாம்.

### தாக்குதலின் தொடர்ச்சி

இதனை மேலும் ஆதாரப்படுத்த இரண்டு அம்சங்களை நோக்கமுடியும். ஒன்று அமெரிக்கா சதாமை கைதுசெய்த பின்னர் இரசாயன ஆயுதங்களைத் தேடும் பணியை மட்டுப்படுத்தியுள்ளது. அவ்வாறான ஆயுதங்கள் இருப்பதாக சதாம் ஒப்புக்கொண்டால்கூட, சதாமுடன் இரசாயன ஆயுதங்களின் அழிவும் பூர்த்தியாகும். அதனால், சதாம் பிடிபடுவது பாத் கட்சிக்கும், ஈராக்குக்கும் இலாபகரமானதாக வே உள்ளது.

இரண்டாவது, சதாம் கைதுசெய்யப்பட்ட பின்பு தாக்குதல்கள் தொடருகின்றது. தற்கொலைத் தாக்குதல்கள் ஒருபுறம் தீவிரமடைய மறுபுறத்தில் சுனி முஸ்லிம்களின் எதிர்ப்பு போராட்டங்கள் தொடர் கின்றது. அமெரிக்கப் படைகளுக்கு எதிராக மட்டுமன்றி பிரித்தானியப் படைகளுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த மூன்று மாதங்களாக ஈராக்கிய இராணுவத்திற்கு ஊதியம் வழங்கவில் லை என்பதற்காக ஈராக்கிய இராணுவமே போராட்டத்தில் இறங்கி யுள்ளது. எனவே, சதாம் மறைந்திருந்து தாக்குதலை வழி நடத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகக் கூறிய தகவல்கள் முடிவுக்கு வந்திருப்பதுடன், சதாம் கைதினால் தாக்குதல்கள் நிற்கப் போவதில்லை என்பது தெளிவாகி விட்டது.

எனவே, சதாமின் கைது நடவடிக்கையில் அமெரிக்கர்கள் கூறுவதுபோன்று அல்லாமல் பாத் கட்சியின் அரசியலும் அதற்கு உதவியதாகக் கொள்ளலாம். அதனால், சதாம் பதுங்கியிருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கலாம். சதாம் அமெரிக்கரிடமே பிடிபடுவது ஈராக்கின் புதிய தலைமைக்கு வாய்ப்பாகவே அமையவுள்ளது. ஆனால், சதாம் பிற ஆட்சியாளர்களைப் போன்று நாட்டைவிட்டுத் தப்பியோடவில்லை. வேறுநாட்டில் தஞ்சம் கோரவில்லை. தனது மக்களோடு தானும் ஒருவனாக இருந்து கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பதே இங்கு விசேடமான அனுபவமாகவுள்ளது. சதாமை பல நாடுகள் மறைத்து வைத்திருக்க விரும்பின என்பதுடன் அதனால் அதிக அரசியல் ஆதாயங்களையும் அந்த அரசுகள் அடைந்திருக்க வாய்ப்பிருந்தது.

## அமெரிக்காவின் அரசியல் நகர்வு

ஈராக்கைப் புனரமைப்பதில் சதாம் கைது செய்யப்பட்ட பின்னர் பல நாடுகள் முண்டியடித்துக்கொண்டு போட்டிபோடுகின்றன. அமெரிக்கா எதிர்பார்த்ததைவிட, அதிக நிதி கிடைத்திருப்பதாக வோஷிங்டன் அறிவித்திருந்தது. ரஷ்சியா, சீனா, ஜப்பான், இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மன் உட்பட இதில் அதிக பங்கு பெற நாடுகள் விரும்புகின்றன. அதற்கான பின்னணியாக சதாமின் கைதையே அந்நாடுகள் கருதுகின்றன. கைதினால் ஈராக்கில் ஸ்திரம், அமைதி சாத்தியப்படுமெனக் கருதுவதுடன், ஏற்கனவே அதிக பங்கு முதலீட்டைக் கொண்டிருக்கும் ரஷ்சியா முழுமையான அக்கறையைச் செலுத்த விரும்புகின்றது. இதனை அரசியலாக்கும் அமெரிக்க ஆட்சியாளர்கள் ஈராக் மீதான போருக்கு அப்பால் அதனை நியாயப்படுத்துவதுடன், அதனை பிரச்சாரமாகவும் பயன்படுத்திவருகின்றனர்.

எனவே, சதாம் ஹுசைனின் சகாப்தம் ஏறக்குறைய முடிந்ததொன்றாகவே மாறியுள்ளது. சதாம் தற்கொலைக்கு ஒப்பான ஒரு வேலையையே செய்து முடித்துள்ளார். இதைவிட சதாம் சதாமாக இருந்துகொண்டு அமெரிக்காவிடம் சரணடைந்திருக்கலாம். அதனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவி மட்டுமல்ல ஈராக்கும் தக்கவைக்கப்பட்டிருக்கும். இதனை உலகத் தலைவர்கள் பாடமாகக் கொள்வார்கள் என்பதே, யதார்த்தமான விடயமாகும். ஏறக்குறைய லிபிய நாட்டுத் தலைவர் கேணல் கடாபி உடனடியாகவே சதாமின் அனுபவத்தைப் பெற்று செயற்பட ஆரம்பித்துவிட்டார். அது சரணடைந்தால் மட்டுமல்ல காலம் வரும் வரை காத்திருக்கும் இராஜதந்திரமாகக்கூட அமையலாம். மனித உரிமை, சிறுவர் உரிமை, பயங்கரவாதம் என்பதெல்லாம்- அமெரிக்கா உலகத்தை விரட்டுவதற்குத் தயார் செய்த தந்திரமான ஆயுதங்கள், அத்தகைய ஆயுதங்களைக் கொண்டு அமெரிக்கர்களைத் திரும்பத் தாக்க முயல்வதே சாத்தியமான, தந்திரமான அணுகுமுறையாகும். அதனைத் தவறும் உலகத் தலைவர்களுக்கு சதாமின் நிலை காத்திருக்கிறதென்பது தவிர்க்கமுடியாதது.

## கேணல் கடாபியின் அரசியல் தந்திரம்

'அரசியலில் நிலைத்து நிற்பதற்கு அதிகாரபலம் மட்டும் போதாது. அதிகார பலத்தோடு தந்திரமும், இராஜதந்திரமும் அவசியமானது. தந்திரமில்லாத அரசியல் தலைமையின் அரசியல் கேள்விக் குறிபோல் நாணி, கூனி, குறுகி அழிந்துவிடும்'. இது ஒரு கலையாகும். இத்தகைய கலை கீழைத்தேச அரசியல் தலைமைகளைக் காட்டிலும், மேற்குதேச அரசியல் தலைமையிடம் பலமான ஆயுதமாக உள்ளது. ஆயுத பலத்தையும், அதிகாரபலத்தையும் இழந்துபோன பல ஐரோப்பிய அரசியல் தலைமைகள் தந்திரபலத்தால் ஆட்சியையும், அதிகாரத்தையும் பிடித்த வரலாறுகள் நடந்துள்ளன. ஆனால், கீழைத்தேச அரசியல் தலைமைகள் தந்திரமாகச் செயற்பட்டாலும் குறுகியதாகவே அவை அமைந்திருப்பதைக் காணலாம். தனது பரம்பரை, தனது இனம், தனது நாடு, அரசியல் என்று குறுகிய வட்டத்திற்குள்ளேயே கீழைத்தேசத்தவர் இயங்குகின்றனர். மேற்குலகத்தவர்களிடம் ஐரோப்பா அல்லது வெள்ளை இனம் அல்லது மேற்குலகம் என்ற பொதுமைப்படுத்தப்பட்டுள்ள தந்திரத்தைப் பிரயோகிக்கின்ற போக்கே காணப்படுகின்றது. இந்த வகையில் லிபிய தலைவர் கேணல் கடாபியின் தந்திரம் எப்படியான நோக்கங்களையும், அதன் பயன்பாடுகளையும் கொண்டுள்ளது என்பதை உலக அரசியலுக்குள் நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக்கின் முன்னால் ஜனாதிபதி சதாம் உசைன் - அமெரிக்கப் படைகளிடம் காட்டிக் கொடுக்கப்பட்ட பின்பு, லிபிய நாட்டுத் தலைவர் கடாபி தனது நாட்டின் அணுவாயுத தயாரிப்புக்கான நிலையங்களைச் சர்வதேச அணுவாயுதப் பரிசோதனைக் குழுக்களின் பரிசோதனைக்கு உட்படுத்தத் தயாராக இருப்பதாகவும், உயிரியல், இரசாயன ஆயுத உற்பத்தியை நிறுத்துவதாகவும் அறிவித்திருந்தார். இந்த அறிவிப்பு கடந்த ஒரு சில வருடங்களாக முக்கியத்துவம் குறைந்திருந்த லிபியா வையும், கேணல் கடாபியையும் உலக நாடுகள் மத்தியில் மீண்டும் நினைவுகூறச் செய்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் லிபியாவைப் பற்றி ஒரு சிறு வரலாற்றுக் குறிப்பையும் தெரிந்துகொள்ள முயல்வோம்.

## புவியியல் அமைப்பு

புவியியல் அமைவில் வட ஆபிரிக்க பிரதேசத்தில் அமைந் துள்ள லிபியா, எகிப்து, சூடான், சாட், நைஜீரியா, அல்ஜீரியா, துனீசியா போன்ற நாடுகளை எல்லையாகவும், வடக்கே மத்தியதரைக் கடலையும் கொண்ட அரசாக விளங்குகின்றது. 1759540 சதுர கி.மீ. பரப்பைக் கொண்ட லிபியா, 5.2 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட அரபு நாடாக விளங்குகிறது. 'சுனி' முஸ்லிம்களைப் பெரும்பான்மையாக கொண்டிருக்கும் லிபியாவில், றோமன் கத்தோலிக்கத்தின் செல் வாக்கும் காணப்படுகின்றது. காரணம் லிபியா 1551 முதல் 1911 வரை துருக்கிய ஒட்டமன் இராச்சியத்திற்குள் இருந்தபின்னர், இத்தாலியின் காலனித்துவத்துக்குள்ளும், பின்னர் பிரித்தானிய காலனித்துவத்திற் குள்ளும் (1943) அகப்பட்டிருந்தது. 1951 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் தீர்வின் கீழ், சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. அப்போது லிபியா மூன்று மாகாணங்களைக் கொண்ட (Tripolitania, Cyrenaica, Fezzan) சமஷ்டி ஆட்சிமுறையுடைய அரசாக உருவாக்கப் பட்டது. அப்போது பிரித்தானிய அமெரிக்க செல்வாக்குடன் முகமட் இடிஸ் அல்சனுசி ஆட்சிப் பொறுப்பை ஏற்றதுடன், தன்னை மன்ன னாகவும், பின்னர் பிரகடனப்படுத்திக்கொண்டார். இன்று பிரதான ஏற்று மதிப் பொருளாக விளங்கும் எண்ணெய் வளம் 1959 களிலேயே பெரியளவில் வெளிநாட்டு உதவிகளுடன் கண்டு பிடிக்கப்பட்டு ஏற்றும திக்குரிய வாய்ப்புக்களை விரிவாக்கிக் கொண்டது. அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளின் பொருளாதார தொழில்நுட்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியை லிபியா பெற்றதுடன், அந்தநாடுகளின் இராணுவ வாய்ப்புக் களுக்கு ஒத்துழைப்பும் வழங்கியது. 1963 களில் சமஷ்டிமுறை நீக்கப் பட்டதும், அமெரிக்க பிரித்தானிய நலன்கள் பெருகியதும், கேணல் கடாபியின் எழுச்சிக்கு வித்திட்டது. இளம் தம்பதிகளைக் கொண்ட சபையின் புரட்சியை தொடர்ந்து, அமெரிக்க பிரித்தானிய நலன்களும், இராணுவத்தளங்களும் லிபியாவிலிருந்து அகற்றப்பட்டன. 1969 செப்ரெம்பர் முதல் கடாபியே லிபியாவின் தலைவராக உள்ளார். எகிப்து, சிரியா போன்ற நாடுகளோடு இணைந்து உருவாக்கிய உடன் பாட்டின்கீழ், இஸ்ரேலுக்கு எதிரான கொள்கையைக் கொண்டவராகக் கடாபி விளங்கினார். அரபுலக தேசியத்தை உருவாக்க விளைந்த தலைமைகளில் எஞ்சியுள்ள ஒருவராக இருப்பவர் கடாபி என்பது குறிப்பிடத்தக்கது.

பிராந்தியத்தில் இஸ்ரேலின் எதிர்ப்புவாதியும், சர்வதேச மட்டத்தில் அமெரிக்காவின் எதிரியுமான கடாபி அமெரிக்காவாலும், பிரித்தானியாவாலும் அண்மைக்காலத்தில் பாராட்டப்பட்டுள்ளார் என்பது அதிர்ச்சியளிக்கும் செய்தியாகவே அமைந்தது. அதுமட்டு மன்றி, லிபியாவைப் பின்பற்றி இஸ்ரேலும் ஏனைய நாடுகளும் செயற் பட வேண்டுமென அமெரிக்க பிரிட்டிஷ் தலைவர்கள் குறிப்பிட்டுள் ளனர். இது இஸ்ரேலின் இராஜ தந்திரத்தின் வரலாற்றில் ஏற்பட்டுள்ள நெருக்கடியாகவே அமைந்துள்ளது. எனவே, கடாபியின் அறிவிப்பின் முதல் எதிர்பார்க்கை கணிசமான தாக்கத்தை ஏற்படுத்திவிட்டதென்றே கூறலாம். ஒன்று பிரித்தானிய, அமெரிக்க தலைமைகள் கடாபியின் அறிவிப்பை வரவேற்றமை கடாபிக்குக் கிடைத்த வெற்றியாகும். அவ்வாறே இஸ்ரேல்மீது அமெரிக்கா, பிரித்தானியா மட்டுமல்ல, மேற்காசிய நாடுகள் பலவும் அழுத்தம் கொடுக்கும் அரசியல் நடவடிக்கையில் இறங்கியுள்ளன. இதனால், முழு மேற்காசியாவிலும் இஸ்ரேலுக்கு எதிரான உணர்வலைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கடாபி சதாம் உசைன் அடைந்த நிலையை அனுபவ பூர்வ மாகக் கற்றுக்கொண்டதையே இது காட்டுகிறது. சதாம் - அமெரிக்கா வை எதிர்க்கமுயன்று இறுதியில் நாடு, மக்கள், பதவி என்பவற்றை இழந்ததுபோல் அல்லாமல், அமெரிக்கர்கள் முன்வைக்கும் தடை களைப் படிக்கற்களாக்கி கடாபி பாதை அமைக்கத் தொடங்கிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடாபி அமெரிக்கர்களின் பக்க பலத்தோடு மேற்காசியாவை ஆட்டிப் படைக்கும் இஸ்ரேல்மீதும் தனது தந்திரத்தின் ஒரு பக்கத்தைப் பிரயோகித்திருக்கிறார். ஆனால், கடாபியின் தந்திரத்திற்கு இஸ்ரேல் மசியுமா என்பது ஆய்வுக்குட்படுத்த வேண்டிய இன்னோர் அம்ச மாகும். இஸ்ரேல் ஒரு வகையான இராஜதந்திர நெருக்கடியை எதிர் கொண்டாலும், மறுபக்கத்தில் அமெரிக்காவின் அணுகுமுறையும், இஸ்ரேலின் தந்திரமும் கடாபி எதிர்பார்ப்பது போன்ற பயனை ஏற்ப டுத்துமா என்பது சந்தேகமாகவேயுள்ளது. ஏனெனில், கடாபியின் அறிவிப்புக்குப் பின்னர் இஸ்ரேல் வெளியிட்ட செய்திகளில் தனக்கு முன்னுள்ள பிரச்சினைகளைப் பட்டியலிட்டுள்ளது. பலஸ்தீனப் போராளிகளது தற்கொலைத் தாக்குதல்கள், அரபு நாடுகளது தன்மீதான தாக்குதல் தொடர்பான அச்சம், முழு இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புக்களும் இஸ்ரேலைத் தாக்கத் திட்டமிட்டிருப்பது எனப் பல பிரச்சினைகளை முன்வைத்துள்ளது. இதனால், ஆயுதப் பரவல் தடைக்குள் (WMD) லிபியா போன்று இஸ்ரேல் உடனடியாக ஈடுபடமுடியாதெனக் கூறி யுள்ளது.

இஸ்ரேல் உலகத்திலேயே ஐந்தாவது அணுவாயுத அரசென் பதும், 200 இற்கு மேற்பட்ட அணுவாயுத நிலைகளைக் கொண்டது என்பதும் தெரியவந்துள்ளது. அதேபோன்று, உறுதிப்படுத்தாத தகவல்களின்படி தற்பாதுகாப்புக்கான இரசாயன ஆயுதங்களைத் தயாரிக்கும் வலுவையுடையதெனவும், உயிலியல் ஆயுதங்கள் உற்பத்திக் கான நிகழ்ச்சித் திட்டத்தைக் கொண்டிருக்கிறது எனவும் அமெரிக்க காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது. இத்தகைய அணுவாயுத, இரசாயன, உயிரியல் ஆயுதங்களைக் கொண்ட குண்டுகளையும், ஏவுகணை களையும் இஸ்ரேல் பல இடங்களில் வைத்திருப்பதாகவும் ரெல்அவிவ் இதில் முக்கியமான இடமாகவுள்ளது எனவும் தெரியவந்துள்ளது.

கடாபியின் அடுத்த பிரதான இலக்கு அமெரிக்கா மற்றும் பிரித்தானிய அரசுகளின் எதிர்ப்பை முறியடித்து, தந்திரமாக ஆட்சியையும், தனது அதிகாரத்தையும் தக்கவைப்பதாகும். கடாபியின் அறிவிப்பை யடுத்து லிபியாவுக்கு விஜயம் செய்த ஐ.நா.ஆயுதப் பரிசோதகர்கள்- அணுவாயுதம் தயாரிக்கும் திறன் லிபியாவிடம் இருக்கக்கூடியதற்கான எந்தவித தகவலும் கிடைக்கவில்லை என அறிக்கை விடுத்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது கடாபியின் தனிப்பட்ட நலன்களைப் பாதுகாக்கக்கூடியதான அறிக்கையாகவே அமைந்துள்ளது. லிபியா மீதான ஆபத்தான அணுகுமுறைக்குப் பதிலாக-அமெரிக்கா, பிரித்தானியா என்பன மென்மையான அணுகுமுறையைப் பின்பற்றுவதற்கு ஐ.நா.ஆயுதப் பரிசோதகர்களது அறிக்கை வாய்ப்பாக அமையும். அதனால், கடாபியின் ஆட்சிக்கும் சதாம் உசைனின் ஆட்சிக்கு ஏற்பட்டதுபோல் ஆபத்து நிகழாது என்பதற்கு ஓரளவு சாதகமான வாய்ப்பே உருவாகியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் சதாமுக்கும், கடாபிக்குமுள்ள பொதுவான இயல்புகளை நோக்குதல் வேண்டும்.

சதாம் எப்படி காசிமை அழித்துவிட்டு ஆட்சிக்கு வந்தாரோ, அதேபோன்று ஆனால் சற்று வித்தியாசமாக முகமட் இடிஸ் அல்சானுசியை, தளபதிகளைக் கொண்ட புரட்சிக் குழுவால் இராணுவத்தின் புரட்சியின் மூலம் அகற்றி ஆட்சியைப் பிடித்தவர் கடாபி. சதாம் போன்று அல்லாமல் ஆரம்பத்திலிருந்து அமெரிக்கா சார்ந்த மேற்குலகின் எதிரியாகக் கடாபி செயற்பட்டவர். சதாம் ஆரம்பத்தில் அமெரிக்காவின் நேரடி நண்பனாக இல்லாவிட்டாலும், 1970 களுக்குப் பின் நெருக்கமான இராணுவ ஒத்துழைப்புக்களும், உதவிகளும் சதாமுக்கு அமெரிக்கா மூலம் கிடைத்திருந்தது. ஆனால், கடாபி தனது ஆட்சியின் இன்றைய நிலைக்கு முன்பு. முழுவதையும் அமெரிக்க எதிர்ப்புக்காகவே பயன்படுத்தியவர். சதாம் இறுதியில் அமெரிக்காவிடம் சரணடைய மறுத்தார். ஆனால், கடாபியோ இறுதிக் காலத்தில் அமெரிக்க நட்பை நாடத் தொடங்கியிருக்கிறார்.

எனவே, சதாமைவிட கடாபி ஒருபடி மேல் சென்றுள்ளார். அது மட்டுமல்ல சதாமின் குவைத் மீதான ஆக்கிரமிப்பைக் கண்டித்த முதல் அராபியத் தலைவராக விளங்கியவர். எனவே, இருவரது இயல்புகளும் வேறுபட்ட போதும், அமெரிக்காவின் பார்வையில் இதுவரை இருவரும் ஒரேவகையிலான எதிரிகளாகவே காணப்பட்டனர். சதாமைவிட கடாபியே இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கு அராபிய நாடுகள் முழுவதும் உரமூட்டக் காரணமானவர். கடாபி ஒரு இஸ்லாமிய அடிப்படைவாத அரசாங்கத்தை லிபியாவில் உருவாக்கிக் கொண்ட போதும், தம்மை ஒரு சோசலிசவாதியாக, ஒரு தேசியவாதியாகக் காட்டிக்கொள்வதில் கவனம் செலுத்தினார். அமெரிக்க எதிர்ப்பு வாதத்தைப் பரப்புவதன் மூலம், அத்தகைய இலக்குடையவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிபியாவில் மட்டுமல்ல, முழு உலகத்திற்குமே காட்டிக் கொண்டவர். இவை யாவும் சதாமிலிருந்து கடாபியை வேறுபடுத்திக் காட்டுவதற்கு உதவி யாக உள்ளன.

ஆனால், கடாபியின் இத்தகைய நகர்வு ஒரு ஆபத்தான நகர்வு என்பதை கணிப்பீடு செய்யத் தவறக்கூடாது. ஏனெனில், கடாபி போன்று உலகத்தில் பல தலைவர்கள் இந்த வகையான தந்திரத் தைப் பயன்படுத்தப் புறப்பட்டு-நாட்டையும் இழந்து, தமது தலைமை யையும் பறிகொடுத்த வரலாறுகளை எல்லாம் காணமுடிகின்றது. அதாவது, அமெரிக்கா, பிரிட்டிஷ் போன்ற சக்திகள் தனித்து இராணுவ உபாயங்களுடன் தமது நகர்வுகளைச் செய்வதில்லை. மாறாக, பொரு ளாதார சுரண்டல்களை அல்லது சூறையாடல்களை நிறைவேற்று வதற்கான சமூக சீரழிவுகளை தயார் செய்துகொள்ளவும் தயங்கமாட் டாதவர்கள். அத்தகைய சக்திகள் பொருளாதார வளமுடைய பிரதே சங்களைக் குறிவைத்தே தமது நகர்வுகளை மேற்கொள்வதுண்டு. கடாபியின் அரசியல் எச்சரிக்கை மிரட்டலை விட, லிபியா அடங்கிய அரபுலகத்தின் பொருளாதாரத்தை சுரண்டுவதே அமெரிக்கா-பிரிட்டன் போன்ற சக்திகளது பிரதான இலக்காகவுள்ளது. கடாபி-இராணுவ நோக்கங்களுடன் தான் அமெரிக்க-பிரிட்டன் சக்திகள் நகருவார்கள் எனக்கருதி; லிபியாவைக் காட்ட முயற்சித்திருப் பாராயின், அதிக ஆபத்துக்களை எதிர்கொள்ள வேண்டியவராக எதிர் காலத்தில் காணப்படுவார் என்பதில் சந்தேகமில்லை. மறுவளமாக எதனையும் எதிர்கொள்ளும் தயார்படுத்தலை கொண்ட நகர்வை கடாபி செய்தால் மட்டுமே நாட்டையும், தனது அரசியல் தலைமை யையும் தக்கவைக்க முடியும். கடாபியின் பலத்தைவிட-பலவீனத்தை அமெரிக்கர்கள் கணக்குப்போடத் தவறியிருக்கமாட்டார்கள். தற்போது கிடைத்துள்ள ஓட்டையைப் பயன்படுத்தி, லிபியாவை துடைத்தெடுக்கும் திட்டமிட லுடன் அவர்களது உளவுத்துறை நகர்ந்திருக்கும்.

எனவே, இன்றுள்ள மிகப் பிரதானமான பிரச்சினை-அமெரிக்க எதிர்ப்புவாதத்திற்காக வெளிப்படுத்தி நாடுகளை-அமெரிக்க மயப் படுத்தலுக்குள் உட்படுத்துவதே அமெரிக்க சக்திகளின் நோக்கமாக உள்ளது. அமெரிக்காவுக்கு ஆதரவாக நடந்துகொள்வதென்பதோ, அமெரிக்காவின் நண்பனாக நடந்துகொள்ள முயல்வதோ-அராபிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள் உட்பட்ட உலகத்திற்கு அச்சுறுத்தலான அம்சமாக மாறி விடுகின்றது. லொக்கபி விவகாரத்தை கடாபி கையாண்டவிதமும், அதன் விளைவுகளும் மாதிரி அணுவாயுத பரிசோதனைக்கான நகர்வு அமை யாது. அது நாட்டுக்கு வெளியே நிகழ்ந்த சம்பவம். இது நாட்டையே அகழ்வு செய்யும் சம்பவம். பொருளாதார சுரண்டல் மட்டுமல்லாது, அத்தகைய சுரண்டலுக்குப் பக்கபலமாக உள்ள அரசியல் சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமை எனப் படிப்படியாகப் பல மாறுதலை லிபியர்கள் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டிய நிலை ஏற்படும். அதனை எதிர்கொள்பவராகக் கடாபி தன்னை மாற்றிக்கொண்டால் மட்டுமே இத் தந்திரத்தால் தப்பிப்பிழைத்துக் கொள்ளமுடியும். மேற் கைத் திருப்திப்படுத்தும் அரசியலை ஒரு வரையறையுடன் பேணிக் கொண்டு அவர்களது மறுசீரமைப்புக்களை உள்வாங்கி, தமக்கேற்ற வகையில் பயன்படுத்திக்கொண்டு விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் உள்ள மக்களைப் பக்கபலமாகக் கொண்டு செயற்படுத்துவதே கடாபி போன்ற தலைமைகளுக்கு இலாபகரமான விடயமாகும்.

கேணல் கடாபியின் நகர்வும் ஈராக்கில் அமெரிக்கா எதிர் நோக்கிவரும் நெருக்கடியும் மாறுபட்ட சூழலை லிபியா அரசியலில் ஏற்படுத்திவருகின்றது. கடாபி திட்டமிட்டது போல் லிபியாவை பாது காத்துக் கொள்கின்ற வாய்ப்பு அதிகரித்துள்ளது. அபாயமான பாதையை கடாபி தெரிவு செய்தாலும் ஈராக்கில் எழுந்துள்ள மக்கள் கிளர்ச்சி தொடருமாயின் அமெரிக்காவால் லிபியாவை எல்லை மீறி சின்னபின்னப்படுத்த முடியாது. அவ்வாறு உடனடியான நகர்வு சாத்தி யப்படவில்லையாயின் கடாபி தனது வியூகங்களால் தொடர்ந்து தப்பிப்பிளைத்துக் கொள்ளலாம். அதற்கான வாய்ப்புக்கள் பெருகி வருகின்றது. சதாம் உஷைன் போன்று அல்லாமல் கடாபி தனது தந்திரமான அணுகுமுறையால் நெருக்கடியிலிருந்து மீண்டுவிட்டார். இவ்வாறுதான் உலகத் தலைவர்கள் தமது ஆட்சியையும் இனத்தின் நலன்களையும் பாதுகாக்க தந்திரங்களை பயன்படுத்துகின்றனர்.

**உலகளாவிய ஊடகங்கள்**

பிரிட்டிஷ் விஞ்ஞானி டேவிட் கெலியின் விவகாரம் - பிரதமர் ரொனி பிளேரையும், அவரது அரசாங்கத்தையும் உலுக்கியதுடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி.பி.ஸியையும் குழப்பத்துக்குள்ளாக்கியது. பி.பி.ஸியின் தலைவர் கேவின்டேவிஸ் திடீர் ராஜினாமாவுக்கும், அதன்செய்திகள் மீதான நம்பிக்கையீனத்தையும் ஒன்றாக ஏற்படுத்தியது. பேரழிவு ஆயுதங்கள் ஈராக்கில் இல்லாதநிலையில் போரைத் தொடக்குவதற்காகப் பிரதமரும், அவரது ஆதரவாளர்களும் புலனாய்வுத் தகவல்களைத் திரித்துக்கூறி, ஈராக் மீதான போரைத் தொடக்கியதாக பி.பி.ஸி. குற்றஞ்சாட்டு வதற்கு பின்னணியில் விஞ்ஞானி டேவிட் கெலி இருந்தாரென சந்தே கங்கள் எழுந்தன. அதனை பி.பி.ஸி இரகசியமாகவோ, பகிரங்கமா கவோ உலகத்துக்கு வெளிப்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் பின்னர் பிரித்தானிய அதிகாரிகள் கெலியை விசாரணைக்குட் படுத்தி, அதன் பின்னர் மர்மமான முறையில் கெலி உடற்பயிற்சியில் ஈடுபட்டபோது இறந்து கிடந்ததாகத் தகவல் வெளியானது. அதற்கான குற்றச்சாட்டையும் பிளயர்மீது பி.பி.ஸி. சேவையே சுமத்தியது. அதன் பின்பு கெலியின் மரணத்தை விசாரிக்குமாறு நீதிபதி ஹட்டன் பிரபு-பிரதமரால் நியமிக்கப்பட்டார். அவரது 700 பக்க அறிக்கையில் பிரதமர் பழிக்குரியவர் அல்லர் என்றும், பி.பி.ஸியின் செய்திகள் தவறானவை என்றும் கண்டித்து வெளியிட்ட செய்தி பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த விடயத்தில் மூன்று பிரதான துறைகள் சம்பந்தப்பட் டுள்ளன. குறிப்பாகப் பிரித்தானிய சட்டத்துறை, நீதித்துறை மற்றும் பிரித்தானியாவுக்குரியதும், உலகத்துக்குரியதுமான ஊடகத்துறை என்பனவாகும். இதில் ஊடகத்துறை சுதந்திரம், உரிமை ஜனநாயகம் போன்ற கருத்தியல் தளங்களுடன் நெருக்கமான தொடர்புடையது. சட்டத்துறையும், நீதித்துறையும் பரஸ்பரம் ஒன்றையொன்று ஆதரிப் பதும், ஒன்றில் மற்றொன்று தங்கியிருப்பதும் இயல்பான விடயமாகி விட்டது. எனவே, நீதிபதியின் அறிக்கையோ அல்லது அதில் குறிப் பிடப்பட்ட அம்சங்களோ ஆச்சரியம் தரக்கூடியவையல்ல. ரொனி பிளேயர் ஹட்டன் பிரபுவை நியமனம் செய்யும்போதே, பி.பி.ஸி இந்த முடிவை எதிர்பார்த்திருக்கவேண்டும். ஏனெனில், நீதிபதியிடம் நீதி இருப்பதைவிட, பிரித்தானிய நீதித்துறையிடமே அது இல்லாத தொன் றாகிவிட்டது. அது சாத்தியப்படாத போது, ஊடகத்துறை எப்படி நீதியை எதிர்பார்க்கமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தில் பி.பி.ஸி, ரொய்ட்டர் ஆகிய சேவைகள் பிரபல மானவையாக உள்ளன. இவை இரண்டும் முழு உலகத்துக்கும் போர், சமாதானம் சார்ந்த நிலையில் மட்டுமல்லாமல், அரசியல், பொருளாதார, கலாசார, சமூக விழுமியங்கள் சார்ந்த செய்திகளைப் பரப்பிவரு கின்றன. இன்று பிரபலமாகப் பேசப்படும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அறிமுகமாகிய உலகமயப்படுத்தலுக்கு, இந்த இரு ஊடகங் களும் கணிசமான செல்வாக்கைச் செலுத்திவருகின்றன. தகவல் புரட்சியின் பிரதிபலிப்புக்கூடாக வளர்ந்துவரும் ஊடகத்துறையில் செய்தி ஊடகங்கள் மிக முக்கியமானவையாக விளங்குவதற்கு, உலக மயப்படுத்தலை ஊக்குவிக்கும் அரசுகளும் காரணமாகவுள்ளன. குறிப் பாக, ஈராக் தொடர்பான செய்திகளின் உண்மைத் தன்மைகளை மறைத்தது மட்டுமன்றி, அவற்றைக் கண்டறிய முடியாத தடைகளையும் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற அரசுகள் மேற்கொண்டுவந்தன. ஈராக்கின் உண்மை அம்பலத்துக்கு வந்துவிடக்கூடாது என்பதற் காகவே இஸ்லாமிய செய்தி ஊடகமான அல்யசீரா மீதுபெரும் அழுத் தங்களையும் அச்சுறுத்தல்களையும் மேற்கொண்டு வெற்றிகண்டது அமெரிக்கா. ஆரம்பகாலத்தில் சதாம் ஹுசைனுக்கு சார்பாகவோ, எதிராகவோ அன்றி, உண்மைத் தகவல்களை அல்யசீரா தொலைக் காட்சி சேவை அம்பலத்துக்குக் கொண்டு வந்தது. ஆனால், போர்தீவிரமடைய அமெரிக்கஇராணுவ இயந்திரத்தின் பாதிப்புக் களையும், அழிவுகளையும் அல்யசீரா அம்பலப்படுத்த முயன்றபோதே அமெரிக்க அரசே நேரடியாகச் செயற்பட்டு, அல்யசீராவைக் கட்டுப்படுத் தியது. இதனால், போரைப் பற்றி உண்மைத் தகவல்களை இன்னுமே உலகம் அறியாத புதிராக உள்ளது. ஏன், சதாம் கைது விவகாரம் கூட இன்னுமே நிறைய மர்மங்களைக் கொண்டதாக இருக்கின்றது. இதில் ரொய்ட்டரைவிட பி.பி.ஸி. சற்று ஒரு சதவீதமளவில் புரட்சிகரமான போக்கைப் பின்பற்றியது. அதனால்தான், கெலியின் தகவலை முதலிலேயே அம்பலப்படுத்தத் தயாரானது. அதனையும் பிரிட்டிஷ் நீதித்துறையும், பிரதமரும் சேர்ந்து முடிவுக்குக் கொண்டு வந்தனர். இனி இப்படியான தகவல்கள் வெளிவருமா இல்லையா என்பதைவிட, பி.பி.ஸி.ஆட்சிக்கு வரும் அரசியல் தலைமைகளின் நலன்கள் எப்படி அமைந்திருக்கிறதோ, அப்படியே தனது போக்கை மாற்றிக்கொள்ள வேண்டியுள்ளதாக அமையுமோ என எண்ணவேண்டியுள்ளது. உலக மயப்படுத்தலை தீவிரமாகப் பரப்பிவருவனவற்றில் செய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகங்கள் முன்னணியில் உள்ளன. போலியான, உண்மைத் தன்மை யற்ற விடயங்களை யதார்த்தமானதாக்கி, நிதர்சனமான உண்மை களாக இவை மாற்றிவருகின்றன. இலகுவாக அமுல்படுத்தலை சாத்தியப்படுத்தக் கூடியவையாக ஊடகங்கள் மாறிவிட்டன.

இலங்கை போன்ற பின்தங்கிய நாடுகளிலுள்ள ஊடகங்களின் நிலை மிக மிக மோசமாகவே உள்ளது. தனியார்மயப்படுத்தலை இலக்காகக் கொண்டு இயங்கும் ஆதிக்க சக்திகளின் தகவல்க ளையும், செய்திகளையும் பரிமாற்றும் ஊடகங்களாகவே பின்தங்கிய நாடுகளின் ஊடகங்கள் காணப்படுகின்றன. வேகமாகவும், விரைவா கவும் உலகத்தில் வெளியாகும் செய்திகளை மக்களுக்கு கொடுப் பதே தற்போதைய ஊடகங்களின் பணியாகவுள்ளது. எவ்வளவுக் கெவ்வளவு, உடனுக்குடன் செய்திகளைக் கொடுப்பதில் போட்டி நிலவுகின்றதே தவிர, செய்தியின் உண்மைத்தன்மை, தேவை என்ற அடிப்படை எந்தவொரு ஊடகத்திடமும் கிடையாது. மேலும் ரொய்ட்டர், பி.பி.ஸி வெளியிடும் செய்திகளை மொழிபெயர்ந்து தமது பிரதேச மொழிக்கு மாற்றுவதே ஊடகங்களின் பிரதான நோக்கமாக உள்ளது. இது உலகமயமாக்கத்தை மேலும் இலகுபடுத்தும், மாயைகளையும், போலிகளையும் இனங்காட்டமுடியாத ஊடகங்களே உலகத்தில் செல்வாக்குடையவையாக உள்ளன. இதில் பிராந்திய ஊடகம், சுயா தீன ஊடகம் என்றெல்லாம் தங்கள் அமைப்புக்களை வடிவமைத்துக் கொள்கிறார்களே தவிர, அவற்றின் தகவல்கள் அனைத்தும் ஒரு சில ஊடகத்திலிருந்து அல்லது நாடுகளிலிருந்து பிறப்பதாகவே உள்ளது.

எனவே, டேவிட் கெலியின் விவகாரத்தில் சிக்கியுள்ள பி.பி.ஸி எந்த அடிப்படையிலும் தனித்துவமான அமைப்பு அல்ல. ஆதிக்க சக்திகளின் கொள்ளைகளை பிரசாரப்படுத்துவதே அவைகளின் நோக்கமாகும். அதிலிருந்து தவறுவது, விலகுவதென்பதற்கு ஏற்பட்ட அழுத்தங்களே தற்போதைய நெருக்கடி எனக் கூறிக்கொள்ளலாம். ஈராக் அரசியலில் ஊடகங்கள் ஆற்றிய போலியான தோற்றத்தை டேவிட் கெலியின் விடயம் அம்பலப்படுத்திவிட்டது. ஊடகங்கள் ஆட்சி யாளர்களுக்கு சலாம் போடும் நிலை தொடருமாயின் ஆட்சியாளர் களும் உண்மைக்கும் யதார்த்தத்திற்கும் புறம்பாகவே நடந்துகொள் வார்கள். அவ்வாறான உலகத்தில் அடக்குமுறை ஆட்சியே நிலைத் திருக்கும். இதிலிருந்து யதார்த்தமான சூழலுக்கு உலகத்தை மீட்டெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுக்க வேண்டுமாயின் ஊடகங்களின் பக்கச் சார்பின்றி, மேற்கின் உபாயங்களை புரிந்து கொண்டு உண்மையை அம்பலப்படுத்தும் சாதனங்களாக ஊடகங்கள் மாறுதல் வேண்டும்.

ஈராக் மீது நிகழ்த்தப்பட்ட போர் நேரடி விளைவுகள் பலவற்றை வெளிப்படுத்தியுள்ள போதும் நீண்டகாலத்திற்கு முழு உலகத்திலும் பாரிய தாக்கங்களை முன்நிறுத்தியுள்ளது. எனவே நேரடியாகவும் மறைமுகமாகவும் அமைந்துள்ள தாக்கங்களை பின்வருமாறு நோக்கு வோம்.

**1. ஐக்கிய நாடுகள் சபை காலாவதியாகிவிட்டது**

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பு நிலைத்து நின்ற ஐ.நா. சபையும் அதன் பாதுகாப்புச் சபையான Suprime body உம் பலவீன மாகிவிட்டது என்ற கருத்து வலுப்பெறுகின்றது. போரை நிராகரிக்க பாதுகாப்புச் சபையில் (P/5) உள்ள பிரான்ஸ், ரஷ்சியா, சீனா துணிந்தபோது அமெரிக்கா-பிரிட்டன் ஐ.நா.வின் கூட்டுத் தன்மை களைத் தகர்த்துக்கொண்டு போரை ஆரம்பித்தன. இதனால் ஐ.நா. மறுசீரமைக்கப்பட வேண்டியநிலை உருவாகியிருப்பதுடன் புதிய அமைப்பொன்றுக்கான கேள்வியை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய போக்கு பொருளாதார நோக்கில் சற்றுக் குறைந்த வலுவை பெற்றுக் கொள்ளும் தன்மை ஈராக்கினை மறுசீரமைப்பதில் ஏற்பட்டுள்ளது. ஈராக்கின் மறுசீரமைப்பும், பொருளாதார தடை நீக்கமும் ஐ.நா.வில் தங்கியுள்ளதாக அமெரிக்க ஆட்சியாளர்கள் கருதுகின்றனர். அமெரிக்கா பிரிட்டன் தனித்து என்ன நடவடிக்கையினை மேற் கொண்டிருக்கும் என்பது சாத்தியப்படாது போய்விட்டது. பூகோளமய மாதலில் மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கும் அவை சார்ந்த அமைப்புக் களுக்கும் அமெரிக்க-பிரிட்டன் கூட்டு சவால்விட்டு பொருளாதார விருத்தியினை சாத்தியப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே அமைந்துள்ளது. உலகமக்களும் அரசுகளும் எதிர்த்தபோது போரை நடாத்தியது போன்று பொருளாதாரத்தில் வெற்றியடைய முடியாது. மறுபக்கத்தில் அமெரிக்கக் கூட்டை எதிர்க்கும் P/3 நாடுகள் தொடர்ந் தும் தமது எதிர்ப்பினை கடைப்பிடிப்பார்களா? அல்லது அமெரிக்க கூட்டுக்குள் சரணடைவார்களா? என்பதைப் பொறுத்தே அமையவுள்ளது. ஏனெனில் அமெரிக்காவை எதிர்ப்பதும் ஆதரிப்பதுமாக ஏனைய நிரந்தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பு நாடுகள் அடிக்கடி கொள்கையை மாற்றி வருகின்றன. தற்போதைய நிலை ஒரு சரணாகதியாகவேயுள்ளது.

**2. அரசுகளின் இறைமை பற்றிய சர்ச்சை**

அரசின் மூலக்கூறுகளின் மிகப் பிந்திய பிரதானமான அலகாக இறைமை உள்வாங்கப்பட்டிருந்தது. இவ் இறைமைக் கோட்பாடு பற்றிய தோற்றுவாயும் அபிவிருத்தியும் அரசறிவியலில் அரசின் அதிகாரம் பற்றியதாகவே நோக்கப்படுகின்றது. இந்த வகையில் ஈராக் அரசு இறைமையுடையது என்பதற்கான பதில் ஈராக் போரின் பின்பு மிகத் தீவிரமாக கேள்விக்குரியதாகியுள்ளது. உயிரியல், இரசாயன ஆயுதங்களை வைத்திருந்ததற்காக ஈராக்கின் இறைமை பறிக்கப் பட்டது என்றால் உலகில் எந்த அரசுகளுக்கு இறைமை உண்டு என்பது புலப்படுத்த வேண்டிய தேவை அரசியல் ஆய்வாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. உலகில் அமெரிக்கா மட்டுமே இறைமையுடையது என்ற கருத்தும் அதனிடம் குவிந்துள்ளது. உலக அச்சுறுத்தல் மற்றும் ஆயுதங்கள் பற்றி ஈராக் கேள்வி எழுப்பமுடியாதது என்பதும் இறைமைக் கோட்பாட்டுக்கு கிடைத்த புதிய நெருக்கடியாகும். அவ்வாறே இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவுடன் போரில் இணைந்து கொண்ட பிரித்தானியா போன்ற அரசுகள் அதாவது அமெரிக்க நட்புறவு நாடுகளுக்கே அத்தகைய அதிகாரம் உண்டு என்பதாகும். இது மீளவும் புதிய பிரச்சினை ஒன்றை உருவாக்கியுள்ளது போல் தெரிகிறது.

**3. புதிய குடியேற்றவாதம் உதயம்**

ஈராக் மீதான போர் பற்றிய உலக அரசியல் விமர்சனங்களில் முதன்மையடைந்திருப்பது புதிய குடியேற்றவாதம் பற்றியதாகும். ஈராக்கைத் தொடர்ந்து அரபு உலகம் மீது தொடரப்போகும் போர் பற்றிய சந்தேசம் புதிய குடியேற்றவாதத்தினை ஏற்படுத்துவதற்கான அடிப்படையாகவே அமைந்துள்ளது. அமெரிக்க கூட்டணி போரை ஆரம்பித்த முறைமையும், அதில் வெற்றியடைந்ததை உரத்து வெளிப்படுத்திய போதும் பழைய ஜேர்மனி, யப்பான், இத்தாலியக் கூட்டின் நினைவுகளே மீள வந்தன. அந்தவகையில் எப்படி ஹிட்லர் மற்றும் முசோலினி பிரித்தானிய, பிரான்ஸிய குடியேற்றவாதத்தினை தோற்கடிக்க முயன்றார்களோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபாணியில் புஷ் மற்றும் பிளயரின் நடவடிக்கை அமைந்திருந்தது. இவர்கள் அரசியல் விடுதலை என்ற பெயரில் இயங்கிவரும் சுதந்திர மான (அரசியலில்) அரசுகளை மீளவும் ஆக்கிரமிக்கும் முறைமையே புதிய குடியேற்றவாதமாக கொள்கின்றனர். இதில் இன்னோர் ஆதாரத் தினையும் அக் கூட்டணி நாடுகள் வெளிப்படுத்தியுள்ளன. அதாவது "ஒபெக்" என்ற எண்ணெய் வளநாடுகள் அமைப்பில் ஈராக்குக்கு பதிலாக அமெரிக்காவை சிபார்சு செய்யுமாறு கொலின் பவல் கட்டா ருக்கு பயணம் மேற்கொண்ட போது தெரிவித்துள்ளார். அமெரிக்கா என்ற அரசின் எல்லை விரிவடையவுள்ளது. அப்படியாயின் அதன் அதி காரம் பழைய குடியேற்ற நாடுகளைப் போன்றதாக மாறவுள்ளது. ஆனால் அது வடிவத்திலும், காலத்திலும் மட்டுமே மாறுபாடாக வுள்ளது. ***Anglo-Persian Oil Company*** க்குப் பதிலாக ***Mic Donald Company*** இடம் பெறலாம்.

**4. ஜனநாயகம் மீளமைக்கப்பட வாய்ப்பு உருவாகலாம்**

ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக மக்களே செய்யும் ஆட்சி முறை என்று ஆரம்பகாலத்தில் வரையறை செய்யப் பட்டது. ஆனால் அது பின்னர் பல மாற்றங்களுக்குள் அகப்பட்டு பெரும்பான்மை மக்களின் விருப்புக்களே ஜனநாயகம் என விளக்கம் மேற்குலகத்தில் ஏற்கப்பட இலங்கை போன்ற கீழைத்தேசத்தில் பெரும்பான்மை இனத்தின் ஆட்சியே ஜனநாயகம் என சூழுரைக்கப் பட்டது. இத்தகைய ஆட்சிமுறைக்குள் அகப்படாத அரசுகளாக அனேகமான மேற்காசிய நாடுகள் காணப்படுகின்றன. இஸ்லாமிய மதத்தின் அடிப்படைவாதமும் குரானின் செல்வாக்கும் ஆட்சி உரிமை யை நிர்ணயம் செய்யும் காரணியாக வளர்ந்துள்ளது. அதனால் மேற்குலகம் விரும்புகின்ற அதிகாரமாற்றத்தையும் ஆட்சியாளரையும் மேற்கு ஆசியாவில் அடிக்கடி மாற்றமுடியாத நிலைகாணப்படுகிறது. மன்னராட்சி முறைமை, பரம்பரை ஆட்சி அதிகாரமுறைமை என்பன மேற்குலகுக்கு பெரும் நெருக்கடியாக அமைந்துள்ளது. ஆசியாவின் ஏனைய பிராந்தியங்களில் அவ்வாறில்லை. இந்தியாவிலோ, இலங்கையிலோ ஆட்சி மாற்றம் ஐந்து வருடத்திற்கொருமுறை நிகழ்வதுடன் மேற்குலக மாதிரியிலான உயர்வர்க்கத்தின் ஆட்சி முறைமை மேற்குக்கு சலாம் போடுவதுடன் அவர்களது விருப்பத்தினை நிறைவுசெய்யும் கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமைகள் காணப்படுகின்றன. இதனை மேற்காசியாவில் ஏற்படுத்துவதே ஈராக் போரின் இன்னோர் அரசியல் பரிமாணமாக அமைந்துள்ளது.

ஜனநாயகம் என்பது மேற்குலகத்தின் கோட்பாட்டு வடிவம் ***Mahhabani*** குறிப்பிடுவது போல ஜனநாயகம் மேற்குலகத்தின் நலிந்துபோன கோட்பாடு அதன் பொருளில் தேசிய இறைமை, அரசாதிக்கம், பாராளுமன்ற நிறுவன அமைப்புக்களுடன் சட்டம் ஒழுங்கு என்பனவற்றிற்குரிய வலுவும் அதில் தனித்துவமானதாக விளங்கும். அவற்றோடு பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும், இனக்கலாசாரமும், மத நல்லிணக்கமும் கட்டளைக்கு கட்டுப்பட்ட விதத்தில் மக்களின் அரசியல் கலாசார வளர்ச்சியும் காணப்படும். மேற்குறிப்பிட்ட அம்சங்கள் முழுமையாக கீழைத்தேசத்தில் காண முடியுமா என்பது சந்தேகத்திற்குரியதே. ஆனாலும் கீழைத்தேசத்தில் ஜனநாயகம் பின்பற்றப்படுகின்றது. அவை மேற்கு மாதிரிகளை அப்படியே அமுலாக்க முனைந்த ஒரு பக்கமும் கீழைத்தேச நாடுகளுக்குரித்தான இன, மத, மொழி, பெரும்பான்மைத் தன்மையும் ஒன்றித்த அரசியல் வடிவமும் கலந்ததாக காணப்படுகிறது. இதனால் இரு மாதிரிகளின் குழம்பிய வடிவமாகவே இந் நாடுகளின் ஜனநாயக விழுமியங்கள் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. எனவே, அத்தகைய ஜனநாயக வடிவம் ஒன்று ஈராக்கிலும் அதனை அண்டிய மேற்கு ஆசியாவிலும் ஏற்படுத்த அமெரிக்கா விரும்புகின்றது. அதற்கான தயார்ப்படுத்தலை சாத்தியப்படுத்தினால் இந்தியா, இலங்கை போன்று ஆட்சியாளர்களை மாற்றிக் கொள்வதன் மூலம் தமது அரசியல், பொருளாதார, இராணுவ நலன்களைப் பூர்த்திசெய்து கொள்ளலாம் என்பதே அமெரிக்காவின் நோக்கமாகும்.

### 5. இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் தீவிரத்தன்மை

இஸ்லாமிய அடிப்படைவாதம் தீவிரமான நிலையை அடையும் அரசியல் சூழலை ஈராக் மீதான தாக்குதல் ஏற்படுத்தியுள்ளது. ஆப்கானிஸ்தானில் கூறிய நியாயத்தன்மையைக் காட்டிலும் ஈராக்கில் கூறப்பட்ட நியாயத்தன்மை பலவீனமாக அமைந்திருந்தது. உயிரியல், இரசாயன ஆயுதங்கள் எவற்றையும் காணமுடியாத நிலையில் அமெரிக்காவின் போருக்கான அயோக்கிய அரசியல் ***(Unfair***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***Politics)*** அம்பலமாகியுள்ளது. இந்த நிலையில் உலகம் முழுவதும் இஸ்லாமியர்கள் மத்தியில் அமெரிக்காவுக்கு எதிரான ***(Anty-American Politics)*** அரசியல் வளர்ச்சியடைந்து வருகின்றது. இது பொருளாதாரத்திலும் ஏற்பட ஆரம்பிக்குமாயின் அமெரிக்கா மிகப் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கும்.

### 6. வறிய நாடுகளின் பொருளாதார சுமை அதிகரிப்பு

வறிய நாடுகளின் பொருளாதாரம் போரினாலும், அந்நாடு களினதும் உதவி நிறுவனங்களினதும் உதவியின்மையினாலும் பாரிய விளைவுகளை சந்திக்கத் தொடங்கியுள்ளது. எண்ணெய் வளத்திற் கான கேள்வியின் அதிகரிப்பு விலையின் உயர்வு மிகப் பெரும் சவா லாக அமையும். மாற்று சக்தியின் வளப் பகிர்வு மட்டுப்படுத்தப் பட்டுள்ளதாலும் அதன் தொழில்நுட்பம் வளராமையினாலும் அதிக மான பாதிப்பினை கிராமங்கள் எதிர்நோக்கும்.

எனவே முடிவான நிலையை நோக்கும் போது அமெரிக்கா வின் கூட்டணிப்படை ஈராக்கை கைப்பற்றிய வேகத்தில் அங்கு சட்டம் ஒழுங்கை ஏற்படுத்த முடியாமையும், புதிய அரசொன்றை சாதகமாக்க இயலாத தன்மையும் அதன் அரசியல் வங்குரோத்தத்துத் தனத்தினையும், நகர்வின் பலவீனத்தையும் காட்டுகின்றது. ஈராக்குக்குள் மட்டுமல்ல அமெரிக்காவுக்கு வெளி உலகமும் அப்படியான தடைகளையும் நெருக்கடிகளையுமே அமெரிக்காவுக்கு ஏற்படுத்திவருகின்றன. தனித்து இராணுவம் ஆட்சியை நிகழ்த்த முடியாது குறிப்பிட்ட காலத் திற்கு பின்பு அதிக மாற்றங்களை அமெரிக்க-பிரிட்டிஷ் படைகள் எதிர் நோக்க வேண்டிய நிலைமை ஏற்படும். ***Praful Bidwai*** கூறுவது போல பேரரசின் அரைப்பங்கு விருத்தியை இராணுவ அடிக்கட்டு மானத்தினைக் கொண்டு ஏற்படுத்திவிடலாம். ஆனால் மீதியை அரசியல் மாதிரிகளையும், அரசியல் அபிவிருத்திக்கான சூழலையும் கொண்டே ஏற்படுத்த முடியும். அதற்கான வாய்ப்பினை அமெரிக்கா பெரியளவில் ஈராக்கில் உருவாக்கவில்லை என்பதுடன் செப்டெம்பர் தாக்குதல் மேற்காசியாவையும் ஆப்கானிஸ்தானையும் இருபது வருடத்திற்கு பின்நோக்கி தள்ளியது என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 06

# ரஷ்சிய அரசியல் பொருளாதார வீழ்ச்சியும் அமெரிக்காவின் தடைகளும்

விளாடிமிர் புட்டின், வில்லியம் புஷ் இரண்டு பெயர்களுமே ஒத்திசைவான வரி வடிவத்தைக் கொண்டவை. ஆனால் உலக விவகாரங்களில் மட்டுமே ஒருங்கிசைவை எட்ட முடியாதவர்களாக உள்ளனர். அதுவும் இதுவரை காலமும் விளாடிமிர் புட்டின் அக முரண்பாடுகளுக்குள் ஓர் ஒத்திசைவை ஏற்படுத்த முயன்றார். பல சந்தர்ப்பங்களில் வில்லியம் புஷ்ஷுக்காக தனது நலன்களையும், நன்மைகளையும் இழந்திருந்தார். ஆனால் அமெரிக்காவே பல தடைகளை போட்டு ரஷ்சியாவின் வளர்ச்சியை சீர்குலைக்கவே திட்டமிட்டு வருகிறது.

ஈராக் விவகாரத்தில் ரஷ்சியா தனது வெட்டு வாக்கை ஐக்கிய நாடுகள் சபையில் பயன்படுத்தப் போவதாக அறிவித்த பின்னர் மேற்கு பல முயற்சிகளை பல வழிகளுடாக அதனை முறியடிக்க முயன்றது. முதலில் தொலைபேசி ராஜதந்திரத்தைப் பிரயோகித்தது. தொலைபேசி ராஜதந்திரம் எடுபடாதபோது மனித உரிமை, பொருளாதாரம் போன்ற காரணிகளை முதன்மைப்படுத்திச் செய்திகளையும், உரையாடல்களையும் தந்திரமாக ரஷ்சியா பக்கம் திருப்பினார்கள். அதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை உலக நாடுகள் மத்தியில் சதாம் ஹுசைன் மிகக் கொடிய போர் வெறியன், கொடுமைக்காரன், ஆபத்துமிக்கவன் என்ற பிரச்சாரத்தை மேற்கு செய்யத் தொடங்கியது. இது ரஷ்சிய தலைமையின் உணர்வை மாற்றுவதற்கான இரண்டாவது முயற்சியாகக் கூட நோக்கமுடியும்.

மூன்றாவது நிலையில் செச்சினியப் போராளிகளைத் தூண்டி விட்டு ரஷ்சியப் படைகள் மீது தாக்குதலை நடாத்தும் சூழலை ஏற்படுத்தியது. அது மேற்கின் பார்வையில் பயங்கரவாதமும் இல்லை. உலக அமைதிக்கும், சமாதானத்திற்கும் ஆபத்தானதுமில்லை. செச்சினியப் போராட்டத்தை வில்லியம் புஷ் சிலவேளைகளில் விடுதலைப் போராட்டமென அறிவித்தால் உலகத்தின் ஊடகங்கள் முழுவதும் அதனை விடுதலைப் போராட்டமாகச் சொல்லிக்கொள்ளும் கேவலம் எம்மத்தியிலும் இல்லாமலில்லை. அவ்வாறான மிரட்டலை அமெரிக்கா செய்த போதும் ரஷ்சியா மசியவில்லை.

நான்காவது நிலையில் பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளயர் அமெரிக்காவின் தூதுவராக ரஷ்சியாவுக்கு அனுப்பப்பட்டார். பிளயர் அமெரிக்காவின் நலன் விரும்பி என்பதைவிட புஷ்ஷின் அடிவருடி என்றே கூறலாம். முன்னொரு காலத்திலேனும் சாம்ராச்சியமாகத் திகழ்ந்த பிரித்தானியாவின் பிரதமர் வெறும் போர் நடாத்தும் ஒப்புத லுக்காக தூதுவராக சென்ற கேவலம் வேறு எந்த உலகத் தலைவ ருக்கும் கிடைக்காத பட்டம் என்பதே இரசிக்கக்கூடிய அம்சம். நான்கா வது கட்டத்தில் இரண்டு படிநிலைக் கலந்துரையாடல் நடைபெற்றது. ஒன்று பொருளாதார உதவிகள் பற்றியதாக அமைந்திருந்தது. உலக வங்கி, மற்றும் நிதி நிறுவனங்களின் உதவிகள் ஒத்துழைப்புக்கள் ரஷ்சியாவுக்கு வழங்குவது பற்றியும், வெட்டுவாக்கைப் பயன்படுத் தினால் உதவிகள் ரத்தாகலாம் என்ற தொனியிலும் ரொனிபிளயரது கலந்துரையாடல் அமைந்தது. இரண்டாவது நிலையில் வர்த்தகம், சந்தை வாய்ப்புக்கள் மற்றும் தாராள மயமாக்கல் தொடர்பான அமுல் படுத்தல் என்பன வழங்கமுடியாத நிலைமைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு எனவும் கூறப்பட்டது. இந்த முயற்சிகளின் போதும் ரஷ்சியா நெகிழ்ந்து கொடுப்பதாக ஈராக் விடயத்தில் காணப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாவது கட்டம்- அமெரிக்கா அதிபதி மீண்டும் நீண்ட தூர ஏவுகணைப் பரிசோதனையை பரிசோதித்துக் காட்டியுள்ளதுடன் 1972 ஆம் ஆண்டு அமெரிக்கா-ரஷ்சியா இரண்டு நாடுகளுமே செய்து கொண்ட **Anti Ballistic Missile (ABM)** உடன்பாட்டை மீறப் போவ தாக அறிவித்தார். 4800 மைல் தூரத்தினைத் தாக்கும் திறன் கொண்ட இரு ஏவுகணைகளைப் பரிசோதித்துள்ளதாக பென்ரகன் அறிவித் துள்ளது. அதேபோன்று பசுபிக்கடல் பிரதேசத்தில் **NMD** எனச் சுருக் கமாக அழைக்கப்படும் (தேசிய பாதுகாப்பு ஏவுகணைப் பரிசோ தனைத் திட்டம்) இந்தக் காலப்பகுதியில் பரிசோதிக்கப்பட்டதாகவும் பென்ர கன் அறிவித்துள்ளது. இந்த மிரட்டலுக்கும் ரஷ்சியா வளைந்து கொடுக்கவில்லை

அப்படியாயின் புட்டின் எதற்கு வளைந்து கொடுப்பார்? நிச்சயமாக ரஷ்சியாவுக்கும், ரஷ்சியர்களுக்காகவும் விட்டுக் கொடுக் கும் தேசிய தனித்துவம் மிக்க தலைவர் புட்டின். புட்டின் ஆளும் ரஷ்சியாவின் வர்க்கத்தின் வழிவந்த தேசியவாதி. அசைக்க முடியாத சுதேச உணர்வும் ஆளுமைப்பலமும் கொண்ட தலைவர். விளாடிமிர் லெனின், பிரஷ்னேவ் போன்ற தலைவர்களுக்குப் பின் ரஷ்சிய மக்கள் நேசிக்கும் ஆட்சியாளன் புட்டின் என்பது கவனிக்கத்தக்கது. புட்டின் மேற்கின் ஏமாற்றுத்தனத்தை நன்கு புரிந்து கொண்டவர். கடந்த காலத் தில் கொர்பச்சேவ்வுக்கும் சரி, யெல்சினுக்கும் சரி இதே அணுகு முறை மையே மேற்கு கையாண்டது. பொருளாதார உதவிகளையும் ஒத்து ழைப்புக்களையும் வழங்குவதாக உத்தரவாதம் வழங்கிவிட்டு, பின் வாங்குவதும், ஏமாற்றுவதும் இயல்பாகிவிட்டது. அதனால் ரஷ்சியா சாதித்தது எதுவுமில்லை என்பதை உணர்ந்து கொண்ட புட்டின் அரசியல் மாற்றத்தையேனும் உலகத்திற்கு உணர்த்தும் பலத்தை ரஷ்சியா கொண்டிருக்க வேண்டும் எனக் கருதுகின்றார்.

ரஷ்சியா தனது பொருளாதாரத்தை உலகவங்கியும், மற்றும் நிதி நிறுவனங்கள் கூறுவது போன்ற மாற்றமுயன்று, இறுதியில் மூன்றாம் உலகத்திலுள்ள வறிய நாட்டுக்கு ஒப்பான நிலையையே அடைந்துள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அமெரிக்கா உட்பட மேற்குலகுதான் மிகப் பிரதான பங்காளியாகும். ரஷ்சியா உற்பத்தியால் மட்டுமல்ல சந்தை வாய்ப்புக்களாலும், வர்த்தக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிமுறைகளாலும் மிக வறிய நாட்டின் நிலைக்கு ஒப்பானதாக உள்ளது. ரஷ்சியாவின் பொருளாதார பலம் அதன் முன்னாள் சோவியத் குடியரசுகளிடமே அதிகம் குவிந்திருந்தது. தற்போதைய நெருக்கடியில் இருந்து மீட்சி பெறவேண்டுமாயின் சோவியத் குடியர சுகள் ஒன்றிணைதல் வேண்டும். அது மிக நீண்டகாலத்திற்கு சாத்தி யப்படாத விடயம். அடுத்தது தற்போது கடைப்பிடிக்கும் பொருளாதார சீர்திருத்தத்தினை மறுசீரமைக்க வேண்டும். அதற்கான அணுகுமுறை யின் கீழ் மேற்குலகத்தை ரஷ்சியா எதிர்கொள்ள வேண்டும். அமெரிக் காவையும், பிரிட்டனையும் எதிர்த்து மேற்கு ஐரோப்பாவுடனும், ஏனைய விருத்தியடைந்த நாடுகளுடனும் பொருளாதார வர்த்தக நெருக்கததை கடைப்பிடிக்க வேண்டும். மேலும் மேற்காசிய நாடுகளுடன் ரஷ்சியா கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கத்தினை தொடர்ந்து பேணுவ துடன், முழு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் ரஷ்சியா அரசியல் ரீதியாக பாதுகாப்பளிப்பதனூடாக பொருளாதார விருத் தியை ஏற்படுத்த முனைகிறது என்பதையே புட்டின் நடவடிக்கை வெளிக்காட்டுகிறது.

புட்டினை உலகின் எந்த அரசியல் தலைமையும் இராணுவ ரீதியில் மிரட்ட முடியாது. புட்டின் இராணுவத்தில் பல பதவிகளை வகித்தவர் மட்டுமன்றி கே.ஜி.பி. என அழைக்கப்படும் சோவியத் யூனியனின் உளவுப்பிரிவின் தலைமைப் பதவியை குறிப்பிட்ட காலம் வகித்தவர். அணுவாயுதம், மற்றும் தொழில்நுட்ப ஆயுதங்களை உற்பத்தி செய்வதும், அதனை வர்த்தகமாக்கியதனூடாக வருமானத்தைப் பெற்ற நாட்டின்தலைவன் என்பதனாலும், இராணுவத்திற்கும் அதன் படைப் பிரிவுகளுக்குள்ளும் செல்வாக்குமிக்க நபர் என்பதனாலும் புட்டினை இராணுவ மிரட்டலால் கட்டுப்படுத்த முடியாது. இதுவரை பொருளாதாரத்தினைக் காட்டியே சீனாவையும் ரஷ்சியாவையும் மேற்கு மிரட்டி வந்தபோதும், தற்போது எழுந்துள்ள நிலை புட்டினுக்கும் .ரஷ்யாவுக்கும் தனித்துவமானது. ஆனால் வறுமை ரஷியர்களிடம் மேலதிகமாக உள்ள அம்சமாகவே உள்ளது. மோசடி, திருட்டு, கொலை, ஆட்கடத்தல், மிரட்டல் என வன்முறைகள் வறுமை யால் சூழ்ந்துள்ளன. கடந்த காலங்களில் இவ்வம்சங்களில் அதிக மாற்றங்கள் நிகழ்ந்ததாகத் தெரியவருகிறது. அதாவது 1999 களில் 52% காணப்பட்ட குற்றச்செயல்கள் 2001 இல் 28% மாக குறைந் துள்ளன. அவ்வாறே பொருளாதாரத்திலும் விருத்தியை ரஷ்சியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்து வருகின்றனர். கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு (மிக மெதுவாக நிகழ்கிறது) போசாக்கு என்பன படிப்படியாக மீட்சி பெறு கின்றன. மெய்வருமானம் 1.5 வீதத்தால் உயர்ந்துள்ளது. அவ்வாறே 2003 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி 7.3 சதவீதமாக அதிகரித் திருப்பதுடன் 2004 இன் முதல் நான்கு மாதங்களிலும் ரஷ்சியப் பொருளாதாரம் 8 சதவீதத்தை எட்டியுள்ளது.

ஐ.நா.சபைக்கூடாக போரை நிகழ்த்தாது, ரஷ்சியா தடுப்பதன் மூலம் பல மாற்றங்களை உலகத்தில் ஏற்படுத்த முயன்றுள்ளது. அதே போன்று அமெரிக்கர்கள் ஐ.நா.சபைக்கூடாக போரைக் கைவிட் டாலும் தனித்து பிரிட்டனுடன் ஈராக் மீது பேர் தொடுக்கும் வாய்ப்பு நெருக்கடியான அரசியலுக்கு வித்திட்டுள்ளது. இஸ்லாமிய உலகத் தின் மீதான பழிசுமத்தலுக்கும், அடக்குமுறைக்கும் எல்லை போடப் படும். மாறாக அமெரிக்கர்களுக்கு இரண்டாவது போர்க்களமாக ஈராக் அமையும். பயங்கரவாதம் முதலாவது களமாயின், ஈராக் இரண் டாவது போர்க்களமாகும் என்ற நம்பிக்கை அப்போது துளிர்விட ஆரம் பித்தது. எனவே புட்டின் ரஷ்யாவின் பலவீனத்தின் முன்பும் அரசியல் அதிகாரத்தை பேண முயற்சித்துள்ளமை குறிப்பிடக்கூடிய அம்ச மாகும். இருந்தபோதும் புட்டின், முன்னுள்ள நெருக்கடிகள் எல்லா வற்றையும் எதிர்கொண்டு முன்னேறும் வாய்ப்பு குறைவாகவே உள்ள தென்பது புலனாகிறது.

### அமெரிக்காவின் புதிய முயற்சி

விளாடிமிர் புட்டினின் ஆட்சிக்காலத்தில் ரஷ்சிய மக்கள் பெரும் துன்பியல் நாடகத்தை அனுபவிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. முதலாவது சம்பவம் கர்ஸ்க்கின் நீர்மூழ்கி கப்பல் இனந் தெரியாத ஏவுகணைத் தாக்குதலில் அழிக்கப்பட்டபோது, இதே மாதிரி நெருக் கடியை மொஸ்கோ அனுபவித்தது. அந்நீர்மூழ்கி கப்பல் தாக்கப் பட்டதற்கு யார் பொறுப்பு என்பது பற்றி வெளிப்படையாக இதுவரை தகவலில்லாது விட்டாலும், மறைமுகமாக சர்வதேசதரத்தில் சக்தி வாய்ந்த இரு அரசுகள் சம்பந்தப்பட்டதாக, ரஷ்சிய இராணுவ நிபுனர் களாலும் மேற்கு நாடுகளின் இராணுவ வல்லுனர்களாலும் ஊகிக்கப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் காணப்பட்ட தொழில்நுட்பத்தையும் ஆயுதபலத்தையும் பெறுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி சாத்தியப்படாத போது, தாக்கி அழிக்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியது. தாக்கப்பட்ட பின்னர் கூட அதனை எதிரியின் கண்களுக்கோ, கைகளுக்கோ தென் படாதபடி ரஷ்சிய இராணுவம் பாதுகாப்பதில் வெற்றி கண்டது.

செச்னியப் போராளிகள் தனிநாட்டை அமைப்பதற்காகப் போராடுகின்ற போராட்ட அமைப்பு என்ற வகையில் அவர்களின் தனிநாட்டுக் கோரிக்கையும், ரஷ்சியாவில் இருந்து பிரிந்து செல்லும் உரிமையும் நியாயமானதாகவே தென்படுகிறது. அதற்காக சமகால உலக அரசியல் போக்கையோ அல்லது அரசியல் அதிகாரத் தன்மைக்கான வடிவத்தையோ புரிந்துகொள்ளாமல் அந்நிய சக்தி களுக்காக விலைபோவதையே ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. மொஸ்கோவில் நடந்த பணயக் கைதிகள் விவகாரம் கூலிக்காக தமது மக்களையும், நீண்ட காலமாக நிலைத்து நிற்கப்போகும் நட்புக்களை யும் காட்டிக் கொடுப்பதே கேவலமான போராட்ட அரசியலாக செச்னிய போராட்டத்தை மதிப்பீடு செய்யவைத்துவிட்டது. ரஷ்சியர் கள் எப்போதும் செச்னியர்களின் அயலவர்கள். அரை நூற்றாண்டுகள் வரை நட்புக்கலந்த அரசியல், இராணுவ பொருளாதார ஒன்றிணைப் புக்குள் வாழ்ந்தவர்கள். அவர்கள் ஐக்கியமாக வாழமுடியாத சூழலைத் தவிர்ப்பதற்காக அந்நியர்களிடம் சரணடைவது ஆரோக்கியமான அரசியல் போராட்டமாக அமையாது.

ரஷ்சிய ஆட்சியாளர்கள் செச்னிய மக்களையும் அவர்களின் போராட்டத்தையும் மூர்க்கத்தனமாக அடக்குவதென்பதும் ஏற்றுக் கொள்ள முடியாததொன்றாகும். செச்னியர்களின் போராட்டத்தை ரஷ்சிய ஆட்சியாளர்கள் பயங்கரவாதத்திற்கு ஒப்பான செயல்களில் அண்மைக்காலத்தில் நடந்துள்ளார்கள் என்பதே யதார்த்தமாகும். சமகால அரசியல் பொருளாதாரப் போக்கை சரிவர உணராததன் விளைவால் ஏற்பட்டதாகவோ அல்லது பிழையான வழிகாட்டலுக் கூடாக ஏற்பட்டதாகவோ அதனைக் கருதவேண்டியுள்ளது. எது எவ் வாறனதாக அமைந்தாலும் செச்னியர்கள் அந்நிய சக்திகளின் நலன் களுக்காக போராட்டத்தையும், செச்னிய விடுதலையையும் பணயம் வைப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. அது விடுதலைப் போராட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகவும் அமைந்துவிடாது. ரஷ்சிய ஆட்சியாளர் மீது அல்லது அவர் களது உடமைகள் மீது ஒரு தாக்குதல் நிகழுமாயின் செச்சினியர் களது போராட்ட அணுகுமுறைகளில் ஒன்றாக நியாயப்படுத்திக் கொள்ளலாம்.

செச்னிய போராளிகளின் பணயநாடகம் முறியடிக்கப்பட்டு விட்டது. விளாடிமிர் புட்டினின் துணிச்சலான முடிவு, நூற்றுக்கு மேற் பட்ட ரஷ்ய மக்களை இழக்க காரணமாக அமைந்த போதும், வெற்றி கரமாக முறியடிக்கப்பட்ட செய்தி மேற்கு உலகத்திற்கு அதிர்ச்சியான செய்தியேயாகும். செச்சினிய விவகாரம் ரஷ்ய மக்களுக்கும் அதிர்ச்சி யானதுதான். ஆனால், ஒப்பீட்டடிப்படையில் ரஷ்சியர்கள் எப்படியோ, இவ்வளவு அழிவை சந்தித்திருப்பார்கள் என்பது தீவிரவாதிகளின் கோரிக்கையிலிருந்து விளங்கிக்கொள்ளலாம்.

புட்டின் அத்தகைய விஷவாயுவை பிரயோகிக்கும் முடிவை எடுக்காது விட்டிருந்தாலும், பணயக் கைதிகளான ரஷ்சியர்கள் பலர் கொல்லப்பட்டிருப்பார்கள். ஆனால் அவ்வாறு துணிச்சலாக புட்டின் எடுத்த முடிவு, ரஷ்சியர்களின் உலக அதிகார அரசியலின் அதன் பங்குக்கான புதிய பரிணாமத்தை வெளிப்படுத்தியுள்ளது, இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று கருதி அரசியல் நகர்வுகளை மேற்கு ஆரம்பத் திருந்தது புட்டினை முறியடிக்க மேற்கு எடுத்த புதிய நாடகம் புட்டினா லேயே தோற்கடிக்கப்பட்டு விட்டது. இவ்வாறு புட்டின் வேகமாகவும், இரசகியமாகவும் நகர்வுகளை மேற்கொண்டு திடீர்த்திருப்பங்களை ஏற்படுத்துவார் என மேற்குலகம் எதிர்பார்க்கவேயில்லை. ஈராக் தொடர்பான ரஷ்யாவின் நிலைப்பாட்டை மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையே பணயக் கைதிகளின் விவகாரம். இதனை சற்று விரிவாக நோக்குவது பொருத்தமானது. ஏற்கனவே, இப்பகுதியில் புட்டினுக்கும் புஷ்ஷுக்குமான ஈராக் தொடர்பான மோதல் பற்றி குறிப் பிட்டிருந்தேன். அதன் தொடர்ச்சியாகவே இதனையும் கொள்வோமாயின் இலகுவாக விளங்கிக்கொள்ள முடியும்.

ஈராக் மீது அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய இரண்டு அரசு களும் ஐக்கிய நாடுகள் சபைக்கூடாக போரை முன்னெடுத்துச் செல்லமுடியாத தடையை ரஷ்சியா விதித்திருந்தது. ரொனிபிளயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதடவை புட்டினை சந்தித்தும், நிலமையை எடுத்து விளக்கியும், புட்டின் ஈராக் விவகாரத்தில் மேற்குடன் பனிப்போரையே கையாள விரும்பினார். அதனால் ஆத்திரப்பட்ட மேற்கு, எப்படியாவது ஈராக் மீது போர் தொடுக்கவேண்டுமென துடித்துக்கொண்டிருந்த நிலையில், செச்னியப் போராளிகளையும், போராட்டத்தையும் கையாண்டேனும் ரஷ்சியாவை வழிக்கு கொண்டுவர எண்ணியது. ரஷ்யாவின் தலைமையை விலைக்கு வாங்கமுடியாத மேற்கு செச்சினியப் போராளிகள் விலையாக கிடைத்தனர். அவர்களைப் பயன்படுத்தி சாதகமான சூழலை உருவாக்கலாமென நம்பி காரியாத்தில் இறங்கினர். குறிப்பாக அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ.இவ்விடயத்தில் கணிசமான செல்வாக்குச் செலுத்தியதாக மேற்குக்கு எதிரான ஊடகங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

செச்சினியப் போராளிகளை தயார்படுத்திய சி.ஐ.ஏ. பணயக் கைதிகள் நாடகத்தை மிக நீண்ட நாட்களுக்கு தொடர்வதென்றே திட்டமிட்டிருந்தது. போராளிகள் வைத்திருந்த ஆயுதங்களும், உணவு மாத்திரைகளும், பெண் போராளிகள் கட்டியிருந்த குண்டுகளும் அதற்கு ஆதாரமாகும். ஏனெனில் ரஷ்சியாவின் அரசியல் தலைமையை நெருக்கடிக்குள் தள்ளிவிட்டு, அந்நெருக்கடிக்குள் பேரம்பேசும் அரசியலை முன்னெடுத்துக்கொண்டு, ஈராக் மீதான போரையும் நியாயப்படுத்திக் கொண்டு, போராளிகளுடன் சமரசம்பேசி பிரச்சினையைத் தாம் தீர்க்கலாமெனத் திட்டமிட்டிருந்தது. ஈராக்விவகாரத்தையும், செச்சினிய விவகாரத்தையும் ஒரே வகைப்பாட்டுக்குள் போட்டுக்கொள்வதும் அமெரிக்காவின் எதிர்கால அரசியலுக்கு இலாபமாக அமையும். செச்னியாவுக்குள் நிற்கும் ரஷ்சிய இராணுவத்திற்குப் பதிலாக அமெரிக்க இராணுவத்தை குவிக்கவும் அமெரிக்கா தயங்காது. அமெரிக்காவுக்கு செச்சினியாவோ, ரஷ்சியாவோ முக்கியமல்ல. அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் நலன் மட்டுமே முக்கியமானது.

உலக நாடுகள் எங்காவது குண்டுத்தாக்குதலோ, அல்லது கடத்தல் நாடகமோ நிகழ்ந்துவிட்டால் உடனடியாக முண்டியடித்துக் கொண்டு, பயங்கரவாதமெனக் கண்டிக்கும் அமெரிக்கா, மொஸ்கோ பணயக் கைதிகள் விவகாரத்தைப் பற்றி மிக மெதுவாகவே தனது கருத்துக்களை வெளியிட்டது. அதுவும் அமெரிக்க ஜனாதிபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லியம் புஷ் வெளித்தோன்றி, ஊடகங்களுக்கு காட்சிப்படுத்தி, பேட்டியளிக்காததுடன், அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் கொலின் பவல் மட்டுமே முதலில் கருத்து வெளியிட்டார். அதுவும் மொஸ்கோ நகரமும் ரஷ்சிய மக்களும் மிக நெருக்கடியான துயரத்தை அனுப வித்துக் கொண்டிருக்கும்போது, கொலின் பவல் குறிப்பிட்டார். "இப் பணயக்கைதிகள் விவகாரம் சுமுகமாக தீர்க்கப்பட்டு விடும்". இது எப்படிச் சாத்தியப்படும் என்பதே சந்தேகம் வலுக்கக் காரணமாகும்.

செச்சினியப் போராளிகள், செச்னியாவிலிருந்து ரஷ்சியப் படைகள் வாபஸ் பெறப்பட வேண்டுமெனக் கோரிக்கை விட்டிருந் தமை, எப்படி சுமுகமாகும் என்பதே பிரதான கேள்வியாகும். தற் கொலைத் தாக்குதலுக்கு தயாரான போராளிகளின் அணுகுமுறை செச்சினியா விலிருந்து ரஷ்சியப் படை விலகல், சுமுகமான தீர்வை ஏற்படுத்துமென கொலின் பவல் கருதினார்போல் அவரது அறிக்கை அமைந்துள்ளது. மேலும், அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய இரு நாடுகளின் தூதரகங்களும், அதன் தூதுவர்களும் இவ்விவகாரத்தை மையப்படுத்தி ராஜதந்திர நகர்வுகளை முடுக்கிவிட்டிருந்தனர். செச்சினியமிவாத தலைமையுடனும், போராளிகளின் தலைமைகளுடனும், சுமுகமான அல்லது நல்லிணக்கமான அணுகுமுறைகளை ஏற்படுத்து வது போலும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன. மாறாக புட்டினுடனோ அல்லது ரஷ்சிய மக்களுடனோ எந்தத் தொடர்பையும் ஏற்படுத்த முடியாத மேற்குலகம், செச்சினியாவுடன் நெருக்கத்தை அதிகரித்தமை அதன் மீதான சந்தேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது. செச்சினியப் போராளிகளைக் கண்டிக்க முயலாத வில்லியம் புஷ் இவ்விவகாரத்திற்கும் அல்கெய்டாவுக்கும் தொடர்பு உண்டு எனக்கூறியிருந்தார். உலகில் எங்கு அமெரிக்காவுக்குப் பாதகமான செயல் நிகழுகிறதோ, அங்கு அல்கெய்டா விசேட அதிகாரம் பெற்ற அமைப்பாக புஷ்ஷுக்குத் தென்படும்.

எனவே மேற்குலகம் திட்டமிட்டு புட்டினுக்கு ஏற்படுத்திய நெருக்கடியே மொஸ்கோ பணயக் கைதிகள் நாடகம். ஆனால், மேற்கு எதிர்பார்த்ததற்கு மாறாக, புட்டின் செயற்பட்டு, மேற்கின் தந்திரோ பாய நகர்வை முறியடித்துவிட்டார். அவ் விவகாரம் முழுமையாக முடி வுக்கு வந்துவிட்டதாக இல்லை. ஏனெனில் ரஷ்சிய இராணுவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவித்த வாயு எந்த வகை என்பதே புதிய சர்ச்சையாக எழுந்து விட்டது. பணய நாடகத்தின் வெற்றி என்பதைவிட விஷவாயு என்பதே புதிய அரசியல் சர்ச்சையாகவுள்ளது. புட்டின் மேற்கை முறியடித்து விட்டாலும், முழுமையாக அவ்விவகாரத்திலிருந்து மீட்சி பெற வில்லை. புட்டின் இரண்டாவது தடவையாக ரஷ்ய மக்களிடம் மன்னிப் புக் கோரியுள்ளார்.

முதல் தடவை நீர்மூழ்கி அழிந்த போது ஏற்பட்ட எதிர்ப்பு அலையை தணிக்க மன்னிப்புக் கோரியிருந்தது நினைவுகூரத்தக்கது. ஆனால், பணயக்கைதிகள் மற்றும் பாடசாலை சிறுவர்கள் சம்பவம் ரஷ்சியர்களால் நேரடியாகப் பார்க்கவோ, உணரவோ முடிகிறது மட்டு மல்ல, மேற்கின் ஊடகங்கள் தீவிரமாக புட்டினுக்கு எதிரான பிரசா ரத்தில் ஈடுபட்டுள்ளன. என்பதைகாட்டுகின்றன. மறுபுறமாக நோக் கினால் புட்டின் ஏற்படுத்தியுள்ள அரசியல் புதிய அனுபவமாகவும், உதாரணமாகவும் கொள்ளப்படுவதுடன் மேற்கு ரஷ்சியாவைக் கணக் குப் போடுவதில் இனிமேல் நிதானத்தைக் கடைப்பிடிக்கும் என்பதில் சந்தேகமில்லை. செச்சினியப் போராளிகள் போன்று மேற்கொள்ள முயலும் எந்தவிதத் தாக்குதலுக்கும் புட்டினின் பாணியில் பதில் அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. இஸ்லாமியத் தீவரவாதத் தின் நடவடிக்கைக்குப் பதிலாக புதிய மாற்று நடவடிக்கை ஒன்றுக்கு உலக நாடுகள் தயாராவது இயல்பானது.

செச்சினியப் போராட்டம் பயங்கரவாதமாக புட்டினால் வடிவமைக்கப்பட்டுள்ளமை, மேற்கின் பாணியில் ரஷ்சியப் பிராந்தி யத்தைக் கையாள ரஷ்சியாவுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது என்பதைக் காட்டுகிறது. அமெரிக்கா, செச்சினியப் போராட்டத்தை தீவிரமானதாக மட்டும் கருதுகிறதேயன்றி அதனைப் பயங்கரவாதமாக வரையறுக் காத நிலைமை கேள்விக்குட்படுவதுடன் அமெரிக்காவின் முகம் ரஷ்சியாவால் தோலுரித்துக் காட்டப்பட்டுள்ளது. செச்சினியா மீது ரஷ்சியா தீவிர தாக்குதலை நடத்த இச்சம்பவம் அங்கீகாரம் அளித் திருப்பதுடன், மிதவாத அரசியல் தலைமையான அசர்மன் மச்சடோன, ரஷ்சியாவுடன் நிபந்தனை அற்ற பேச்சுக்கு தயாரென அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். சாராம்சத்தில் புட்டின் இவ்விவகாரத்தினால் உள்ளூரில் நெருக்கடியை எதிர்கொண்டிருந்தாலும் பிராந்திய, சர்வதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகளில் பாரிய அரசியல் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளார். அது ரஷ்யாவின் உலகளாவிய அரசியல் அதிகாரப் போட்டித் தன்மையின் சமநிலையைக் காட்டுகின்றது. தனித்து ஒரு சில அரசுகள் விரும்பு கின்ற திசைக்கு உலகத்தை நகர்த்த முடியாது என்பதனை ரஷ்யா மீண்டும் ஒரு தடவை நினைவுபடுத்தியுள்ளது.

## ரஷ்ய மக்களின் அரசியல் எதிர்பார்க்கை

உலகத்தின் இருதய நிலமெனப் பேசப்படும் ரஷ்சியாவின் அரசியல் பொருளாதாரப் போக்குகளும், இராணுவரீதியான நடவடிக்கைகளும் அநாகரிகமான மாறுதல்கள் அண்மைக்காலத்தில் ஏற்படுத்தப்படு கின்றது. ஒரு வரலாற்றுத் திருப்பத்தையும், புரட்சிகளுக்கான அத்தி வாரத்தையும், உலகம் எல்லாவற்றுக்குமான முன்னுதாரணமாகவும் அமைந்திருந்த நிலைமாறி, தேசத்தைக் காட்டிக்கொடுக்கும் அரசியல் எழுச்சியையும், போலிகளை உண்மைகளெனப் பேசும் தலைமைகள் எப்போது ரஷ்யாவின் ஆட்சியாளர்களாகத் தோன்றினார்களோ, அன்றே பலவீனமான அரசியல் கலாசார தோற்றமும் விழித்துக்கொண்டது. இந்த வரிசையில் மிகமோசமான அரசியல் தலைவராக முன்னாள் ஜனாதிபதி யெல்சின் காணப்பட்டார். கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சியிலும், அத்த கைய அரசியல் சித்தாந்தத்திலும் பலவீனமான அரசியல் கலாசாரம் முற்றாகக் களையப்பட்டதொன்றல்ல. உடைந்தபின்பும் அதே அரசியல் கலாசாரம் ரஷ்சிய மக்களுக்குப் பாரிய நெருக்கடிகளை உருவாக்கிய தாகவே அமைந்திருக்கின்றது.

ஈராக் மீதான அண்மைக்கால யுத்தத்துக்குப் பின்பு, அவர் பின்பற்றும் அணுகுமுறை தனித்து அவரது கௌரவத்தைப் பாதிப்பது மட்டுமன்றி, ரஷ்சியர்களையும் பாதிப்பதாக உள்ளது. இதனால், புட்டினின் ஈராக் போருக்குப் பிந்திய வெளிநாட்டுக் கொள்கை அமெரிக்காவுக்குச் சோடைபோவதும், பிராந்திய ரீதியில் இயல்பான பாதுகாப்பை இழந்துபோவதும் அவரது பலவீனத்தைக் காட்டுவதாக விமர்சிக்கப்படுகின்றது. இது ஏற்றுக்கொள்ள வேண்டியது என்பதனை நிராகரிக்கமுடியாது. புட்டினின் வருகை அமெரிக்க அதிபர் புஷ்ஷின் வருகைக்குச் சவாலாக அமைந்திருந்ததை அக்கால அரசியல் சூழலை சரிவரக் கணக்கிட்டவர்கள் புரிந்திருப்பார்கள். ஆனால், புட்டினின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய போக்கு அமெரிக்க அதிகார வர்க்கத்தை திருப்திப் படுத்துவதாகவும், அமெரிக்க நலன்களுக்கு விட்டுக்கொடுப்பதாகவும் உள்ளது. ஆனால், அத்தகைய நிலை முற்றுமுழுதாக ரஷ்சியாவை நிலைகுலையச் செய்யும் விடயமல்ல. மாறாக, சமகால அரசியல் போராட்டத்தில் புட்டினின் அணுகுமுறை யதார்த்தமானதொன்றாகவே அமைந்திருக்கின்றது எனவும், போதிய பலம் தனித்த ரஷ்சியாவுக்கு இல்லாதுள்ளது என்பதையும் ஏற்றுக்கொள்ளும் விமர்சகர்கள் உண்டு. ஏனெனில், புட்டினின் கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்றதை மேற்கு நாடுகள் விரும்பவில்லை என்பதனை அவர்களது தேர்தல் தொடர் பான அறிக்கையிலிருந்தே புரிந்துகொள்ள முடியும்.

அமெரிக்க ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் ரஷ்சிய நாடாளுமன்றத்துக்கான தேர்தலில், புட்டினின் ஆளும் கட்சிக்கு சார் பாக ஊடகங்கள், அதிகாரிகள் நடந்துகொண்டதாகவும், இந்தத் தேர் தலை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் தெரிவித்தனர். உண்மையி லேயே, இலங்கையில் வடக்கு - கிழக்குப் பகுதியில் வாழும் எம்மக்கள், வாக்குப் போடாத நிலையிலேயே, நடந்த பல தேர்தல்க ளுக்கு சாதகமாக அறிக்கை கொடுத்த கண்காணிப்பு குழவினர், இவ்வளவு காரசாரமான ஓர் அறிக்கையை வெளியேவிடவுமில்லை. தேர்தல் எதனையும் நிராகரிக்கவுமில்லை. அப்படியிருக்கும்போது, ரஷ்சிய தேர்தலை உடனடியாக நிராகரித்தமை ஏதோவோர் அரசியல் உள்நோக்கத்துடனேயே நிகழ்ந்துள்ளதென்பது தெளிவாகிறது. குறிப்பாக, தேர்தலை நிராகரிப்பதன் வாயிலாக, புட்டினை எச்சரிப்பது அல்லது மீதி காலத்திற்க்குப் புட்டினை, மேற்குடன் ஒத்துழைக்க வைப்பது மேற்கினுடைய அவாவாகவுள்ளது.

எனவே, புட்டின் மேற்குடன் ஒத்துழைப்பது போதாதநிலை என்பதைவிட, ரஷ்யாவின் வளர்ச்சியைப் பாதிக்கும் விதத்தில் செயற்பட முயல்வதே அவசியமான விடயமாகும். தற்போதைய பொருளாதாரப் போட்டியில் அதிக நிமிர்வை அடையமுடியாத ரஷ்சியாவிற்கு அரசியல், இராணுவ ரீதியில் மேற்குடன் போராடுவது கடினமானதாகவே அமையும். ஆனால், புட்டினின் பலமான எதிர்ப்பு சாத்தியப்படாதவரையும், மேற்கின் பலத்தை எந்த அரசாலும் தனித் தோ, கூட்டாகவோ தோற்கடிக்கமுடியாது. இத்தகைய தோற் கடிப்பு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமநிலையான அதிகார மாற்றத்தை நிச்சயமாக ஏற்படுத்தும். ஆனால், புட்டின் சீனாவைப் போன்று உள்நாட்டுக்குள்ளேயே பெரும் அரசியல் எதிரிகளை உருவாக்கிவருகின்றார். சீனர்களுக்கு தைவான் எப்படியோ, அப்படியே ரஷ்சியர்களுக்கும் செச்சினியா அமைந் துள்ளது. செச்சினியாவைக் கொண்டே ரஷ்சியாவைத் தோற்கடிக்க, அமெரிககர் உட்பட்ட மேற்கு நாடுகள் முயன்றுவருகின்றன.

செச்சினிய போராட்டம் படிப்படியாக வளர்ச்சி நோக்கி நகருகின்றது. ஆரம்பத்தில் மிக தாழ்நிலையிலிருந்த ஆயுதப் போராட்டம், தற்போது வளர்சியடைந்து வருகின்றது. தற்கொலை என்ற தீவிர தியாக உணர்வை வெளிப்படுத்தும் போராளிகளை - செச்சினியர்கள் உருவாக்க ஆரம்பித்துவிட்டனர். அதிலும் ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் தற்கொலைத் தாக்குதலில் ஈடுபடுகின்ற நிலை - புட்டினின் அரசியல் எதிர்பார்க்கையைத் தகர்க்கக்கூடியதாகவே மாறலாம். புட்டின் மேற்குடன் ஒத்துழைக்க மறுக்கும் சந்தர்ப்பங்களின் போதும், செச்சினியர் தாக்குவார்களேயாயின், ரஷ்சியர்களின் ஐக்கியம் குறை வதுடன், அரசியல் மட்டுமல்ல பொருளாதார அடித்தளமே தகர்ந்து போய்விடும். ஆனால், மேற்கில் தங்கியிருக்கும் செச்சினியர்களது போராட்டமும் நல்ல ஆரோக்கியமான விளைவை ஏற்படுத்தக்கூடிய தல்ல. எப்போதும் மேற்குக்கு வலுவான ஒத்துழைப்பு தலைமை ரஷ்யாவில் கிடைத்துவிட்டால், செச்சினியர்களை இலகுவாக மேற்கு கழற்றிவிடும். அதற்கு அதிக காலம் எடுக்காது. எனவே, இரு பிரி வினரது இராணுவ, அரசியலும் ஆரோக்கியமற்ற தளத்திலேயே நகர்ந்து செல்கிறது,

செச்சினியர்கள் பக்கம் புட்டின் கொண்டிருக்கும் அதிருப்தி யான போக்கு அவரது தேர்தல் வெற்றிக்கு இன்னோர் காரணியாக வுள்ளது. ஐக்கியமான ரஷ்சியா என்பது சோவியத் யூனியனின் மீளமைப்பாகக்கூட அமையலாமென, ஒரு ரஷ்சிய அரசியல் விமர்சகர் கூறுகின்றார். எனவே, செச்சினியர் பக்கம் புட்டின் கொண்டிருக்கும் கொள்கை பலவீனமாக அமைந்திருந்தாலும், ரஷ்சியர்கள் என்ற நிலையில், புட்டினின் அரசியலை கலக்கும் ஒரு விடயமாகவுள்ளது. மாறாக செச்சினிய மக்களின் தேசிய தனித்துவம் பேணப்படுகின்ற நிலையில், எழும் பிராந்திய அரசியலை ரஷ்சியா தக்கவைக்கும் நிலையும் சமமான வலிமையைப் பெற்றதாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செச்சினியா மட்டுமல்ல, ரஷ்யப் பிராந்தியம் முழுவதையுமே அமெரிக்கா ஆக்கிரமிக்க ஆரம்பித்துவிட்டது. அதிலிருந்து ரஷ்யாவைப் பாதுகாப்பதும், ரஷ்சியாவின் ஐக்கியத்தை காப்பதிலுமே புட்டினின் அரசியல் வெற்றி தங்கியுள்ளது. தனித்து தேர்தலில் ரஷ்சிய மக்கள் கொடுத்த தீர்ப்பாக மட்டுமல்லாது, எதிர்கால மாறுதலையும், ரஷ்சியாவின் பாதுகாப்பையும் ரஷ்சிய மக்கள் புட்டினிடம் கையளித்துள்ளனர். எனவே, ரஷ்சியாவின் ஐக்கியம், பிராந்தியத்தின் பாதுகாப்பு, முழு உலகத்துக்குமான மாறுதல் என்ற பாரிய தளத்தை இலக்காகக் கொண்ட, ரஷ்சிய மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

இதனைப் புட்டின் சாத்தியப்படுத்துவாரா? அல்லது அவரது கட்சி முன்னெடுக்குமா? அதற்கு மேற்குலகம் இடும் தடைகளை இலகுவாகத் தாண்டமுடியுமா? ஏன்ற பல கேள்விகள் எழுந்துள்ளன. மேற்கின் அரசியல், பொருளாதார, இராணுவ அணுகுமுறைகளை வெளியே நின்று எதிர்த்த சோவியத் யூனியன் சாத்தியப்படாத நிலையில் அத்தகைய அணுகுமுறை அதே மேற்கில் அரசியல், பொருளாதார, இராணுவ அணுகுமுறைக்குள் புகுந்து ஒரு தடவை மூழ்கிப்போனது. ஆனால் இரண்டாவது தடவையில் புட்டின் தோற்றுப்போகாத ரஷ்சியாவை கட்டிவளர்க்க ஆரம்பித்திருக்கின்றார். நாடாளுமன்றத் தேர்தலின் வெற்றிகளை அடுத்து ஜனாதிபதிக்கான தேர்தலில் மீண்டும் புட்டினே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அதிக பெரும்பான்மையைப் பெற்று தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி புட்டினின் இரண்டாவது தடவைக்கான ஆட்சிக்காலத்தை ரஷ்சிய மக்கள் பெரும் எதிர்பார்க்கையுடனே செய்றபட்டுள்ளனர். அதனை புட்டின் நிறைவேற்றுவதுடன் ரஷ்சியாவின் எழுச்சி புட்டினின் அரசியலிலே தங்கியுள்ளது. ரஷ்சியாவை சோவியத் யூனியனாக ஆக்குவதைவிட சுதந்திரமானதும், கௌரவமானதுமான அரசாக ரஷ்சியாவை உருவாக்குவதையே ரஷ்சிய மக்கள் புட்டினிடம் எதிர்பார்ப்பதாகும்.

எனவே, ரஷ்சியாவின் அரசியல்-பொருளாதார-இராணுவ இலக்குகளை தகர்க்க முயலும் அமெரிக்க தலைமையிலான மேற்குலகம் பல திட்டமிடல்களை வகுத்துவருகிறது. அவற்றை ரஷ்சிய அரசியல் தலைமையும், மக்களும், கூட்டாக முறியடித்து வருகின்றனர். ஆனால் ரஷ்சியாவின் பொருளாதார விருத்தி பெரியளவில் எழுச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யை நோக்கி நகராத போக்கு ரஷ்சிய சமூகமட்டத்தில் பாரிய பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது. இது ரஷ்சிய சமூக-பொருளாதார - அரசியல் சூழலை மட்டுமன்றி அதனை அண்டியுள்ள பிராந்திய அரசு களையும் பாதிப்புக்குள்ளாக்கி வருகின்றது. இப்பாதிப்பின் பின்ன ணியில் அமெரிக்காவும், அதன் தலைமையில் இயங்கும் நேட்டோவும் மேற்கு ஐரோப்பாவின் தலைமையில் செயல்பட்டுவரும் ஐரோப்பிய யூனியனும் பிரதான சக்திகளாக விளங்குகின்றன. இத்தகைய இராணுவ -பொருளாதார போட்டியில் ரஷ்யாவும் அதன் பிராந்தியமும் அதிக பாதிப்புக்களை எதிர்றோக்கவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 07

## பின்னிணைப்பு -1

### ஹெயிட்டியின் அரசியல் நிலைமைகள்

உலக அரசியலில் அதிக கவனத்தை ஈர்த்துவரும் ஹெயிட்டி விவகாரம் மத்திய அமெரிக்க அரசியல் வரலாற்றை மீளத்தரிசிக்கும் விடயமாகவே உள்ளது. கரிபியன் தீவான ஹெயிட்டி கியூபாவுக்கும், டொமிக்கன் குடியரசுக்கும் நடுவில் அமைந்திருக்கின்றது. அது மட்டு மன்றி, அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்துக்கு மிக அண்மையில் ஆனால், அத்திலாந்திக் சமுத்திரத்தால் பிரிக்கப்பட்ட நாடாக ஹெயிட்டி உள்ளமை குறிப்பிடத்தக்க அரசியல் வரலாற்றுத் திருப்பங்களை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது.

1804 ஆம் ஆண்டிலிருந்து பிரான்ஸ் குடியேற்ற நாடான ஹெயிட்டி, 1915 இற்குப் பின்னர் அமெரிக்க செல்வாக்கு நாடாக விளங்குகிறது. 1915 -1924 வரை அமெரிக்காவின் நேரடி ஆட்சி ஹெயிட்டியில் நிலவியமையும், அதன் பின்பு மாறி மாறி இராணுவ சதிப்புரட்சிகளும் கிளர்ச்சிகளும் கொண்ட நாடாக காணப்படுகின்றது. மத்திய அமெரிக்கக் கண்டத்து நாடாகவும், அமெரிக்காவின் நேரடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்குக்குள் உட்பட்ட நாடாகவும் ஹெயிட்டி விளங்கிய போதும், பிரான்ஸின் செல்வாக்கும் ஆதிக்கமும் முற்றாகத் தளர்ந்துவிட்ட தென்று கூறிவிடமுடியாதுள்ளது. தற்போதும் பிரான்ஸின் அனுசரணை யும் உதவியும் ஹெயிட்டிக்கு உண்டு எனக்கூறலாம். 27,750 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட ஹெயிட்டி, ஏறக்குறைய 6 மில்லியன் சனத்தொகையை உடைய நாடாகும். இதன் சனத் தொகையில் 95 சதவீதத்தினரும் கறுப்பர்கள் என்பது இன்னோர் சிறப் பம்சமாகவும், இது பிரான்ஸின் செல்வாக்குத் தொடர்வதற்கும் காரண மாகவுள்ள அம்சமாகவும் அமைந்துள்ளது. மேலும், **Mulattos** என்று அழைக்கப்படும் ஐரோப்பிய இனப்பிரிவு காணப்படுவதுடன், அவர் களது செல்வாக்கு ஆழமான தாக்கத்தையும் ஏற்படுத்திவந்தது. குறிப்பாக 1804 ஆம் ஆண்டு முதல் 1946 ஆம் ஆண்டு வரை **Mulattos** என்ற ஐரோப்பிய இனப்பிரிவே அரசியல் தலைமையை தக்கவைத் திருந்தமையையும், 1947 ஆம் ஆண்டே முதலாவது கறுப்பின ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டதும் நினைவு கூறத்தக்கது.

ஹெயிட்டியின் மக்கள் தொகையில் 80 சதவீதமானவர்கள் ரோமன் கத்தோலிக்க மதப்பிரிவைச் சார்ந்தவர்களாக உள்ளனர். 1950ஆம் ஆண்டுக்குப் பின்னான இராணுவத்திலும், அரசியல் அதிகாரத்திலும் செல்வாக்குடையவர்களாகவும், ஆட்சியை நிர்ணயிப் பவர்களாகவும் ரோமன் கத்தோலிக்க தேவாலயங்களே விளங்கின. அத்தகைய தேவாலயங்களுடன் அமெரிக்க அரசியல் தலையீடும் ஹெயிட்டியின் அரசியலைத் தீர்மானிப்பதாக அமைந்திருந்தது. 1987 ஆம் ஆண்டு புதிய அரசியல் திட்டமொன்றை வரைந்த ஹெயிட்டி அரசாங்கம், அதன்படி 1988 ஆம் ஆண்டுகளில் ஒரு தேர்தலை நடாத்தியது. ஆனால், தேர்தல் முடிந்த கையோடு ஏற்பட்ட இராணுவ சதிப்புரட்சியால், மீண்டும் பழையநிலைக்கு அந்த நாடு தள்ளப் பட்டது. மீண்டும் கலவரமும் வன்முறையும் இறுதியில் 1990 டிசம்பரில் மீளவுமொரு தேர்தலுக்கு வழிவகுத்தது. அந்த தேர்தலில் ரோமன் கத்தோலிக்க மதகுருவான ஜோன் பேட்ரண்ட் அரிஸ்டிக ஜனாதிபதி யாக தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு எதிரான கிளர்ச்சியொன்று 1994 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டபோது, அமெரிக்கா தனது இராணு வத்தினை நேரடியாக அனுப்பி அவரது ஆட்சியைப் பாதுகாத்ததுடன், அரிஸ்டிக் ஒரு ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் குறிப்பிட்டு நியாயப்படுத்தியது. இனி ஹெயிட்டி அரசியல் பற்றிய யதார்த்தத்தை பரிசீலிப்போம்.

கிளர்ச்சியாளர்களின் கை ஓங்கியுள்ளது. ஏறக்குறைய ஹெயிட்டியின் தலைநகரத்தைத் தவிர, ஏனைய பிரதேசம் முழுவதும் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. போட் ஒவ் பிரின்ஸ்சும் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. தலைநகரம் மற்றும் பிரதேசங்களிலுள்ள மக்கள் வேறுநாடுகளுக்கும், அயல் நாடுகளுக்கும் வெளியேறினர். ஏற்கனவே, பல தடவை அதிபர் அரிஸ்டிக்கிற்கு ஆதரவாக இருந்த அமெரிக்காவும் தற்போது கைவிட்டிருப்பதுடன், அமெரிக்க வெளி விவாகர செயலாளர் கொலின் பவலின் தகவல் அதனை உறுதிப் படுத்துவதாக உள்ளது. இவ்வாறு அமெரிக்க ஆட்சியாளர்கள் நடந்து கொள்வது ஒன்றும் புதிய விடயமல்ல. அமெரிக்க ஆட்சியாளரின் ஆதர வும், உதவியம் தமது நலனைப் பாதுகாக்கும் வகையில் மட்டுமே சாத்தியப்படும். அமெரிக்காவின் நலன் எங்கு யாரிடம் குவிந்திருக் கின்றதோ அங்கே தமது ஆதரவை அளிப்பதே அமெரிக்க ஆட்சியா ளர்களின் பாணியாகும். இத்தகைய பாணியை அமெரிக்கர்கள் ஈரானில் அயதுல்லாக்கொமேனியில் புரட்சியிலிருந்தே கற்றுக் கொண் டனர்.

அதன் பின்பு தனித்து எந்த நாட்டிலும் ஒரு அரசியல் தலைமைக்கு உதவியளிப்பதில்லை. எந்த அரசியல் தலைமை பல மடைகிறதோ, அதன் பின்னால் நின்றுகொண்டு தமது நலனை நிறைவு செய்வதே அவர்களின் அணுகுமுறையாகும். மொத்தத்தில் அமெரிக் கப்பாணி தற்போது கிளர்ச்சியாளர் பக்கம் திரும்பியுள்ளது. அதற்கு இன்னோர் வலுவான காரணம் ஒன்றையும் அமெரிக்கா முன்வைக்கத் தவறவில்லை.அதாவது, ஹெயிட்டிக்கு அருகிலுள்ள கியூபாவே அமெரிக்காவின் பிரதான எதிரி நாடு அதுவும் மத்திய அமெரிக்கப் பிரதேசத்தில் அமெரிக்காவை எதிர்த்து கியூபாவுக்கு அருகிலுள்ள ஹெயிட்டியைப் பகைத்துக்கொள்ள அமெரிக்கா முயலுமாயின், அந்தப் பிராந்தியமே அமெரிக்காவிடமிருந்து பறிபோய்விடும். அமெரிக்கர்களுக்குக் கொள்கையோ, நட்போ முக்கியம் அல்ல. எந்த ஆட்சி ஹெயிட்டியில் சாத்தியப்படுகின்றதோ, அதனை ஆதரிப்பதே சாதகமானதென அமெரிக்கா கருதுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கருத்துக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் இன்னோர் விடயத்தைச் சேர்த்துக்கொள்ளலாம்., கிளர்ச்சியாளர்களையும், அதிபர் அரிஸ்டிக்கையும் ஒன்று சேர்க்க சர்வதேச சமூகத்தின் ஆதரவில் ஒரு சமாதானத் திட்டத்தை அமெரிக்கா தயாரித்தது. அத்தகைய திட்டத்தில் அதிகாரத்தைப் பகிர்வது பற்றிய அடிப்படையிலும் 2006 ஆம் ஆண்டுவரை அதிபர் அரிஸ்டிக்கின் பதவியைப் பாதுகாக்கவும் அந்த சமாதான திட்டம் இடமளித்திருந்தது. ஆனால், அதனைக் கிளர்ச்சிக் குழு நிராகரித்ததுடன், பிரான்ஸின் தலையீடும் அதில் அதிகரித்துக் காணப்பட்டது. இதனால், அமெரிக்கா மெதுவாக அந்தத் திட்டத்தைக் கைவிட்டதுடன்,அரிஸ்டிக்கை பதவியிலிருந்து அகற்றவும் ஆயத்த மாகிவிட்டது. இந்த விடயம் தொடர்பாகப் பாதுகாப்புச் சபை கூடிய போது, எந்தத் தீர்மானத்தையும், முடிவையும் முன்வைக்காமல் சபை கலைந்துள்ளது. அதனால், இங்கு பிரதான கேள்வி ஒன்று எழுகின்றது. புதிய உலக ஒழுங்கு உருவாகிய பின்னர் அல்லது 9.11.2003 தாக்குதலுக்குப் பின்னர் உலகத்தில் எந்த மூலையிலும் ஆயுதம் தூக்கிப் போர் புரியம் பிரிவினரே பயங்கரவாதிகள் எனக் கொக்கரிக்கும் அமெரிக்கா, ஹெயிட்டி விவகாரத்தில் எதுவுமே அவ்வாறு பேசாது மௌனம் சாதிக்கிறது என்பதாகும். அதற்கான காரணம் எது என்பதை சுருக்கமாக நோக்குவோம்.

முதலில் ஹெயிட்டி மக்கள் அரபுக்களோ, இஸ்லாமியர்களோ அல்ல என்பதும், அத்தகைய மதப் பிரிவினருக்கு உதவிபுரிபவர்கள் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். அடுத்து, அந்தப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் நலனுக்குப் போட்டியாக வேறு அரசுகள் பெரியளவில் இல்லை என்பதும், கியூபாவைப் போன்று ஓர் எதிரியை அமெரிக்கா உருவாக்க விரும்பவில்லை என்பதும் புரிந்து கொள்ளத்தக்க விடயமாகும். இறுதியாகப் பயங்கரவாதம் என்பது உலகம் மிரட்டுவது போன்றோ, மிரளுவது போன்றோ ஒரு பெரிய விடயமல்ல என்பதும், அதனைப் பயன்படுத்தி பிராந்திய சக்திகள் இலக்கை அடைய முயல்வதுமே நிகழ்கின்ற அம்சங்களாக உள்ளன. எனவே, பயங்கரவாதம் என்பது பற்றிய அரசியலை ஹெயிட்டி மக்கள் கொண்டிருக்கும் உணர்வலையே பொருத்தமானது போன்று தெரிகிறது. அதுவே உலகத்திற்குப் புதிய அனுபவமாக அமையலாம் என்பதுவும், அதனை அடிப்படையாகக் கொண்டு உலக விடுதலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்ட அமைப்புக்கள் புதிய அணுகுமுறைகளை வரையலாம் என்பதுவும் கருத்தில் கொள்ளப்படவேண்டிய அம்சங்களாக உள்ளன.

எனவே, புதிய கருத்தியலை உருவாக்கியுள்ள ஹெயிட்டி அரசியலால், ஏற்படப்போகும் மாறுதலைக் கொண்டு அதனை நிரந்தர மான கருத்தியலாக அமைத்துக்கொள்ளலாம். எனவே, ஹெயிட்டி அரசியல் ஒரு புதிய ஆரம்பமாக அமைந்திருக்கின்றது. ஆனால் அத்தகைய கருத்தியல் பிராந்தியம் சார்ந்த அரசியலாகவே விமர்சகர்களால் மதிப்பீடு செய்யப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு - II

## உலகப் பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுக்கும் "சைபிரஸின் ஐக்கியம்"

நிக்கோசியா என்பதைவிட, சைபிரஸ் என்றால் எல்லோரும் இலகுவாகப் புரிந்துவிடுவார்கள். சைபிரஸின் தலைநகரமே நிக்கோசியா, மத்தியதரைக் கடற்பகுதியில் அமைந்துள்ள அழகான தீவு சைபிரஸ் ஆகும். உலகத்தில் சில தீவுகளுக்கு இராணுவரீதியான முக்கியத் துவத்தினாலும், சர்வதேச வல்லரசுகளின் பாதுகாப்பு நிலைகளாலும், தொடர்ச்சியான பிரச்சினைகளையும், நெருக்கடிகளையும் கொண்டிருக்கும் துரதிர்ஷ்டமான அரசியல்போக்கு காணப்படுகிறது. இதில் இலங்கையும், சைபிரஸும் அதிகமான வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும், பல விடயங்களில் ஒற்றுமை உடையவையாக விளங்குகின்றன.

சைபிரஸ் 9250 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்ட தீவாக வுள்ளது. 729000 மக்கள் தொகையையுடைய சைபிரஸ் கிரேக், துருக்கி ஆகிய பிரதான மொழிகளைக் கொண்ட நாடாகவும், கிறிஸ்தவம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம் மதங்களையும் உள்ளடக்கியிருக்கும் தீவாகவும் காணப்படு கின்றது. பெரும்பான்மையான கிரேக்கர் வாழும் சைபிரஸில் துருக்கியர் சிறுபான்மையினராக விளங்குகின்றனர். சைபிரஸின் அரசியல் வரலாறு மத்தியதரைக் கடலை அண்டிய அரசுகளின் அரசியல் வரலாறு போன்றதாகவே உள்ளது. குறிப்பாக ஒட்டமன் பேரரசுவாதத்துக்குள் உட்பட்டிருந்த சைபிரஸ், 1914 ஆம் ஆண்டுகளுக்குப் பின்பு, பிரித் தானியாவின் காலனித்துவ நாடாக மாறுகின்றது. இந்த நிலை 1925 ஆம் ஆண்டுவரை நீடித்த போதும், கிறீஸின் உடன்பாட்டுடனும், சைபிரஸில் வாழ்ந்த கிரேக்கரின் அழுத்தங்களினாலும் கிறீஸ்"டன் கூட்டுறவான **(ENOSIS)** ஆட்சிமுறைமைக்குள் உட்படுகின்றது. இது 1931 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட முதலாவது இன முரண்பாடாக உருவெடுத்துள்ளது. **ENOSIS** என்றழைக்கப்பட்ட **UNION** ஆட்சி முறையும் குழப்பத்திற்குள்ளாகின்றது. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்பு தனியான அமைப்புகளும், ஆயுதக்குழுக்களும் கையோங்கியதுடன், சைபிரஸின் தலைமைத்துவத்தை தமதாக்கிக்கொண்டன. இந்த சூழல் 1959 ஆம் ஆண்டுகள் வரை நீடிக்க, அவ்வமைப்புக்களை கட்டுப் படுத்த மீளவும் பிரித்தானிய தனது செல்வாக்கின்கீழ் சைபிரஸை கொண்டுவந்ததுடன், 1960 ஆம் ஆண்டுகளின் கொமன்வெல்த்தில் அங்கத்துவத்தை அளித்து சைபிரஸை சுதந்திர நாடாக மாற்றியது. ஆனாலும், பெரும்பான்மை கிரேக்கர்களுக்கும், சிறுபான்மை துருக்கி யர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டை அவ்வரசு கட்டுப் படுத்தமுடியாது, ஐக்கிய நாடுகள் சபையின் சமாதான படையை 1964 ஆம் ஆண்டுகளில் அழைத்தது. 1974 ஆம் ஆண்டுகளில் கிறீஸைப் பிறப்பிடமாகக் கொண்ட சைபிரஸ்-கிரேக்க இராணுவ கேணல்களில் சதிப்புரட்சி ஒன்றினால் துருக்கிய இனத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் துருக்கிய இராணுவம் நுழைந்தது. அன்றிலிருந்து சைபிரஸ் இரண்டு அலகுகளைக் கொண்ட ஆட்சிமுறைமைகளை பிரதிநிதித்துவப்படுத் துகின்றது. சைபிரஸின் வடக்குப் பகுதியைத் துருக்கிய கட்டுப்பாட் டிலும். தெற்குப் பகுதியை கிரேக்க சைபிரஸின் கட்டுப்பாட்டுக்குள் ளும் ஆளப்படும் பிரதேசமாகவுள்ளது.

இத்தகைய அரசியல் பின்னணியைக் கொண்ட சைபிரஸ் பிரித்தானியாவின் பலகட்ட முயற்சியின்போதும் இணைவுக்கான சாத்தியப்பாடு அற்றுப்போயிருந்தது. தற்போது நிலமை சற்றுமாறி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருக்கிய சைபிரஸ் தலைமையும், கிரேக்க சைபிரஸ் தலைமையும் ஐ.நா. செயலாளரின் தலைமையில் ஒன்றிணைவுக்கான பேச்சுக்களை தொடங்கினர். இத்தகைய முயற்சி பொருளாதார பின்னணியை நாம் விளங்கிக்கொள்ளுதல் அவசியம். இலங்கையராகிய நாமும் அத்த கைய இணைவுக்கான ஒரு முயற்சியை முன்னெடுத்து, இடைநடுவில் தற்காலிகமாகக் கைவிட்ட நிலையிலிருக்கிறோம் என்ற வகையில் சைபிரஸ் தொடர்பான விபரணத்தை அறிதல் அவசியமானதாகும்.

சைபிரஸ் இணைப்புக்கான முயற்சியை ஆரம்பித்தது ஐரோப் பிய யூனியன் என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஐரோப்பிய யூனியன் நேரடியாக ஈடுபடாதுவிட்டாலும், மறைமுகமாக ஐரோப்பிய யூனிய னின் அல்லது யுரோலாந்து என்றழைக்கப்படும் ஐக்கிய ஐரோப்பா வுக்கான கூட்டிணைவே சைபிரஸ் இணைவுக்கான அத்திவாரமாகும். சைபிரஸ் மத்தியதரைக்கடல் நாடுகளின் அமைபிலிருந்தாலும், துருக்கியைப் போன்று இஸ்லாமியரைக் கொண்டிருந்தாலும், புவியியல் ரீதியில் ஐரோப்பாவுக்கும், மேற்காசியாவுக்கும் இடையில் அமைந்தி ருந்தாலும் ஐரோப்பிய நாடாகவே இனங்காணப்படுகிறது. இதனால் சைபிரஸ் ஐரோப்பாவின் அங்கத்தில் ஒன்றாக விளங்குகின்றது. அது மட்டுமன்றி பிரித்தானியாவின் செல்வாக்குக்குள்ளும், பிரித்தானியா வின் இராணுவ முக்கியத்துவமான பிரதேசமாகவும் சைபிரஸ் விளங்கு கின்றது.

இவை யாவற்றையும் கடந்தநிலையில் உலகத்தில் எழுச்சி யடைந்துவரும் உலக மயப்படுத்தல் என்ற பொருளாதார தளத்தின் ஓரங்கமான ஐரோப்பா சைபிரஸ் போன்ற நெருக்கடிமிக்க அரசுகளை ஒன்றிணைக்க முயலுகின்றது. அதாவது, சைபிரஸ் இரண்டையும் ஒன்றிணைப்பது மட்டுமன்றி, சைபிரஸ்ஸை ஐரோப்பாவுடன் ஒன்றி ணைக்கும் ஒரு பாரிய நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சியையே ஐரோப்பா அல்லது யுரோலாந்து மயப்படுத்தல் என்ற பொருளாதார வலைப்பின்னலுக்குள்ளால் சாத்தியப்படுத்த ஐரோப்பா விரும்புகின்றது. கிரேக்க சைபிரஸ்ஸை விட துருக்கிய சைபிரஸ் கைத்தொழில் மயப்படுத்தலில் பின்தங்கியிருப்பதுடன், நவீன பொருளாதாரத்துடன் இணைவதில் ஆர்வமற்ற பிரதேசமாகவும் உள்ளது. இதனால், சைபிரஸ் என்ற ஓரமைப்புக்குள் துருக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைபிரஸின் வளர்ச்சியானது சாதகமாக அமைவதுடன், கிரேக்க சைபிரஸின் பொருளாதாரத்திற்கான பாதுகாப்பையும் ஐரோப்பா வழங்கத் தயாராகவுள்ளது. அத்தகைய சூழலில் சைபிரஸ் இணையத் தவறுமாயின், துருக்கிய சைபிரஸாகவும் கிரேக்க சைபிரஸாகவும் ஐரோப்பிய யூனியனில் இணைதந்துள்ளது. எனவே, சைபிரஸ் போன்ற இனரீதியான நெருக்கடியைக் கொண்ட அரசுகள் சுமூகமாக, இசைவான, அமைதியான, அரசியல், பொருளாதார, சக வாழ்வை சாத்தியப்படுத்தவே உலகமயப்படுத்தல் அல்லது ஐரோப்பிய மயப்படுத்தல் சமூகம் விரும்புகிறது. அத்தகைய ஐரோப்பிய மயப்படுத்தல் சமூகத்தின் விருப்புகளும், எண்ணங்களும் சாத்தியப்படாதபோது, தனித்தனியான அலகுகளை உள்வாங்கியாவது தமது பொருளாதார இயங்குவிசையைச் சாத்தியப்படுத்த வேண்டுமென எண்ணுகின்றன. அதன்படி, உலகின் இயங்குவிசையுடைய பொருளாதார பரிமாணத்தை நோக்கிய அரசியல் சமூக ஒருங்கிசையும், அதுசார்ந்த அரசியல், பொருளாதார அடுக்கமைவுமே தற்போதைய உலகளாவிய சூழலுக்கு பொருத்தப் பாடுடையது. அந்தவகையில் சைபிரஸ் உலகத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

சைபிரஸைப் போன்ற இனரீதியான பிணக்குகளைக் கொண்ட அரசுகள் ஒவ்வொன்றுக்கும் உலகம் விடுத்துள்ள சவால் உலகமயப்படுத்தல் என்ற பொருளாதார இசைவுக்குள் அகப்படுத்துவதாகும். சில சந்தர்ப்பங்களில் உலகமயப்படுத்தல் என்ற பொருளாதார இயங்குவிசைக்கு நேரடியாக சைபிரஸால் உதவமுடியாதிருக்கலாம். அல்லது போதிய பொருளாதார சுரண்டலை உலகமயப்படுத்தல் சமூகத்தால் சைபிரஸ் மேற்கொள்ள முடியாதிருக்கலாம். ஆனால், சைபிரஸின் மறைமுகமான பங்களிப்பும் ஒத்துழைப்பும் உலகமயமாக்கல் சமூகத்துக்கு அவசியமானதாக அமையும். அந்த வகையில் தான் சைபிரஸ்-யுரோலாந்தின் பொருளாதார பரிணாமத்திற்கு அவசியமானதொன்றாக அமைகின்றது.

உற்பத்தி, மீள் உற்பத்தி என்ற அடிப்படையிலான புரட்சிகள் பல. கடந்த **(LIVING LABOUR)** இரண்டு தசாப்தங்களுக்குள் நிகழ்ந்து முடித்துள்ளன. உயிர் உள்ள உழைப்பின் காலப்பகுதி முடிந்து, உயிரற்ற உழைப்பின் காலம் **(DEATH LABOUT)** வளர்ச்சியடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலில், தாராள உற்பத்தி அபரிமிதமான உற்பத்தியாக காணப்படு கின்றது. இந்தக் காலத்தில் உற்பத்தியைவிட தரமுடைய உற்பத்தி போட்டியைவிட சந்தை வாய்ப்புக்கான காலமாகவே உள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புக்களை இனங்காண்பது, ஏற்றுமதி செய்வது பிரதான நாடு களின் பிரதான முயற்சியாகவும், அதுவே உலகப் பொருளாதார பலமாகவுமுள்ளது. இந்த நிலையில்தான் உலக அமைதி, சமாதானம், ஐக்கியம், ஒத்துழைப்பு என்பன அவசியமானதாக மாறுகின்றது. அத்தகைய சைபிரஸ்நிலையான அரசியல், பொருளாதார ஒத்துழைப்பை உலகத்திற்கு வழங்கக்கூடிய நிலையத்தில் அமைந்துள்ள தீவாக மத்திய தரைக்கடல் பிரதேசத்தில் அமைந்துள்ளது. சர்ச்சையும், பிரச்சினையும் குவிந்துள்ள அதே நேரத்தில், எண்ணெய் வளத்தை யுடைய மேற்கு ஆசியாவின் நாடுகளுக்கு அண்மையில் அமைந் திருப்பது எனப் பல பயன்பாடுகளைத் தரக்கூடிய மையத்தில் உள்ளதே முக்கியமானதாகும்.

எனவே, சைபிரஸ் ஐக்கியத்திற்கும், உலக பொருளாதார இயங்குவிசைக்கும் இடையில் ஒரு ஒருங்கிசைவு காணப்படுகிறது எனக் கூறலாம். அந்த வகையான உலக ஒழுங்கே தற்போது காண முடிகிறது. இதிலிருந்து இலங்கைக்கும் தனித்துவமான ஒரு சவாலாக பொருளாதார இயங்குவிசை அமைந்திருக்கின்றது என்பதை நிரா கரிக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

சர்வதேச அரசியல், கோட்பாடுகளையும் நடைமுறையையும் உள்ளடக்கிய ஒரு கற்கைநெறியாகும். வளர்ந்துவரும் உலகில் அரசு களை இறைமையாகக் கொண்ட ஒரு காலப்பகுதியின் முக்கியத்துவம் அருகிவருகின்ற சந்தர்ப்பத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களதும், பொருளாதார, அரசியல், இராணுவ ஒத்துழைப்பு நிறுவனங்களதும் எழுச்சி பிரசன்னமாகிவருகிறது. அரசு என்ற நிறுவனத்திற்கு பதிலாக அரசுகளின் நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆதிக்கமும் பரவலாகிவிட்டது. பொருளாதாரம், அரசியல், கலாசாரம் என்பன எல்லாம் கூட்டான நடவடிக்கைக்குரித்தான அம்சங்களாகிய உலகச் சூழல் மலர்ந்துள்ளது. இவ் உலகச் சூழலில் தனித்த அரசுகளுக்கோ, இனங்களுக்கோ எத்தகைய பங்கும் இல்லாத நிலை காணப்படு கின்றது. ஒடுக்கப்படும் இனத்துக்கு சார்பான அரசுகளோ ஒழுங்க மைப்புகளோ இன்றிய உலகத்தின் ஏதோச்சதிகாரப் போக்கே மேலோங்கியுள்ளது. பொருளாதார சுரண்டலை நியாயப்படுத்தும் அரசியல் சித்தாந்தங்களையும் அவற்றுக்கு இசைந்துகொடுக்கும் இராணுவ, புலனாய்வுத் திட்டங்களும், அவற்றுடன் சேர்ந்து ஒத்துழைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் பரிமாற்றங்களுமே பலமான சக்திகளாக உள்ளன. இவை ஒரு சில அரசுகளிடம் குவிந்திருப்பதும் அவ்வரசுகளே ஆதிக்க அரசு களாக விளங்குகின்ற சமகால போக்கு காணப்படுகின்றது.

சமகால சர்வதேச அரசியல் என்ற இந்நூல் ஆறு பிரதான அத்தியாயங்களையும் ஏழாவது அத்தியாயம் பின்னிணைப்பாகவும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. முதலாவது அத்தியாயம் அமெரிக்கப் பொருளாதார வீழ்ச்சியும் அரசியல் ரீதியான அதிகாரப்போரும் என்ற தலைப்பில் உருவாகியுள்ளது. அமெரிக்க பொருளாதார வீழ்ச்சிக்கு வித்திட்ட பிரதான காரணியாக அதிகாரப் போரை முதன்மைப்படுத்தி யுள்ள இப்பகுதி அமெரிக்க ஆட்சியாளரின் பலவீனமான பக்கங்களை சுட்டிக்காட்ட தவறவில்லை. அதேபோன்று யூரோலாந்தின் உருவாக் கத்திற்கு வித்திட்ட ஐரோப்பிய யூனியனை முதன்மைப்படுத்துவதுடன் அதன் பொருளாதாரப் பக்கத்தினை மிகச் சிறப்பாக ஆராய்கின்றது. முடிவாக அமெரிக்காவின் பேரரசுவாதத்திற்கான அரசியல், பொருளாதார பலவீனத்தை இனங்காண்பதுடன் இராணுவ ரீதியான பலத்தையும் அளவீடு செய்ய இப்பகுதி தவறவில்லை.

இரண்டாவது அத்தியாயம் தென்னாசிய அரசியல் போக்கும் இந்திய-பாகிஸ்தானிய முறுகலும் என்ற தலைப்பில் ஆராயப்பட் டுள்ளது. இப்பகுதி முழுமையாக இந்திய-பாகிஸ்தானிய அரசியல் பரிமாணத்தையே கவனத்தில் கொள்கிறது. இந்தியாவின் பக்கமுள்ள அரசியல் பொருளாதார, இராணுவ பலத்தையும், பாகிஸ்தான் பக்க முள்ள பலத்தையும் ஆராய்வதுடன் ஆட்சியாளரின் தனிப்பட்ட இயல்பு களையும் பரிசீலிக்கின்றது. முழு உலகப் போக்கிலும் இரண்டு அரசு களின் அணுகுமுறைகள் ஏற்படுத்திவரும் பாதிப்புக்களையும் இப் பகுதி மதிப்பீடு செய்ய முயன்றுள்ளது.

மூன்றாவது அத்தியாயம் இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஆதிக்கசக்திகளின் கொள்கைகள் என்ற தலைப்பில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதில் இலங்கை அரசாங்கத்தின் போக்கு தெளி வாகக் காட்டப்பட்டதுடன் அதற்கு உறுதுணையாக செயல்படும் வல்ல ரசுகள் எப்படியான அடைவை இனப்பிணக்கில் எட்டவேண்டு மென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புகின்றதுவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வெளிப்படையாக காட்டப்படும் உறவுமுறைகளுக்கும், நட்புக்குப் பின்னால் விரிந்திருக்கும் ஆதிக்க நலன்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளது. இவ் அத்தியாயம் இனப்பிரச்சினைக்கு சமாதானம் என்ற மாயைக்கூடாக தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை நசுக்க திட்டமிட்டு வருகின்றன என்பதை கோடிட்டுக் காட்டியுள்ளது. தேசியத்தை உடைத்து, தேசிய விடுதலைப் போராட்ட அமைப்பை பிரிநிலைப்படுத்தி போராட்டத்திலிருந்து மக்களை அன்னியப்படுத்த தீவிரமான நடவடிக்கைகளை ஆதிக்க சக்திகளும், இலங்கை அரசும் கொள்கை வகுப்புக்களை வரைந்து செயல்பட்டு வருகின்றன என்பது துலாம்பரமாக தெரிவுபடுத்தப்பட்டுள்ளது

நான்காவது அத்தியாயம் சீனாவின் விஸ்தரிப்புக் கொள்கையும் ஏற்பட்டுவரும் மாறுதலும் என்ற தலைப்பில் நோக்கப்பட்டுள்ளது. இது முழுமையாக சீனாவின் இருப்பையும் அதற்கான பலத்தையும் ஆராய்வதுடன் இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும் முழு உலகத்திலும் சீனா ஏற்படுத்த திட்டமிட்டுவரும் கொள்கைகளையும் அதன் உட்கட்டமைப்பில் காணப்படும் பலத்தையும் மதிப்பீடு செய்கின்றது. இந்திய-சீன-ரஷ்சிய என்ற பிராந்திய கூட்டணி பற்றியும் இதற்கெதிராக அமெரிக்கா பின்பற்றிவரும் போக்குகளையும் திட்டவட்டமாக பரிசீலிக்கின்றது.

ஐந்தாவது பகுதி ஈராக் மீதான அமெரிக்கப் போரும் அரசியல் இராணுவ, பொருளாதார விளைவுகளும் பற்றி ஆழமான அவதானிப்பை செலுத்துகின்றது. இதில் ஈராக் போரில் கையாளப்பட்ட இராணுவ அரசியல் மட்டுமன்றி தந்திரோபாயமும் அளவீடு செய்யப்படுகின்றது. நேரடியான ஈராக் போர் உலகத்தை எப்படி தாக்கத்துக்குள்ளாக்கியுள்ளதென்பதை மிக சுருக்கமாக ஆராய்ந்துள்ளது. இதனால் உலக அரசியல் தலைமைகளும், கீழைத்தேச அரசுகளும் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள் அனுபவரீதியாக நிறுவப்பட்டுள்ளது. அமெரிக்க மேலாதிக்கத்திற்கு ஈராக் ஒரு நெருக்கடியாகவே அமையப் போகிறதென்பதும் விளக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து ரஷ்சிய அரசியல் பொருளாதார வீழ்ச்சியும் அமெரிக்காவின் தடைகளும் ஆராயப்பட்டுள்ளது. ரஷ்சியாவை முற்றாக உலக அரசியல் போக்கிலிருந்து ஒதுக்கிவிட முடியாதது என்பதை உணர்த்தும் பகுதி அரசியல் தலைமைகளின் பலத்தையும் பலவீனத்தையும் நேர் நோக்கில் பார்க்க முனைந்துள்ளது.

இறுதிப்பகுதி பின்னிணைப்பாக சேர்க்கப்பட்டுள்ளது. "சைபிரஸ்" "ஹயிட்டி" ஆகிய இரண்டு நாடுகளிலும் காணப்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்புகளையும் பொருளாதார தளத்தையும் அவதானமாகக் கொண்டு இப்பகுதி ஆராயப்பட்டுள்ளது.

எனவே, "சமகால சர்வதேச அரசியல்" என்ற நூல் உலகளாவிய அரசியல் போக்கின் நடைமுறைகளை முழுமைப்படுத்துகின்றது. சர்வதேச விவகாரங்களை கற்கவேண்டிய உலகில் தமிழில் வெளிவரும் அரசியல் பிரசவமாகும்.

இந்நூலை எழுத முயலுவதற்கு "தினக்குரல்", "நமது ஈழநாடு" ஆகிய பத்திரிகைகள் மூல காரணமாகும். எனது எழுத்துக்களை அச்சில் வெளியிட்டு அவைபற்றிய வாசிப்பையும் அதன் பின்னான விமர்சனத்தையும் வாசகர் மத்தியில் அப்பத்திரிகைகள் தூண்டியிருந்தன. அவ்வாறே கணணி வடிவமைப்புக்கு உதவிய நண்பர்கள் மற்றும் திருத்தங்களை அவ்வப்போது மேற்கொண்ட நண்பர்களுக்கும் எனது நன்றிகள். இந்நூலுக்கு முன்னுரை வரைந்த நண்பன் குமரவேள் மற்றும் பிரதீபன் அவர்களுக்கும் கல்வியியல் வெளியீட்டு நிலையத்திற்கும், சிமாட் ஸ்தாபனத்தினருக்கும் நன்றிகள். இறுதியாக என்னோடு என்றும் உழைத்துவரும் எனது குடும்பத்திற்கும் நன்றிகள். ஆரோக்கியமான விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BIBLIOGRAPHY


1) Scott Burchill ----- (Ed) Theories of International Relations: Book Aid International ( 2nd Edition) 2002.

2) David Ferriby ----- (Ed) Modern world History , For SEG Syllabus (B) Heinemam , 2000.

3) Anthony Giddens : Capitalism and modern social theory : Cambridge University press, 2000.

4) John madeley : Trade and poor, The impact of International Trade on developing countries : Intermediate Technology Publications 1996.

5) Ellen Frankel Paul ... (Ed) Democracy, Cambridge University press, 2000.

6) Dorothy Perkings : Encyclopedia of China : Checknark Book: 2000.

7) Rajan Philips (Ed) SriLanka; Global Challenges and National Crises EISD and SSA , Colombo 2001.

8) Peter Teed: A Dictionary of Twentieth century History 1914 -1990, Oxford New York , 1992.

9) Jayadeva Uyangoda and Morina Perera (Ed) SriLanka's Peace process 2002 . Critical perspectives, SSA , Colombo , 2003.

10) Encyclopedia of modern political Biography : Helicon , 1999.

11) India Book of the year 2004. Encyclopedia Britannica PVT Ltd and the Hindu, Delhi 2004.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12)M.S. Agwani : The struggle for Democracy in GCC states : world focus monthly Discussion Journal vol .24 Number 9, September 2003, Pp 22 -24

13)Atul Aneja : A new degree of volatility : Frontline may 24, 2002 . Pp55 - 56

14)John Barry : Rummy's New Headaches ; News week, August 04, 2003, Pp 26- 27.

15)Evan Thomas : The un building of Iraq. News week November 17 , 2003 Pp 28 -30.

16)---------------; Boots Bytes and Bommbs : News week Novermber 10, 2003 Pp 24 - 30.

17)Oyjtsha Bakshi: Russia , China military Technical cooperation ; Implications for India : Strategic Analysis; Vol.XXIV No 4. July 2004, Pp 633 - 667.

18)Rahul Bedi: The military dynamics Frountline, June 21, 2002 ,Pp 10 - 13.

19)Christian Caryl and Frank Brown : No more Excuses News week March 15,2004 Pp 18-20.

20)John Cherian : The Gorshkov deal : Frountline February 13,2004 Pp 12 -14.

21)---------------------: The Busher Conundrum Frontline May 24, 2002 Pp 53 - 54.

22)---------------------: A Critical Phase in Iraq., Frontline February 13, 2004 Pp 52- 54.

23)Christopher Dickey and Donatella Corch: Iraq's most wanted. News week, march 31, 2003 Pp - 45.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24)Jony Emerson : The Power of Europe, News week, September 16/23, 2002 Pp 42 - 47.

25)Dan Ephron: Sharon the Peace Maker? News Week January 27,2003 Pp 18 - 19.

26)---------------------:And for His Nest Act .....News week ,January 28, 2002 Pp 20 - 22.

27)Howard Fineman : Bush and God: News week, March 10 , 2003 Pp 14 - 24.

28)---------------------: and Tamara Cippor : What me worry ? News Week, November 17, 2003, Pp 22 - 27.

29)Helena K . Finn : The case for cultured Diplomacy , Engaging Foreign Audience : Foreign Affairs , Vol.22 Number 06 . Pp 15 - 20.

30)Rona Foroohar: What New Europe? News Week June 23, 2003 Pp 32 - 34.

31)David Hale and Cyric Hugbes Hale (Ed.) China Takes off , Foreign Affairs Vol.82 Number 06, Pp 36 - 53.

32)Michael Hirsh : Welcome to the Real World , News Week, June 23, 2003, P 13.

33)---------------------: and Michael Islkoff (Ed) No more Hide of seek : News Week ,February 10, 2003, Pp 20 -24.

34)---------------------: Powell's Battle : News Week September 16/23 , 2002, Pp 22-31.

35)---------------------: Heading to Battle , News Week, September 30, 2002, Pp 10 - 12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36)---------------------: America's mission : News Week, Special issue , December 2002, February 2003, Pp 08 -15.

37)Mark Hosenball ----(Ed) AL Qaeda Alive and Killing,News Week,November 25. 2002 ,Pp 16 -18.

38)---------------------: (Ed) Cheney's Long Path to war : News Week, November 17 , 2003.

39)Michwel Isikoff and Evan Thomas: Follow the yellow cake Road, News Week, June 23,2003, Pp 12 -14.

40)Scott Johnson : I was sure I was dead: News Week, March 31, 2003, Pp 20 -24.

41)Sami Kohen : Payback Time ? News Week February 17,2003, Pp20-24.

42)Melinde Liu : China's prince lings problem; News Week November 25, 2002, Pp 16- 18.

43)---------------------: Live From Bughdad, News Week, March 31 , 2003,Pp 28- 30

44)Owen mathews and Sami Kohen: Breaking the Deadlock ; News Week January 28 , 2002 Pp: 36 38

45)Jon Meacham ; A Father's Words on going to war ( Interview) News Week March 31, 2003. Pp -11

46)Stryker Mcgurie and Richard wolffe; Hope to world : News Week, January 27, 2003 Pp 12 15

47)---------------------: and Michael meyer: Europe Splits : News Week , February 10 , 2003 Pp 29 31.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48)---------------------: Who speaks , For Europ? News Week, may 5 ,2003 Pp36 38.

49)----------------------:Splendid isolation : News Week, November 18, 2002 Pp28 29.

50)Sukumar Muralidharan : The Lurking Danger : Frontline , June 21, 2002 Pp6 9.

51)A.G . Noorani : Kashmir in retrospect; Frontline May 24, 2002 Pp 78 81

52)Roger Normand and Jan Goodwin : The Second American Revolution : Polity Vol. 1 No.2 Parvada Pp 23 24.

53)Red Nordland and Zahid Hussain : Pakistan's Striving Son : News Week, January 28 2002 Pp 13 18

54)Eric pape : Stay at Home Europe: News Week, July 28,2003.Pp 24 25.

55)Sarath Perera : The Trouble with Capitalism : Polity Vol.1, No 3 Pravda, Pp 31 37.

56)C.Rajah Mohan : United States and the world After Iraq : World Focus. Monthly Discussion, Journal, Vol.24 Number 9 September 2003 Pp 15 18.

57)Hensman Rohini : Boycott the Dollar: Polity Vol. 1 No 2 Pravda , Pp 12-13.

58)Saiman Rushdie : India's New Era: Polity Vol.! No.06 Pravda P.38.

59)Edward Said : A Stupid war : Polity Vol.1 No2 Pravda. Pp 8 - 10.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60) Robert . J Samuelson : A War we can Afford : News Week P.39.

61)--------------------:The ( New) Sick man of Europe : News Week, November 18 , 2002 ,P.52.

62) Dr.R.S Sayni: Self Determination. Terrorism and Kashmir : India Quarterly : Vol.2. VII , No. 2 Aprial June, 2001, Pp 59- 90.

63) Suman Sharma : India and SAARC : Ibid, Pp 99 - 120.

64) Swaran Singh : India China Russia : A Strategic Trangle ? World Focus , Monthly Discussion Journal , Vol. 24 Number 9 , Septmber 2003 Pp 9-11.

65) Evan Thomas and Nordland The Play boy ---- and the Plotter, News Week August 04 , 2003, Pp 12 - 15.

66) Evan Thomas : A War on the Dark ;News Week ,November 10 , 2003 Pp 16 - 21.

67)-----------------:The 12 Year Itch : News Week ,March 31, 2003, Pp 48 - 57.

68)-----------------:The Battle within ----- News Week March 10 , 2003, Pp 14 -18.

69)-----------------:Rumsfeld's war : News Week, September 25 , 2002, Pp 29 -31.

70)-----------------: In the war Room : News Week, November 25,2002, Pp 29 -31.

71)-----------------: The Quiet Power of Condi Rice, News Week Pp 12-21.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72)-----------------: and John Barry : A Plan Under Affack. News Week April 7,2003, Pp 14 - 25.

73)Immanuel wallerstin : Crises and Conflicts in the U.S; Frontline February 13.2004, Pp 12 - 14.

74)Fareed Zakaria : How to make Friends in Iraq ! News Week June 23,2003, P-13.

75)-----------------: I ratification : A Losing Strategy : News Week, November 10, 2003, P-11.

76)-----------------: Prizes for Bad Diplomacy : News Week March 31, 2003, P-11.

77)-----------------: America's New world Disorder : News Week September 15,2003 ,P-11.

78)-----------------:They're Rooting For America Too : News Week November 18 ,2003, P.13.

79)-----------------: Bush-Rice and The 9/11 Shift. News Week December 16, 2002, P-11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிமாட் பிறிண்டேர்ஸ், 717, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org